தொல்லியல் துறைஞர்

இரா. நாகசாமியின்

பழுதடைந்த கண்ணாடியும் பார்வைக் கோளாறுகளும்

மூதறிஞர் தமிழண்ணல்

தமிழ்ப்பேராயம்
திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம்

SRM
UNIVERSITY
(Under section 3 of UGC Act 1956)

தொல்லியல் துறைஞர்

இரா. நாகசாமியின்

பழுதடைந்த கண்ணாடியும் பார்வைக் கோளாறுகளும்

மூதறிஞர் **தமிழண்ணல்**

தமிழ்ப்பேராயம்

திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம்

காட்டாங்குளத்தூர் - **603 203**

காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு.

தொலைபேசி **: +91 - 44 -2741 7375.**

இணையதளம் **: www.srmuniv.ac.in**

மின்னஞ்சல் **: tamilperayam@srmuniv.ac.in**

நூல் விளக்கம்

நூல் தலைப்பு	:	தொல்லியல் துறைஞர் இரா. நாகசாமியின் பழுதடைந்த கண்ணாடியும் பார்வைக் கோளாறுகளும்
பொருள்	:	ஆய்வு
ஆசிரியர்	:	தமிழண்ணல்
பதிப்புரிமை	:	தமிழ்ப்பேராயம்
முதற்பதிப்பு	:	2013
நூல் அளவு	:	அரைக்கான் மடி(டெமி) 1/8
தாள்	:	100 GSM மேப்லித்தோ
எழுத்து அளவு	:	12.5 புள்ளி
பக்கங்கள்	:	176
நூலின் விலை	:	உருவா. 120/-
வெளியீடு	:	**தமிழ்ப்பேராயம்** **Thamizh Academy** திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம் காட்டாங்குளத்தூர் - 603 203 காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு. தொலைபேசி : +91 44 - 2741 7375. இணையதளம் : **www.srmuniv.ac.in** மின்னஞ்சல் : **tamilperayam@srmuniv.ac.in**
அச்சிட்டோர்	:	ஏசியன் அச்சகம் சென்னை - 600 014.
ISBN	:	978-81-924445-7-4

முனைவர் **தா.இரா. பச்சமுத்து**
புரவலர், தமிழ்ப்பேராயம்.
வேந்தர்,
திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம்
காட்டாங்குளத்தூர் - **603 203.**

SRM UNIVERSITY
(Under section 3 of UGC Act 1956)

வாழ்த்துரை

திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம், வெள்ளிவிழா கண்ட பெருமைக்குரியது. அறிவியல், பொறியியல், மருத்துவ இயல் ஆகிய பல துறைகளை வளர்த்துப் புகழ்பெற்றது.

அது நம் தாய்மொழியாம் தமிழுக்குப் பணிசெய்வது நம் கடன் என உணர்ந்தது. அதனால் தமிழ்ப்பேராயம் ஒன்றைத் தொடங்கித் தமிழ்ப்பணி ஆற்றிவருகிறது. இதனைப் பிற பல்கலைக்கழகங்களும் பின்பற்ற வேண்டும்.

தமிழ்ப்பேராயம் தமிழகத்திலேயே மிக உயரிய விருதுகளையும் பரிசுகளையும் வழங்கித் தமிழறிஞர்களையும் கவிஞர்களையும் படைப்பாளிகளையும் ஊக்குவித்து வருகிறது.

அவற்றுடன் தமிழை இழிவுபடுத்தவோ, தமிழை வீழ்த்தவோ நினைப்போரைத் திருத்துதலும் தமிழின் சீர்மையையும் நீர்மையையும் காப்பாற்றுதலும் நம் கடனாகும்.

அவ்வகையில் தமிழ் பற்றி மிகமிகத் தரக்குறைவாக எழுதிய ஓர் ஆங்கில நூலுக்கு மறுப்புரையாக, இந்நூலை வெளியிட்டு உலகெல்லாம் பரப்ப முயல்கிறது. இம் மறுப்புரை நூலை மிக முயன்று எழுதிய மூதறிஞர் தமிழண்ணல் அவர்களை வாழ்த்துகின்றேன்.

தமிழ் மக்கள் இத்தகைய நூல்களையும் நன்கு கற்று, தமிழின் சிறப்பைக் காப்பாற்றுவார்களாக!

தா. இரா. பச்சமுத்து

முனைவர் **மு. பொன்னவைக்கோ**
தலைவர், தமிழ்ப்பேராயம்.
துணைவேந்தர்,
திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம்
காட்டாங்குளத்தூர் - **603 203.**

அணிந்துரை

கடந்த காலத்தில் ஆங்கிலேயே ஆட்சியில் சமற்கிருத மொழிக்குத்தான் இந்திய அரசு ஆதரவு தந்தது. தமிழுட்பட்ட அனைத்தையும் வட்டார மொழிகள் என வரிசைப்படுத்தியது.

பேரறிஞர் கால்டுவெல் முயற்சியால் திராவிட மொழிக் குடும்பத்தின் பெருமை வெளிப்பட்டது. அவற்றில் தமிழ் மூத்த மொழி என்பதும் செழுமைமிக்க செந்தமிழ் என்பதும் விளக்கப்பட்டது.

இந்திய மொழிகளில் சமற்கிருத மொழியைவிடச் சிறந்தது தமிழ் என்பது விளங்கியது. தமிழ்ப் பேரறிஞர் வி.கோ.சூ. 'உயர்தனிச் செம்மொழி' (*Classical Language*) என்று கூறி, தமிழ் வடமொழிக்குத் தாய் என்று நிலைநாட்டினார்.

இந்நிலையில் கடந்த **2004** செப்டம்பர் மாதம் **10**ஆம் நாள் இந்திய அரசு, தமிழை ஒரு 'செவ்வியல் மொழி'(*Classical Language*) என அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

சிலருக்கு இது ஒவ்வாமை ஆயிற்று. தொல்லியல் துறை திரு. ஆர்.நாகசாமி '*The Mirror of Tamil and Sanskrit*' என ஆங்கிலத்தில் எழுதி **2012**-இன் தொடக்கத்தில் வெளியிட்டு, தமிழ் செவ்வியல் மொழி என்பதை, மறுப்பார்போலத் தமிழுக்கு எதிரான பல கருத்துகளை எழுதித் தமிழை இழிவுபடுத்தியுள்ளார். இது இணையதள வழியாகவும் உலகெங்கும் பரப்பப்படுகிறது. தமிழ் அறியாத நாட்டவர் இதை நம்பிவிடுவர் என்பது அவர் எண்ணம்.

அவர் தனது அரைகுறை அறிவால் தன் நூலில் உளறியுள்ளவை பின்வருமாறு :

1. *தமிழ் தன் ஆற்றலால் செவ்வியல் மொழி ஆகவில்லை. சமற்கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளிடமிருந்து கடன் பெற்று வளர்ந்து செவ்வியல் மொழி எனப்படுகிறது.*

2. *தொல்காப்பியம் இலக்கண நூலன்று; பரத முனிவரைப் பின்பற்றி எழுதப்பட்ட நடனப் பாடல்களுக்கான கருத்தமைந்த தொகுப்பு அது.*

3. *சிலப்பதிகாரம் வரலாற்றுக் காப்பியம் அன்று; அது முழுவதும் புனைந்து கட்டப்பட்ட ஒரு புனைகதை இலக்கியம். (It is not a historic ethic, but a creative work). அது முழுவதும் நாட்டியப் பாடல்களின் தொகுப்பு.*

4. *தமிழ் எழுத்துகள் பிராமி என்ற கல்வெட்டு எழுத்துகளைப் பார்த்து வடிவமைக்கப்பட்டன.*

5. *தமிழர் பாவும் பரதமுனிவரின் 'யமகம்' என்ற மடக்கணியைக் கொண்டே வளர்ந்துள்ளது.*

6. *தமிழர்கள் வேதக் கடவுளர்களையே வணங்குகின்றனர்.*

7. *தமிழர்க்கு எனத் தனி வாழ்வுநெறி இல்லை. வடமொழி வேதநெறி மரபு வாழ்வையே பின்பற்றி வாழ்கின்றனர்.*

8. *தமிழரின் கலை, இசை, நடனம், இலக்கியம் எல்லாம் கடன் பெற்றவையே.*

9. *காலந்தோறும் தமிழ் சமற்கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளிலிருந்து கடன் பெற்று வளர்ந்தது. அதிலுள்ள ஐந்நிலம் என்பது உண்மையான நிலப்பாகுபாடன்று. அது நாடகத்தின் சுவையை மிகுவிக்கப் போடும் பின்னணித்திரை போன்றது.*

தமிழ் அகம், புறம் பற்றிய பாடல்கள் அனைத்துமே நாட்டியமாடப் பின்னணியாகப் பாட எழுதப்பட்ட பாடல்களைப் போன்றனவே ஆகும். எதுவும் உண்மையான வாழ்வு நெறியினின்று கிளைத்தது அன்று.

10. பொதுவாக நாம் இன்று சிறப்புடன் போற்றும், தமிழ்சார்ந்த அனைத்தும் கற்பனைகளே. இவற்றை உண்மை என நம்பித் தமிழ் உயர்வு பற்றிப் புகழ்தல் எல்லாம் தவறு.

இவ்வாறு மனம் போனவாறு, ஒருவகை வெறியுடன் தமிழ் மொழியை இழிவுபடுத்தி, ஆங்கிலத்தில் எழுதி உலகெல்லாம் பரப்புகிறார்.

அவரது கருத்துகள் அனைத்தும் தவறானவை என்பது, இந்நூலில் தக்க சான்றாதாரங்களுடன் எழுதப்பட்டுள்ளது. இதனைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்கள்வழி வெளியிட்டும், இணையதள வழி உலகெல்லாம் பரப்பியும் தமிழின் சீர்மையைக் காக்க வேண்டும். அதற்காகவே மிக முயன்று முனைவர் தமிழண்ணல் அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார். அவருக்கு நம் வாழ்த்தும் பாராட்டும் உரியனவாகும்.

மு. பொன்னவைக்கோ

பதிப்புரை

தொன்மைமிக்கதும் உலக முதல் தாய்மொழியுமான தமிழ், இலக்கிய இலக்கண வளங்கள் கொண்டதாய் வளர்ந்து செழுமையும் சீர்மையும் சிறப்புற இலங்கியும் துலக்கமுற விளங்கியும் பல்லாயிரம் ஆண்டுகளாக வழங்கி வருகின்ற மொழியாகும். இவ்வினிமைத் தமிழ்மொழி மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட கூட்டத்தார் பல்வேறு காலங்களில் அதனைத் தாழ்த்தியும் இழித்தும் பழித்தும் புன்மைப் புழுதிவாரித் தூற்றுவதுமான அடாத செயல்களில் ஈடுபட்டு வந்தனர்; இன்றும் அச்செயல்கள் தொடர்கின்றன.

இவர்கள் தமிழ் மக்களிடையே மூடநம்பிக்கை என்னும் முடைநாற்றத்தைப் பயிரிட்டு அன்று அரிய பல தமிழேடுகளைத் தீயிலிட்டும் தீ முரணிய நீரிலிட்டும் அழியச் செய்தனர். தமிழ் இசை, ஆடல், பாடல், ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, மருத்துவம் முதலான செல்வங்களைத் தமிழிலிருந்து தம் மொழிக்குப் பெயர்த்துக்கொண்டு மூலத்தை அழித்துத் தமிழ், இவை எல்லாவற்றையும் தம்மிடமிருந்தே பெற்றது என்று கதை கட்டினர். ஆட்சியினர் துணையுடன் கோயில்களைக் கைப்பற்றி அங்கிருந்தும் தமிழை விரட்டி விட்டனர்.

“ஆரியத்திற்கு மூலம் தமிழே; சமற்கிருதம் ஓர் அரைக் கலவைச் செயற்கை மொழி” என நிறுவுவார் மொழிநூல் மூதறிஞர் பாவாணர். அத்தகைய சமற்கிருதத்தைத் தமிழினுள் தங்கு தடையின்றித் தாராளமாகவும் ஏராளமாகவும் ஆட்சியினர், இரண்டகர் துணையுடன் வலிந்து திணித்து, ‘மணிப்பிரவாள நடை’ என்றே ஒன்றை உருவாக்கி உலவவிட்டு வளர்த்துத் தமிழின் தனித்தன்மையைச் சீர்குலைத்தனர். ‘ஆரியம் நன்று; தமிழ் தீது’

என்று திமிருடன் திரிந்தனர். 'தமிழ் நீசமொழி' என்று வாய் கூசாமல் கூறினர். திருக்குறளைத் 'தீக்குறள்' என்று சொன்ன வைதீகத் தலைவரும் இருந்தார்.

பொய்யைப் பலமுறை சொன்னால் அது மெய்யாகி விடும் என்று செயற்படும் இத்தகைய இழி குணத்தார் கூட்டத்தில் அண்மையில் ஒருவர் சேர்ந்துள்ளார். நாகசாமி என்னும் அவர் '*The Mirror of Tamil and Sanskrit*' என்ற தனது நூலில் "தமிழ் சமற்கிருதத்திலிருந்து படிப்படியாகக் கடன்பெற்று மிக விரைந்து முன்னேறிச் செவ்வியல் மொழி ஆகிவிட்டது; தொல்காப்பியம் இலக்கண நூலன்று; சிலப்பதிகாரம் கட்டுக்கதை" என்றெல்லாம் மனம் போனபடி, பொய் மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டித் தமிழைத் தாழ்த்தி இழிவுபடுத்தியுள்ளார்.

தமிழ்மீது இத்தகைய தாக்குதல்கள் தொடுக்கப்படும் பொழுதெல்லாம் தமிழ்ச் சான்றோரும் தமிழுணர்வாளர்களும் துடித்தெழுந்து அவற்றைத் தவிடுபொடியாக்கித் தமிழைக் காத்து வருகின்றனர். செயற்கையாக உருவாக்கப்பட்ட மணிப்பிரவாள நடை, தமிழரால் தீண்டப்படாமல் தானே அழிந்தொழிந்தது. பரிதிமாற்கலைஞர், மறைமலையடிகள் ஆகியோரால் உருவாக்கப்பட்டு மொழிஞாயிறு பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் போன்றோரால் தொடரப்பட்டுத் தமிழுணர்வாளர் அனைவராலும் போற்றப்பட்ட தனித்தமிழியக்கம் தமிழ்ப்பகைவர் கெடுநோக்கங்களைச் சிதறடித்தது. இப்போது நாகசாமியாரின் இந்த நூலுக்கும் இவ்வெதிர்ப்பு வலுவாகக் கிளம்பியுள்ளது. அவ்வகையில் அவருடைய பொய்யுரை நூலுக்கு மூதறிஞர் தமிழண்ணல் ஐயா அவர்கள் அரிதின் முயன்று தக்க சான்றுகளுடன் இந்த மறுப்பு நூலைத் தமக்கே உரிய முறையில் துலக்கமாகவும் விளக்கமாகவும் விரிவாகவும் படைத்துள்ளார்.

தமிழுக்குப் பல ஆக்கப் பணிகளைச் செய்யும் பொருட்டு இப்பல்கலைக்கழகத்தின் மாண்பமை **வேந்தர்** அவர்களால் நிறுவப்பட்டுள்ள தமிழ்ப்பேராயத்தின் தலைவராக, இத்தமிழ்ப் பணிகள் செவ்வனே நடைபெறப் பெரிதும் பாடுபடுகின்ற மாண்பமை **துணைவேந்தர்** அவர்கள் திரு. நாகசாமியின் நூலுக்குத்

தகைமைசால் தமிழறிஞர்கள் மறுப்பு எழுத வேண்டும் என்றும் அந்த மறுப்பு நூலைத் தமிழ்ப்பேராயத்தின் சார்பில் வெளியிட வேண்டும் என்றும் பெரிதும் விழைந்தார். அவர்தம் பெருவிழைவு தமிழ்ப்பகைவர் செருக்கடங்க இப்பொழுது கனியாகி நனிநன்றாக விளைந்துள்ளது.

மூதறிஞர் தமிழண்ணல் அவர்கள் தமிழிலக்கிய, இலக்கண ஆராய்ச்சியில் மூழ்கித் திளைத்தவர்; நுண்ணிய நூல் பல தீட்டித் தமிழன்னைக்கு மகுடம் சூட்டியவர். அவர், இந்நூலில் நாகசாமியின் திரிபுரைகளுக்கும் பொய்யுரைகளுக்கும் விரிவான மறுப்புரைகளைத் தந்துள்ளார். கால்டுவெல், பி.டி.சீனிவாசனார், பரிதிமாற் கலைஞர், ஆல்பர்ட் சுவைட்சர், தனிநாயக அடிகளார், ஏ.கே.இராமநுசன், உ.வே.சா., அப்பாத்துரையார், ஜார்ஜ் எல். ஹார்ட் முதலான அறிஞர் பெருமக்களின் ஆய்வுரைகளிலிருந்தும் தமிழிலக்கியங்களிலிருந்தும் சான்றுகளையும் தரவுகளையும் அடுக்கடுக்காக எடுத்துரைத்துத் திரு. நாகசாமிக்கு அறிவு கொளுத்துகிறார்.

அணிக்கும் யாப்புக்கும் வேறுபாடு அறியாத திரு. நாகசாமியின் அறியாமையை அழகுபட வெளிப்படுத்துகின்றார். “சிவன், முருகன், காளி முதலானோர் வேதக்கடவுளர்; தமிழர் வேதநெறியைப் பின்பற்றினர்” என்பன போன்ற திரு. நாகசாமியின் திரிபுரைகளை - எத்து வேலைகளைத் தவிடுபொடி ஆக்குகிறார்; சமற்கிருதம்தான் தமிழின் துணையைப் படிப்படியாகப் பெற்று வளர்ந்தது என்ற உண்மையைச் சான்றுகளுடன் எடுத்துரைக்கின்றார். நாகசாமிக்குத் தமிழ், சமற்கிருதம் இரண்டிலுமே புலமையோ அறிவோ சரிவர இல்லை என்ற உண்மையைச் சான்றுகளுடன் தெற்றெனப் புலப்படுத்தும் தமிழண்ணல் அவர்கள் திரு. நாகசாமி மனம் மாறித் தன் நூலைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுவதே அவரது அறிவுக்கு உகந்ததாகும் என்று அறிவுரைக்கின்றார். இத்தகைய சிறந்த நூலைத் தமிழ்ப்பேராயம் வழி அவர் வெளியிட இசைவு தந்தமைக்கு நன்றி பாராட்டுகிறோம்.

திரு. இரா. நாகசாமியின் நூல் ஆங்கிலத்தில் வந்துள்ளதால் அதன் மறுப்பு நூலை ஆங்கிலத்திலும் வெளியிட வேண்டும்

என்ற பேரவாவில் மாண்பமை **துணைவேந்தர்** *அவர்கள் அப்பணியை நுண்மாண் நுழைபுலமிக்க பேராசிரியர் முனைவர்* **கு.வெ.பாலசுப்பிரமணியன்** *அவர்களிடம் ஒப்படைத்தார். அவர் தமிழ்ப்பேராயத்தின் செயலர் பேராசிரியர் முனைவர்* **பீ.மு. அபிபுல்லா** *அவர்களின் ஒத்துழைப்புடன் இப்பணியைச் செம்மையாகவும் சிறப்பாகவும் விரைந்து செய்து முடித்துள்ளார். இவ்விருவரும் நூலாசிரியரின் இசைவு பெற்று மேலும் சில தரவுகளை நூலினுள் சேர்த்துத் தக்க மாற்றங்களைச் செய்துள்ளனர். இவ்விரு பேராசிரியப் பெருமக்களுக்கும் பதிப்புத்துறை நன்றி தெரிவித்துக்கொள்கிறது.*

"**கெடல் எங்கே தமிழின் நலம் - அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!**" *என்பது பாவேந்தர்தம் ஆணை. அத்தகைய கிளர்ச்சியுள்ளம் கொண்டு தமிழ் காக்கும் தமிழுணர்வாளர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படும். தமிழ்ப் பகையைத் தம் நெஞ்சத் தழலிலிட்டுப் பொசுக்கவும் தமிழெதிரிகளைத் தனிப்படுத்தவும் இந்நூல் தமிழ் மக்களைத் தூண்டும் என்ற நம்பிக்கையில் இந்நூலை வெளியிடுவதில் பெருமைகொள்கிறோம்.*

கி. குணத்தொகையன்
பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

இயல் - 1	இரா. நாகசாமியின், தருக்கத்துக்குப் புறம்பான, முறையற்ற வாதங்கள்	17
இயல் - 2	உலக இலக்கியங்களிடையே தனித்தொளிரும் தமிழ் இலக்கியம்	41
இயல் - 3	நாகசாமியின் தொல்காப்பியம் பற்றிய கருத்துக்கள்	51
இயல் - 4	தமிழின் தொன்மை	63
இயல் - 5	நெஞ்சார்ந்த பொய்	91
இயல் - 6	அணிக்கும் யாப்புக்கும் வேறுபாடறியாத ஆய்வறிஞர்	105
இயல் - 7	சிவன், முருகன், துர்க்கை, வேதக் கடவுளர்கள் அல்லர்	119
இயல் - 8	வேதநெறி வாழ்வு வீழ்ந்த வரலாறு	141
இயல் - 9	வேதியர் சிலரின் வெளிவேடம்	153
இயல் - 10	சமயத்துறையிலும் முரண்பட்டவை	165

முன்னுரை

உணர்வுள்ள தமிழர்களுக்கு,

தொல்லியல் துறைஞர், இரா. நாகசாமி அண்மையில் '*The Mirror of Tamil and Sanskrit*' என ஒரு நூலை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

தமிழ் செவ்வியல் மொழி என நடுவணரசு 'அதிகாரப்பூர்வமாக' அறிவித்தது, அவருக்கும் அவரைச் சார்ந்து இப்படி ஒரு நூலெழுதத் தூண்டியவர்களுக்கும் தாங்கவில்லை.

எவ்வாறேனும் தமிழைத் தாழ்த்தி எழுதி உலகில் பரப்பி விடவேண்டும் என்ற துடிப்பில் கண்டதை எல்லாம் எழுதிக் குவித்துள்ளார்.

இது ஆங்கிலத்தில் இருப்பதால் தமிழ்நாட்டில் அதிகம் பரவாது. வெளி நாட்டவரைக் குழப்பப் பெரிதும் உதவும். தமிழின் சீர்மை முழுதும் அறியாத அவர்கள் இதையே நம்பிவிடுவர்.

"தமிழ் தன் அளவில், ஆற்றலில் வளத்தில் சிறந்து 'செவ்வியல் மொழி ஆகிவிடவில்லை. இலக்கியம், கலை, இலக்கணம், பண்பாடு, நாகரிகம் என அனைத்திலும் - சுயமாக எதுவுமின்றி - எல்லாவற்றிலும் சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளிடமிருந்து, படிப்படியாகக் கடன் பெற்று வளர்ந்து, இன்று செவ்வியல் தகுதியைப் பெற்றுள்ளது" என்று நிறுவுதற்கு நூல் முழுவதும் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், அகத்திணை என அனைத்தையும் இழிவுபடுத்தி எழுதியுள்ளார்.

நூலில் தொட்ட இடமெல்லாம் தமிழுக்கு என்று எழுத்து இல்லை, இலக்கியமில்லை, இலக்கணமில்லை என்றே எழுதுகிறார். தமிழர்தம் வாழ்வு முறையே, வேத வைதிக வாழ்வுமுறைதான் என்று கூறுகிறார்.

கடன் வாங்குவதில் திறமை காட்டி, விரைந்து வாங்கி, அவற்றைத் தனதாக்கிக் கொண்டு தமிழ் இன்று "செவ்வியல்" தகுதிக்கு வளர்ந்து விட்டதாம்.

புதுவையில் 'மணற்கேணி' இதழ் சார்பாக மாபெரும் மறுப்புக் கூட்டம் நடைபெற்றுள்ளது. அறிஞர் பலர் நாகசாமி நூலை மறுத்துப் பேசியுள்ளனர்.

எனக்கு மறுப்பெழுதும் எண்ணம் முன்னமே எழுந்ததால், நான் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, முனைவர் ச.சு. இராமர் இளங்கோ, மேற்படி ஆங்கில நூற்படி ஒன்றை வாங்கி அனுப்பி இருந்தார்.

அதை முழுவதும் படித்து, முக்கியமான இயல்களுக்கெல்லாம், நாகசாமி கருத்தை அவ்வாறே எடுத்தெழுதி, மறுப்பையும் எழுதியுள்ளேன்.

பெரிதும் மேனாட்டார் கருத்துக்களையே மறுப்புரைகளில் தந்துள்ளேன்.

இந்நூலை திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயம் வழி வெளியிட, அதன் தலைவரும் துணைவேந்தருமான பேராசிரியர் முனைவர் மு.பொன்னவைக்கோ அவர்கள் விரும்புவதாக முனைவர் இராமர் இளங்கோ கூறினார்.

இம்மறுப்புரை நாடெங்கும் பரவ ஆவன அனைத்தும் செய்வோம் என்றார்.

இந்நூல் பரவி, தமிழர்களில் குறிப்பிடத்தக்க சிலரேனும் மான உணர்ச்சி பெற்று, இவ்வளவு துணிச்சலாகக் கண்ட குப்பையைக் கொட்டியவரைக் கண்டிக்கவும், மேற்கொண்டு யாரும் தமிழை இழிவுபடுத்தாவாறு காக்கவும் முன் வருவரேல், அது நான் மிகத் தேடித்தொகுத்து, அரும்பாடுபட்டு எழுதிய இம் மறுப்புரை நூலுக்குக் கிடைத்த பயனாகும்.

இந்நூலின் மெய்ப்புத் திருத்தவும் பிறவாறும் உதவிய பேராசிரியர் உல. பாலசுப்பிரமணியனுக்கு நன்றியுடையேன். அன்புள்ள இராமர் இளங்கோவின் தூண்டுதலும் இந்நூல் வெளிவரக் காரணமாகும். இதனை வெளியிட இசைந்த தமிழ்ப்பேராயத் தலைவர், துணைவேந்தர் முனைவர் மு.பொன்னவைக்கோ அவர்களுக்கு நான் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

01.01.2013 **தமிழண்ணல்**

மதுரை - 625 020.

இயல் - 1

இரா. நாகசாமியின், தருக்கத்துக்குப் புறம்பான, முறையற்ற வாதங்கள்

2012ஆம் ஆண்டின் தொடக்கத்தில், நாகசாமி ஆங்கிலத்தில் 'தமிழையும் சமஸ்கிருதத்தையும் காட்டும் கண்ணாடி' (The Mirror of Tamil and Sanskrit) என்னும் நூலை வெளியிட்டுள்ளார். இவரது இப்புதிய நூல் முழுவதும் இழையோடும் அடிக்கருத்து, தமிழ் தன் சிறப்புத்தன்மைகளால் வளர்ந்து, செவ்வியல் மொழி (Classical Language) என்னும் தகுதியைப் பெற்றுவிடவில்லை, இது வடமொழியைச் சார்ந்து, தொன்றுதொட்டு, ஒவ்வொரு படிநிலை வளர்ச்சியிலும் அம்மொழியிடமிருந்து கடன்பெற்று இச்சிறப்பை அடைந்தது என்பதாகும்.

தமிழ் தனித்தன்மையுடன் வளர்ந்ததும் தனக்கென்று பல தனித்த சிறப்புத்தன்மைகளைக் கொண்டதுமான மொழி எனச் சொல்வது தவறாகுமாம். ஒவ்வொரு துறையிலும் அதாவது இலக்கணம், இலக்கியம், யாப்பு வடிவம், அணிநலன்கள், இசை, நாட்டியம் முதலான கலைகள், சமயம், வழிபாடுகள் என அனைத்திலும் சமஸ்கிருத வேதமரபையும் அம்மொழியின் துணையையும் பெற்றே தமிழ் செவ்வியல் தகுதியைப் பெற்றதாம். தமிழை நடுவணரசு சமஸ்கிருத மொழிக்கு இணையாகச் செவ்வியல் மொழி என 2004இல் அறிவித்ததைத் தாங்கமாட்டாமல், இவ்வாறு ஒரு நூலை எழுதத் துணிந்தாரோ என்ற ஐயம் எழுகிறது. இவர் வடமொழியிலும் தமிழிலும் அரைகுறையான அறிவே பெற்றுள்ளார். அதனால் தமிழில் சிறப்புடைய எதைப் பார்த்தாலும் அதன் அடிப்படை சமஸ்கிருதம் போலவே தோன்றுகிறது. இவர்

காட்டும் கண்ணாடியும் பழுதுபட்டது. இவருடைய நோக்கிலும் பிழைகள் ஏற்பட்டு விட்டன.

தம் நூலைத் தொடங்கும் போதே இவரது ஆழ்மனத்தில் கிடந்து இவரை ஆட்டிப் படைக்கும் சமஸ்கிருதப் பாசம் வெளிப்பட்டுவிடுகிறது. அது இவரைத் தமிழ்மொழியை முழுவதும் தவறாகப் பார்க்கவைத்துவிட்டது. இந்நூல் தமிழ் மொழியைப் பற்றி அறியாத அனைவரையும் தமிழைத் தவறாகக் குறைத்து மதிப்பிட வைத்துவிடும்.

எனினும் இந்தக் கெடுமுயற்சிகளால் தமிழின் சிறப்பை மறைத்துவிட முடியாது. மாறாக இவரது தவறான நோக்கத்தைக் கண்டு உலகம் எள்ளி நகையாடும். நடுவுநிலை தவறாத புலமை மிக்க அந்தணர்களையும் இவர் அரைகுறை அறிவால் தலைகுனிய வைத்துவிட்டார். தாய்த் தமிழைத் தாழ்த்திவிட முடியும் என்ற இவரது முயற்சி, இவருக்கே தீராப் பழி தேடித்தரும் என்பதுதான் உண்மை.

இவருக்குத் தொல்பொருளாய்வில் பழகிய அறிவுண்டே தவிர, வடமொழியிலும் புலமை இருப்பதாகத் தெரியவில்லை, தமிழில் தொல்காப்பியம், சங்க இலக்கியம், இரட்டைக்காப்பியம் போன்றவற்றின் அறிமுகம் கூட இருப்பதாக, இவர் எழுத்தில் வெளிப்படவில்லை. பரத முனிவரையே திரும்பத் திரும்ப மேற்கோள் காட்டுவதும் வடமொழிபற்றி வந்துள்ள தவறான ஆய்வு நூல்களிலிருந்து சிலவற்றை எடுத்தாள்வதும் இவரது அறியாமையை இனங்காட்டி விடுகின்றன.

தம் நூலை அவர் இவ்வாறு தொடங்குகிறார்.

"*Citing extensively from Ancient Sangam Tamil works and also the Ancient Tamil grammar, this book establishes for the first time that Tamil attained Classical status by adapting Vedic and Sanskrit traditions, especially with the help of Brahmins in the formative stages, and demonstrates that it rapidly progressed as a result of borrowing.*" (*Author's Preface*)

பிராமணர்களின் உதவியால் வேத மரபுகளையும் சமஸ்கிருத மரபுகளையும் தழுவிக்கொண்டு கடன் பெற்றுத் தமிழ் வளர்ந்து, செவ்வியல் செம்மொழி என்ற தகுதியைப் பெற்றது என்பதை இந்நூல் முதன் முறையாக நிறுவுகிறதாம். சங்க நூல்கள், பழந்தமிழ் இலக்கணம் இவற்றிலிருந்து மிகுதியான சான்றுகள் காட்டி நிறுவ முயல்கிறாராம். இவ்வாறு கடன் பெற்றதன் மூலம் தமிழ்மொழி மிக விரைவாக வளர்ந்ததாக இந்நூல் விளக்குகிறதாம்.

“இந்தியாவில் எல்லா மாநிலங்களும் அவ்வவற்றுக்குரிய மொழிகளைப் பெற்றுள்ளன. அது போலவே தான் இம்மாநிலமும் தனக்கென்று ஒரு மொழியைப் பெற்றுள்ளது. ஒரு வேறுபாடு என்னவெனில், தமிழ் தன்னிடம் வருவனவற்றை உடனே கடன் வாங்கிக் கவர்ந்து கொள்ளும் தன்மையுடையது. அதனால் அழகிய செவ்வியல் செம்மொழியாக வளர்ந்துள்ளது” என்று நாகசாமி குறிப்பிட்டுள்ளார்.

சிவன், திருமால், முருகன், துர்க்கை, காளி, வருணன், இந்திரன், இராமன், பலராமன் முதலான வேதக் கடவுளரைத் தமிழர்கள் ஏற்றனராம்.

சிவன், முருகன், துர்க்கை, காளி ஆகியவை வேதக் கடவுளர்கள் என்பதை, வேத மூல நூல்களிலிருந்து சான்று காட்டி நாகசாமி நிறுவ வேண்டும். தமிழர்களிடமிருந்து அவர்கள் கடன் பெற்ற பிறகு தோன்றிய நூல்களைக் காட்டுதல் கூடாது.

தம்முடைய கூற்றை நிறுவத் தவறான சில சான்றுகள் தவிர, கூடுதலாக, எவ்வகைத் தகுதிவாய்ந்த சான்றும் இவரால் காட்டப்படவில்லை. நாகசாமியின் உள்ளக் கிடக்கை இதன் மூலம் நன்கு விளங்கும்.

இவ்வாறு வடமொழியிலிருந்து தமிழ் கடன் பெற்றதாக, காலங்காலமாகக் கூறி வரும் சமஸ்கிருத ஆர்வலர்களுக்கு இதில் ஓர் ‘அற்ப’ மகிழ்ச்சி.

மேனாட்டாருள் சமஸ்கிருத அறிமுகமும் கல்வியும் உடையவர் பலர். அவர்கள் தமிழ்பற்றி அறவே அறியார்.

நாகசாமி எழுதியுள்ள இந்நூல் போன்ற நூல்களால் கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக மேனாட்டாரின் தமிழ்பற்றிய பார்வைகள் குறைவுடையனவாகவும் தவறாகவும் அமையலாயின.

களப்பிர, பல்லவர் காலத்தில் சமஸ்கிருத வல்லாண்மை உச்சியிலேறி அரசு மொழியாய் ஆட்சிமொழியாய் ஐந்து நூற்றாண்டுகள் கோலோச்சியது. இன்றைய ஆங்கில வல்லாண்மையைவிடப் பலமடங்கு ஓங்கி நின்றது. தமிழர்களிடமும் சமஸ்கிருத மோகம் தழைத்தோங்க வேண்டியதாயிற்று. ‘வடமொழி கற்றால்தான் வாழ்வு’ என்ற நிலை உருவானது.

இக்காலத்தில் மேற்குறித்த வல்லாண்மையர் தமிழ் ஆகமங்கள் உட்பட தமிழரின் சமயம், கலைகள் சார்ந்த அனைத்தையும் சமஸ்கிருத, பிராகிருத மொழிகளில் மொழியாக்கம் செய்துகொண்டு தமிழ் மூலநூல்களை அழித்துவிட்டனர். இங்கிருந்து கொள்ளைகொண்டதை அப்படியே திருப்பி, அங்கிருந்து அவை தமிழுக்கு வந்தன எனக் கூசாமல் கூறி வந்தனர். நாகசாமி இதே கூற்றைத்தான் திருப்பிச் சொல்லி வருகிறார். இன்றைய ஆய்வுகளில் இந்தத் தவறுகள், சிறிது சிறிதாக அறியப்பட்டு, தமிழே அனைத்திற்கும் மூலம் என நிறுவப்பட்டு வருகிறது.

இச்சூழலில் நாகசாமி மீண்டும் பழைய பல்லவியை இந்நூலில் பாடியுள்ளார். எதை எடுத்தாலும் இது வடமொழியிலிருந்து கடன் பெற்றது என எழுதும் இப்பழக்கம் சென்ற நூற்றாண்டுக்கு முன்பு வரை நீடித்தது. தமிழ்ப் பேரறிஞர் வி.கோ. சூரிய நாராயண சாத்திரி (பரிதிமாற்கலைஞர்) குறிப்பிட்டிருப்பது போலக் (தமிழ் மொழியின் வரலாறு) களப்பிர, பல்லவர்களின் வல்லாண்மைக் காலத்தில், தமிழை அழிப்பதற்கும் சமஸ்கிருதத்தைப் புகுத்தவும் நடந்த சூழ்ச்சிக் கொடுமைகள் கணக்கில.

திருக்குறளையே வடமொழி அர்த்த சாத்திரத்தையும் காமசூத்திரத்தையும் பார்த்து எழுதப்பட்ட நூல் என்றனர்.

திருவள்ளுவரையே ஸ்ரீவல்லப என வடமொழியாளர் ஆக்கக் கதைகட்டிப் பார்த்தனர். திருவிளையாடற்புராணம் மதுரையைச் சுற்றி நடந்த வரலாறு, நாட்டுமக்களின் கதைகளிலிருந்து எடுத்தவற்றை உள்ளடக்கியது. தமிழ்ச் சங்க வரலாறு உள்ளிட்டவை பற்றிய தமிழ்நூல். இதைக் கூசாமல் வடமொழி ஹாலாஸ்ய மகாத்மியம் என்ற நூலின் மொழி பெயர்ப்பு என்றனர். பெரிய புராணம் தமிழரின் தேசிய நூல் எனத்தகும். அதனை மிகத்துணிச்சலாக, சமஸ்கிருத உபமன்யு பக்த விலாசம் என்ற நூலின் தமிழாக்கம் என்று கூறினர்.

இசை, நாட்டியம், இலக்கியம் உட்பட அனைத்திலும் தமிழைத் துணைகொண்டு, அதாவது தமிழ் நூல்களை அழித்துவிட்டு, அவற்றைத் தம்முடையதுபோலக் காட்டி, சமஸ்கிருதத்தைப் போலியான செவ்வியல் மொழியாக்கினர். இந்தப் பொய்யை நிறுவுவதற்காக சமஸ்கிருதம் நிலைநின்றதா? ஆனால் அது பிறப்பு, இறப்புப் போன்ற நிகழ்வுகளில் சமயச் சடங்காற்ற மட்டும் பயன்படுகிறது. அதன்மூலம் சடங்காற்றுவோர் வாழ்வுதான் உயிர்த்திருக்கிறது. கடன் பெற்றும் கொள்ளை கொண்டும் அரைகுறை வளர்ச்சி கண்ட சமஸ்கிருதத்தை விட்டுவிட்டு, நாகசாமி தமிழ், கடன் பெற்று வளர்ந்தது என்பது விந்தையே. தமிழுக்கு வழங்க சமஸ்கிருதத்திடம் எதுவுமே இல்லை; எதையும் கடன்பெறும் தேவையும் தமிழுக்கு இல்லை.

வேறு ஒன்றும் வேண்டாம். செருமன் நாட்டுப் பேராசிரியர் *H.W.Schomerus* என்பவர் செருமன் மொழியில் எழுதி, *Mary Law* என்பவர் மொழிபெயர்த்து '*Saiva Siddanta*' என ஒரு நூல் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. செருமன் ஆசிரியர் என்ன சொல்கிறார். "*Unlike most works, The Agamas do not emphasis the supremacy of the Brahmins so the Brahmins may well have opposed them, and certainly did see to it that they were not widely known.*

Many Agamas disappeared either being destroyed or not copied and circulated. (*p.*7)

மேலும் இவர் ஆகமம் பற்றி எழுதுவன நூலில் நுழைந்து படிக்க வேண்டியவை. ஆகமங்கள் தமிழருடையன, சமஸ்கிருதமயமாக்கப்பட்டன என்பதை இந்நூலால் அறியலாம்.

நாகசாமி வேத ஆகமவழியில் தமிழர் வாழ்வதாக எழுதுகிறார். வேதமும் ஆகமமும் முற்றிலும் முரண்பட்டவை.

வடமொழி மேலாண்மைக்காலத்தில் சிலர் தமிழர்களின் கோயிற் கலைகள், சிற்பக்கலை, கட்டடக்கலை மற்றும் இசை நாட்டியக் கலைகள் எல்லாவற்றையும் சமஸ்கிருதத்தில் எழுதி வைத்து, அந்த ஆகமங்கள் வழி இவை வடவர்க்கு உரியன என்றும் தமிழர்கள் இவை அனைத்தையும் அவ்வடமொழி நூல்களின் மூலமே கற்றனர் என்றும் பலவாறு கூறித் தமிழைத் தாழ்த்தி மதிப்பிட வழிகண்டனர்.

நாட்டியம் ஆடல் பாடல் இசை எல்லாம் தமிழர்களில் பாணர், பொருநர், விறலியர், கூத்தர் எனப் பல பிரிவினரால் வளர்க்கப்பட்டன. சங்க காலம் முதலே இக்கலைகளைத் தாங்களும் கற்று வாழ வழி தேடிய வடவர் அவற்றுக்குரிய குலத்தினர் எல்லாம் அழிவை நோக்க வழி வகுத்தனர்.

“இன்றைய இசைக்கலை ஆரியர் தமிழரிடமிருந்து கற்றதே... இசையறிவை ஆரியரல்லாதவரிடமிருந்து ஆரியர் கடன் பெற்றதை மறைப்பதற்காகவே சாம வேதத்திலிருந்து இந்திய இசை பிறந்தது எனக் கதை புனைந்தனர்” என ‘இந்திய இசைக்கலை வரலாறு’ எனும் நூலைப்படைத்த கோஸ்வாமி என்னும் அறிஞர் கூறுகிறார்.

கொள்ளை கொண்டவன் தான் கொள்ளையடித்ததைத் தன்னுடையது என்பது போன்றது ஆரியர் செயல்.

தமிழரின் அனைத்து இசைக் கருவிகளையும் ஆரியர் இயக்க அறிந்தனரா? நாட்டியத்தின் மிக முக்கியமான பக்கவாத்தியம் முழவு - மத்தளம். நாகசுரம் எனப்படும் பெருவங்கியக் குழலும் முழவும் நாட்டியத்தோடு சேர்த்து இசைக்கப்படுவன. என்றாலும் அவற்றைக் கற்பது கடினம் என

ஆரியர் விட்டு வைத்தனர். இஃதொன்றே நாட்டியக்கலை தமிழருடையது என்பதற்குப் போதிய சான்றாகும். வடநாட்டில் நாகசுர மேளக்கச்சேரிக்கு எங்கேனும் இடமுண்டா?

சிலப்பதிகாரத்தில், இளங்கோவடிகள் மாதவியின் நாட்டிய அரங்கேற்றம் பற்றிக் கூறுகையில், நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக் காட்டினாள் என்பார். அந்த நாட்டிய நூல் எங்கே? பரதமுனிவரின் நாட்டிய சாத்திரம் தமிழரிடமிருந்து எடுக்கப் பெற்றது என்பதுதான் உண்மை. (பார்க்க, பக். 56-57)

ஆரிய மொழி இந்தியா முழுவதும் பரவியது. சமஸ்கிருதமும் அதன் கிளை மொழிகளுமே இந்திய மொழிக்குடும்பம் என்று கருதப்பட்டன. இந்நிலையில் அருள்தந்தை கால்டுவெல், '*A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages*' என்ற நூலை வெளியிட்டார்.

இந்நூல் பலர் கண்களையும் திறந்தது. சமஸ்கிருதத்துக்கு மிக முந்தியதாகிய தமிழ்மொழியின் தொன்மையையும் தனித்தன்மையையும் உணரச் செய்தது.

சமஸ்கிருத மொழிக்கு முன்பே - ஆரியர் இந்திய நாட்டில் நுழைவதற்கு முன்பே, இந்தியா முழுவதிலும் நாகரிக வளர்ச்சி பெற்ற திராவிட இனம் இருந்தது. ஆனால் இங்கு வந்த ஆரியர் பண்பாடும் நாகரிகமும் மிகத் தாழ்ந்தவை; முதிர்ச்சியற்றவை. முனைவர் *H.D.* சங்காலியா கூறுகிறார்:

> "இன்றும்கூட 'நாகரிக வரலாறு' எனும் நூல் வேதகாலத்தைக் காட்டுமிராண்டி அல்லது அரைக் காட்டுமிராண்டிக் காலம் என வருணித்துள்ளது. இதற்கு மாறானது சிந்துவெளி நாகரிகம் எனப்படும் சிந்து அல்லது அரப்பா பண்பாடு. ஏனெனில் இந்நாகரிகத்தில் முதன்முறையாக ஒழுங்கமைந்த சமூகத்தை மட்டுமன்றி உயர்ந்த கட்டடங்கள், எழுத்துவடிவின் அடையாளங்கள் ஆகியவற்றையும் காண்கிறோம். (*History of Civilisation in South India by Dr.H.D.Sankalia, in the issue Science Today* (28) *April 1968.*)

இத்தகைய பெருவளர்ச்சி பெற்ற நாகரிகத்துக்கு உரியவர்களாயிருந்த தமிழர்கள் தங்களுக்கென்று எழுத்துமுறையைக் கொண்டிருந்தனர். அவர்கள் பேசிய திராவிட மொழிக் குடும்பத்திற்குத் தமிழே தலைமை முன்னோடியாகும்.

காலப்போக்கில் வடநாட்டில், மௌரியப் பேரரசு, சாணக்கியன் வழிகாட்ட வளர்ந்து, அரசதிகாரமும் அறிவு வன்மையும் பெற்றது. இவ்வளர்ச்சியில் சமஸ்கிருத மேலாண்மை பெருகப் பெருக அது வடநாட்டு வட்டார மொழிகளில் கலந்தது. சமஸ்கிருதமும் பிராகிருதமும் தென்னாடு போந்தபோது தமிழாக வழங்கிய, தமிழுறவு மொழிகளானவை, புதிய அவ்வடமொழி மீது மோகமுற்றுத் திரிந்தன, தெலுங்கு, கன்னடம், மலையாளம் எனத் தமிழை விட்டுப் பிரிந்தன.

வடமொழித் துணை பெற்றுக் கலந்ததால் அவை திரிபுற்றுப் பல மொழிகளான நிலையில், தமிழ் மட்டும் வடமொழித் துணை வேண்டாத அளவு, முன்னரே பெருவளர்ச்சி கண்டிருந்தது. வடமொழியுடன் ஒப்பிடுமளவும் அதற்கு மேலாகவும் வளர்ந்திருந்ததால், வி.கோ.சூ. குறிப்பது போல் அதற்குத் தன் வழியில் தமிழைத் திருப்ப இயலாது போயிற்று. தமிழ் அன்றும் தன் தனிமையைக் காத்து நின்றது, இன்றும் காத்து நிற்கின்றது. இந்நிலையில் அரைகுறையாளர், வடமொழியின் துணையைப் பெற்று, தமிழ் படிப்படியாக மிகுந்த திறமையோடு கடன் வாங்கி, செம்மொழி ஆயிற்று என முதன் முறையாகத் தாமே கண்டு பிடித்துவிட்டதாக மார்தட்டுகிறார். மலையைக் கல்லி எலியைப் பிடித்த அவர், தமக்கு முந்தைய பேரறிஞர்கள் கூற்றுக்களுக்கெல்லாம் விடை சொல்லியாக வேண்டும்.

ஒருவேளை தமிழும் தெலுங்கு கன்னடம் பெற்றது போல், வடமொழியின் துணையை நாடிக் கடன் பெற்றிருந்தால், மற்றொரு திரிபு மொழி உண்டாகித் தமிழ் அறவே அழிந்திருக்கும், "*Tamil attained Classical status by adapting Vedic and Sanskrit traditions, especially with the help of Brahmins in the formative stages, and demonstrates that it rapidly progressed as a result of borrowing*" என்று எழுத அவருக்கு வந்த துணிச்சல் பேதை ஒருவனுக்கு ஏற்படும் துணிச்சல் போன்றது.

கீழ்க்காணும் இரண்டு வரலாற்றுண்மைகள் தமிழ் மண்ணில் பிராமணர்களும் சமஸ்கிருதமும் அடைக்கலம் புகுந்ததை விளக்குவன:

1. *தமிழகத்தை ஆண்டவர்கள் புத்த, சமணத்தை இங்கிருந்து அகற்ற வேத, சமஸ்கிருத மரபை ஏற்பது போல் காட்டினர். தம்மை அண்டிப் பிழைக்கத் தஞ்சம் புகுந்த பிராமணர்களுக்கும் சமஸ்கிருதத்திற்கும் இத்தகைய சூழலில்தான் புகலிடம் கொடுத்தனர்.*

2. *தமிழர்கள் தங்கள் நாகரிகத்தை, கலாச்சாரத்தைச் சிறிதும் விட்டுக்கொடுத்திலர். தானம் என்ற சொல் ஏன்? ஈகை, கொடை, வண்மை, ஒப்புரவு இருக்கவும் இச்சொல் ஏன்? சமணர்களால் அடி உதை பெற்று ஊரையே அழிக்க விட்டு இழந்து தவித்தபோது, இந்த வேத மரபு சார்ந்த பிராமணர்கள் கூட்டம் கூட்டமாக அஞ்சி ஒடுங்கித் தமிழ் மன்னர்களால் காப்பாற்றப்பட்டு, கிராமங்களில் குழுக்களாகக் கூடி வாழ்ந்தனர். திருக்கோயில்களுக்குள்ளேயே தஞ்சம் புகுந்து வாழ்ந்தனர் என்று சம்பந்தரே பாடுகிறார்.*

பிராமணர்கள்தான் வேத வேள்வி மரபு வழிபாட்டைக் கைவிட்டுத் தமிழரின் திருக்கோயில் வழிபாட்டு நெறிக்கு மாறிக்கொண்டு, வயிறு வளர்க்கக் கொள்கையைக் கைவிட்டனர். இந்தச் சூழலில்தான் 'தானம்' என்ற சொல் தமிழுக்குக் கொண்டுவரப்பட்டது. பிராமணர்க்குக் கொடுப்பதே தானம்; தானம் கொடுப்பதே புண்ணியம் என்றனர். இன்றும் இந்நம்பிக்கை உள்ளது. இன்று தமிழரிடம் வேத மந்திரங்களைக் கருமாதியிலும் ஓதி அரிசி, பருப்பு, காய்கறிகளை அள்ளிச் செல்கின்றனர். இத்தகைய இரத்தலில் அவர்கள் வெட்கப்படுவதில்லை. இந்த இழிவை மறைக்கத் தங்களால் மட்டுமே 'தோச நிவர்த்தி' கிட்டும் என்றனர்.

இவ்வாறு அவர்கள் தமிழரை முற்றுமாகச் சார்ந்து தமிழர் நெறிக்குத் திரும்பி வாழ்ந்த நிலையில், தமிழர்கள் வேதமரபு, சமஸ்கிருத மரபுப்படி வாழ்வதாக நாகசாமி எழுதுவது, எந்த நேர்மை உணர்ச்சியுடையவனும் எழுதத் துணியாத ஒன்றாகும்.

தமிழ் வடமொழியிடமிருந்து படிப்படியாகக் கடன் பெற்றுச் செவ்வியல் மொழியானது என்ற கருத்து எத்துணை முட்டாள்தனமானது என்பதற்குச் சில சான்றுகள் காண்போம்.

கால்டுவெல் கருத்து

அருள்தந்தை கால்டுவெல் அவர்கள் கருத்தை ஈண்டு முதலிற் பார்ப்போம்.

"*those languages having borrowed from Sanskrit so largely, and being so habituated to look up to it for help, that it would be scarcely possible for them now to assert their independence. Tamil, however, the most highly cultivated ab intra of all Dravidian idioms, can dispense with its Sanskrit altogether, if need be and not only stand alone, but flourish without its aid.*" (*p.50*).

ஏனைய திராவிட மொழிகள் எல்லாம் மிகக் கூடுதலாகக் சமஸ்கிருதத்திடமிருந்து கடன்பெற்றுவிட்டதால், அவை அம்மொழியின் உதவியின்றி இயங்குதல் இயலாததானது. எனவே தங்கள் தனித்தன்மையை உறுதி செய்ய முடியாதனவாயின.

அனைத்துத் திராவிட மொழிகளிடையே, தமிழ் மிக நன்கு வளர்ந்தது. அது செழுமையுற்ற மொழியானதால், சமஸ்கிருதத்திடமிருந்து முற்றிலும் விடுபட முடியும். தேவைப்பட்டால் அதன் உதவி சிறிதுமின்றியே தனித்து இயங்க முடியும். வேண்டுமெனில் தமிழ் தானே தனித்து இயங்குவதோடு மட்டுமன்றி, அதன் உதவியின்றிச் செழித்து ஓங்க முடியும்.

கடன் பெற்றதால்தான் தமிழ் செம்மொழி ஆக முடிந்தது என்று நாகசாமி கூறுகிறார். பேரறிஞர் கால்டுவெல் அவ்வாறு கடன்பெறா நிலையிலேயே, தமிழ் தன்னளவில் செழித்து வளர்ந்து செம்மொழி ஆக முடியும் என்று கூறுகிறார்.

கால்டுவெல் சமஸ்கிருதம் உள்ளிட்ட பன்மொழி அறிஞர். நாகசாமியால் கால்டுவெல் ஒப்பியல் முறையில் சான்றுகளுடன் கூறியுள்ளதை மறுக்க இயலுமா? அவரது அளவு சமஸ்கிருதப் புலமை தமக்கிருப்பதாகக் கூறத்தான் முடியுமா?

"*The ancient or classical dialect of the Tamil languages, called Shen Tamil (Sen-Damir) or correct Tamil, in which nearly all the literature has been written, contains exceedingly little Sanskrit, and differs from the colloquial dialect, or the language of prose, chiefly in the sedulous and jealous care with which it has rejected the use of Sanskrit derivatives and characters, and restricted itself to pure Ancient Dravidian sounds, forms and roots.*

"*So completely has this jealousy of Sanskrit pervaded the minds of the educated classes, amongst the Tamilians, that a Tamil poetical composition is regarded as in accordance with good taste and worthy of being called classical, not in proportion to the amount of Sanskrit it contains, as would be the case in some other dialects, but in proportion to its freedom from Sanskrit.*" (*p.50*)

தொன்மை மிக்க செவ்வியல் தமிழ் செந்தமிழ் என அழைக்கப்பட்டது. தமிழ் இலக்கியமனைத்தும் செந்தமிழில் செவ்வியல் நடையில் எழுதப்பட்டன. அவற்றில் மிகச் சிறிதளவே சமஸ்கிருதச் சொற்கள் கலந்திருக்கும். அது உலகக்கொச்சை வழக்கிலிருந்தும், உரைநடையிலிருந்தும் வேறுபட அமைந்திருக்கும் (அவை கலந்திரா என்பது கருத்து). முக்கியமாக அவை சமஸ்கிருத ஒலிகளையும் எழுத்துக்களையும் வெறுத்து ஒதுக்கின. அவற்றில் சமஸ்கிருத ஒலிகளும் சொற்களும் குறையக் குறையவே, சிறந்தது என ஏற்கப்பட்டுச் செவ்வியல் என ஏற்கப்பட்டது. (தொல்காப்பியம், சங்க இலக்கியம் பற்றிய அறிமுகமோ, கல்வியோ இல்லாத போது பேரறிஞர் அருள்தந்தை இவ்வாறு எழுதுகிறார்)

பிற்காலத்தில் தமிழ் காலந்தோறும் படிப்படியாகக் கடன்பெற்றே செவ்வியல் மொழி ஆனது என யாரேனும் எழுதக்கூடும் என்று, அவற்றுக்கு மறுப்புரை போல் இவ்வாறு எழுதியுள்ளார்.

காலந்தோறும் அதன் வளர்ச்சி நிலையில் சமஸ்கிருதம், பல்லவப் பேரரசின் ஆட்சி மொழியாக இருந்த போதிலும்,

தமிழ்ப்புலவர்கள் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் சொற்கலப்பினைக் கூட வெறுக்கவே செய்தனர்.

வடமொழி வல்லாண்மைக் காலத்தில், சமயம், இலக்கியம், இலக்கணம் என அனைத்திலும் வயிறு வளர்ப்பான் வேண்டிச் செயல்பட்ட சமஸ்கிருத ஆதரவாளர்களும் அதன் வெறுப்பாளர்களும் இருக்கவே செய்தனர். ஆதரவு காட்டியவர்களும் மறைமுகமாகத் தம் வெறுப்பை உணர்த்தியுள்ளனர். இதனால் எத்துணை முயன்றும் அறிஞர் வி.கோ.சூ. குறிப்பிட்டிருப்பது போலத் தமிழைத் தன் வழியில் திருப்பும் ஆற்றல் சமஸ்கிருதத்திற்கு இல்லாது போனது.

சமஸ்கிருதத்திடமிருந்து காலந்தோறும் கடன்பெற்றுப் படிப்படியாய்த் தமிழ் வளர்ந்து, பிராமணோத்தமர்களின் துணையுடன் செவ்வியல் மொழி என்ற தகுதியைப் பெற்றது என்ற கூற்று நாகசாமி போன்றவரின் விருப்பும் விழைவுமாகும். தமிழர்கள் விழிப்புணர்வுடன் இருந்தால் இவ்வுண்மைகளை உலகம் அனைத்தும் அறியச் செய்வதும் கடினமன்று.

பர்ரோவும் எமனோவும்

டி.பர்ரோ, எம்.பி.எமனோ இருவரும் சமஸ்கிருத அறிஞர்கள், விரிவுரையாளர்களும் கூட. அவர்கள் **1961**இல் வெளியிட்டுள்ள *'A Dravidian Etymological Dictionary'* - திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதியையும் இவர்கள் பார்க்க வேண்டும். நான்கு பெரிய இலக்கிய மொழிகள், பதினான்கு சிறிய மொழிகள் பற்றி ஆராய்ந்து சொற்களைத் தொகுத்துள்ளனர். இவ்வாறு **24** திராவிட மொழிகள், **16** (சமஸ்கிருதம்) இந்தோ - ஆரிய மொழிகளையும் பார்த்துள்ளார்கள்.

இவர்கள் தம் அகராதியில் தமிழுக்கு முதலிடம் தந்து, பிறவற்றைப் பிறகு தந்து, ஒப்பிட்டறியுமாறு விளக்கியுள்ளனர். இது இந்தியா முழுவதும் திராவிட மொழிக்குடும்பம் பரவியிருந்ததை, ஐயத்திற்கு இடமின்றி நிறுவுகிறது.

திராவிட மொழிகளின் குடும்பம் பற்றி **1816**இலேயே இனம் அறியப்பட்டது. *Francis W.Ellis* தான் முதன்முதல்

இதைக் கண்டு கூறினார். பிற திராவிட மொழிகள் எல்லாம் தொடர்ந்து கண்ட பிறகு, இவற்றுக்கு முதன்முதல் திராவிடம் என்ற சொல்லை, அனைத்துக்குமாகச் சேர்த்துப் பெயரிட்டவர், அருள்தந்தை கால்டுவெல் ஆவார். சமஸ்கிருத மொழிக்கு இணையாக, திராவிட மொழிகளும் அதற்குத் தலைமையாகத் தமிழும் விளங்கியதை இது காட்டுகிறது.

வடமொழியிலிருந்து தமிழிற் கலந்தவற்றில் சொற்கலப்பே குறிப்பிடற் பாலது. வடமொழியும் தமிழ்ச்சொற்களைக் கடன் பெற்றமையை இவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பேராசிரியர் ராப்சன்

தமிழ்ச் சொற்கள் சமஸ்கிருதத்தில் இடம்பெற்றிருப்பதைக் கால்டுவெல் உள்ளிட்ட அறிஞர் பலர் எடுத்துக்காட்டியுள்ளனர். தமிழ் / திராவிடப் பண்பாடுகள், கலைகளும் சமஸ்கிருதத்தில் கலந்துள்ளன என எடுத்துரைக்கிறார் பேராசிரியர் ராப்சன் (Rabson).

The aboriginal languages in the South of India were associated with a high degree of culture, and hence it is not surprising to note the presence of the Dravidian element in Sanskrit. It can be easily maintained that much is not found in Latin and Greek but peculiar to Sanskrit alone is due to the contact of the Aryans with the Dravidians.

தமிழின் இசை, நடனம், நாடகம், வழிபாடு போன்ற பண்பாட்டுருவங்கள் சமஸ்கிருதத்தில் காணப்படுவதன் காரணத்தை இவ்வறிஞர் தெளிவாக்கியுள்ளார்.

சீனிவாச ஐயங்கார்

பி.டி.சீனிவாச ஐயங்கார் "History of the Tamils from the Earliest Times to 600 A.D." என்ற நூலைச் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

அவர் தம் நூலின் முன்னுரையில், சமஸ்கிருதத் தொடர்புடைய அனைத்து நூல்களையும் படித்தபின்பு தம் நூலை

எழுதியுள்ளதாகக் கூறுகிறார். இவற்றையும் ஆரிய, திராவிடக் கலப்புப் பற்றிய நோக்கிலேயே படித்ததாகவும் சொல்கிறார். அவர் சொல்வதைக் காண்போம்.

"*The Vedic literature, by which I mean, the Mantras and the Braahmanas* (*which together are the Vedas*) *and the sutras which contain the early concepts of the Aryas with regard to the objects and the conduct of individual and social life, as well as the Ithihasas* (*the Ramayana and the Mahabharata*) *and the puranas, besides the early Pali, Bauddha and the Arddha Maagathi Jaina works i.e., all the available Aryan sources have been ransacked for information.*"(*p.iii*)

ஐயங்கார் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியர். இந்த ஆய்வு நூலை எழுதுவதற்கு ஆரிய இனவழி சார்ந்த அனைத்து நூல்களையும் கற்றுவிட்டு, எழுதியதாக இதில் குறிப்பிடுகிறார். தமிழில் தொல்காப்பியம், சங்க நூல்கள் அறிமுகமான காலக்கட்டம் அது. இருந்தும் அவற்றையும் படித்துள்ளார். நாகசாமி சமஸ்கிருதம், பிராகிருதம் இவற்றின் துணையால் தமிழ் படிப்படியாக வளர்ந்ததெனக் குத்து மதிப்பாகத் தவறான சில சான்றை மட்டும் வைத்துக் கருத்துத் தெரிவித்துள்ளார். ஆனால் சீனிவாச ஐயங்கார் அவர்கள், தமிழ் சமஸ்கிருத மொழி பரவுமுன் வளர்ந்த மொழி என்பதுடன், வாக்கிய அமைப்புப் போன்றவற்றில் அவ்வடமொழிகளுக்குக் கடன் கொடுத்த மொழி எனவும் எழுதுகிறார்.

"*The only legitimate inference from this is that the Tamil language or a language allied to it prevailed upto the North West province in ancient times. This inference is supported by another fact, viz, that the modern dialects of North India, now called Sanskritic or Gaudian, have a fundamental grammatical frame-work and a scheme of syntax, the same as that of the Dravidian dialects so much so that sentences from the one set of dialects can be translated into any one of the other set of dialects by the substitution of*

word for word without causing any breach of idiom. These facts can only prove that people speaking dialects allied to Tamil once inhabited the whole of India.." (*p.2*)

முற்காலத்தில் வடமேற்கே பேசப்பட்ட பிராகுயி மொழி முதல் இந்தியா முழுவதும் பேசப்பட்ட மொழிகள் தமிழைத் தலைமையாகக் கொண்ட திராவிடக் குடும்ப மொழிகளேயாகும். மேலும் வடமொழி முதல், அதன் வழிப்பட்ட இன்றைய வடநாட்டு மொழிகள் வரை வாக்கிய அமைப்பில் தமிழையே பின்பற்றியுள்ளன. இந்த ஆய்வு ஒன்றே தமிழ் காலத்தால் முற்பட்டது என்பது மட்டுமன்றி, வடமொழிகளுக்கெல்லாம் அடிப்படையான வாக்கியக் கட்டமைப்பைத் தந்தது என்பதையும் உறுதி செய்கிறது.

சிந்துவெளி நாகரிகத்தை ஆராய்ந்த ஹீராஸ் பாதிரியார் கருத்தையும் சேர்த்துக்கொள்ளலாம். ஆரியர் வருகைக்கு முன்பு இந்தியா முழுமையும் திராவிடரே வாழ்ந்தனர் என்றும் அவர்கள் பேசிய மொழியில் மிகப்பெரும்பாலான சொற்கள் தமிழ்ச் சொற்களே என்றும் தெளிவாகச் சொல்கிறார் அவர்.

Being Dravidians, the inhabitants of Mohenjodaro and North India naturally spoke a Dravidian language in which the greatest proportion of the words used are found in Tamil. This confirms the common belief that Tamil is the oldest of the present languages. (*Rev. Heras*)

இது போல் நுட்பமாய் ஆராய ஆராய வடமொழிதான் தமிழின் துணையைப் படிப்படியாகப் பெற்று வளர்ந்தது என்ற முடிவுக்கு வர நேரும். ஆனால், நாகசாமி மாறுபடக் கூறுகிறார்.

"*It seems that like all other parts of India, where each region had its own dialect Tamil also has its own dialect, but with this difference that Tamil had an advanced dielect of its own which could assimilate incoming ideas quickly and flower into a beautiful classical language.*" (*Author's preface, p.2*)

“தமிழும் வட்டார மொழிகள் போன்றதே; விரைந்து கடன் வாங்கி வளரும் தன்மை உடைமையால், அது ஓர் அழகிய செவ்வியல் மொழி ஆகிவிட்டது” என்கிறார்.

தமிழின் அழகே கடன் பெற்றதால் வந்ததாம், எத்துணை நயமாக எழுதுகிறார், இந்தத் தொல்லியல் தோன்றல்!

பரிதிமாற் கலைஞர் (வி.கோ.சூ)

வி.கோ. சூரிய நாராயண சாத்திரியார், தமது ‘தமிழ்மொழியின் வரலாறு’ என்ற நூலில், நாகசாமிக்குத் தெளிவுபடுத்துவார் போல் எழுதியுள்ளார்.

“தமிழ்நாட்டில் ஆங்கில அரசாட்சி ஏற்பட்ட பின்னர்த் தாய்மொழியாகிய தமிழை அதன் வழிமொழிகளாகிய தெலுங்கு, கன்னட, மலையாள, துளுவங்களோடு அடக்கி உள்நாட்டு மொழிகள் என வகைப்படுத்தினர் சிலர். தனிமொழி ஒன்றை அதன் வழிமொழிகளோடு வகைப்படுத்தலாமோ? அது முன்னதனை இழிவு படுத்துவதாகாதோ? ஆரிய மொழிகளுள் தலைநின்ற வடமொழியை அதன் பாகதங்களோடு ஒருங்கு வைத்து எண்ணத் துணியாமை போலத் தமிழ் மொழியையும் அதன் வழிமொழிகளோடு ஒருங்குவைத்தெண்ணத் துணியா திருத்தலே அமைவுடைத்தாம்...

“வடமொழி, இலத்தீன், கிரீக்கு முதலியன போலத் தமிழ்மொழியும் உயர்தனிச் செம்மொழியாமாறு சிறிது காட்டுவாம்...

“..ஆகவே தென்னாட்டின்கட் சிறந்தொளிரா நின்ற அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்றான் ஆராய்ந்த வழியும் உயர்தனிச் செம்மொழியேயாம் என்பது நிச்சயம். இவ்வளவு உயர்வும் சிறப்பும் வாய்ந்த அருமைத் தமிழ் மொழியை உள்நாட்டுப் புன்மொழிகளோடு ஒருங்கு வைத்து எண்ணுதல் தவிர்த்து, வடநாட்டுத் தனிச் செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற்போலத் தென்னாட்டுயர்தனிச் செம்மொழி தமிழெனக் கொண்டு புகுதலே ஏற்புடைத்தாம்”. (பக். 71, 72)

வி.கோ.சூ. போன்றவர்களும் இருமொழிப்புலமை மிக்கவர்கள் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். இந்நூலில் வரும் மேலும் இரண்டு, மூன்று கருத்துக்கள் சிந்திக்கத்தக்கன.

ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் தமிழே பேசப்பட்டு வந்தது. பின்னர் வடக்கே அதன் இடத்தைச் சமஸ்கிருதம் கைப்பற்றிக் கொண்டது.

அன்று தென்னாடு முழுவதும் தமிழே பேசப்பட்டு வந்தது. மெல்ல மெல்ல வடமொழி புகுந்து, அதைத் திரிபுறச் செய்து தெலுங்கு, கன்னடம், மலையாளம் என வேறுமொழிகள் ஆக்கி விட்டது. இதை மறைத்து, நாகசாமி தமிழ்மொழி ஒவ்வொரு படிநிலையிலும் சமஸ்கிருதத்தினின்றும் கடன் பெற்று வளர்ந்தது என நிறுவப் பெரும்பாடு படுகிறார். கடன் பெற்றிருந்தால் என்ன ஆகியிருக்கும்? தமிழும் திரிபுற்றுத் தன்னிலை கெட்டு அழிந்திருக்கும். வி.கோ.சூ. குறிப்பிடுவது போலச் சொற்கலப்பு, தவிர்க்க முடியாததாயிற்று. பிற யாவற்றிலும் தமிழ் தன் தனி வளர்ச்சி நிலையைக் காப்பாற்றிக் கொண்டதாலேயே இன்றும் அது அமிழ்தினுமினிய மொழி எனப் போற்றப்படுகிறது. வடவர்கள்தான் தமிழிலிருந்த சிறப்புடைய கலைச்செல்வங்களை எல்லாம் சமஸ்கிருத மயமாக்கித் தொலைத்து, சமஸ்கிருதத்திற்குப் பெருமை தேடினர்.

வி.கோ.சூ. கருத்தை மீண்டும் காண்போம். "வடமொழி தமிழ்நாட்டில் வெகுநாள்காறும் இயங்கியும் அதற்குத் தமிழ்மொழியைத் தன் வழியிலே திருப்பிக் கொள்ளுதற் குற்ற ஆற்றலில்லாது போயிற்று".

"இன்னும் அவர் தம் புத்தி நலங்காட்டித் தமிழரசர்களிடம் அமைச்சர்கள் எனவும், மேலதிகாரப் பிரபுக்கள் எனவும் அமைந்து கொண்டனர். தமிழர்களிடத்திலிருந்த பல அரிய விஷயங்களையும் மொழிபெயர்த்துத் தமிழர் அறியும் முன்னரே அவற்றைத் தாமறிந்தன போலவும், வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினர்."(பக். 33)

வடமொழியாளர் தமிழர்களது ஒழுக்க வழக்கங்களை உணர்ந்து அவற்றிற் கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான் புகுந்தனர். இவ்வாறு தமிழர் வாழ்விலும் வழிபாட்டிலும் வடமொழிச் சடங்கு முதலானவற்றைப் புகுத்தி, அவர்களிடம் தட்சிணை பெற்று, வயிறு வளர்க்க முயன்றனர். இதற்காகப் புராணங்களும் எழுதினர். இது இவ்வாறு இருக்கத் தமிழர்கள் தாமே விரும்பி வடமொழி, வேத மரபுகளைப் பின்பற்றி வாழ்ந்தனர் எனக் கூசாமல் எழுதுகிறார் நாகசாமி.

தமிழிடமிருந்த இசை, நாட்டியம், சமயம் முதலான அனைத்தையும் சமஸ்கிருத மயமாக்கிய வரலாறு தனியே ஆராயப்பட வேண்டும். இனியேனும் தமிழர்கள் அவற்றைத் தமிழுக்கு மீட்டுக் கொணர வேண்டும்.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல், தமிழ் நிலை தளர்ந்தது. புத்தர்கள் பாலியையும், சமணர்கள் அர்த்தமாகதி, பிராகிருதம், சமஸ்கிருதத்தையும் வளர்த்து, தமிழை மூலையில் முடக்கப் பார்த்தனர். பின்னர் அவர்களே தமிழ் மக்களைத் தங்கள் சமயத்திற்கு இழுக்கத் தமிழ் கற்றுத் தமிழ்ப்பணி ஆற்ற வேண்டியவராயினர்.

தமிழகத்தில் புத்தம் அரசு ஆதரவின்மையால் தழைத்து வளர இயலவில்லை. களப்பிரருக்கும் பல்லவருக்கும் ஆட்சி அதிகாரம் இருந்ததாலும் சமஸ்கிருதம் ஆட்சிமொழித் தகுதி பெற்றிருந்ததாலும் தமிழில் இருந்த ஆகமம் முதலான கலை சார்ந்தவற்றை அழித்தனர். அதற்குமுன் பலவற்றை மொழிபெயர்த்து வைத்துக் கொண்டனர். தமிழானது, சமஸ்கிருத உதவியால் இசை நாட்டியம் அனைத்திலும் வளர்ந்தது எனக் கூசாமல் கூறி வந்தனர். அண்மைக் காலம்வரை நீர் என்னும் சொல் நீரம் என்ற வட சொல்லின் திரிபு, மீன் எனும் சொல் மீனம் என்ற வடசொல்லின் திரிபு என இதுபோல எழுதி வைத்துள்ளனர். ஆயினும் அவை எடுபடவில்லை. வடமொழியும் தமிழிலிருந்து சொற்களைக் கடன் பெற்றதுபற்றி அறிஞர்கள் வேர்ச்சொல் அகராதியில் குறித்துள்ளனர்.

ஆல்பர்ட் சுவைட்சர்

பொதுவாகச் செருமானியர்கள் சமஸ்கிருதப் பற்றாளர்கள். அந்நாட்டில் அறிஞர்கள் பெரிதும் தாய்மொழியோடு சமஸ்கிருதமும் கற்றவர்கள். காந்தியடிகளைப் போலத் தென்னாப்பிரிக்க மக்களுக்குச் சேவை செய்ய என்றே மருத்துவம் படித்து, அங்குச் சென்று பணியாற்றிய பெரியவர், ஆல்பர்ட் சுவைட்சர்.

அவர் சமஸ்கிருத அறிவுடையவராதலால், தம் 'டாக்டர்' பட்ட ஆய்வுக்கு இந்தியச் சிந்தனைகளை ஆராய்வதென முடிவு செய்தார். உபநிசதம், சாங்கியம், சமணம், புத்தம், ஆகியன சைனா, சப்பான் உட்படப் பல நாடுகளில் பரவிய விதம், பிற்காலப் பிராமணியம், பிராமணத்துவம் அல்லது மனுதருமம், பகவத்கீதை முதல் இன்றுவரை ஏற்பட்ட இந்தியச் சிந்தனை வளர்ச்சிகள் என மிக விரிவு பட ஆராய்ந்துள்ளார். இவற்றை மேற்கத்தியச் சிந்தனையோடு ஒப்பிடும் அவர், இந்தியச் சிந்தனையில் இவ்வுலகையும் மனித வாழ்வையும் வெறுப்புடன் பார்க்கும் பார்வையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றியே முழுவதும் ஆராய்கிறார். இதுவே அவரது ஆய்வேட்டின் கருதுகோளும் மையக் கருத்துமாகும்.

பெரிதும் இந்தியச் சமயத் தத்துவச் சிந்தனைகள் அனைத்தும் மேலுலக மோட்சம், சொர்க்கம், முத்தி முதலானவை பற்றியே பேசி இவ்வுலகமும் வாழ்வும் என்று வருகிறபோது, அதை வெறுப்புடனேயே அணுகுகின்றன. இவ்வுலக வாழ்வை அறவே வெறுப்பன, மானுட வாழ்வைச் சிற்சில சூழல்களில் வெறுப்பன, இவ்வுலக வாழ்விலிருந்து விடுபடுதலே குறிக்கோள் எனக் கொள்வன என இவ்வுலக வெறுப்பு பல நூறு வகையில் வெளிப்படுவதைக் கருப்பொருளாய்க் கொண்டு, பல பக்கங்களில் விவரிக்கின்றார்.

இவருக்கு கார்ல் கிரவுல் (Karl Grual) செருமன் மொழியில் மொழி பெயர்த்த திருக்குறள் கிடைத்து, அதைப் படித்துள்ளார். பகவத்கீதை பற்றிய பதினான்காம் இயலில் பக்கம்

196 முதல் 201 வரை ஆறே பக்கத்தில், திருக்குறள் சிந்தனை பற்றி விளக்குகின்றார்.

திருக்குறள் பற்றியோ, தமிழர் சமயம் பற்றியோ தனித் தலைப்பிட்டு எழுதவில்லை. திருக்குறள் தவிர வேறு எத்தமிழ் நூலையும் இவர் அறியார்.

திருக்குறள் பழந்தமிழ் இலக்கியச் சான்று, தமிழ்ப் பண்பாட்டு விளக்கம். அதனால் அவர் எழுதுவன, திருக்குறளுக்கு மட்டுமன்றித் தமிழுக்குமே பொருந்துவதாகவுள்ளன.

இந்தியச் சிந்தனை அனைத்தின் மையக் கருத்தாக எடுத்துக் கொள்வது இது: The world and life negation - உலகையும் வாழ்வையும் வெறுப்புணர்வுடன் பார்ப்பது; The world and life affirmation - உலகையும் வாழ்வையும் விருப்புடன் பார்ப்பது. மனுவின் கருத்துப்படி, பிராமணத்துவ உணர்வால், உலகை விருப்புடன் பார்ப்பது, வெறுப்புடன் பார்ப்பதினிடையே மிகச் சிறிதளவே ஏற்கப்படுகிறது. குறளில் வாழ்க்கை மறுப்புணர்வு தூரத்து மேகம் போலச் சிறிதளவே உளது. திருக்குறளில் 250 குறள்கள் காமத்துப்பால் பற்றியன. உலகக் காதலைப் போற்றும் இதையும் பின்னாளில் ஆன்மீக உறவென விளக்குவாருண்டு.

What a difference between the Kural and the laws of Manu which originated some four centuries before it. In the latter under the dominance of the Brahmanic spirit world and life affirmation is just tolerated alongside world and life negation. In the Kural, world and life negation is only like a distant cloud in the sky. In 250 maxims that form the concluding part of the work earthly love is lauded. Later times, because they cause offence, interpreted them allegorically as concerning the love of the soul to God.

மீண்டும் நற்பிறவியைத் தர வேண்டும் என்றோ, பிறவியினின்றும் விடுபட வேண்டுமென்றோ, அறத்தை வற்புறுத்தும் போக்கு மனுவைப் போலக் குறளிலும் உளது.

இருந்த போதிலும் இவ்வீடுபேற்றுக் கருத்தை பிராமணியம், புத்தம், பகவத் கீதைபோல, குறளில் மிக அழுத்தமாக வற்புறுத்தவில்லை.

நன்மையை நன்மைக்காகச் செய்யவேண்டும் என்று இங்கு வற்புறுத்தப்படுகிறது. பல குறள்களில் இக்கருத்து ஒளிவீசித் திகழ்கிறது.

Nevertheless, ethics in the Kural are not so entirely dominated by the idea of reward as in Brahmanism, Buddhism, and the Bhagavad - Gita. We already find here the knowledge that good must be done for its own sake. It shines out from various maxims.(p.196)

நன்மைக்காக நன்மை செய்ய வேண்டும், எதிர்பார்ப்புக் கூடாது என்பதைக் குறள் பல கோணங்களில் வற்புறுத்துகிறது. இதற்காக, மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று என்பது முதலான பல குறள்களை, சுவைட்சர் அடுக்கி உரைப்பது வியப்பைத் தருகிறது.

கீதை சாதி அடிப்படையில் கடமைகளை வற்புறுத்துகிறது. அவ்வாறன்றிக் குறள், நன்மைகளைச் செய்யும் கடமைகளைப் பொதுமைப் படுத்திக் கூறுகிறது. கடமை யாற்றுவதில் உள்ள மகிழ்ச்சியைக் குறளிற்போல, வேறு எந்த இந்திய மொழிகளிலும் எதிர்பார்க்க இயலாது. உலகை விருப்புடன் பார்த்து வாழ்வைப் போற்றும் கருத்துக்கு இதுவே தக்க சான்றாகும்.

According to the Kural, duty is not confined as in the Bhagavat - Gita, to what the caste calling involves, but consists in general in "all that is good."

Maxims about joy in activity, such as one would not expect from Indian lips, bear witness to the strength of the world and life affirmation present in the Kural.

குறள் கூறும் கோட்பாடு இவ்வுலக, மானுட நல்வாழ்வு பற்றியது. எதையும் எதிர்பாராது நன்மைக்காக நன்மையைச் செய்

என்பது. பிறவிப் பெருங்கடல் நீந்த வேண்டும் என்பதை ஏற்கும் குறள் அதனை இவ்வுலக நல்வாழ்வுக்கே முதன்மை தந்து அதன் முதிர்ச்சியாக அஃது அமையட்டும் என்று விட்டு விடுகிறது.

இத்தகைய சிந்தனைகள் இந்தியப் பிராமணியத்திலோ, புத்தத்திலோ, இந்துமதக் கீதையிலோ காணப்படாதவை என்று, சுவைட்சர் அழுத்தமாகக் கூறுகிறார்.

So a natural and ethical world and life affirmation of this kind was present among the people of India at the beginning of our era, although nothing of it can be found in Brahmanism, Buddhism, and Bhagavat - gita Hinduism. It gradually penetrates into Hindu thought through the great religious teacher who had sprung from the lower castes and lived among and felt with the people. (*p.201*)

ஆல்பர்ட் சுவைட்சர் (*Albert Schweitzer*) தம் தாய்மொழியில் எழுதிய ஆய்வேடு இது. இதனைச் செருமன் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் திருமதி. சார்லஸ் ஈ.பி. ரஸ்சல் (*Charles E.B Russel*). 1935இல் எழுதப்பட்ட இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டனர். இதன் இந்தியப் பதிப்பு 1940இல் வெளி வந்தது. (*Bilco Books*)

சுவைட்சர் பேரறிஞர், ஒரு சார்புபட எழுத வேண்டிய நிலை இல்லாதவர். வடமொழி வல்லுநர். தமிழில் திருக்குறள் மொழிபெயர்ப்பே அவர் படித்தது. தம் நூலில் அவர் இன்றைய நாகசாமிகளுக்குப் புத்தியில் படும்படி, சமஸ்கிருதப் பிராமணியம் வேறு, தமிழ்ச் சிந்தனை வேறு எனத் தெளிவுபடுத்துகிறார். இவை வேறானவை, மாறானவை, எதிரானவையும் கூட. அவ்வாறு இருக்கச் சமஸ்கிருதத்தைக் காலந்தோறும் பின்பற்றி, கடன் வாங்கிச் செம்மொழி ஆனது என்பது அடிபட்டுப் போகிறது. ஒருவகையில் நாகசாமியின் நூல் முழுமைக்குமே இஃது ஓர் ஒப்பற்ற மறுப்புரை போல் உளது.

சுவைட்சர் கருத்தையொட்டிப் பன்மொழிப் பேரறிஞர் கா. அப்பாதுரையார் கருத்தையும் இங்கே குறிப்பிடவேண்டும்.

பகவத் கீதை உணர்த்தும் பண்பாட்டை விடத் திருக்குறள் உணர்த்தும் மானிடப் பண்பாடு மிக மேலானதாக இருப்பதை அவர் ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

“செயல்துறை வாழ்வுக்குப் பகவத்கீதை செயற்கை இரும்புச் சட்டம் வகுத்து உணர்ச்சியற்ற முறையில் அதை உலகச் சட்டம் என்னும் விதியுடன் இணைக்கிறது. குறள், செயல்முறை வாழ்வு முற்றிலும் அன்புக்குரிய வாழ்வு எனக் குறிக்கிறது. எவ்வளவு பெரிய ஒழுக்கமுறை முன்னேற்றம் இது? உழைப்பும் ஊதியமும் அன்புச் செயலுக்குரிய தகுதிகள் மட்டுமே என்று வகுக்கிறது அது” (கா. அப்பாத்துரையார், தென்மொழி, (ப.282)

தமிழ்ச் செவ்வியல் வடமொழி, பிராகிருதம் ஆகியவற்றிடம் படிப்படியாகக் கடன்பெற்று வளர்ந்தது என்பது முற்றிலும் தவறு என்பது, மேலே கண்ட சான்றுகளால் உறுதிப்படுகிறது.

இரா. நாகசாமியின் நூலில் விளக்கப்படும் அடிப்படைக் கருத்து, முற்றிலும் விருப்பு, வெறுப்பு அடிப்படையில் எழுந்தது. வேதம், அதன் தொடர்பான உபநிடதங்கள், சம்ஹிதைகள், புராணங்கள் யாவும் தூய இலக்கியங்கள் அல்ல. வடமொழிச் செவ்வியல், கி.பி.நான்காம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் தொடங்குகிறது. தென்னாட்டுச் சாயலுடைய பெருங்கவிஞன் காளிதாசனுக்குப் பிறகு வளர்ந்த அது, தமிழரிடமிருந்த அனைத்துச் செவ்வியற் செல்வங்களையும் எடுத்துக்கொண்டு அவற்றைத் தன்னதாக்கிக்கொண்டு வளர்ந்தது என்பதுதான் உண்மை என அறிகின்றோம்.

இயல் - 2

உலக இலக்கியங்களிடையே தனித்தொளிரும் தமிழ் இலக்கியம்

சங்கப் பாடல்கள்

"*..the poems are 'Classical' i.e., early ancient. They are also classics i.e. works that have stood the test of time, the founding works of a whole tradition. Not to know them is not to know a unique and major poetic achievement of Indian civilization.*" (*A.K.Ramanujan, Poems of love and war*)

'காலங்கடந்து நிற்கும் இத் தமிழிலக்கியத்தை அறியாவிட்டால், இந்திய நாகரிகத்தை - அதன் தனிச்சிறப்புடைய இலக்கியப் பேராற்றலை அறியாதவர்களாவோம்.' இவ்வாறு சொல்பவர் சங்க இலக்கியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரான பேரறிஞர் ஏ.கே. இராமானுசன்.

சங்க இலக்கியம், திணை இலக்கியம். முற்றிலும் தனித் தன்மையுடையது. உலக இலக்கியங்களைப் படிப்பது போல் அதைப் படிக்க முடியாது. அதற்கு என்று தனி மரபு உளது; தனிக்கட்டமைப்புளது; தனித்தன்மைகள் நிறைந்தது; எனவே, அதற்கெனத் தனிப்பயிற்சி பெற்றாலன்றிப் புரிந்து கொள்ளுதல் இயலாது.

"*A Language within language. In a sense, the tradition of conventions does every thing possible to depersonalize the poetry of Akam. It gives all that can be given to a poet and makes of poetry a kind of second language.*

"*The poet's language is not only Tamil: landscapes, the personae, the appropriate moods all become a language within language. Like a native speaker he makes infinite use of finite means, to say with familiar words what has never been said before, he can say exactly what he wants to without ever being aware of the ground rules of his grammar.*" (*A.K.Ramanujan, p.250*)

சங்க இலக்கியத்தின் தனித்தன்மையையும் அப்புலவரின் தனி ஆற்றலையும் விவரிக்கிறார். அதனால் அவ் விலக்கியத்தை மொழிக்குள் ஒரு மொழி என மிகச் சுருக்கமாக, ஆனால் மிகப் பொருத்தமாகக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு தமிழ்ச் செவ்வியல் இலக்கியத்தை அமெரிக்காவிலும் மேற்கு நாடுகளிலும், பரப்ப ஒரு இராமானுசன், தூற்றுவதற்கு ஒரு நாகசாமி.

ஒரு வெறுப்புணர்ச்சியில், கற்பனையாக நாகசாமி எழுதுகிறார். அவருடைய கூற்றுகளில் சில வருமாறு:

'*தமிழ் தனித்த நிலையில் வளர்ந்து செவ்வியல் தகுதிகளை அடையவில்லை. காலந்தோறும் வடமொழி, கிரந்தம் ஆகிய இரு மொழிகளிலும் இருந்து, படிப்படியாகக் கடன் பெற்று வளர்ந்து செவ்வியல் தகுதியைப் பெற்றது. இந்திய மாநில மொழிகளைப் போல, தமிழும் ஒரு மாநில, வட்டார மொழியே. ஆனால் இது கடன் பெறுவதில் முந்திக் கொண்டது. விரைந்து கடன் பெற்றதுடன், அவ்வாறு பெற்றதைத் தனதாக்கிக் கொண்டது.*'

'*சங்கப் பாடல்கள் அகத்திணை, புறத்திணைப் பாடல்கள் எல்லாம் தமிழ் மண்ணில் கிளைத்து, வளர்ந்தவை அல்ல. அவை நாட்டியம், நடனம் என ஆடல் பாடல்களுக்கு எனக் கற்பனையாக எழுதப்பட்டவை. கலித்தொகை முழுவதும் நடனப் பாடல்களே. தமிழில் அகக்கூத்து, புறக்கூத்து என வரும். இக்கூத்து ஆடல்களுக்குப் பாடல்கள் வேண்டும். இவ்வாறு கூத்து, ஆடல்களுக்கு என எழுதப்பட்ட கற்பனைகளே அகம், புறம் எனப்பட்டன.*'

‘ஐந்து நிலப்பாகுபாடு என்பது முற்றிலும் கற்பனை. நாடகம், நாட்டியத்தில் திரைச்சீலைகளில், அவ்வப் பாடலுக்கேற்ற ஆடலின் சுவையை மிகுவிக்கும் வகையில், பின்னணி வரையப்படும். அவ்வாறு அகப்பாடல்களுக்குச் சுவையை மிகுவிக்க, பின்னணியாகப் புனையப்பட்டவையே நிலப்பாகுபாடுகள்.’

‘ஒரு நாவலை, சிறுகதையைக் கற்பனையாகக் கதைகட்டி எழுதுவது போலவே, பாடப்பட்டவை, செவ்வியல் சார்ந்த அகப்புறப்பாடல்கள். அகக்கூத்து, புறக்கூத்து என்று சிலப்பதிகார அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் திரும்பத் திரும்பக் கூறுவர். அவ்வாறு வளர்ந்தவையே அகத்திணையும் புறத்திணையும்.’

“*This suggests that the Sangam Classification into Akam and puram was mainly intended for dance. As such songs are adapted a dance, they need not be embellished and are not a recitation of factorial events, but must be considered creative poems and not historical renderings.*”

ஐந்திணை என்பது மிகப்பெரிய திரைச் சீலையாகப் பயன்பட்டதாம்.

‘Ilango Adigal spreads the drama in the broad canvas of Ainthinai classified by Tolkappiam mainly Marutam, Neytal, Palai, Mullai and Kurinci.’

இவ்வாறு தொல்காப்பியம், சிலப்பதிகாரம், அலங்காரம் பற்றி வருவனவாகிய மிகத் தவறான கருத்துகளையும் அவற்றுக்கான நமது மறுப்புகளையும் தொடர்புடைய அவ்வவ் வியல்களிற் காண்போம்.

அருள்தந்தை தனிநாயக அடிகளார் *மிகச் சிறந்த சங்க நூற் பயிற்சியுடையவர். முதல் உலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டியவர். ‘Tamil Culture’ என்ற இதழைத் தொடங்கி, செவ்வியல் தமிழின் சிறப்பை உலகெல்லாம் பரப்பியவர். அவர் நிலப்பாகுபாடுகள்*

இலக்கியத்தைப் பாதிப்பது பற்றி மிக விரிவாக எழுதியுள்ளார். (*Nature in Ancient Tamil Poetry*)

தமிழில் நான்கு நிலப்பாகுபாடுகளும் அவற்றின் வழி வாழ்ந்த மக்களும் அவர்களின் இலக்கியமும் வெறும் கற்பனைகள் அல்ல. உலக இலக்கியங்கள் பல மக்கள் வாழ்க்கைப் பின்னணியில் தோன்றி வளர்ந்தன. தமிழ் இலக்கியம் ஒன்றே நிலப்பின்னணியையும் சேர்த்து வளர்ந்தது.

தனிநாயக அடிகளார் கருத்துக்கள் சில இவண் நினைவு கூரத் தக்கன.

"*The influence of Geography in determining the character and culture of the people, or in short what has been called since Graebner "Anthropo - geography* (*The relation between culture and environment*) *is a science which neither the ethnologist nor the literary critic can offer to neglect*" (*p.1*)

ஒரு நிலப்பரப்பு அங்கு வாழும் மக்களின் நாகரிகத்தையும், பண்பாட்டையும் உருவாக்குகிறது என்னும் உண்மை முழுமையாகத் தமிழ்ச் செவ்விலக்கியத்திற்குப் பொருந்தும்.

தென்னிந்தியாவின் இயற்கை வளம் பற்றி நுட்பமாக எழுதித் தமிழரின் கலைகள், இலக்கியம், அனைத்திலும் அதன் தாக்கம் அழகியலை வளர்த்ததென விளக்குகிறார்.

மாக்சு முல்லர், ரிக்வேத இயற்கைப் புனைவை '*Babbling of infant humanity*' என்று கூறியிருப்பதை அடிகளார் எடுத்துக்காட்டுகிறார்.

ரிக் வேதத்தில் வரும் இயற்கைப் புனைவு குழந்தைத்தனமானது, அரைகுறை மழலை, முதிர்ச்சி பெறாதது. மாறாகத் தமிழில் வரும் இயற்கைப் புனைவு காலங் கடந்து ஒளிரும் இலக்கியச் சிறப்புடையது.

சமஸ்கிருத ரிக் வேதத்துடன் ஒப்பிடும் போது தமிழரது இயற்கைப் புனைவு மிகப்பண்பட்டதாய் இருந்ததை சமஸ்கிருதத்தினர் அறிந்திலர். (*who have not yet come to know the highly civilized life of the contemporary Dasyus*).

தமிழ்ச் சங்க இலக்கிய இயற்கைப் புனைவில் சமஸ்கிருதக் கலப்புக்கு இடமில்லை. இது தூய, தனித்த மனிதக் காதலை, மிகத் தூய சிறந்த முறையில் பாடுவதாய் உள்ளது.

தனிநாயக அடிகளாரின் ஆழ்ந்த ஆய்வுக் கருத்துக்கள், தமிழக நிலச்சூழல் எவ்வாறு, இலக்கியத் தோற்றமாய், வளர்ச்சியாய் ஆனது என்பதைக் காட்டுகின்றன. ஐந்து நிலம் என்பது பொய்க்கற்பனை, அவை கற்பனையாக நடனங்களுக்கு எனப் புனைந்து எழுதப்பட்டவை. பாடல்களுக்கு எழுதப்பட்ட பின்னணித் திரைச்சீலைகளே எனும் நாகசாமி கருத்துக்கு, அடிகளாரின் நூல் தக்க விடை தருகிறது. நாகசாமி இத்தகு நல்ல நூல்களைப் பயின்றிலர் போலும்.

பி.டி. சீனிவாச ஐயங்காரும் *தமிழரின் நில வழிப்பட்ட வாழ்க்கை முறை வளர்ந்த விதத்தைத் தம் ஆங்கில நூலில் திறம்பட எழுதியுள்ளார். (பக். 162-191)*

ஜார்ஜ் எல். ஹார்ட் *சமஸ்கிருதப் பேராசிரியராகப் பணியாற்றிப் பல நூறு மாணவர்களுக்குப் பாடம் சொன்னவர். அவர் இன்று பெர்க்லி பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றுகிறார். அவருடைய நூல்களையும், கட்டுரைகளையும், படித்திருந்தால் நாகசாமி, இவ்வாறு ஒரு 'அபத்தமான நூலை' எழுதியிருக்கமாட்டார்.*

தமிழ்ச் சங்க இலக்கியங்கள் நாட்டுப்புறப்பாடல், ஆடல் வகைகளிலிருந்து கிளைத்து, வளர்ந்து, முதிர்ச்சி பெற்றவை. சமஸ்கிருதச் செல்வாக்குக்குச் சிறிதும் உட்படாதவை.

"*As a result, sangam literature is entirely independent of Sanskrit and follows its own rules and traditions.*" *என்பது ஜார்ஜ் ஹார்ட் வாக்கு.*

இவை இரண்டும் செம்மொழி எனத் தேர்ந்தெடுத்த மலர்கள், இரு கண்கள் போல் வளர்ந்தாலும், உலகப் பார்வையில் இரண்டும் முற்றிலும் வேறுபடவுள்ளன என ஹார்ட் வியப்படைகிறார்.

சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளிலிருந்து, தமிழ் ஒரு சிறிது கடன் பெற்றிருந்தாலும், அதன் வளர்ச்சி வேறு விதமாக இருந்திருக்கும். ஆனால் அதன் தனிச்சீர்மையைப் பிற நாட்டவர் விளக்குவதை நாகசாமி படித்துத் தெளிவு பெற வேண்டும்.

"*It is notable that Sangam poems contain true dhvany far more often than poems in Sanskrit and that commentators generally cite Maharastri Prakrit poems as examples of this Phenomenon. One can suppose that the sort of Suggestion found in Sangam poems also entered southern Prakrit from the Dravidian oral tradition and from there became part of Sanskrit esthetic literature.*" (*p.66*)

தமிழ் நாட்டுப்புற இலக்கியம் தென்னாட்டுப் பிராகிருதம் மூலம் சமஸ்கிருதத்தில் பரவி இருக்கக்கூடும். தொனிக் கோட்பாடு, வடமொழிக்குரிய தென்பதை விட அதில் தமிழின் செல்வாக்கு மிகுதி என்னலாம். ஏனெனில் அதற்குக் காட்டப்படும் உதாரணப் பாடல் எல்லாம் தென்னாட்டுப் பிராகிருதத்தில் உள்ளவை. தமிழின் செல்வாக்கு பிராகிருதத்தின் வழியாகச் சமஸ்கிருதத்தில் பரவியிருக்க வேண்டும்.

தொனிக் கோட்பாடு பற்றிய சமஸ்கிருத மேற்கோள் பாடல்கள் அத்துணைச் சிறப்பாக இல்லை. தமிழ்ச் சங்கப்பாடல்களில்தான் உண்மையான தொனி(குறிப்பு)ப் பொருள் மிக அதிகமாக இடம்பெற்றுள்ளது.

இலக்கிய வளர்ச்சியிலும் தமிழின் செல்வாக்குப் பெரிது. சமஸ்கிருதத்திலும் பிராகிருதத்திலும் தமிழ் தன் செல்வாக்கைச் செலுத்தியிருக்கும் என்பதை மிக நயமாக எடுத்துரைக்கிறார். சமஸ்கிருத இலக்கியத்தின் முக்கியமான அறிவுசான்ற பகுதிகள், தமிழின் செல்வாக்குக்குட்பட்ட தென் பிராகிருதத்திலிருந்து கிடைத்தவையே.

"*One can surmise that all over the Deccan, there was a highly evolved oral poetic tradition in the Dravidian languages that ultimately developed into a sophisticated*

writing in the Tamil anthologies and was also the source for many conventions in the southern prakrits. Many of the important intellectual developments in Sanskrit literature can be traced to this southern Prakrit literature. Among them is certainly the concept of dhadvany or suggestion which took a major place in Sanskrit esthetics with Anandavarthana's Dhvanyaloka."

பொதுவாக ஹார்ட் போன்றவர்கள் தமிழ் சமஸ்கிருதம் இரண்டுக்கும் உரியவர்கள் அல்லர். ஆனால் சமஸ்கிருதத்தின் இலக்கிய வளர்ச்சியில் தமிழின் பங்கு உண்டு என இந்த அளவு எழுதியுள்ளார்.

தமிழின் ஒப்பற்ற தனிச்சிறப்புக்கு மற்றும் ஒரு சான்று காட்டுகிறார் ஹார்ட். இது வடமொழி இம்மியளவும் அறியாதது.

உலக இலக்கியமனைத்தும் காப்பியங்கள், நாடகங்களாகத் தொடங்குகின்றன. அவற்றில் இவ்வுலக மாந்தர்கள் மட்டும் இடம் பெறுவதில்லை. மேலுலகத் தேவதைகள், தெய்வங்கள், மனிதனுமல்லாது தேவதையுமல்லாது இரண்டும் கலந்த மாந்தர்கள் இடம் பெறுவர். அவற்றில் அதிசய நிகழ்ச்சிகள் அடிக்கடி வரும். இயற்கை இகந்த நிகழ்வுகள் வரும். நம்ப முடியாத பல வரினும், மாந்தர் தம் நல்வாழ்வு கருதியன போலக் காட்டப்படும்.

தமிழைப் போலச் சமஸ்கிருதம் மனித வாழ்வு நடப்பை, மனித உணர்வுப் போக்கைப் பாடவில்லை என எழுதும்போது இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"*I know of no poem in Sanskrit that has the directness of the short poem, coupled with its evocation of reality and human mental process.*" (*p.65*)

உலகிலேயே தமிழில் மட்டுமே, உலக மாந்தரையே, நம்மைப் போன்ற மனிதரையேதான் இலக்கிய மாந்தர்களாகக் கொண்டு பாடுவர்.

இங்கு அதிசயம் எதுவும் இல்லை. இயற்கை இகந்த நிகழ்வுகள் இல்லை. நம் அன்றாட மனித வாழ்வின் அனுபவங்களின் தொகுப்பாகவே சங்கப்பாடல்கள் காணப்படும்.

இங்கும் தாக்கணங்கு, சூரரமகளிர். கொல்லிப்பாவை எனச் சிற்சில வரினும் அவை மானுட வாழ்வை மேன்மைப்படுத்தத் துணையாக வரும் உத்திகளாகும். அவையே கருப்பொருள், அடிக்கருத்து ஆவதில்லை. இத்தனிச்சிறப்பை ஹார்ட் மிகுந்த அழுத்தமுற எடுத்துக்காட்டுகிறார். உலக இலக்கியம் அனைத்திலும் ஒப்பிட்டு விளக்குகிறார். எனினும் முடிவாகக் கூறுவதை மட்டும் இவண் காண்போம்.

"*Even more important Sangam literature is one of the great treasures of the world. Its works provide a Tamil Perspective on life and on human experience that is quite different from anything found in Sanskrit, Latin, Greek, or any other Language.*

"*Its meters, its language, its conventions and its spirit are all purely Tamil. Its scope is so large that it can be easily compared to any of the other classical languages.*" (வா.செ.குழந்தைசாமியின் நூலுக்கு எழுதிய அணிந்துரை)

மிக விரிவாக ஆராயும் ஹார்ட், சமஸ்கிருதமும் தமிழிலிருந்து கடன் பெற்று வளர்ந்ததுண்டு என நிறுவுகிறார்.

"*I have written extensively on how Sanskrit borrow of southern poetic conventions - the same conventions found in sangam literature - probably through 'Maharastri Prakrit' and folk sources.*" (*p.66*)

தமிழ் கடன் பெற்றதாக எழுதும் நாகசாமி, இதனை மனங்கொளல் வேண்டும். தமிழ், சமஸ்கிருத நூல்களைப் பழுதறக் கற்றுக் கருத்துக் கூற வேண்டும்.

இங்குத் தமிழ் இலக்கணம், பொருளிலக்கண மரபுகள், திணைப்பாகுபாடுகள் அனைத்தும் வடமொழியுடன் எத்தொடர்பும் இல்லாதவை என்பதை வடமொழிக் கடலின் நிலைகண்டுணர்ந்த சிவஞான முனிவர் உறுதிப்படச் சொல்வதை உலகோர் உணர வேண்டும்.

"தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும் குறியீடுகளும் வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சில

சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும் அவற்றின் பகுதிகளும் வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வடமொழியில் பெறப்படா.'' (தொல்காப்பிய முதற் சூத்திரவிருத்தி)

வடமொழியிலிருந்து எந்தப் பண்பாட்டு மரபையும் தமிழ் பெறவில்லை என்பதைச் செக் நாட்டறிஞர் கமில் ஸ்வலபிள் ஆய்ந்து கூறியுள்ளார்.

"*The Tamil cultural tradition is independent, not derived, nor imitative; it is pre-Sanskrit, and from this point of view Tamil alone stands apart when compared with all other major languages and literatures of India.*"

வடமொழியில் காணப்படாதவற்றையெல்லாம் தமிழிற் காண நேரும்போது நாகசாமி போன்றவர்களுக்குத் தமிழ் வாழ்வு, பண்பாடு பற்றிய தனித்தன்மைகள் உறுத்தலாகின்றன; அதன் விளைவே இவ்வாறு உண்மைகளைத் திரித்தெழுதி ஆறுதல் பெறுவதாக முடிகிறது என்பது தெளிவாகிறது.

நாம் இன்னும் நுனித்து ஆராய்ந்தால் நாகசாமியின் கருத்துக்கு மாறாக, சமஸ்கிருதமே தமிழின் செல்வாக்கைப் படிப்படியாகப் பெற்றுச் செவ்வியல் மொழி ஆனது என நிறுவ முடியும்.

இத்தனையும் படித்த பிறகு, இரா. நாகசாமி தம் மனம் மாறி, தம் நூலைத் திரும்பப் பெற்றுக்கொள்வதே அறிவுக்கு உகந்ததாகும்.

இயல் - 3

நாகசாமியின் தொல்காப்பியம் பற்றிய கருத்துக்கள்

யானை கண்ட குருடன் கதை

இரா. நாகசாமி தொல்காப்பியத்தைப் பற்றி மிகத் தவறான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அகத்தியர் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. பொதிகை மலை மீதிருந்து, அகத்தியர் தமிழுக்கு இலக்கணம் எழுதி வளர்த்ததாகவும், அவருடைய மாணவர்கள் பன்னிருவர் என்றும் அவர்களுள் தொல்காப்பியரும் பனம்பாரனாரும் அடங்குவர் எனவும் ஒரு கதை வழங்குகிறது.

தொல்காப்பியப் பாயிரத்தில் பனம்பாரனார் அதங்கோட்டாசானையும் நிலந்தருதிருவிற் பாண்டியனையும் குறித்தவர், அகத்தியர் பற்றிக் குறித்திலர். தொல்காப்பிய நூலுள்ளும் அகத்தியர் பற்றிய குறிப்பே இல்லை.

“கடிநிலை இன்றே ஆசிரியற்க” என வரும் இரண்டு இடங்களில் அகத்தியர்க்கு எனச் சுட்டியிருக்கலாமே? பெயர் சுட்டாமல், கற்றறிந்த சான்றோரை அல்லவா குறிப்பிடுகிறார்!

அகத்தியர் வடமொழி கற்றவராய் வடக்கேயிருந்து வந்து, தாம் கற்ற வேத மரபுப்படியும் சமஸ்கிருதத்தைப் பின்பற்றியும் தொல்காப்பியரை அம்மரபுகளின்படி இலக்கணம் எழுதச் செய்தார் என்று நாகசாமி குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியம் வடமொழி மரபை அறவே சாராது எழுதப்பட்ட பெருநூல் என்பதைச் சென்ற இயலில் சிவஞான முனிவர் தந்த சான்றுரை கொண்டு நிறுவினோம். வேறொரு கதைச் சான்றும் உண்டு.

நாகசாமிக்கு மிகவும் பிடித்தமானவர் நச்சினார்க்கினியர். அவர் சமஸ்கிருத விருப்புடன் உரை எழுதியவர். அவர் எழுத்ததிகார முன்னுரையில் பனம்பாரனார் பாயிரத்திற்கு எழுதியுள்ள கதை படிப்பவரைத் தலைகுனிய வைக்கக்கூடியது.

பாயிரத்தில், 'அதங்கோட்டாசாற்கு அரில்தபத் தெரிந்து' என்று உளது. அதங்கோட்டாசான் கேட்ட வினாக்களுக்கு எல்லாம், தொல்காப்பியர் தக்கபடி விடை கூறி, தமது நூல் குற்றமற்றது என நிறுவினார் என்பது கருத்து.

இனி, நச்சினார்க்கினியர் தரும் விளக்கத்தைக் காண்போம்.

"அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி, 'நீ தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்க' என்று கூறுதலானும் தொல்காப்பியனாரும் பல்காலும் சென்று, 'யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டும்' என்று கூறுதலானும் இவ்விருவரும் வெகுளாமல் இந்நூற்குக் குற்றங்கூறி விடுவலெனக் கருதி அவர் கூறிய கடாவிற்கெல்லாம் விடை கூறுதலின், 'அரில்தபத் தெரிந்து' என்றார்."

தொல்காப்பியரின் நூலை அரங்கேற விடக்கூடாது என்று அகத்தியர் எதிர்த்தார் என்பது இவ்வுரைக் கருத்து.

மேலும் நச்சினார்க்கினியர் சொல்லும் கதை - தேவரெல்லாரும் கூடிச் சேர இருத்தலின், மேரு மலையே தாழ்ந்து தென்திசை உயர்ந்து விட்டதாம். அதனைச் சமப்படுத்த வேண்டுதலின் அகத்தியனாரைத் தெற்கே அனுப்புவதே நல்லதென முடிவு செய்தனராம்.

தெற்கே வந்துவிட்ட அகத்தியனார், *திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி, 'நீ சென்று குமரியாரைக் கொண்டுவருக' எனக் கூற, அவரும் 'எம்பெருமாட்டியை எங்ஙனம் கொண்டுவருவல்' என்றார்க்கு, 'முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளம் அகலநின்று கொண்டுவருக' என - அவரும் அங்ஙனம் கொண்டுவருவழி, வையை நீர் கடுகிக் குமரியாரை (இவர் அகத்தியர் மனைவி உலோபா முத்திரையார்) ஈர்த்துக் கொண்டு போக, தொல்காப்பியனார் கட்டளை*

இறந்துசென்று, ஒரு வெதிர்ங்கோலை முறித்து நீட்ட, அது பற்றி ஏறினார். அது குற்றமென்று அகத்தியனார் குமரியாரையும் தொல்காப்பியனாரையும் 'சுவர்க்கம் புகாப்பிர்', என்று சபித்தார். 'யாங்கள் ஒரு குற்றமும் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையான் எம்பெருமானும் சுவர்க்கம் புகாப்பிர்', என அவர் அகத்தியனாரைச் சபித்தார். அதனான் அவர் வெகுண்டாராதலின் 'அவன் செய்த நூலைக் கேளற்க' என்றாரென்க.

இது அகத்தியர் தொல்காப்பியர் மீது சினம் கொண்டதற்கான காரணத்தைச் சொல்வது. வேத மரபையும் சமஸ்கிருத வழியையும் பின்பற்றித் தொல்காப்பியர் எழுதியிருந்தால் அந்நூலை அகத்தியர் எதிர்த்திருப்பாரா? மேற்சொன்ன கதை அகத்தியரை ஒரு பேரறிஞராக, சான்றோராகக் காட்டுகிறதா? தொல்காப்பியம் உணர்த்தும் விழுமியங்கள் இத்தகைய அகத்தியரிடமிருந்து வந்திருக்க முடியுமா? அகத்தியர் வழியில் தொல்காப்பியர் நூல் செய்தார் என நாகசாமி கூறுவது மிகப்பெரும் தவறு.

தொல்காப்பியத்தினுள் நான்கு வருணம் ஏற்கப்பட்டதாக, இடைச் செருகலான சில நூற்பாக்களையே சான்றாகக் காட்டுகிறார் நாகசாமி.

தொல்காப்பியத்தில் சமஸ்கிருத ஆர்வலர்கள் செய்த இடைச்செருகல்கள் பற்றி அறிஞர் சி. இலக்குவனார் முதலிய பெருந்தமிழ் அறிஞர்கள் பலர் ஆராய்ந்து உண்மைகளை எடுத்துரைத்துள்ளனர். இலக்குவனார் கூறியுள்ள கருத்துகள் தொல்காப்பியத்தின் தூய்மையையும் பழந்தமிழ்ப் பண்பாட்டின் நேர்மையையும் விளக்குகின்றன. தொல்காப்பியர் காலத்தில் சாதி அமைப்பு (வருணாச்சிரமம்) இல்லை. வடநாட்டுப் பண்பாடுகள் தமிழகத்தில் தாக்கம் செலுத்திய பிற்காலத்தில் மக்களிடையே உயர்வு - தாழ்வு காட்டும் சாதி அமைப்பை அவர்கள் கொணர்ந்தனர். அப்போதே திருவள்ளுவர் போன்ற சான்றோர்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (குறள். 972)

அந்தணர் என்போர் அறவோர்;மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான் *(குறள். 30)*

எனச் சாதி அமைப்பு முறையைக் கண்டித்தனர். சாதி அமைப்பைத் தமிழ்ச் சமூகத்தில் நிலைப்படுத்தவும், பிராமணர் என்று தம்மை எல்லாரினும் உயர்வாக்கிக் கொண்டு வல்லாண்மை புரியவும் அவர்கள் தொல்காப்பியத்தில் நால்வகை வருணக் கோட்பாட்டைக் கூறும் சில புதிய நூற்பாக்களை இடைச்செருகினர். அந்த நூற்பாக்களின் மொழி, வடிவம், அவை செருகப்பட்டுள்ள இடம், பிற தொல்காப்பிய நூற்பாக்களோடு இயைபில்லாமல் அவை விலகி நிற்கும் முறை ஆகியவற்றையெல்லாம் ஆராய்ந்த இலக்குவனார் வடவரின் வஞ்சனைச் செயலை அம்பலப்படுத்துகிறார். விலங்குகள், பயிர்கள் பற்றிய மரபியல் நூற்பாக்களின் நடுவே அந்தணர், அரசர், வைசியர், சூத்திரர் எனப் பிறப்பால் வந்த சாதிப் பிரிவு சொல்லும் நூற்பாக்கள் எவ்வகையிலும் பொருத்தமில்லாமல் தனித்து நிற்கின்றன. தொல்காப்பியத்தையும் பிறப்பால் அனைவரும் சமம் என்னும் தமிழர் பண்பாட்டையும் சிறுமைப்படுத்துகின்றன. இடைச்செருகல் மூலம் அவர்கள் விரும்பியவை தமிழர் பண்பாடு ஆரியர் பண்பாடே எனக் காட்டுதலும், தொல்காப்பியம் அவர்கள் தமிழகத்திற்கு வந்தபின் கி.பி.5ஆம் நூற்றாண்டில் எழுந்ததே எனக் காட்டுதலும் ஆகும். (Dr. C. Ilakkuvanar, Interpolations in Tolkappiam)

தமிழர்கள் ஆரியர்களின் எண்வகை மணங்களை ஏற்றனர் என்று எழுதுகிறார் நாகசாமி. களவு மணத்தை விளக்க, வடமொழிக் கந்தர்வ மணத்தை ஒப்பிடுவதுதான் தொல்காப்பியத்தில் உளது. தமிழ்க் களவுமணம் தலைவனும் தலைவியும் தாமே எதிர்ப்பட்டுப் புணரும் முறையில் மட்டுமே கந்தருவ மணத்தை ஒத்தது. ஆனால் இரண்டுக்கு மிடையே பெரும் வேறுபாடிருப்பதை நச்சினார்க்கினியர் சுட்டிக் காட்டுகிறார். கந்தருவ மணம் திருமணத்தில் முடியாமையும் உண்டு; தமிழ்க் களவு திருமணத்தில்தான் நிறைவடையும்.

“கந்தருவருக்குக் கற்பின்றி அமையவும் பெறும். ஈண்டுக் கற்பின்றிக் களவே அமையாது” (களநூ.1 உரை)

இது சமஸ்கிருதப் பண்பாட்டுக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்குமிடையேயுள்ள அடிப்படை வேறுபாட்டை உணர்த்துகிறது அல்லவா!

ஏனைய மணங்களை, கைக்கிளை, பெருந்திணை என்று, அன்பின் ஐந்திணையை விட்டு விலக்கி, அவற்றில் பெருந்திணையின் குறைவைக் குறிப்பாய்ச் சுட்டிக் காட்டுகிறார் தொல்காப்பியர். தொல்காப்பியர் எண்வகை மணங்களை ஏற்கவில்லை. இங்கு மிகைப்பட்ட காமத்தையே பெருந்திணை என்று கூறுகிறார்.

தொல்காப்பியர் காலத்தால் முற்பட்டவர்

இரா. நாகசாமி சொல்வது போல், அவர் பரதருக்கும் பிற்பட்டவர் அல்லர். அவர் காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டை ஒட்டியது என்பது சற்றும் பொருந்தாது. தொல்காப்பியம் சங்கப் பாடல்களுக்கு முற்பட்டது. அதன் காலம் கி.மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்பதே பலரது முடிவு. தொல்காப்பியர் காலம் முற்பட்டது என்பதற்கு அறிஞர் சி. இலக்குவனாரின் ஆங்கில ஆய்வுரையில் மிகப்பல சான்றுகள் உள.

தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்பு என்பதனை விளக்கவோ, உதாரணம் காட்டவோ, உரையாசிரியர்கள் தடுமாறுகின்றனர்.

அவர் கூறும் வண்ணங்களையும் அவ்வாறே முழுமையாய் விளக்கவும் முடியவில்லை; உதாரணங்கள் காட்டவும் இயலவில்லை.

அவர் காலத்தில் யாப்பிலக்கணத்தில் எழுத்தெண்ணி அடிகளை வகைப்படுத்தும் முறை இருந்தது. சங்க காலத்தில் அது மறைந்துவிட்டது. சீர் அடிப்படையில் அடிகள் வகைப்படுத்தப்பட்டன.

தொல்காப்பியர் குறிப்பிடும் யாப்பு என்பதற்குப் பிற்காலத்தில் பொருளே மாறி விட்டது. அவர் கூறும் எழுவகையாப்புபற்றிப் பின்னர் யாரும் விளக்கவில்லை.

அவரது எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் கட்டமைப்புடையன. முதலிற் கருவி நூற் கூறி, பிறகு செய்கை நூல் கூறுவார்.

அவர் கூறும் தமிழ் மொழி வகைகள், சொல் வகைகள் மிகத் தெளிவானவை.

ஒரு மொழி இலக்கணம், எழுத்து மொழி இலக்கியத்திற்கு மட்டும் அமைதல் முழுமை பெறாது. அது சிதைவில்லாத உலக வழக்கிற்கும் இலக்கணம் கூற வேண்டும். ஒரு மொழி இரு மருங்கு(பக்கம்) உடையது, அவை உலக வழக்கும் நாடக வழக்கும் என்பன. பிற்காலத்தார் இதை உணர்ந்து இலக்கணம் எழுதவில்லை.

அவர் நூற்றுக்கணக்கில் இலக்கியம் படைக்கும் உத்திகளை விளக்கியுள்ளார். மெய்ப்பாடு, உள்ளுறை, இறைச்சி, முன்னம், உவமை, நோக்கு எனப் பல. அவை பற்றிப் பிற்கால இலக்கணிகளால் விளக்க முடியவில்லை. இவை பற்றி வட மொழியில் சிறுகுறிப்பும் இல்லை.

தொல்காப்பியரின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டை ஒட்டியதென்பதும், அவர் பரத முனிவருக்கும் பிற்பட்டவர் என்பதும் நாகசாமி கருத்தாகும். இவருடைய நூலில் சங்க இலக்கியம் பற்றிய பேச்சே இல்லை. கி.பி. ஆயிரத்தை ஒட்டிய சிந்தனைகளை வெளிப்படுத்தும் ஒரு நூலை, சாதாரணச் சான்றுகாட்டித் தொல்காப்பியர் காலத்தைப் பின்னுக்குக் கொண்டுவர முயல்கிறார் இவர்.

'சமஸ்கிருத இலக்கிய வரலாறு' எனும் நூலை எழுதிய அறிஞர் கீத் (*A.B.Keith*) முதலிய சமஸ்கிருத ஆராய்ச்சியாளர்கள் நாட்டிய சாத்திரம் கி.பி.3-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது அன்று என்று எழுதினார்கள். ஆராய்ச்சியாளர்களில் பெரும்பாலோர் அந்நூல் கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் எழுதியது என்றே வரையறுக்கிறார்கள்.

மெய்ப்பாட்டியலில் உள்ள ஏழு நூற்பாக்களின் கருத்துகள் நாட்டிய சாத்திரத்தில் காணப்படுவதால் தொல்காப்பியம் நாட்டிய சாத்திரத்திற்குப் பின்வந்தது எனும் சுப்பிரமணிய சாத்திரியின் முடிவு தவறானது என்பதை, சமஸ்கிருத ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுகளிலிருந்தே புரிந்து கொள்ளலாம். இவ்வுண்மைகள் மூலம் புலப்படுவது தொல்காப்பியத்திலிருந்தே நாட்டிய சாத்திரம் கருத்துகளை எடுத்துக்கொண்டுள்ளது என்பதுதான். (மயிலை சீனி. வேங்கடசாமி, சங்ககால வரலாற்று ஆய்வுகள் - 1, பக்.80-81)

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகர் தமிழகத்தில் தூதுவர் மூலம் புத்த மதத்தைப் பரப்பிய பின்னரே தொல்காப்பியம் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்கிறார் நாகசாமி. கி.மு.முதல் நூற்றாண்டுக்கு முன் தொல்காப்பியம் எழுதப்பட்டிருக்க முடியாதாம். இதுவே உறுதியான முடிவாம். கி.மு. 5 ஆம் நூற்றாண்டு என்பதெல்லாம், வலுவற்ற சில சான்றுகளைக் காட்டி எழுதப்பட்டனவாம்.(ப.25).

தொல்காப்பியம் சங்கப்பாடல்களுக்கு முற்பட்டதென்பது, முன்னரே எல்லோராலும் நிறுவப்பட்ட உண்மையாகும்.

அதனைக் கி.பி.இரண்டாம் நூற்றாண்டினது என்று எழுதி நாகசாமி மகிழ்ச்சியடைவது 'குருடன் யானை கண்ட கதை'யாக முடிந்துளது.

கி.மு. நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சங்க இலக்கியப் பாடல்கள் கிடைத்துள்ளதை அடுத்த இயலில் காணலாம். அப்பாடல்களுக்கு முந்திய மரபையும் பழைமையையும் உடைய தொல்காப்பியம் கி.மு. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று வரையறுத்த அறிஞர் பலரின் ஆய்வில் யாரும் குறைகாண முடியாது என்பது தெளிவு.

அறிவுடைச் சான்றோர்கள் பழந்தமிழ் நூல்களைத் தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், இரட்டைக் காப்பியங்கள் எனக் காலவரிசையில் எண்ணிப் பார்ப்பதுதான் தொன்றுதொட்டு வரும் பழக்கம்.

அடுத்து, தொல்காப்பியம் பற்றிய நாகசாமியின் மற்றொரு புரட்டுரை பற்றிக் காணலாம்.

"*It is therefore evident that the Tamil grammar Tolkappiyam itself was a treatise like Bharatha's Natya Sastra, a work on dance. Tolkapplyam is not a grammatical work like Panini's Sanskrit grammar, but is a work like the Bharatha's Natya Sastra, dealing throughout its use in Natya tradition.*" (*P.121*)

நாகசாமி தொல்காப்பியத்தைப் பார்த்துள்ளாரா? எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்னும் இரண்டு அதிகாரங்களும் தமிழ் எழுத்து, சொல், தொடர் ஆகியவற்றின் முழுமையான இலக்கணங்களே என்பதை அறியாமலோ அல்லது அறிந்து மூடிமறைத்தோ எழுதுகிறாரா? மெய்ப்பாட்டியலை, முதலிலுள்ள அகத்திணை இயல்களுடன் சேர்த்து எழுதிய ஆதாரமற்ற கட்டுரையைப் பார்த்துவிட்டு எழுதுகிறாரா? முன்னர் அகத்தியரைப் பின்பற்றி, வடமொழி மரபுடன் பிரிக்க முடியாதபடி எழுதப்பட்ட **இலக்கணம் என்றவர்** (*பக்.41*) **இங்கு அது இலக்கண நூலன்று என்பது** *விந்தையாகவுளது.*

தொல்காப்பியர் காலம் கி.மு.7ஆம் நூற்றாண்டு என்னும் உண்மை உறுதியாகிவிடுவதால் அவருக்குப் பிற்பட்ட பரதமுனிவரின் நாட்டிய சாத்திரத்தைப் பின்பற்றியது தொல்காப்பியம் எனும் கருத்து பொய்யாகி விடுகிறது.

தமிழ் எழுத்துக்கள் மிக வரன்முறைப்படுத்தப்பட்டவை. தொல்காப்பியத்தில் வரும் பிறப்பியலையும் எழுத்து நெடுங்கணக்கு வரிசையையும் இன்றைய அறிவியல் அடிப்படையில் நோக்கி மொழியியலார் வியப்படைகின்றனர். கி.மு. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த ஓர் இலக்கணம் அறிவியலுக்கும் பகுத்தறிவுக்கும் ஒப்ப அமைந்திருப்பது உண்மையில் போற்றத்தக்கதே. தமிழ் எழுத்து வடிவைப்பற்றி நாகசாமி எழுதியிருப்பது உண்மைக்கு மாறானது.

பிராமணர்கள் கண்ட எழுத்துக்களே பிராமி எனப்பட்டனவாம். அசோகன் பிராமி எழுத்துக்களையே

பயன்படுத்தினாராம். அதனால் அது ‘ பிரபலம்’ அடைந்து எங்கும் பரவியது. அந்த நிலையில், அதாவது கி.பி.மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகு, தொல்காப்பியர் தமிழ் எழுத்துக்களை வடிவப் படுத்தினாராம். அதாவது தமிழுக்கு எழுத்துக்களும் கூடக் கடன் பெற்று, வளர்ந்தவை என்பது கருத்து. கி.மு.பத்து நூற்றாண்டிற்கு முன்பே வடிவமைக்கப்பட்ட, தமிழ் எழுத்துக்களை, இவ்வாறு நாகசாமி இழிவுபடுத்துகிறார்.

பழந்தமிழ் எழுத்துக்களுக்குத் ‘தமிழி’ என்பது பெயரென்றும் அப்பெயர் வழங்கியமைக்கு வலிமையான சான்று உண்டென்றும் தொல்பொருள் ஆய்வுத்துறை சார்ந்த அறிஞர் ஒருவர் குறிப்பிடுவதைக் கீழே காணலாம்:

தமிழி

“தமிழகத்தில் கிடைத்துள்ள மிகவும் தொன்மையான எழுத்துகளே தமிழி எனப்படுகிறது. இந்தியாவின் வடபகுதியில் மௌரியப் பேரரசன் அசோகனின் காலத்தில் தொடங்கிச் சிலகாலம் வழக்கிலிருந்து பிற இந்திய எழுத்துகளாகப் பரிணமித்த எழுத்துகளை ‘பிராம்மி’ (பம்மி) என்பர். தமிழகத்தின் வடபகுதியிலிருந்து தென்பகுதிவரை பல இடங்களில் ‘தமிழி’ எழுத்துக்கள் கிடைத்துள்ளன. கல்லிலும் பானை ஓடுகளிலும் காசுகளிலும் கிடைத்துள்ளபடியால் ஒரு குறிப்பிட்ட சமயத்தாரால் மட்டும் வழங்கப்பட்டது என்று இல்லாமல் எல்லாப் பிரிவினராலும் வழங்கப்பட்டது என்று கொள்ளல் தகும். தமிழ்நாட்டில் வழங்கிய எழுத்து ஆதலின் வடமொழியில் இதைத் ‘தமிழி’ என்று குறித்தனர்.”

பெயர்

“இவ்வெழுத்துகளைப் பண்டைய தமிழ் என்றே கூறல் தகும். ஆயினும் தமிழ் எனில் இன்றைய தமிழே நம் கண்முன் தோன்றும். தமிழகத்தில் விளங்கிய பண்டைத் தமிழ் எழுத்துகளை பிராகிருத மொழியினர் ‘தமிழி’, ‘திராவிடி’ என்று அழைத்தனர். சிலர், இவை குகைகளில் மட்டுமே காணப்பட்டதால் ‘லேனா எழுத்துகள்’ என்றும் கூறினர். ‘லேனா’ எனின் குகையைக் குறிக்கும். அண்மையில் திரு ஐ. மகாதேவன் அவர்கள் இதற்குத் ‘தமிழ்-

பிராம்மி' என்று பெயர் கொடுத்திருக்கிறார். பிராமி எழுத்திலிருந்துதான் தோன்றிற்று ஆதலின் இதைத் 'தமிழ் பிராம்மி' எனக் குறிப்பதே பொருந்தும் என்பது அவர் கருத்து. இதைத் 'தமிழி' என்ற பெயரால் வழங்குதல் சிறப்பாகும். முன்னோர் கூறியபடி இவை தமிழ் எழுத்துகள்தான். ஆயினும் இன்றுள்ள தமிழிற்கு முன்னோடியாகத் திகழ்ந்தன என்பதைக் குறிக்க ஒரு பெயர் தேவை. அக்காலத்தில் வழங்கிய மற்ற இந்திய எழுத்துகளுக்கும் இவற்றுக்கும் பெரும்பான்மை ஒற்றுமை உண்டு. ஆயினும் சில வேறுபாடுகளால் இவற்றிற்குத் தனித்தன்மையும் உண்டு. ஆதலின் இதன்பெயர் இக்கருத்துகள் அனைத்தையும் நமக்கு உணர்த்துவதாய் இருத்தல் நலம். இதற்குப் புதுப்பெயர் கொடுப்பதைக் காட்டிலும் இவ்வெழுத்துகள் வழங்கிய காலத்தில் நிலவிய ஒரு பெயராயிருந்தால் அதையே வரலாற்றறிஞர்கள் ஏற்பர்."

" 'சமவயங்க சுத்த' என்னும் சமண நூல் கி.மு. முதல் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர். இந்நூல் 18 விதமான எழுத்துகளின் பெயர்களைக் குறிக்கிறது. இதுவே எழுத்துகளின் பெயர்களைக் குறிக்கும் மிகவும் தொன்மையான நூல். இப்பட்டியலில்தான் 'பிராம்மி' (பம்மி) என்ற பெயரும் 'கரோஷ்டி' என்ற பெயரும் முதலில் குறிக்கப்படுகின்றன. இதே பட்டியலில் 'தமிழி' என்னும் ஒரு பெயரும் குறிக்கப்பட்டுள்ளது. இது தமிழகத்தில் வழங்கிய எழுத்தைக் குறிக்கிறது என்பது தெளிவு. பிராமி என்ற பெயர் எப்பொழுது வழங்கப்பட்டதோ அப்பொழுதே தமிழி என்னும் பெயரும் வழக்கில் இருந்தது"

(கல்வெட்டியல், தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, *1972* பக்.*9-10*)

இத்தகைய அருமையான, தமிழ் எழுத்துவடிவின் மிகு தொன்மையான பெயரைச் சரியாக எடுத்துக்காட்டி நிறுவியுள்ள அறிஞர் பெருந்தகை, வேறு யாராக இருக்க முடியும்? அவர் வேறு யாருமில்லை. தமிழின்வரிவடிவங்கள்எல்லாம்வடமொழியிலிருந்தே வந்தன என்று இன்று யாரையோ நிறைவுபடுத்தத் திரிபுரை எழுதியுள்ள இதே நாகசாமி அவர்களே தாம்.

இதை அவருடைய துறையினரும் தக்க சான்றுகளுடன் மறுத்துள்ளனர்.

"2006 பிப்ரவரி மாதத்தில் மயிலாடுதுறை - செம்பியன் கண்டியூரில் வி. சண்முகநாதன் கண்டெடுத்த புதுக்கற்காலக் கருவியொன்றில் சிந்துவெளி எழுத்துக்கள் நான்கு உள்ளன. அவற்றை ஐ.மகாதேவன் 'முருகுஅன் (முருகன்) என்று படித்துள்ளார். அக்கருவியின் காலம் கி.மு.2000-1500 ஆக இருக்கலாம் என்று அவர் கருதுகிறார்." (பி.இராமநாதன், உலக அறிஞர்கள் பார்வையில் தமிழ், ப.80) இதிலிருந்து தமிழ் எழுத்து வடிவம் எந்த அளவு தொன்மை வாய்ந்தது என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

இறுதியாக, அறிஞர் கமில் ஸ்வலபிள் தொல்காப்பியம் பற்றிக் கூறியிருப்பதைக் காணலாம். தொல்காப்பியம் மிகத்தொன்மையான இலக்கணம் மட்டுமன்று; இந்திய மரபில், மானுடப் பேரறிவின் சின்னமாகக் காக்கப்பட்டு வருவது மட்டுமன்று; ஆரியர் வருகைக்கு முன்னரே இந்நாட்டின் முதல் இலக்கிய வெளிப்பாடாக அமைந்ததும் அதுவே. தமிழின் தொன்மையான பண்பாட்டின் சாரமாக - தொகுப்பாக இருப்பதும் அதுவே.

'*The Tolkappiam represents much more than just the most ancient Tamil grammar extent. It is not only one of the finest monuments of human intelligence and intellect preserved in the Indian tradition; it is also the first literary expression of the indigenous, Pre-Aryan Indian civilization. It represents the essence and summary of classical Tamil Culture.*'

தமிழ்ப்பண்பாட்டின் மொத்தச் சாரமாக அமைந்துள்ள தொல்காப்பியத்தை நாட்டியநூல் என்று சொல்வதை ஸ்வலபிள் போன்ற மேனாட்டறிஞர் எவரும் ஒப்பமாட்டார்கள்.

இயல் - 4

தமிழின் தொன்மை

தமிழ்மொழி பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி, வளர்ந்து, முதிர்ந்த நிலை பெற்றது. சங்கப்பாடல்களின் மொழி நடை, சொற்செறிவு, நிழற்பொருள் பெருக்கம், அழகியலமைப்பு எல்லாம் ஆயிரக்கணக்கான ஆண்டு வளர்ச்சிக்குப் பிறகே அமைதல் கூடும்.

தனக்கு முன்னரே பல நூறு நூல்கள் இருந்ததைத் தொல்காப்பியமே சுட்டிக் காட்டுகிறது. அதன் தொடக்கக்கால வளர்ச்சி, சமஸ்கிருதம் வரும் முன்பே நிலைபெற்றுவிட்டது. அதனால் பின்னர் வந்து கலந்த சமஸ்கிருதம், கிரந்தம் எல்லாம் தாமரை இலைத் தண்ணீர் போலத் தமிழுடன் ஒட்டவில்லை.

தமிழின் மிகுபழந் தொன்மையையும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அடிப்படைகள் சிதையாதிருப்பதையும் வழக்கிலும் அது நீடிக்கும் சிறப்பையும் அம்மொழி கட்டி எழுப்பி விரிவாக்கியிருக்கின்ற விரிந்த நாகரிகப் பண்பாட்டையும் தமிழோடு பிறமொழிகளையும் கற்று ஒப்பிட்டுப் பார்த்தறிந்த அயல்நாட்டார் பலர் பாராட்டியுள்ளனர் என்பதை உலகறியும்.

டாக்டர் கில்பர்ட் ஸ்லேட்டர் கூறுகிறார்:

"As it is known to us, the Tamil language and civilization and the products of a very long period of a somewhat elaborate civilization"

குமரி முனைக்குத் தெற்கே குமரிக்கண்டம் (Lemuria) எனும் விரிந்த நிலப்பரப்பு இருந்தது என்பதை ஸ்காட் எலியட், ஹக்ஸ்லி போன்ற அறிஞர்கள் நிறுவியுள்ளனர். பல்வேறு

காலங்களில் கடல் கோள்கள் நிகழ்ந்து அப்பெரும்பகுதி அழிந்தது எனவும், அங்கு வாழ்ந்திருந்த தமிழர்கள் வடக்கு நோக்கி இடம்பெயர்ந்து இப்போதைய தமிழகம், அதைத்தாண்டி இந்தியாவின் நடு, வட பகுதிகளுக்குச் சென்றனர் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

தொன்மையான மொழிகளான கிரேக்கம், எபிரேயம், சமஸ்கிருதம் ஆகியவற்றில் தமிழ்ச் சொற்கள் காணப்படுவதை ரைஸ் டேவிட்ஸ் (Rhys Davids) சுட்டிக் காட்டியுள்ளார். "இந்தோ ஐரோப்பிய மொழிகளின் மிகப்பெரும்பான்மையான வேர்ச்சொற்கள் பலவற்றின் மூலங்கள் தமிழிற் காணப்படுகின்றன என்பது வெறும் கொள்கையன்று; விரிவான ஆராய்ச்சியில் கண்ட முடிவாகும்" என்கிறார் ஞானப்பிரகாச அடிகளார்.

"That the roots of a large majority of Indo-European words are to be found in ancient Tamil is not a mere theory but a fact ascertained by extensive induction."

(கா. சுப்பிரமணிய பிள்ளை, இலக்கிய வரலாறு, பக். 5, 13)

தமிழின் தொன்மைக்கு நூற்றுக்கணக்கான அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் கிடைத்துள்ளன. தொல்பழங்காலப் புதைகுழிகள், நடுகற்கள், மட்பாத்திர உதிரிகள், நகைகள், ஆயுதக்ள் போன்றவை அகழ்வாய்வு செய்த இடங்களில் கிடைத்துள்ளன. தமிழ்நாடு அகழ்வாய்வுத் துறையின் தலைவராகப் பணியாற்றிய நாகசாமி தாம் நன்றாக அறிந்திருக்கும் உண்மைகளுக்கு முரணானவற்றைக் கூறுகிறார். இங்குத் தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்றவற்றில் வரும் அகச்சான்றுகளை மட்டும் எண்ணிப் பார்ப்போம்.

சான்று : 1. தொல்காப்பியம் - பனம்பாரனார் பாயிரச் சான்று

தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் எழுதிய பாயிரத்தில் வடவேங்கடம் தென்குமரியாற்றிடையே தமிழ் பேசும் நல்லுலகம் உளது; அங்குள்ள உலக வழக்கையும் இலக்கிய வழக்கையும் அடிப்படையாகக் கொண்டு, எழுத்தும் சொல்லும் பொருளும்

ஆகிய மூன்றையும் ஆராய்ந்து எழுதியது தொல்காப்பியம் எனக் குறிப்பிடுகின்றார்.

செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்....

இதில் முந்துநூல்கள் வழங்கிய நிலம் ஒன்று தனியே குறிக்கப்படுகிறது. புலந்தொகுத்தல் என்பதும் ஆழ்ந்த ஆராய்ச்சிக்குரியது.

அதற்கேற்பத் தொல்காப்பியத்தை எழுதத் தூண்டிய நிலந்தரு திருவிற் பாண்டியன் என்ற காரணப்பெயரும் கருதத்தக்கதாகும்.

தமிழ்நாட்டின் தெற்கெல்லை பற்றிய பாயிரக் கூற்றுக்கு உரை எழுதும்போது,

"கடல் கொள்வதன் முன்பு பிற நாடும் உண்மையின் தெற்கும் எல்லை கூறப்பட்டது."

என இளம்பூரணரும்

"குமரியாற்றின் தெற்கு நாற்பத்தொன்பது நாடு கடல் கொண்டதாகலின் கிழக்கும் மேற்கும் கடலே எல்லையாக முடிதலின் வேறெல்லை கூறாராயினார்."

என நச்சினார்க்கினியரும் குறிப்பிடும் கடல்கோள்கள் பற்றிய செய்தி தமிழ்கூறு நல்லுலகின் வரலாற்றுக்கு முந்தைய பழமையை உணர்த்துவது.

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்தில் கடல் சுவற வேல் விட்ட படலம், வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம் எனப் பாடியுள்ளார். அவருக்கு முன்னவரான வேம்பத்தூரார் கடல் சுவற வேலெறிந்த திருவிளையாடல் என இதே செய்தியைப் பாடியுள்ளார். இவை இரண்டற்கும் மூலமான, கல்லாடத்தில் கடல் சுவற வேலெறிந்தது என இது குறிப்பிடப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் இச்செய்தி வருகின்றது. அதில்

அடியில் தன்னளவு அரசர்க் குணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி *(காடுகாண்.17-22)*

எனக் கடல்கோளில் அழிந்த விரிவான பகுதி பற்றிய தகவலும் அக்காலத்துப் பாண்டியன் வெற்றியும் குறிப்பிடப்படுகின்றன.

கலித்தொகையில்,

மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடு இடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்
(104.1-4)

என வருவதும் இவண் ஒப்பிடற்பாலதாகும்.

சான்று : 2. சிலப்பதிகாரம் - அடியார்க்குநல்லார் உரை

சிலம்பு வேனிற்காதை, 'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்' என்று தொடங்குகிறது. இதற்கு உரையெழுதிய அடியார்க்குநல்லார், கடலுள் மூழ்கிய குமரிக்கண்டம் பற்றியும் சங்கங்கள் இருந்தமை பற்றியும் பல குறிப்புக்கள் தருகின்றார். அவற்றுள் சில இறையனார் களவியல் உரையுடன் ஒத்தும் வேறுசில புதிதாகவும் காணப்படுகின்றன. அவற்றையும் முழுவதும் தெரிந்து கொள்வது நலமாகும்.

நெடியோன் குன்றம் - *வேங்கட மலை.*

தொடியோள் *பெண்பாற் பெயராற் குமரி என்பதாயிற்று. ஆகவே தென்பாற்கண்ணதோர் ஆற்றிற்குப் பெயராம்.*

"ஆனால், நெடியோன் குன்றமும் தொடியோள் நதியுமென்னாது பௌவமும் என்றது என்னையெனில், முதலூழி இறுதிக்கண் தென் மதுரையகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமரவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின்

கிழவனும் என்றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையு முள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீஇயினார் காய்சினவழுதி முதல் கடுங்கோன் ஈறாயுள்ளார் எண்பத்தொன்பதின்மர். அவருட் கவியரங்கேறினார் எழுவர். பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தரு திருவிற்பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீஇயினான்.

“அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னும் ஆற்றிற்கும் குமரியென்னும் ஆற்றிற்குமிடையே எழுநூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும் ஏழ்மதுரைநாடும் ஏழ்முன்பாலைநாடும் ஏழ்பின்பாலைநாடும் ஏழ்குன்றநாடும் ஏழ்குணகாரை நாடும் ஏழ்குறும்பனை நாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்லம் முதலியன பன்மலை நாடும், காடும், நதியும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங்கோட்டின் காறும் கடல்கொண்டொழிதலால் குமரியாகிய பௌவம் என்றார் என்றுணர்க.

“இஃது என்னை பெறுமாறெனின் வடிவேலெறிந்த வான்பகை பொறாது, பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள (சிலம்பு.11:18-20) என்பதனாலும், கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்த இறையனார் பொருளுரையானும், உரையாசிரியராகிய இளம் பூரணவடிகள் முகவுரையானும் பிறவாற்றானும் பெறுதும்.”

மேலும் சிகண்டி என்பாரும் இதே கருத்தைக் கூறியுள்ளாரென்றும் வடதிசைக்கண் திரிபுடைமொழி பலவுளவாதலின் வேங்கடமலையை எல்லை கூறினாரென்றும் அடியார்க்குநல்லார் குறிப்பிடுகின்றார்.

இதன்படி கடல் கொண்டதனாலேயே தொல்காப்பியம் தோன்றியதாகக் கருதவேண்டியுளது. ஏனைய சங்கங்கள்பற்றிய குறிப்பில்லை. ஆயினும் கடல்கொண்ட தென்னாடுபற்றி விரிவாக உளது.

இவையும் முன்னைய வரலாற்றுண்மையைக் கேள்விப்பட்டு வழிவழியாகச் சொல்லப்பட்டு வந்தவை போலவே தோற்றுகின்றன. தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் முது பழங்காலக் குமரிக் கண்டம், கடல் கோள்கள் பற்றிய செய்திகள் உண்மையான நிகழ்வுகளே என நிலவியல், வரலாற்று அறிஞர்கள் உடன்பட்டுள்ளனர்.

சான்று : 3. இறையனார் அகப்பொருள் உரை

காலத்தால் முற்பட்டது இறையனார் அகப்பொருளுரை. அதனை எழுதியவர் நக்கீரர் என்ற கருத்து உண்டு. தமிழ் முச்சங்கம் பற்றிய செய்தியை அதுவே முழுமையாய்த் தருகிறது.

பாண்டிய மன்னர்கள் வெவ்வேறு காலங்களில் தமிழாய்வதற்காகப் புலவர்களைக் கொண்ட சங்கங்களை நிறுவினர். அத்தகைய சங்கங்கள் மூன்று. தலைச்சங்கம் கடல்கோளால் பின்னர் மறைந்துபோன தென்மதுரையில் இருந்தது. அகத்தியனார், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், முருகன், முரஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவன் முதலிய 549 பேர் அச்சங்கத்திலிருந்தனர். அவர்கள் உள்ளிட்ட 4449 புலவர்கள் பாடினர் என்பர். ‘எத்துணையோ’ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் முதலிய நூல்கள் படைக்கப்பட்டன. அச்சங்கம் 4440 ஆண்டுகள் நீடித்தது என்பர். சங்கத்தைப் புரந்தவர்கள் காய்சின வழுதி முதல் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மர் என்பர். அவருள் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியர் என்பர். அச்சங்கத்திற்கு இலக்கண நூல் அகத்தியம்.

இடைச்சங்கம் கபாடபுரத்தில் இருந்தது. அகத்தியனார், தொல்காப்பியனார், இருந்தையூர்க் கருங்கோழி, மோசி, வெள்ளூர்க்காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையன்மாறன், துவரைக்கோன், கீரந்தை முதலிய ஐம்பத்தொன்பதின்மர் உள்ளிட்ட 3700 புலவர்கள் பாடினர்.

இடைச்சங்க நூல்கள் கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல் என இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு

நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூதபுராணமும் என இவை என்ப.

புரவலர்கள் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் என்ப.

அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது.

இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறு மேதாவியார், சேந்தம் பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், மதுரையாசிரியர் நல்லந்துவனார், மருதனிள நாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார் முதலிய நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்ட 449 புலவர்கள் பாடினர்.

நூல்கள் நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை என்று இத்தொடக்கத்தன.

அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்ப.

கடைச்சங்கத்தைப் புரந்தவர்கள் கடல்கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப.

அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரை என்ப.

இவை யாவும் செவிவழிச் செய்திகளே என்பதை, 'என்ப, என்பர்' என்றும் 'அவர்களால் பாடப்பட்டன எத்துணையோ' என்றும் 'கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப,' 'அக்காலத்துப் போலும் மதுரையைக் கடல் கொண்டது' என்றும் இவ்வாறு வருபவற்றால் உணரலாம்.

சங்கமிருந்ததை மறுப்பவர்கள் ஆண்டு எண்ணிக்கை முதலியன நம்ப வியலாதவை என்றும், சங்கம், மதுரை என்ற சொற்கள் தாமும் தமிழல்லவே என்றும் வாதிடுவர்.

இறையனார் அகப்பொருளுரை, பத்துத் தலைமுறைக்குச் சொல்லப்பட்டு, வாய்மொழியாகவே முழுநூலும் கேட்கப்பட்டு,

இறுதியில் ஏடுகளில் எழுதப்பட்டதை விரிவாகக் கூறுகிறது. அக்காலத்தில் இத்தகைய உரைகள் வாயால் பாடம் சொல்லப்பட்டவை. மாணாக்கர்க்கு உரைக்கப்பட்டவை. முழுநூலையும் நினைவில் வைத்துக் கொள்ளும் ஆற்றல் அன்று இருந்தது. இறையனாரகப்பொருள் உரையிலேயே, உரை நடந்து வந்த முறை கூறப்படுகிறது.

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனார் கீரங் கொற்றனார்க்கு உரைத்தார். அவர் படியங்கொற்றனார்க்கு உரைத்தார். அவர் மணலூராசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்கு உரைத்தார். அவர் செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங்குமரனார்க்கு உரைத்தார். அவர் திருக்குன்றத்தாசிரியர்க்கு உரைத்தார். அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க்கு உரைத்தார். இங்ஙனம் வருகின்றது உரை (சூ1).

பழங்காலத்தில் இலக்கிய, இலக்கண நூல்கள் முன்னதாக ஏட்டில் எழுதப்பட்டன. அவ்வேடுகள் ஒன்றிரண்டே. அதைக் கொண்டு, பாடம் உரைப்பவர் வாய்மொழியாக விளக்கம் சொல்வார். இதனாலேதான் அவை உரை எனப்பட்டன. பத்துத் தலைமுறையாக வந்தபோது, அவ்வக்காலச் சொற்களைக் கலந்தும் கூறலாயினர். கதை, கற்பனைகளும் சேராது இரா. அவையம் என்பதைச் சங்கம் என்றனர். மதுரையும் திருமருதமுன்துறை என்பதன் மரூஉவா, மதிரை என்பதன் திரிபா எனப் பலவாறு ஆராயப்படுகின்றன. (மதில்சூழ் மதிரை)

இத்தகைய தொன்மக் கதைகள் நேரடி உண்மையல்ல ஆயினும் மறைமுகமாய் அறிய வேண்டிய தொல்பொருள் ஆய்வு போன்ற உண்மைகள் எனக் கூறுவதைக் கருதாமல், இவை கட்டுக்கதைகள் என்பார் நடுநிலையாளரல்லர்.

மதுரையைச் சுற்றிலும் மிகப்பெரிய கோட்டையும் கோட்டை வாயிலும் இருந்தன. ஆலவாய் என்றால் மிகப்பெரிய வாயில் - கோட்டைவாயில் என்றே பொருள். வான்மீகி முனிவர் இராமாயணத்தில் இக்கோட்டை வாயிலை, மிகப்புகழ்ந்து இதைக் கவாடபுரம் எனக் குறிப்பிடுகின்றார். கவாடம் - கதவு, வாயில். ஆலவாய் என்பதின் வடமொழி ஆக்கமே அது.

மிகப் பழங்காலத்தே புத்தசமயம் இங்கே பரவியபோது 'சங்கம் சரணம் கச்சாமி' எனச் சங்கமும் பெரும்புகழ்பெற்றது. அதன் தாக்கத்தால் அவையம் சங்கம் என அழைக்கப்படலானது. இது புணர்ப்பு, அவையம், கூடல், தீந்தமிழின் துறை, தொகை என்றெல்லாம் அழைக்கப் பெற்றுள்ளது. கி.பி.ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில், வச்சிரநந்தி என்ற சமண முனிவன், தாங்களும் தமிழ் வளர்த்தாலன்றிப் பொதுமக்களிடம் தங்கள் மதத்தைப் பரவச்செய்ய முடியாத நிலையில் சங்கம் என ஓரமைப்பைத் தோற்றுவித்தான். அதனால் பெயர் மாற்றம் நிலைத்துவிட்டது. கி.பி.ஏழாம் நூற்றாண்டில் அப்பரடிகள்,

நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழிதருமிக்கு அருளி னோன்காண் (*676*)

என்று பாடினார்.

இறைவனே தமிழாராய்ந்தான் என்பன எல்லாம் மக்கள் நம்பிக்கையே. இது உலகெங்கும் உண்டு. இறையனார் அகப்பொருட்செய்திகள், தமிழ்நூல்கள் பலவற்றில் விரவிக் கிடக்கின்றன. மக்கள் தொன்றுதொட்டு வழங்கி வருவனவற்றிலும் நம்பிக்கைகளிலும் ஐயப்பட்டு, அவற்றிலுள்ள அடிப்படை உண்மையை மறுப்பது அறிவுடைமையாகாது.

கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ?
(*திருநாட்டுப்படலம் 57*)

என்று பரஞ்சோதி முனிவர் தமது திருவிளையாடற்புராணத்தில் பாடுகிறார்.

கம்பர் பெருமான்,

நிழற்பொலி கணிச்சிமணி நெற்றிஉமிழ் செங்கண்
தழல்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான் (*2671*)

என்று பாடியுள்ளார்,

இவை தமிழ் நூல்கள் தற்பெருமையாகக் கட்டிக் கூறியன என எழுதியவர்களும் பிற்பாடு ஒரு சங்கமேனும் இருந்திருக்க வேண்டும் என ஒப்புக்கொண்டுள்ளனர்.

தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் முதுபழங்காலக் குமரிக்கண்டம், கடல்கோள்கள் பற்றிய செய்திகள் உண்மையான நிகழ்வுகளே என நிலவியல், வரலாற்று அறிஞர்கள் உடன்பட்டுள்ளனர்.

சான்று : 4. புறநானூறு முதலிய நூல்கள்

நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து

தொல்காப்பியனார் தம் நூலை அரங்கேற்றினார் எனப் பனம்பாரனார் பாடுகின்றார்.

யார் இந்தப் பாண்டியன்?

நிலந்தரு என்றாலே, கடல் கோள்களால் இழந்த நிலப்பகுதிக்கு ஈடாக மக்களைக் குடியேற்ற, பக்கத்து நாடுகளின் நிலத்தைத் தந்தவன் எனலாம். வடிவேல் எறிந்த வான்பகை, கடல் சுவற வேல்விட்டவன், வடிம்பலம்ப நின்ற பாண்டியன் (கடல் தன் காலைக் கழுவுமாறு அதனை எதிர்த்து நின்றவன்) என்பன, அப்பாண்டியன் கடலுடன் போராடியதைக் குறிப்பன.

இந்நெடியோன் தொன்றுதொட்டுப் புராணகாலம்வரை பலபடப் பாராட்டப்படுகிறான். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடும்போது இம்மன்னனைக் குறிப்பிடுகின்றார்.

செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே *(புறம்.9)*

'முந்நீர்க்கண் வடிம்பலம்ப நின்றான் என்ற வியப்பால், நெடியோன் என்றார் என்ப' என்பது பழையவுரை.

உயர்ந்தோங்கிய விழுச்சிறப்பின்
நிலந்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்! (*மதுரை.59-61*)

அத்தகைய நெடியோனின் வழிவந்தவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் என மதுரைக்காஞ்சியில் மாங்குடி மருதனார் பாடுகின்றார் (*உம்பல் - வழித்தோன்றல்*). *மேலும் அவர்,*

பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல (*மதுரை.760-763*)

சிறப்புற்று வாழ அம் மன்னனை வாழ்த்துகின்றார். சிலம்பிலும் நிலந்தரு திருவின் நெடியோன் பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றான் (*சிலம்பு. 15, 22*).

மாங்குடிமருதனார் பற்றிப் பாண்டியன் நெடுஞ்செழியன் குறிப்பிடுகிற பாடல் ஒன்றுளது.

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை (*புறம். 72*)

இவ்வஞ்சினப்பாட்டு, மாங்குடிமருதனார் தலைவராகப் புலவர் அவையத்தே இருந்ததைக் குறிக்கிறது. காலத்தால் மிக முற்பட்ட நெடியோன் காலம் முதல் இந்நெடுஞ்செழியன்வரை **அவையம்** (*சங்கம்*) *இருந்தமையும் அவற்றிற்குத் தலைவரும் பிறருமாகப் புலவர் பலர் திகழ்ந்தமையும் நன்கு கூறப்படுகின்றன.*

மேலும் பாண்டியருக்கும் தமிழுக்கும் மிக நெருங்கிய உறவு இருந்தமை, தொன்றுதொட்டு நூற்றுக்கணக்கான இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை (*சிறுபாண். 66-67*)

தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே (*புறம். 58*)

தமிழ்வையைத் தண்ணம்புனல் (*பரி. 6*)

இங்ஙனம் வருவன பல பனம்பாரனார் பாயிர உண்மையை நிறுவுகின்றன.

பாலைக்கலி 34ஆம் பாடலில், தலைவன் திரும்பி வருவதாகச் சொன்ன இளவேனிற்காலம் வந்தும், அவன் வந்திலனே எனத் தலைவி வருந்தும் பகுதி, மூன்று தாழிசைகளில் இடம் பெறுகின்றது. மூன்றாம் தாழிசையின் பொருள்:

"பிரியும்போது நாம் பலவாறு சிந்தித்து, வேறு வழியின்றி வழியனுப்பிய போது அவர் கட்டாயம் திரும்பி வருவேன் என்றது உலகம் புகழும் இக்கூடல் மாநகரிலே புலவோர் நாவில் பிறக்கும் புதிய புதிய நூல்களைக் கேட்டு மக்கள் மகிழும் இவ்விளவேனிற் காலமல்லவா?"

நிலனாவில் திரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலனாவில் பிறந்தசொல் புதிதுண்ணும் பொழுதன்றோ,
பலநாடு நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்கால்
சுடரிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை; (*கலி. 35*)

இவ்வாறு தலைவி வருந்த, அவனும் வர இன்பமாக முடிவதைத் தோழி கூறுவதாக இக்கலிப்பாடல் உளது.

கூடல்மாநகர மக்கள், புதிய நூல்களைப் புலவர்கள் அரங்கேற்றக் கேட்டு மகிழும் காலம் இளவேனிற் பருவம் என்பது தெளிவுபடுகிறது. அவ்வாறு கேட்டு மகிழ ஓர் அவையம் இருந்ததும் உய்த்துணரப்படுகிறது.

சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடிய இதனை, வலியுறுத்துமாறு, பிறிதொரு பாடலும் கலித்தொகையில் உளது.

பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளும் செல்வர்க்கு
மதிமொழி இடல்மாலை வினைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறு வாக

முதுமொழி நீராப் புலன்நா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர! (*கலி. 68*)

என்று பாண்டியன், மருதன் இளநாகனாரால் விளிக்கப்படுகின்றான்.

மதுரை புரிசை (மதில்) சூழ்ந்த நகரம். அங்கு உலகம் பிறர்க்கும் பொதுவாக என்றில்லாமல், தமக்கே உரித்தாக ஆளும் வேந்தர்க்கு அறிவுரை கூறுமியல்பையுடைய, அமைச்சரைப் போல விளங்கிய புலவர்கள் இருந்தனர். அவர்கள் புலன் நாஉழவர்கள் - அறிவுடைய நாவாலே தம் முன்னோர் பாடிய மொழிகளையே நீராகக்கொண்டு உழுதுண்ணும் (பாட்டுப் பாடி வாழும்) இயல்பினர். அங்குப் பொல்லாத சொற்களைக் கேட்க விரும்பாத மக்களின் செவிகளையே வயல்களாகக் கொண்டு உழும் புலவராகிய உழவர்களின் புதிய புதிய நூல்களை, உடனிருந்து கூடிக் கேட்டு மகிழ்வர்.

இப்பாடலில் வரும் புதுமொழி கூட்டுண்ணுதல், புலன் நாவில் பிறந்தசொல், புரிசைசூழ் புனலூர் என்பன, முன் காட்டிய கடுங்கோ பாடற் கருத்துடன் ஒத்துப் போதல் கருதத்தக்கது.

இக்கலித்தொகைப் பாடல்கள், மதுரை மாநகரில் அவையம் (சங்கம்) இருந்ததையும் அங்கு ஆண்டுதோறும் இளவேனில் எனும் வசந்த காலத்தில் பாண்டிய மன்னர் முன், மக்கள் கூடிச் சுவைக்கப் புலவர்கள் நூல்களை அரங்கேற்றியமையையும் தெளிவுபடுத்துகின்றன.

சான்று : 5. சிலம்பு - கயவாகு மன்னன்

கண்ணகிக்குக் கோட்டம் அமைத்து, விழா எடுத்துப் பாண்டியர், கொங்கிளங் கோசர், சோழன் பெருங்கிள்ளி யாவரும் வழிபட்டனர். அவர்களைப் போல இலங்கைக் கயவாகுவும் விழா எடுத்தமை, உரைபெறு கட்டுரையில் கூறப்படுகிறது (உரை - புகழ்)

“அதுகேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகைக்கோட்டமுந் துறுத்தாங்கு, அரந்தை கெடுத்து வரந்தரு மிவளென ஆடித்திங்கள் அகவையின் ஆங்கோர்பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப மழைவீற்றிருந்து வளம்பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று.”

வரந்தருகாதையில், ‘குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும் கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் தங்கள் நாட்டிற்கும் வந்து, வரந்தர வேண்டு’மெனக் கேட்டதாக வருகிறது.

(*சிலம்பு.160*) *இலங்கையில் முதற்கயவாகு கி.பி.171 முதல் 193 வரை அரசாண்டதாக இலங்கை அரச வரலாறு, 'மகாவமிசம்' கூறுகிறது. சிலப்பதிகாரக் காலம் அது.*

சான்று : 6. சிலம்பு - நூற்றுவர் கன்னர்

சேரன் செங்குட்டுவன் வடநாடு நோக்கிப் படையெடுத்துச் சென்றபொழுது, வடதிசை நாட்டை ஆண்ட நூற்றுவர் கன்னர் அவனுக்கு உதவியதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

கூற்றக் கொண்டிச் சேனை செல்வது
நூற்றுவர் கன்னர்க்குச் சாற்றி யாங்குக்
கங்கைப் பேரியாறு கடத்தற் காவன
வங்கப் பெருநிரை செய்க தாமெனச்
சஞ்சயன் போன பின்....... (*சிலம்பு. கால்கோள். 162-166*)

சதகர்னீஸ் என்பதை நூற்றுவர் கன்னர் என மொழியாக்கம் செய்த இளங்கோ, அவர்கள் அன்றைய நிலையில் வடதிசையில் கங்கைப் பேரியாறு வரை ஆண்ட மன்னர்களாதலின், அதனைச் சுட்டியுள்ளார்.

After the death of Asoka, the Dakkan became independent under the Andhra kings, who belonged to the Satavahana family, and generally added the title satakarni to their names. They ruled for nearly four centuries and a half, i.e., from 230 B.C. to A.D. 266. Their original home lay between the mouths of the Godavari and the Krishna and their early capital was Dhanyakataka on the lower course of the river krishna. (*K.V.Rangaswami Aiyangar, A History of India, Part I, Orient Longmans Ltd., Madras, 1948, pp. 143-144*)

தினமலர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி இச் சாதவாகன சதகர்னிகளின் காசு ஒன்றைக் கண்டு, அதில் சேரர் சின்னம் வில் குறிக்கப் பெற்றிருப்பதையும் காட்டி, இச்செய்தியை நிறுவும் வகையில், மதுரையில் நடந்த நாணயவியல் கருத்தரங்கொன்றில் விளக்கினார்.

சான்று : 7 - நந்தர்கள்

தொன்மை மிக்க காலத்தில் தென்னாட்டைப் போலவே வடநாட்டிலும் சிற்றரசுகள் பல இருந்தன. இந்தியா துண்டு துணுக்குகளாக ஆளப்பட்டது. மகதப் பேரரசை நிறுவிய பிம்பிசாரன் அவன் மகன் அஜாத சத்துரு இருவருமே முதல் பேரரசாக, வடநாட்டில் பெரும்பகுதியை, வடமேற்கிலும் நடுநாட்டிலும் கொண்டு வந்தனர். பிம்பிசாரன் இராஜகிரகம் எனும் தலைநகரைக் கொண்டு ஆண்டான். அவன் மகன் அஜாத சத்துரு, தலைநகரை மாற்றினால் மட்டுமே எதிரிகளை ஒரு குடைக்கீழ்க் கொண்டுவர முடியும் என எண்ணினான். அதனால் கங்கைக் கரையில், ஓரளவு நடுவண் இந்தியப் பகுதியில், பாடலிபுத்திரம் என்ற நகரை உருவாக்கினான். உலகிலேயே சிறந்த நகரமாகத் திட்டமிட்டுச் சிற்பக் களஞ்சியமாக உலகம் வியப்புடன் பார்க்குமளவு சிறப்பாக அமைத்தான். 150 ஆண்டுகள் மகதப் பேரரசு சிறந்து விளங்கியது. அதன் பிறகு நந்தர்கள் என்ற சிற்றரசர்கள், மேலோங்கி மகத நாட்டை அப்பாடலிபுத்திர நகரத்தையே தலைநகராகக் கொண்டு ஆளத் தொடங்கினர். ஏறத்தாழ 250 ஆண்டுகள் நந்தர்கள் ஆட்சி, வடநாடு முழுவதும் சிறந்தோங்கியது. சூத்திர அரசர்கள் எனப்படும் அவர்கள் செல்வ வளத்தில் மிகச் சிறந்து விளங்கியதால் அவர்கள் புகழ் இந்திய நாடு முழுவதும் பரந்து விளங்கியது. தமிழகத்திலும் நந்தர்கள் புகழ் பரவியது. சங்கச் செவ்வியலில் மூன்று இடங்களில் நந்தர்கள் குறிக்கப்படுகின்றனர். கி.மு.550 முதல் கி.மு.322 வரை சிறப்புற்றிருந்த நந்தர்களைக் குறிக்கும் தமிழ்ச் செவ்வியல் இலக்கியம் அக்காலத்தது; அன்றே வளமும் செறிவும் இனிமையும் முதிர்ச்சியும் அமைந்ததாக அது திகழ்ந்தது. நந்தர்களின் இறுதி அரசனாக **மகாபதும நந்தன்** *குறிக்கப்படுகின்றான். சங்கநிதி, பதுமநிதி என்பன அளவிறந்த செல்வத்தைக் குறிப்பன. "சங்கநிதி, பதுமநிதி இரண்டும் தந்து, தரணியொடு வானாளத் தருவரேனும்" என்பது அப்பர் வாக்கு. அத்தகைய மகாபதும நந்தனுடைய பெருஞ்செல்வம் பற்றிய குறிப்பு சங்கப் பாடல்களில் வருகிறது.*

இப்பேரரசன் காலத்தில்தான் அலெக்சாண்டரின் (கி.மு.330) படையெடுப்பு நேர்ந்தது.அதன் பிறகு மௌரியப் பேரரசு தலைமை கொள்கிறது. மகாபதும நந்தனை வென்றவன், சந்திரகுப்த மௌரியன் ஆவான் (கி.மு.321). நந்தர்களை வெல்லவும், வட இந்தியா முழுவதும் பேரரசை நிறுவவும் வழிகாட்டியவர் கௌடில்யர் எனப்படும் சாணக்கியர் ஆவார். அர்த்த சாத்திரம் எழுதிய இவர், அரசியல் நுணுக்கம் அனைத்தும் அறிந்தவர். அவரது வழிகாட்டுதலில், மிகப்பெரிய பேரரசனாக, கிட்டத்தட்ட கால் நூற்றாண்டளவு இவன் சிறப்புற ஆட்சி செய்தான்.

பிறகு இவன் மகன் பிந்துசாரனும் அவன் மகன் அசோகனும் ஆண்டனர். அசோகன் கி.மு.268இல் ஆட்சிக்கு வந்தான். கி.மு.256இல் கலிங்கத்துடன் போரிட்டு அதில் போரினால் விளையும் கடும் அவலங்களை உணர்ந்தான். பிறகு போரை நிறுத்தி விட்டு, அமைதி வழியில் புத்த சமயத்தைப் பரப்பும் முயற்சிகளில் ஈடுபட்டான்.

மேலே கூறிய அனைத்துச் செய்திகளின் சாரமும், இந்திய வரலாற்றாசிரியர்களால் எழுதப்பட்டுள்ள வரலாற்றுக் குறிப்புக்களுடன் பெரிதும் ஒத்து வருகின்றன. அவற்றில் இன்றியமையாப் பகுதிகளை இங்குக் காண்போம்.

Ajatasatru who was a disciple of Buddha was also the founder of Pataliputra, which was to remain the chief city of India for a thousand years.

Rajagriha was the old capital of Magadha under Bimbisara, but Ajatasatru, anxious to reduce the power of the lichchavis, decided to errect a fort on the Ganges from which he could control these turbulent people.

The city so founded was built according to a plan and was the wonder of its age. Magadha power continued for another 150 years under the same dynasty, which was replaced by the famous family of Nandas. From the

Hathigumpa inscription of Kharavela, we know that the Nandas exercised power over Kalinga also. The last of the Nandas, Mahapadma, was undoubtedly a powerful ruler who exercised sway over the whole of north India. The Nanda Kings were so prosperous that the tradition penetrated even to south India and is alluded to in a Tamil poem. In fact, the Nandas seem to have developed a taste for luxury and glory which added to the primacy of the Magadhan Kingdom. It was in the time of Mahapadma Nanda that Alexander invaded the Punjab. (K.M.Panikkar, A survey of Indian History, Bombay, 1947, pp.30-31.)

தோழி, பிரிவில் வருந்திய தலைவியிடம், தலைவன் நீண்ட பாலைநிலம் கடந்து, வடநாடு சென்றவன், நந்தர்களின் செல்வமே கிடைக்குமாயினும் நாம் படும் துன்பத்தைக் கேட்டால், அங்கே தங்கமாட்டான் என்று கூறுகின்றாள்.

நாம்படர் கூரும் அருந்துயர் கேட்பின்
நந்தன் வெறுக்கை எய்தினும் மற்றுஅவண்
தங்கலர் வாழி தோழி... (அகம். *251*)

இது மாமூலனார் பாடல். நந்தனது செல்வச் செழிப்புப் பற்றித் தென்னாடுவரை பரவி இருக்காவிட்டால், இது அக்காலமே இல்லையெனில், இவ்வாறு கூறியிருக்க இயலாது. கி.மு.நானூற்றை ஒட்டிய காலப்பகுதியில்தான், இவ்வாறு கூற வாய்ப்புண்டு. அல்லாமல் நெடு நாட்களுக்கு முன் நடந்ததைக் கூறினாள் எனல் எவ்வகையிலும் ஒவ்வாது.

சான்று : 8 - பாடலிபுத்திர நகரம்

மாமூலனார் பிறிதோர் அகப்பாடலிலும் இமயமலை பற்றியும் நந்தரது பெருஞ்செல்வம், கங்கைக் கரையிலுள்ள பாடலிபுத்திரத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்து, அக் கங்கையிலேற்பட்ட திடீர் வெள்ளத்தால் அடித்துச்செ ல்லப்பட்டது பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

புகையிற் பொங்கி வியல்விசும்பு உகந்து
பனிஊர் அழற்கொடி கடுப்பத் தோன்றும்
இமயச் செவ்வரை மானும் கொல்லோ?
பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதல் கரந்த நிதியங் கொல்லோ?
....
செந்நுதல் யானை வேங்கடம் தழீஇ
வெம்முனை அருஞ்சுரம் இறந்தோர்
நம்மினும் வலிதாத் தூக்கிய பொருளே? - (*அகம். 265*)

தலைவர் நம்மைவிடப் பெரிதாக எண்ணிப் பிரிந்து சென்றதற்கு, அவர் தேட விரும்பிய பொருட்செல்வம் என்ன, இமயமலையைப் போன்ற அவ்வளவினதா? அல்லது நந்தர்கள் கங்கைக் கரையிலிருந்த தமது தலைநகராகிய பாடலிபுத்திரத்தில், பகைவர் கவராதபடி, அதன் கரையோரத்தே புதைத்து வைத்திருக்க, அது ஒருமுறை ஏற்பட்ட பெருவெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு விட்டதே, அந்தச் செல்வமா? ஏனோ அவர் நம்மைப் பிரிந்து சென்றுள்ளார்? - இவ்வாறு தலைவி வருந்துவதாக மாமூலனார் பாடுகிறார்.

பனி புகைபோலப் பொங்கி வானுற ஓங்கிக் காட்சிதரலால், இமயமலை பொன்னிற ஒளிச் சுடராய்க் காட்சிதருகிறது. குளிரிலும் பொன்னிற ஒளிக்கீற்றாகக் காட்சிதருகிற முரண் சுவை, நேரில் பார்த்தவரோ, பார்த்தவரிடம் கேட்டறிந்தவரோ சொல்வதாகத்தான் அமைகிறது.

கங்கையாற்றருகே பாடலிபுத்திர நகரம் இருந்தது, வரலாற்றில் அறியப்படுகிறது. அங்கு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நிதியம் - தமிழ்ப் பாடல் தரும் புதிய செய்தி. இத்தகைய பாடல்களை உண்மையல்ல என ஒதுக்க இயலாது.

குறுந்தொகையில் படுமரத்து மோசிகீரனார் பாடியுள்ள, பிறிதொரு செய்தியும் குறிப்பிடத்தக்க வரலாற்றுச் சான்றாகும்.

வெண்கோட்டு யானை சோனை படியும்
பொன்மலி பாடலி (*குறுந்.75*)

என்பது அது. கங்கையின் கிளையாறாகிய சோனையாறு அப்பெரு நதியிற் கலக்குமிடத்தில், பாடலிபுத்திரம் இருந்ததென்பதே இது தரும் செய்தி. (சோணை, சோனை என இரண்டு பாடம் உள. சோனை என்பதே சரியானது).

கரிகாலன் வடநாட்டை வென்று திரும்பும் பொழுது மூன்று நாட்டவர் திறை கொடுத்தனர் என்று சிலம்பில் வருகிறது. வச்சிர நாடு, மகதநாடு, அவந்தி நாடு என்பன அவை. அவற்றில் வச்சிரநாடு சோனைக் கரை என்று அடியார்க்குநல்லார் கூறுகிறார். இந்நாடுகள் அடுத்தடுத்து இருந்தன. (இங்குச் சோனை என்ற பாடமுண்மையை அறிக) 'சோனை ஒரு நதி. இதன் வடகரையிலுள்ளது பாடலி புத்திரமென்னும் நகரம். பழைய காலத்தில் மகத நாட்டின் தலைநகரமாக இருந்தது' என்பது உ.வே.சா. தரும் குறிப்பு.

சோனையாற்றங்கரையில் பாடலிபுத்திர நகரம் இருந்ததை, பிறிதோர் அகழ்வாராய்ச்சி மூலமும் அறிகின்றோம்.

*தளபதி வாடல் (Lt. Col. Waddell) என்பார் தம் அகழ்வாராய்ச்சியில், இந் நகரைத் தோண்டிப் பார்த்து ஆராய்ந்தார். **1892**இல் தம் ஆய்வு முடிவை வெளியிட்டார். அவர் கருத்துப்படி, இன்று பாட்னா என்று அழைக்குமிடத்திலேதான் அந் நகரம் இருந்தது. இதனை மனங்கொண்ட, இந்திய வரலாற்று அறிஞர் வி.ஏ.ஸ்மித் கீழ்வருமாறு எழுதியுள்ளார். பேரரசின் தலைநகராகிய பாடலிபுத்திரம் கி.மு.5ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது. அது கங்கையிலிருந்து சில கல் தூரத்தில் உள்ள இடமாகும்.*

Falling in line with this statement, V.A. Smith the well known professor of Indian History observes as follows:

"*Pataliputra, the imperial capital, which had been founded in the fifth century B.C. stood in the tongue of land formed by the confluence of the Son with the Ganges, on the northern bank of the former, and a few miles distant from the latter.*" (*Vincent A. Smith, The Early History of India, pp.* ***127-128***)

இவை எந்த அளவு சங்கப் பாடல்கள் உண்மையானவை என்பதை உணர்த்தும். கி.மு.4, 5ஆம் நூற்றாண்டுகளில் தோன்றியவை சங்கப் பாடல்கள் எனக் கருத, இவை மிக உறுதியான சான்றாகின்றன. இந் நந்தர்களைப் பற்றி, கே.வி. அரங்கசுவாமி ஐயங்கார் எழுதிய இந்திய வரலாற்று நூலின் வழியும் சில உண்மைகள் தெரிய வருகின்றன.

Hence, by the time that the Sisunaga dynasty was over thrown (about the first half of the fourth Century B.C) by a family of sudra userpers, known in history as the Nandas, Magadha had become the premier state in northern India and seems to have extended over the entire area watered by the Ganges and its tributaries. (p.51)

நந்தர்களின் ஆட்சிச் சிறப்பை, வரலாற்றை முடிந்த அளவு மறைத்து விட்டனர், மறைக்க முடியாத ஒன்றிரண்டு வரிகளுடன் முடித்து விடுகின்றனர்.

At the time of the Greek invasion the whole of the Gangetic plain was ruled by a king named Nanda, who was regarded as the wealthiest and most powerful Indian ruler of the time. (p.73.)

இவ்வாறு செல்வ வளம் மிக்க நந்தர் என்ற கருத்து சங்கப் பாடல்களில் காணப்படுவது முக்கியச் சான்றாகும்.

அரங்கசுவாமி ஐயங்கார் அடிக்குறிப்பாகத் தருவது, அக்கால வரலாற்றாசிரியர்களின் ஒருதலைக் கருத்து; வெறுப்புணர்வுடனும் எழுதப்பட்டது என்பது தெளிவுபடுகிறது.

Mahapada Nanda, the first king of the line, is said to have been a man of low birth, who conquered a good part of Hindustan.

இம் மன்னனே முதலாமவன் என்றும் இறுதியில் ஆண்டவன் என்றும் குழப்புகின்றனர். தமிழ்நூல்கள் குறிப்பது இவனது காலமே. சந்திரகுப்த மௌரியன் சாணக்கியரின்

அறிவுரைப்படி நடந்து, நந்தர் ஆட்சிக்கு முடிவுகட்டி மௌரியப் பேரரசு விரிவடைய உதவிய அனைத்தும் விரிவாகப் பேசப்படுகின்றன. கி.மு.321இல் நந்தர் ஆட்சியை வீழ்த்தி, மோரியர் ஆட்சி காலூன்றியது. இது தொடர்பாக, ஐயங்கார் தரும் அடிக்குறிப்பையும் காண்போம்.

The success of Chandragupta is attributed in Hindu legend to the loyalty and genius of his Brahman Minister, Chanakya, whose name has come to be applied in Indian Literature to uncommon skill in diplomacy. (*p.74*)

கீழ்ப்பிறப்பையுடையவன் பேரரசனாக இருந்தான் என்று பிறப்பைக் குறிப்பிடுவதும், பிராமணனை அமைச்சனாகக் கொண்ட மேற்குடியான் அவனை வென்றான் எனக் கூறுவதும், அந்தப் பிராமணன் அசாதாரணத் திறமையும் அரசியல் நுட்பமும் உடையவன் எனப் புகழ்ந்து போற்றுவதும் ஆகிய இந்தவகைக் குறிப்புகள் நடுநிலை வரலாற்றாசிரியன் தரக் கூடியவையா? இத்தகைய போக்கு இன்றுவரை தலைகாட்டி வருவதைத் தானே நாகசாமி நூல் உணர்த்துகிறது!

இவ்வாறான வரலாறுகள் முழுமையாக ஆராயப்பட வேண்டும். நந்தர்களுக்கும் தமிழர்களுக்கும் தொடர்பு உண்டா என்பன போன்ற பலவற்றை வடநாட்டு நூல்கள் வழி ஆராய இடமுளது. நந்தர் வரலாற்றை முடிந்தவரை மறைத்து விட்டதை, வெளிக்கொணர நாம் முயலவேண்டும்.

சான்று : 9 - மோரியர்

சந்திரகுப்த மௌரியன் வடநாடு முழுவதையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தான். அவன் மகன் பிந்துசாரன் இருந்ததைக் காப்பாற்றினானே தவிர வேறு குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் எவையுமில்லை. அவன் மகன் அசோகவர்த்தனன் தென்னாடு, இலங்கை உள்ளிட்ட எல்லா நாட்டிலும் புத்த சமய உண்மைகளைப் பரப்ப சமயக் குருமார்களை அனுப்பினான்; நினைவுச் சின்னங்களைத் தூண்களாக, பாறைக் கல்வெட்டுக்களாகப் பொறித்து வைத்தான்.

கலிங்கத்தின் மீது படையெடுத்த அவன், அப்போரினால் ஏற்பட்ட அவலங்களைக் கண்டு மிக வருந்தி, மனம் திருந்தி, அமைதியால் உலகை அரவணைப்பதே பேரரசுக்குப் பேரும் புகழும் தருமெனத் துணிந்தான். அதனால் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றான்.

இளமையிலேயே ஆட்சியேற்று, இந்திய நாட்டின் வடபகுதி முழுவதையும் தன் கட்டளைக்குக் கீழ்க் கொண்டுவந்த சந்திரகுப்தனுக்கு, அந்தணராம் கௌடில்யர் என்ற சாணக்கியரே உறுதுணையாய், மீண்டும் இந்து சாம்ராஜ்யம் தழைக்கவும் புத்த சமண சமயங்கள் பின்வாங்கவும் உதவினார். அவன் தன் நடுவயதின் பிற்பகுதியிலேயே (கி.மு.297) மறைந்தான்.

அவனுக்குத் தென்னாட்டையும் அடிப்படுத்தும் எண்ணம் தோன்றியது. அவன் கலிங்கத்தை வென்று, விந்திய மலைக்குத் தெற்கேயும் படைகளை அனுப்பினான். ஆந்திரர் அன்று இருந்த நிலையில், அவனைத் தடுக்க இயலாமையால், அங்குச் சுற்றியிருந்த சிற்றரசுகளையெல்லாம் வென்றான்.

ஆயினும் விந்திய மலையைத் தொடர்ந்து கிடந்த அடர்ந்த காடுகளும் மலைகளும் குன்றுகளும் கடத்தற்கரியனவாயிருந்தன. எனவே ஓரிடத்தில் குன்றுகளை அறுத்துத் தரைமட்டமாக்கி, மிகப்பெரிய இடைகழி போன்ற வழியை அமைத்தான். அளவிறந்த யானை, குதிரை, தேர்ப்படைகளை வைத்திருந்த அவன், அவை கடந்து செல்லுமளவு வழியமைத்தான்.

தமிழ்நாட்டின் எல்லையாகிய வேங்கட மலைத்தொடரில் - ஏழு மலைகள் சூழ்ந்த பகுதியில் தமிழ் நாட்டுச் சிற்றரசர்கள் பலர் இருந்தனர். அவர்களுள் மோகூர் மன்னனுக்கும் ஒன்றுமொழிக் கோசர் என்று புகழப்பட்ட மன்னனுக்கும் பகைமை இருந்தது. ஆந்திரரை வென்று, மோகூர் மன்னன் தனக்குப் பணியாமையின், ஆந்திர மன்னருடனும் கோசருடனும் சேர்ந்து, மோகூர் மன்னனுடன் போர் புரிந்த, மௌரியப்படை என்ன ஆயிற்று என்று தெரிய வில்லை. சந்திரகுப்தனின் படையெடுப்பும் அதனோடு நின்றது என்பதை, அதற்கப்பால்

அவன் வராமையால் அறிகின்றோம். மௌரியருடைய தென்னிந்தியப் படையெடுப்பு இறுதியில் ஒரு தோல்வியே. இதன் பயனாக, அவை (தமிழக அரசுகள்) அசோகருடைய பேரரசின் பாகமாக அமையவில்லை. (ஆர். சத்தியநாத அய்யர், இந்தியப் பண்பாட்டு அரசியல் வரலாறு, பகுதி 1, பக்.127)

பின்னர் அசோகன் புத்த மதத்தைப் பரப்புவதற்காகச் சமயச் சான்றோர்களைத் தென்னகத்திற்கு அனுப்பினான். அவன் நிறுவிய கல்தூண்கள் எருமை நாட்டில் (மைசூர்) காணப்படுகின்றன. அவற்றில் சேர, சோழ, பாண்டிய, சத்திய புத்திரர்களைத் தன் நட்பு நாட்டினராகக் குறித்துள்ளான். மோரியர்க்கு உதவிய ஒன்றுமொழிக் கோசரையே அவன் 'சத்திய புத்திரர்' எனக் குறித்தானாதல் வேண்டும்.

மௌரியர் என்பதைச் சங்கப் புலவர்கள் தமிழ் ஒலிப்படி மோரியர் என்றனர். மோரியர் படையெடுத்து வந்த இவ் வரலாறு மேலே சுட்டிய விவரங்களுடன் சங்கப் பாடல்களில் பதிவாகியுள்ளது.

பொருள்வயிற் பிரிந்த தலைவன் திரும்பக் காலம் கடந்து போனதால், வருந்திய தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறும் கட்டம் இது. உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார் பாடிய அகப்பாட்டு.

தோழியின் ஆறுதலுரையில்,

விண்பொரு நெடுவரை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறைஇறந்து அகன்றன ராயினும் எனையதூஉம்
நீடலர் வாழி தோழி ! *(அகம். 69)*

என்று வருகிறது. "விண்ணைத் தொடும் பெரிய மலைகளிலும் ஓடவல்ல தேர்ப்படையையுடைய மோரியர், இரும்பொன்னாற் செய்த (இரும்பு) தங்கள் தேர்ச் சக்கர உருளைகள் தடையின்றிச் செல்ல, குன்றுகளை (அறை - குன்று) வெட்டிக் குறைத்த வழியிலே, தலைவர் வாணிகத்தின் பொருட்டு வடநாட்டிற்குச் சென்றனராயினும் நின் அழகிய மார்பிடைத் துயில்வதை மறந்து,

அங்கே தங்கமாட்டார்; இனியும் காலம் நீட்டிக்காது வந்துவிடுவார். அதனால் வருந்தாதிரு.”

முன்னதைப் போலவே, தலைவியை ஆற்றுவிக்கும் கூற்றாக, மாமூலனார் பாடும் அகப்பாட்டிலும் இதே செய்தி வருகிறது.

வெல்கொடித்
துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத்து, அரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசம் கடிப்பிகுத்து இரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்

பணியா மையின், பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய அறைவாய்..... *(அகம்.251)*

கோசர் என்பார் வெல்லும் கொடியினை உடையவர். துனை - விரைவு, கால் - காற்று. விரைந்தோடும் காற்றுப்போன்ற, அணி செய்யப்பெற்ற தேரினை உடையவர். அவர்களுடைய மிக முதிர்ந்ததும் கிளைகளையுடையதுமாகிய ஆல மரம் நிற்கும் பொதியில் எனும் பொதுமன்றத்தே, இனிய ஓசையுடன், குறுந்தடி கொண்டு அடித்தலால் முரசு ஒலிக்கப் பகைவர்களுடன் போரிட்டு அழித்தனர் (கடிப்பு - குறுந்தடி, இகுத்து - அடித்து). அப்போது மோகூர் மன்னன் பணிய மறுத்தான்.

அச்சமயத்தில் புதிய மன்னர்களாகிய மோரியர் தென்னாடு நோக்கிப் படையெடுத்து வந்தனர். (வம்ப மோரியர் - புதியவர்களாகிய மோரியர்) மிகப்பெரிய குதிரைப் படைகளையுடைய அவர்கள், தங்களின் அழகிய தேர்ப்படையின் உருளைகள் வருதற்காக, அருவிகளையுடைய குன்றுகளை வெட்டி வழியுண்டாக்கினர் என்னும் வரலாற்றுக் குறிப்பைத் தரும் மாமூலனார், அவ்வழியே பொருள்தேடச் சென்ற தலைவன் விரைவில் திரும்பி விடுவான் எனத் தோழி கூறுவதாக முடிக்கிறார். (அவ்வழியைக் கடந்து வடக்கே வாணிகம் செய்யச் சென்ற

தலைவன். அங்கு நந்தனின் செல்வமே கிடைத்தாலும் தங்கமாட்டான், விரைவில் வந்துவிடுவான்).

சந்திரகுப்தனின் படைப்பெருக்கத்தை கே.வி.அரங்கசாமி ஐயங்கார் கூறுகிறார்: 6 இலட்சம் படைவீரர்கள், 30 ஆயிரம் குதிரைகள், 9 ஆயிரம் யானைகள், கணக்கற்ற தேர்கள், கப்பற்படை. சங்கப் பாடல்கள் மோரியரின் படைவலிமையைக் கூறுவதுடன் இது ஒப்பிடற்பாலது.

தலைவன் பிரிவால் வருந்தித் தோழியிடம் தலைவி கூறுவதாகவும் ஓர் அகப்பாடலை மாமூலனார் பாடியுள்ளார். அதிலும் இவ் வரலாற்றுக் குறிப்பு தெளிவாக வருகிறது.

கனைகுரல் இசைக்கும் விரைசெலற் கடுங்கணை
முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த
அறைஇறந்து அவரோ சென்றனர்... (*அகம்.281*)

கனைகுரல் - மிகுந்த ஒலியெழுப்பும், கணை - அம்பு. அத்தகைய வில்லாற்றலில் வல்ல, வடுகர், தமக்குத் துணையாக முன்னே செல்ல, மோரியர் படையெடுத்து வந்தனர். மோரியர் தென்திசை நாடுகளைப் பற்ற எண்ணிப் படையெடுத்து வந்ததற்குத் தடையாக விண்ணுற ஓங்கிய பனிபடர்ந்த பெரிய குன்றங்கள் இருந்தன. அதனால் ஒளி பொருந்திய தேர்ச் சக்கரங்கள் தடையின்றி உருண்டு செல்ல, அறை(குன்று)களாம் பாறைகளை வெட்டிக் குறைத்து உண்டாக்கிய வழியைக் கடந்து நம் தலைவர், வடதிசை நோக்கிப் பொருள் வயிற் பிரிந்தார். (தான் பிரியேன் என்ற சொல் பழுதுபடுமே என்றும் எண்ணாமல், இவ்வழியே போய்விட்டாரே, யான் என்ன செய்வேன்?)

இதில் மோரியர் தென்திசை நாடுகளையும் அடிப்படுத்தப் புறப்பட்டு வந்தமை தெளிவாகக் குறிக்கப்பெற்றுள்ளது.

புறநானூற்றில், கள்ளில் ஆத்திரையனார், ஆதனுங்கனது கொடைத் திறத்தை - அறநெறி வாழ்வை - அதன் நிலை பெற்ற

தன்மையைப் பாராட்டிப் பாடுகின்றார். அதற்கு மோரியர் அமைத்த வழியினது அருமை பெருமையை - நிலைபெற்ற தன்மையை உவமை கூறுகின்றார்.

விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக இடைகழி அறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத்து அன்ன... (*புறம். 175*)

"வானளாவும் கொடி கட்டிய தேர்ப் படையை உடைய மோரியர், தங்கள் திண்ணிய ஒளி பொருந்திய தேர் உருளைகள் சென்று திரும்புமாறு வெட்டி உண்டாக்கியது, வடதிசை நாடுகளுக்குப் போகும் வழி. இவ்வாறு குன்றத்தின்கண் நிலைத்த அகன்ற வாயையுடைய வழியைப் போன்று நிலைத்த அறநெறி வாழ்வும் பலரைப் புரக்கும் கொடைக் குணமும் உடையவன் ஆதனுங்கன்" என்கிறார் புலவர்.

சிலப்பதிகாரத்தில் 'உலக இடைகழி' (சிலம்பு. 10-27) என்பதற்கு அடியார்க்கு நல்லார் ஊர்வாயில் - இடையே கழிதலின், அவ்வாயில் இடைகழியாயிற்று என விளக்கம் எழுதுகின்றார். மோரியரால் பெரிய நீண்ட மலைத்தொடரின் இடையே வெட்டி அமைக்கப்பட்டதாதலின் இடைகழி எனப்பட்டது. உலகம் - ஊர்மக்கள் அதாவது போருக்காக உண்டாக்கப்பட்ட அவ்வழி, பொது வழியாக நிலைபெற்றுவிட்டது என்பது கருத்து.

இத்துணைச் சான்றுகளிருந்தும் ச.வையாபுரியார், ஔரஸ் என்ற சொல்லையே, மோரியர் என்று சங்கப் புலவர்கள் குறித்து விட்டனர் என்பார். ஔரஸ் என்றால் ஒளியுடையவர் என்று பொருளாம்! அவரது மனத்தில் வடமொழியே உயர்ந்தது; தமிழ் கடன் பெற்றது என்ற கருத்து பதிந்து போனதால், வெள்ளிடை மலை எனப் பல பாடல்களில் வரும் மோரியர் என்பதையே மாற்றிக் கூறித் தம் ஒரு சார்புத் தன்மையை நிலைபெறச் செய்துவிட்டார்.

மேற்குறிப்பிட்ட சான்றுகளால் சங்க - அவையப் பாடல்கள் பலவும் கி.மு.நான்காம் நூற்றாண்டில் பாடப்பட்டன என்பது உறுதிப்படுகின்றது.

தமிழர்களின் பொருள்வயிற் பிரிவு பாலைப் பாடல்கள் காட்டும் காலக்குறிப்பு

கி.மு.நான்காம் நூற்றாண்டு முதல், தமிழக வணிகர்கள் இந்த மோரியர் அமைத்த வழியிற் செல்வது எளிதாகலின், இதனையே பயன்படுத்திக் கொண்டனர். இதற்கு முன்னர் அவர்கள் இவ்வழியைக் கடக்கப் பெரும்பாடு பட்டிருப்பர். இந்த வரலாற்றுண்மைதான், அகப்பாடல்களில் தலைவன் பொருள் வயிற் பிரிவது பற்றிக் கூறுவதில் இலக்கியமாக வெளிப்பட்டிருக்கிறது.

அதே வழியில் தலைவன் சென்றமை பற்றிய இதனை இங்கு மிக விரிக்கத் தேவை இல்லை. நூற்றுக்கணக்கான பாடல்களில், தமிழரின் வடநாட்டு வணிகப் பயணம் வருகிறது. பேரறிஞர் மு.வ. அவர்களின் 'ஓவச் செய்தி' நூலைப் படித்துப் பாருங்கள். பாலைப் பாடல்கள் பலவற்றில் வரும் இச் செய்தி, மோரியர் ஆண்ட, கி.மு. நான்காம் நூற்றாண்டு முதல், இவ்வழியாகத் தமிழர்கள் வடநாட்டிற்கு வணிகத்தின் பொருட்டுப் போய்வந்த வரலாற்றுண்மையை உறுதிப்படுத்துகிறது.

அவையப் பாடல்களைப் பிற்காலத்தன என்று சொல்வதையே, தம் நடுநிலை பிறழாத ஆராய்ச்சி என்று, வலுவற்ற தம் மார்பைத் தட்டுபவர்கள், மேலே நாம் காட்டிய அனைத்துச் சான்றுகளையும், தக்க காரண காரியத்துடன் மறுக்க முன்வரவேண்டும். அதுவே எம் விருப்பமாகும்.

நாகசாமி மட்டுமன்றி, உலகச் சான்றோர்களும் படித்துணர வேண்டியவை இவை.

இயல் - 5

நெஞ்சார்ந்த பொய்

உலகக் காப்பியங்களிலேயே சிலப்பதிகாரத்திற்கு இணையாகச் சொல்லக் கூடிய பிறிதொரு காப்பியம் வேறு மொழிகளில் இல்லை. ஏன்?

ஹோமரின் இரட்டைக் காப்பியங்களே தொன்மை மிக்கவை. அவற்றில் வரும் மாந்தர்கள் கடவுளர்களாக, தேவதைகளாக, மனிதமும் தெய்வமும் கலந்த கலப்பின மாந்தர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். உலகிலேயே, மக்களை - நம்மைப் போன்ற மாந்தர்களையே தலைமை மாந்தர்களாகக் கொண்ட முதல் காப்பியம் சிலப்பதிகாரம் மட்டுமே.

இரண்டாவதாகத் தொடக்கம் முதல் முடிவுவரை அவலங்களின் கதையாகவே சிலப்பதிகாரம் அமைந்துள்ளது. கண்ணகி என்ற பெண்ணுக்கு ஏற்பட்ட அவலங்கள் ஒவ்வொரு கட்டத்திலும் கண்ணீரை வரவழைப்பவை. அவ் வவலத்தை, அது மனித மனத்தைத் தாக்காதவாறும் சோர்வு தட்டாதவாறும் மனித வாழ்வை வெறுத்து விடாவாறும் இடை இடையே வரி இசைப்பாடல்களை அமைத்து, அமிழ்தமெனப் படைத்துத் தருகிறார் இளங்கோவடிகள்.

கதையின் ஓட்டம், திருப்பம், சிக்கல் எல்லாவற்றுக்கும் மாதவியின் அழகும் ஆடலும் பாடலும் காரணம். அதனை விரித்துப் பாடி, தமிழிசை, நாட்டியம், நாடகம் இவற்றின் சிறப்பை நிலைநிறுத்துகிறார் இளங்கோவடிகளார். தமிழில் இருந்த "நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து" என்று நாட்டிய நூற்புலவன் குறிக்கப்படுகின்றான். (அரங். 40)

நடனமாடிய மாதவி, "நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக் காட்டினளாதலின்" தலைக்கோல் பரிசு பெற்றனள் என வருகிறது. (அரங். 158) இவ்வாறு இருமுறை வரும் தமிழ் நாட்டிய நூல் எங்கே போயிற்று? 'பரதம் என்னும் தமிழ் நாடக நூல், பிற்காலத்தில் வடமொழியில் அதே பெயருடன் மொழிபெயர்க்கப்பட்டது' எனத் தேவநேயப் பாவாணர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். (தமிழ் வரலாறு - 2, ப.104). சிலப்பதிகார உரையில் (பாயிரம்) அடியார்க்கு நல்லார், மறைந்து போன நூல்களுள் ஒன்றாக, 'பரதம்' எனும் நூலைக் குறிக்கிறார். தமிழ் நூல்களை அழித்துவிட்டு மாற்றித் திருத்தி எழுதியதுதான் பரதரின் நாட்டிய சாத்திரம். அதுவும் பல கட்டங்களில் இடைச்செருகல் சேர்த்து எழுதப்பட்டதென்பர்.

நாகசாமி கூறுவதுபோல் நாட்டியங்களின் தொகுப்புக் காப்பியமாக எழுத எண்ணியிருப்பின், அவற்றுக்கு முதன்மையிடம் தந்திருப்பார் இளங்கோ. ஆனால் அவர் கதைப்போக்கிற்குத் தேவைப்படுமிடங்களில் மட்டுமே வரிப்பாடல்களையும் குரவைப் பாடல்களையும் இணைக்கின்றார்.

நாட்டிய அரங்கேற்றம் - கதைத்திருப்பம், பேரவலத் தொடக்கம்

கானல்வரி	-	மாதவி கோவலன் இருவரின் உள்ளத்திற்கிடந்து உழன்றவை வெளிப்பட்டு, இருவரும் பிரிதற்கான காரணமாகிறது.
வேட்டுவ வரி	-	வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள் என வாழ்ந்த கண்ணகி, தாங்க வொண்ணா வெப்பத்தில் நடந்த கொடுமையைக் காட்டப் பயன்படுகிறது.
குன்றக்குரவை	-	கண்ணகி தெய்வமானதைச் சுட்டிக்காட்டுகிறது.

இவ்வாறு வருவன எல்லாம், ஓர் அவலக் காப்பியத்தைக் கற்பார், நெஞ்சம் நொந்து பெரிதும் அவலத்திற்குத் தாமும்

ஆட்பட்டு மயங்காவண்ணம் இடையிடையே ஆறுதல் தர இடம் பெறுகின்றன.

இவற்றை எந்த அறிவிலியும், சிலம்பு வெறும் நடனங்களை மட்டுமே விளக்க வந்த நூல் என்று கூறமாட்டான்.

பாரதியாரின் நெஞ்சை அள்ளிய சிலப்பதிகாரம் பற்றிய நாகசாமியின் கூற்று நஞ்சை வெளிப்படுத்துகிறது.

சிலப்பதிகாரத்தின் சாரத்தை, சுருக்கத்தை அவர் நான்காகப் பகுத்துத் தருகிறார்.

1. அது ஒரு கட்டுக்கதை, வரலாற்று நூல் அன்று. ஒரு கதை, மூவேந்தரின் சிறப்புகளைக் கூறுமாறு ஒரு புனைகதை நாடகமாக எழுதப்பட்டது.

2. அது ஒரு காப்பியம் அன்று: ஆடல் பாடல்களுடன் கூடிய நாட்டியங்களைப் பற்றி எழுதப்பட்ட நூல். நான் அதை ஒரு நாட்டிய நூல் என்றே குறிப்பிட விரும்புவேன். இந்நாடகக் காப்பியம் முழுவதும் நடித்துக் காட்டக் கூடியது. நாட்டிய மரபிலிருந்து வந்ததே நாடகம். உரையாசிரியரும் அதை நாடகக் காப்பியம் என்றே அடிக்கடி கூறுவர். எனவே அது நாடகமாக மேடையில் நடிக்கப் புனைந்து எழுதப்பட்டதே.

3. தொல்காப்பியம், பாணினி எழுதியது போன்ற இலக்கண நூலன்று. அது பரத முனிவரின் நாட்டிய சாத்திரம் போன்று, நாடகங்கள் பற்றிய நூல். அது நாட்டிய மரபை விளக்க வந்த நூல். சிலம்பு முழுவதும் தமிழ்நாட்டிய சாத்திரமான தொல்காப்பியத்தைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது.

4. அது தமிழுக்குச் செம்மொழிச் செவ்வியலை விளக்குமாறு, தமிழ் நிலம், ஐவகைப்பிரிவு, இயற்கை, இசை, நாடக வகை எல்லாவற்றையும் உள்ளடக்கிப் புனைந்து எழுதப்பட்டது. தொல்காப்பியம் முழுவதும் புனைகதை நாடக நூல்களுக்கு என எழுதப்பட்டது.

எனவே சிலப்பதிகாரம் புனைகதை நூலேயன்றி, அது ஒரு வரலாற்றுக் காப்பியம் அன்று. இளங்கோவடிகள் இதை மிகச் சிறந்த புனைகதை நாடகமாக்கியுள்ளார். கலை என்பது நிச வாழ்க்கையைப் பிரதிபலிப்பது என்பது பொதுக் கருத்து. ஆனால் அது உண்மையான வாழ்க்கை ஆகாது. இளங்கோவடிகள் இதை நூல் இறுதியில் தெளிவுபடுத்துகிறார். நாடகம் மூலம் தமிழ் மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்தாற்போன்று, பிரதிபலிப்பதேயன்றிச் சிலப்பதிகாரம் தமிழரின் உண்மை வரலாறு ஆகாது என்கிறார்.

சங்க இலக்கியம் முழுவதுமே உண்மையான தமிழர்தம் வாழ்க்கையைக் காட்டும் இலக்கியமன்று, அவை அனைத்தும் புனைகதை நாடகங்களே எனவும் அதற்கு இலக்கணம் எழுதிய நூலே தொல்காப்பியம் என்றும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் உணர்த்துகிறார்.

சிலப்பதிகாரம் முற்றிலும் புனைகதை, அது காப்பியமே அன்று; தொல்காப்பியம் புனை கதை, நாடக நாட்டியங்களுக்கு எழுதப்பட்ட பரத சாத்திரம் போன்றதேயன்றி, பாணினியது போன்ற இலக்கண நூலன்று என்ற இன்னோரன்ன புதிய ‘அரிய’ செய்திகளைக் கண்டுபிடித்து எழுதியுள்ளார். அவற்றுள் நம் நெஞ்சைத் தொடும் சில அரிய வரிகளை, அவர் வாக்கிலிருந்தே அறிவது, மேலும் அவர் யார், எதற்காக இப்படி நெஞ்சறிந்த பொய்களைக் கூறியுள்ளார் என உணர உதவும்.

“*Silappathikaram is a creative poetry and not a historical epic.*(*p.123*)

“*However there is a tradition to call this an epic in general, but I would like to call it, a dance composition. Natakakappiam as the whole work was intended to be enacted as a drama.*”

இரா.நாகசாமியின் ஆழ்மனத்தில் படிந்து கிடக்கும் நச்சு எண்ணம் என்ன வென்றால், பழந்தமிழ் இலக்கியம் முழுவதுமே பொய்யான, கற்பனை கலந்த இலக்கியம் எனச் சொல்லிவிட

வேண்டும் என்பதுதான். தொல்காப்பியம் வாழ்க்கையை அகம், புறமென்று பிரித்து, ஐந்து நிலம் என்ற கற்பனைப் பரப்பில் நாடகமாக்கிக் காட்டுகிறது என்றும், அகத்திணையியல் முதலான அகம் சார்ந்த யாவும் தமிழின் மேன்மையைக் காட்ட நினைத்து நாட்டிய நாடக இலக்கணமாக்கியவை என்றும் அவற்றைப் பின்பற்றித் தோன்றியனவே அனைத்துக் கற்பனைப் பாடல்களும் என்றும் நாகசாமி கூறுகிறார். சிலப்பதிகாரத்தையும் அவ்வாறே வெறும் புனைவு என்கிறார்.

ஒரு கற்பனையான நல்ல கதையைக் கட்டி, நாடகமாக அரங்கேற்றிய பெருமையுடையது சிலம்பு. தமிழிலுள்ள அகத்திணை, புறத்திணை எல்லாமே கற்பனையாக ஆடல் பாடல் குரவை வரி சேதம் போன்ற நாட்டிய வகைகளால் நடித்துக் காட்டப்பட்ட நாடகங்களே. தமிழில் அகக்கூத்து, புறக்கூத்து என்று கூறும் மரபுளது. இதுவே கற்பனையான ஆடல் வகை சார்ந்த அகத்திணை, புறத்திணையாம். அகம் சிருங்கார ரசம் சார்ந்த ஆடல் வகை, புறம் போர் சார்ந்த கூத்து எனும் தவறான கருத்துகளையே ஆராய்ச்சியின்றி வெளிப்படுத்துகிறார்.

இரா. நாகசாமியின் முடிபு

தொல்காப்பியம் பரதம் போன்ற நாட்டிய சாத்திரம். அது ஓர் இலக்கண நூலன்று (தொல்காப்பியம் எழுத்தும் சொல்லும் தமிழ் இலக்கணமன்று, அஃது ஓர் இருமொழி இலக்கணம். அது வடமொழியைப் பின்பற்றி எழுதப்பட்டது என்று முன்பே முடிவு கட்டியாயிற்று). பொருளாதிகாரம் கற்பனையான நாடக, நாட்டிய மரபு வழி நடனக்கலை நூல். அகம் என்பது வாழ்க்கை அடிப்படை உடைய இலக்கணம் அன்று, கூத்து வகை சார்ந்தது. புறமும் அவ்வாறே.

சிலப்பதிகாரம் அதைப் பின்பற்றி எழுதப்பட்ட புனைகதை நாடகம். ஆனால் இசை கூத்து ஆடல் பாடல் களஞ்சியமாக எழுதப்பட்ட கற்பனைக் கருவூலம்.

சிலப்பதிகாரம் ஒரு கட்டுக்கதை என்பவர், நூலினுள் நுழைந்து ஒரு வரி கூட எழுதவில்லை. அவர் இக்கட்டுரைக்கு

ஆதாரமாகக் காட்டுவன, ஒவ்வொரு காண்ட இறுதியிலும் வரும் கட்டுரை என்ற மூன்றும் காப்பிய இறுதியில் வரும் நூற்கட்டுரை என்பதும் ஆகும். இவை இளங்கோ பாடியன அல்ல. உரை எழுதியவரோ, படித்தவரோ அவ்வக் காண்டக் கதைக்கு ஒரு முடிவுரை போல் எண்ணி எழுதியவை. புகார்க் காண்ட இறுதிக் கட்டுரை சோழ மன்னர் புகழ், சோழநாட்டுச் சிறப்பு, அதில் வரும் ஆடலும் பாடலும் இசையும் முதலானவைபற்றிக் கூறி, புகார்க் காண்டம் முடிவுற்றது என்பதாகும்.

இதன் நடையும் போக்கும் மிகப் பிற்பட்டவை. இதைக் காப்பியக் கதைச் சுருக்கம் என்று கூடக் கூறமுடியாது. அவரே **கதைச் சுருக்கம், முடிவுரை** என்று கூறி விட்டு, சிலம்பை நடனங்களின் தொகுப்பென்பது எப்படிப் பொருந்தும்? இதில் வரும் அரங்கேற்று காதை, கடலாடு காதையில் பதினொரு வகை ஆடல்கள், கானல் வரிப் பாடல்கள் ஆகியவை கதை தழுவியனவாய், கதையில் இடம் பெறுவனவே தவிர, அவற்றைத் தனியே விளக்க இளங்கோ சேர்த்தன அல்ல.

மதுரைக் காண்ட இறுதியில் வரும் கட்டுரையும் அக்காண்டச் செய்திகளைத் தொகுத்துத்தர முயல்கிறது. அக்காண்டத்தில் வரும் வேட்டுவ வரியும் ஆய்ச்சியர் குரவையும் கதைக்கு இன்றியமையாதவை.

வஞ்சிக் காண்டத்தின் இறுதியில் வரும் கட்டுரையும் சேரன் பெருமை சேரநாட்டு வளம் செங்குட்டுவன் வீரம் ஆகியவற்றைக் கூறுவதாக உளது. வஞ்சிக் காண்டத்தில் வரும் குன்றக்குரவை மற்றும் கந்துகவரி, ஊசல்வரி போல்வன கதைக்கு உதவுபவை.

இறுதியாக வரும் நூற்கட்டுரை கதைச்சிறப்பைக் கூறி, ஆடல் பாடல் இசையுடன் இக்காப்பியம் அமைந்ததை விளக்குகிறது.

நூற்கட்டுரை

குமரி வேங்கடம் குணகுட கடலா
மண்திணி மருங்கில் தண்தமிழ் வரைப்பில்

செந்தமிழ் கொடுந்தமிழ் என்றிரு பகுதியின்
ஐந்திணை மருங்கின் அறம்பொருள் இன்பம்
மக்கள் தேவர் எனஇரு சார்க்கும்
ஒத்த மரபின் ஒழுக்கொடு புணர
எழுத்தொடு புணர்ந்தசொல் லகத்தெழு பொருளை
இழுக்கா யாப்பின் அகமும் புறனும்
அவற்றுவழிப் படூஉம் செவ்விசிறந் தோங்கிய...

இது, சிலப்பதிகாரம் கதை தழுவிய காப்பியமேயன்றி வெறும் நடனக்கலைத் தொகுப்பன்று என்று காட்டும். இக்காப்பியத்தைச் சுவைபட எழுதியதால் முத்தமிழ்க் காப்பியம் எனப்பட்டது என்பது பற்றி, பின்பு வருகிறது.

பாடலும் எழாஅலும் பண்ணும் பாணியும்
அரங்கு விலக்கே ஆடலென் றனைத்தும்
ஒழுங்குடன் தழீஇ உடம்படக் கிடந்த
வரியும் குரவையும் சேதமும் என்றிவை
தெரிவுறு வகையால் செந்தமி ழியற்கையில்
ஆடி நன்னிழலின் நீடிருங் குன்றம்
காட்டு வார்போற் கருத்து வெளிப்படுத்து
மணிமே கலைமேல் உரைப்பொருள் முற்றிய
சிலப்பதிகாரம் முற்றும்

சிலப்பதிகாரம் முழுக்க முழுக்க ஒரு வரலாற்றுக் காப்பியம். நூலினுள் உள்ள பகுதிகளை விட்டுவிட்டு, 'கட்டுரை' என்ற பகுதிகளை மட்டுமே சான்றாக நாகசாமி கொண்டது ஒரு தவறான முடிவுக்கு இவை உதவும் என்ற எண்ணத்தால் போலும்.

இவ்வளவும் எழுதியவர் முதன்முதலில் வரும் உரைபெறு கட்டுரையை விட்டுவிடுகிறார். அதில் ஒரு வரலாற்றுச் சான்று, அவர்க்கு எதிராக இருப்பதே காரணம்.

'சிலப்பதிகாரம் புனையப்பட்டதே செவ்வியல் தமிழ்ப் பண்பாட்டை நாட்டியம் மூலமாக வெளிப்படுத்தத்தான்' என்கிறார். தமிழின் செவ்வியற் பண்புகள் ஆயிரம் இருக்க, நாட்டியத்தின் மூலமே செவ்வியற் பண்பைப் பெற்றதாகக்

கூறுவது தமிழை இலக்கணம், மொழியியல், இலக்கியம், வரலாறு, பண்பாடு எனப் பல துறைகளிலும் ஆழ்ந்து ஆய்வு செய்து உண்மை கண்டுள்ள அறிஞர்கள் அனைவரையும் கண்மூடித்தனமாக மறுக்கும் செயலாகும்.

சிலப்பதிகாரம் நடனத்தை முதன்மையாகக் கொண்ட நூல் என்று காட்ட முனையும்போது சங்க இலக்கியங்களையும் அகக் கூத்து புறக் கூத்து என வகைப்படுத்திப் பார்க்கிறார்.

This suggests that the Sangam classification into Akam and Puram was mainly intended for dance. As such songs are adapted to dance. They need not be embellished and are not a recitation of factual events, but must be considered creative poems and not historical renderings. (*p.125*)

அகப்பாடல், புறப்பாடல்கள் எல்லாமே புலவர் கட்டியுரைத்த கதைகள் என்னுமிவர், தொல்பொருளாய்வுத் துறையில், சங்க கால வரலாற்றுச் சான்றுகள் நூற்றுக்கணக்கில் இருப்பதைக் கண்டறிந்தவரே. அச்சான்றுகளில் தெரியவரும் நிகழ்வுகள், மக்களின் பண்பாடுகள், வாழ்க்கை உண்மைகள் எப்படிக் கற்பனையாக இருக்க முடியும்?

இளங்கோ ஐந்திணை பற்றிக் குறிப்பன, அது கட்டுக்கதையன்று என மறுக்க வல்லன. ஆனால் நாகசாமி சுவைபடச் சொல்லவென்று ஐந்திணைக் கற்பனையை இணைத்துள்ளார் என்றும் அவற்றை நீக்கிவிட்டாலும் கதையில் குறை ஏற்படாது என்றும் கூறுகிறார்.

Silappathikaram is a creative poetry of unsurpassed excellence in all aspects of ancient Tamil culture.(*p.131*)

இளங்கோவடிகள் எழுதாத கட்டுரைப்பகுதிகளை மட்டுமே சான்றாகக் காட்டுகிறார். நூலில் வருவனவற்றுடன் அவற்றைப் பொருத்திக் காட்டவும் இல்லை. சேரன் செங்குட்டுவன் வரலாறு முற்றிலும் விடப்பட்டுள்ளது. இத்தகையவர் நூலின்

முகப்பில் வரும் உரைபெறு கட்டுரையைத் தொடவே இல்லை. கண்ணகித் தெய்வத்திற்கு, சேரன் கோயில் எழுப்பி வழிபட்ட போது பல நாட்டு மன்னர்கள் வந்திருந்தனர் என்றும் பிறகு தத்தம் நாட்டில் கண்ணகிக்குக் கோயில் எழுப்பினர் என்றும் இலங்கை மன்னன் கயவாகுவும் அவருள் ஒருவன் என்றும் உரைபெறு கட்டுரை கூறுகிறது.

"அது கேட்டுக் கடல் சூழ் இலங்கைக் கயவாகு என்பான் நங்கைக்கு நாட்பலிப் பீடிகைக்கோட்டம் முந்துறுத்தாங்கு அரந்தை கெடுத்து வரந்தருமிவள் என ஆடித்திங்கள் அகவையின் ஆங்கோர் பாடிவிழாக்கோள் பன்முறை எடுப்ப மழை வீற்றிருந்து வளம் பல பெருகிப் பிழையாவிளையுள் நாடாயிற்று."

திருவாளர் நாகசாமி இதனை முற்றிலும் விடுத்ததற்குக் காரணம், இலங்கை மன்னன் கயவாகு பற்றிய குறிப்பு வருவதாகும். சிலப்பதிகாரக் காலத்தைக் கணிக்க இது ஒரு தக்க சான்று என அனைவரும் கூறியுள்ளனர்.

கயவாகு மன்னர்கள் இலங்கை மகாவமிச வரலாற்றில் இடம் பெறுபவர்கள். கற்பனை மாந்தர்கள் அல்லர். எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், தென்னிந்திய வரலாறு பற்றிய ஆங்கில நூலில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

"*King Gajabahu of Ceylon was present at the invitation of the Red-Chera to witness the celebration of a sacrifice and the consecration of the temple to the 'Chaste lady' (Pattini Devi) at Vanchi, on the West - Coast*" (*P.131*). இது போன்று பலர் எழுதியுள்ளனர். தினமலர் கிருஷ்ணமூர்த்தி "*Sangam Age Tamil Coins*" என்ற நூலில், "*A Sangam age work refers to Chengkuttuvan one of the Chera kings and Gajabahu (95 - 175 A.D) of Srilanka.*" (*p.8*)இவ்வாறு கஜபாகு பற்றிப் பட்டும் படாமலும் உண்மையைச் சொல்கிறார்.

சேரன் செங்குட்டுவன் கங்கையைக் கடந்து செல்லவும் பிறகு தன் படைகளுடன் திரும்பும்போது மீண்டும் கங்கையைக்

கடக்கவும் நூற்றுவர் கன்னர் என்ற மன்னர் உதவியதாக இளங்கோ பாடியுள்ளார். சத கர்ணீஸ் என்பதை மிக நல்ல தமிழில் நூற்றுவர்கன்னர் எனத் தந்திருப்பது பொய்யாகாது.

நாகசாமி பத்தொன்பதாம் இயலில் 'Vangala Desa and Ganganadu from Tamil Sources' என்ற கட்டுரையில், வங்காளத் தேசத்துடன் தமிழுக்கு இருந்த தொடர்பை மிக விரிவாக விளக்கியுள்ளார். அது கடற்கரை சார்ந்த நாடு. தமிழில் வங்கம் என்ற சொல் வழங்குகிறது. அது அந்நாட்டின் பெயர், வங்காளம் என்ற பெயரையும் வங்கம் + அளம் (உப்பளம்) எனப் பிரித்து விளக்குகிறார். வங்கம் என்பது பெரிய பாய்மரக் கப்பலையும் குறித்தது.

இந்த வங்க தேசத்தை ஆண்ட சதகர்ணீஸ் மன்னர்களின் ஆளுகைக்குட்பட்டே, வடநாட்டுப் பகுதியும் கங்கையும் இருந்தன. அதனால் சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று, கங்கையைக் கடந்து, போரிட்டு வென்று, திரும்ப உதவினர் என்று குறிப்பு சிலம்பில் வருகிறது.

சேரன் செங்குட்டுவன் நூற்றுவர்கன்னர்(சதகர்ணீஸ்)க்குச் சஞ்சயன் மூலம் கங்கையைக் கடக்க ஆவன செய்யச் சொல்கின்றான்.

கூற்றக் கொண்டிச் சேனை செல்வது
நூற்றுவர் கன்னர்க்குச் சாற்றி ஆங்குக்
கங்கைப் பேரியாறு கடத்தற் காவன
வங்கப் பெருநிரை செய்க தாம்எனச்
சஞ்சயன் போனபின் (*கால்கோள். 162-166*)

கங்கைப் பேரியாற்றுக் கன்னரிற் பெற்ற
வங்கப் பரப்பின் வடமருங்கு எய்தி - (*கால்கோள். 176-177*)

திரும்பும் போதும் அவர்கள் உதவினர்.

ஆரிய மன்னர் அழகுற அமைத்த
தெள்ளுநீர்க் கங்கைத் தென்கரை ஆங்கண் (*நீர்ப். 22 - 23*)

செங்குட்டுவனுக்குப் பாடிவீடு அமைத்துத் தந்தனர்.

நாகசாமி 19ஆம் இயலில் எழுதிய உள்தலைப்புப் பகுதி இது.

Satakarnis rulers of the Vanga country

There are two references in the text Silapathikaram to Vanga region. The Chera ruler Senkuttuvan wanted to bring a stone from Himalayas to carve the image of Kannaki. He crossed the Great river Ganges with a fleet of boats (or ships) called Vangam, provided by Satakarni rulers of the region. The Satakarnis, with great comradeship, received the Chera. The Satakarnis are called, the rulers of Vanga Country controlling both the sides of the Gangetic river. After the Vanga country, the Chera proceeded further north where Kanaka and Vijaya the sons of Palakumaran, opposed him. They were aided by a number of other kings. The Chera who ultimately defeated all of them got a stone from Himalayas and made the vanquished Kanaka and Vijaya to carry the stone on their head. On his way back also, he was received by the Satakarnis on the southern bank of the Ganges. The Satakarnis are now called Arya rulers. The reference in Silappathikaram seems clearly to the Dakshina and Uttara lada (Ratha) country that covered probably both sides of the Ganges." (Silappathikaram, edited by Dr. U.V. Svaminatha Iyer, Kal-Kot-Kathai in Vanchikkandam, lines 175-255) (p.216).

சிலப்பதிகார வஞ்சிக்காண்டம் இளங்கோ பாடியது அன்று என, பேரா. வையாபுரிப்பிள்ளை போல்வார் கூறினர். காரணம் செங்குட்டுவன் வடநாடு வரை சென்று, வென்று திரும்பியதாகக் கூறுவதை அவர்களால் நம்ப முடியவில்லை.

அக்கருத்துமரபு சார்ந்த நாகசாமி, செங்குட்டுவனின் வடநாட்டு வென்றியை ஏற்று எழுதியிருப்பது, வரலாற்று முக்கியம் வாய்ந்ததாகும்.

எட்டாம் இயலில் சிலப்பதிகாரம் ஒரு கட்டுக்கதை நாடகம் என்றவர், 19ஆம் இயலில் அது ஒரு வரலாற்றுக்

காப்பியமே என்பதை நிறுவ வலுவான சான்று ஒன்றை ஏற்று எழுதியிருப்பது வியப்பளிக்கிறது.

இன்று தமிழைச் செம்மொழி என அறிவித்ததைத் தாங்கமாட்டாமல், அவரோ - அல்லது பின்னணியில் சிலரோ தூண்டி அண்மையில் எழுதியதில் நெஞ்சறிந்த பொய்யைக் கொட்டியிருக்கிறார்.

அவர் கருத்தை மீண்டும் காண்போம்; எட்டாம் இயலில் சிலம்பு பற்றி வருவன.

1. பொதுவாகச் சிலம்பைக் 'காப்பியம்' என்று கூறினும் நான் அதை நாட்டிய நாடக நூல் (*Dance Composition*) என்றே கூறுவேன். அது மேடையில் நாடகமாக நடித்துக் காட்ட எழுதப்பட்டது. (*The whole work was intended to be enacted as a Drama.*)

2. *It is therefore evident that the Tamil grammar Tolkappiam itself was a treatise like Bharata's Natya Sastra, a work on Drama.*

   Tolkappiam is not a grammatical work like Panini's Sanskrit grammar.

   (தொல்காப்பியம் எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் நாட்டிய சாத்திரமா? அல்லது பொருளதிகாரம் மட்டுமா? ஒட்டுமொத்தமாக அதை ஒரு நாட்டியம் பற்றிய நூலென்பது சரிதானா என்பது அவருக்கே வெளிச்சம்).

   It is clear that Silpathikaram is a creative poetry and not a historical epic.

இவ்வாறு எட்டாம் இயலில் கூறிவிட்டு, 19ஆம் இயலில் அதை ஒரு வரலாற்றுக் காப்பியமே என்பதற்கான வலுவான சான்றைத் தந்திருக்கிறார். நூற்றுவர் கன்னர் செங்குட்டுவன் கங்கையைக் கடக்கவும் திரும்பவும் உதவினர். செங்குட்டுவன் மேற்சென்று போரிட்டுக் கனக விசயரை வென்று கண்ணகி

சிலைக்கான கல்லைச் சுமந்துவரச் செய்தான் எனச் சிலப்பதிகாரம் காட்டும் வரலாற்றுச் செய்தியை ஏற்று எடுத்துமொழிகிறார் (இந்நூல், பக்.101). இவ்வாறு அவர் இரட்டை வேடம் போடுவதை, பேரா. க. நெடுஞ்செழியன் ஒரு கட்டுரையில் குறித்திருப்பது பொருத்தமே ஆகும்.

திரும்பத் திரும்ப ‘நடிப்பதற்கு என எழுதிய நாடகமே சிலம்பு (*that the whole text was a delibarate choice by Ilanko - Atikal to make a fine drama*)’ என்பது, அவரது நெஞ்சறிந்த பொய் எனல் வேண்டும். இது வெளிநாட்டு ஆய்வாளர்களைச் சென்று சேர்ந்து, தமிழைத் தாழ்வாக எண்ண வைக்கும் என்பது அக்கூட்டத்தாரின் உள் எண்ணம்.

3. தமிழ்ப்பண்பாடு என்பது இவ்வாறு நாடகமாக எழுதி, செம்மொழி என எண்ண வைத்ததே அன்றி, இது தமிழரின் உண்மையான வரலாறு அன்று. அந்த அளவு அவர்களுக்கு உயர்வு எதுவும் இல்லை. எல்லாம் கற்பனை நாடகங்கள் மூலம் புனையப்பட்டன.

4. அகம் ஒரு நாடகம், புறமும் ஒரு நாடகம். இவை நாட்டியமாட என்று புனைந்து எழுதப்பட்டவை. உண்மை நிகழ்ச்சிகள் இல்லை. இவற்றைக் கட்டுக்கதை (*Creative*) பாடல்கள் என்று கொள்ளவேண்டுமே தவிர, வரலாற்றை வைத்து எழுதப்பட்டவை என்று கருதக்கூடாது. குறிப்பாகச் சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் சிலப்பதிகாரமும் தமிழர்களின் நாகரிகப் பண்பாட்டை வெளிப்படுத்துவன அல்ல, அவை யாவுமே நாட்டிய நாடகங்களுக்காக எழுதப்பட்ட புனைகதைகளே.

5. ஐந்திணை என்பன, தொல்காப்பியரால் நாடகங்களுக்காக கற்பிக்கப்பட்ட மிகப் பரந்து விரிந்த நாடக மேடைப் பரப்பாகும்.

6. சேரன் செங்குட்டுவன் படை எடுப்பை ஒப்புக்கொண்ட இவர், இளங்கோவடிகள் முழுவதும் அகத்திணை சார்ந்து எழுதிய நாடகத்தில், புறத்திணை நாடகத்தைச் சேர்க்கவே

வஞ்சிக்காண்டத்தில் வெட்சித்திணை சார்ந்த நடுகல் செய்தி, வஞ்சித்திணை சார்ந்த படையெடுப்பு போன்றவற்றை இணைத்துள்ளார் எனத் தன் மனமறிந்த வஞ்சனையை வெளிப்படுத்துகிறார்.

இறுதியாக, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வெளியிட்ட, தமிழ்ப்பெரும் புலவர்.சி.கோவிந்தராசனார் எழுதிய 'கண்ணகியார் அடிச்சுவட்டில்' என்ற நூல் குறிப்பிடத்தக்கது. புகாரில் தொடங்கி, உறையூரில் தங்கி, காவிரி வழியாக நடந்து, மதுரையை அடைந்து, பிறகு கணவனை இழந்த கண்ணகி, வையையின் தென்கரை வழியே பதினான்கு நாள்கள் நடந்து, திருச்செங்குன்று எனும் சேரநாட்டு நெடுவேள் குன்றத்தில் அடிவைத்து ஏறி, விண்ணுலகு எய்திய வரலாறு நாகசாமி நாடகத்தில் எப்பகுதியில் இடம்பெறும் என்று தெரியவில்லை.

இவ்வளவிற்கும் அடிகள் எழுதாத கட்டுரை என்ற நான்கு பகுதிகளை மட்டும் சான்றுகளாகக் காட்டும் நாகசாமியார், சிலப்பதிகார மூலநூற் பகுதியில் ஓரடி கூட எடுத்தாளாது, அதை ஒரு புனைகதை மேடை நாடகம் என முடிவு செய்தது, ஓர் ஆய்வாளனுக்கு உரிய நற்பண்பாகுமா?

இயல் - 6

அணிக்கும் யாப்புக்கும் வேறுபாடறியாத ஆய்வறிஞர்

யமகம்

வடமொழியில் அலங்காரத்தை, அர்த்தாலங்காரம், சப்தாலங்காரம் என்று பிரித்தார்கள். முன்னது பொருளணி எனப்படும்; பின்னது சொல்லணி எனப்படும்.

சொல்லணியில் யமகம் என்பது மடக்கணி; அடுத்தது சித்திரகவி. இவை சிறு பிள்ளைகள் பல கட்டங்களில், அட்டைகளைப் பல விதமாக அடுக்கி வீடு, கோபுரம் என்று பலவாறு செய்து அழித்து மீண்டும் கட்டுவது போல், சொற்களை அடுக்கி விளையாட்டாகச் செய்வது. இது புலமை சார்ந்ததன்று. கவித்துவம் தேவையில்லை. யமகம் - மடக்கணி, வந்த சொற்களே வரும். ஆனால் பொருள் வேறுபடும். இவ் வடமொழி இலக்கணம் உள்ளவாறே தமிழில் தண்டியலங்காரத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

எழுத்தின் கூட்டம் இடைபிறி தின்றியும்
பெயர்த்தும்வேறு பொருள்தரின் மடக்கெனும் பெயர்த்தே.
(தண்டி. 92).

அதுதான்
ஓரடி முதலா நான்கடி காறும்
சேரும் என்ப தெளிந்திசி னோரே. *(தண்டி. 93).*

நான்கடிக்குள்ளேதான் மடக்கணி வரும்.

தண்டியாசிரியர் கூறிய இது பரத சாத்திரத்தில் இடைச் செருகலாக நுழைக்கப்பட்டதோ என்ற ஐயம் எழுகிறது.

நான்கு அடிகளிலும் வரும் இது ஓரடிக் கண்ணும் ஈரடிக்கண்ணும் மூன்றடிக்கண்ணும் வரக்கூடும்.

முதலடி முதல் மடக்கு

துறைவா, துறைவார் பொழில்துணைவர் நீங்க
உறைவார்க்கும் உண்டாங்கொல், சேவல் - சிறைவாங்கிப்
பேடைக் குருகாரப் புல்லும் பிறங்கிருள்வாய்
வாடை குருகா மனம்.

துறைவா, துறைவார் பொழில் என்று பிரிக்க வேண்டும். இது முதலடி மடக்கு.

ஈற்றடி முதன் மடக்கு

இவளளவுந் தீயுமிழ்வது என்கொலோ தோயும்
கவள மதமான் கடத்தில் - திவளும்
அலையார் புனலருவி நீயணுகா நாளின்
மலையா மலையா நிலம்.

இப் பாடல்களுக்குப் பொருள் உணர்வது கடினம்; சில போது மிக வலிந்து பொருள் காணவேண்டும்.

கீழ்வருவதில் முன்னைய மூன்றடியும் முதல் மடக்கு.

இறைவா இறைவால் வளைகாத் திருந்தியார்
உறைவா ருறைவார் புயலால் - நறைவாய
வண்டளவு வண்டளவு நாளின் மயிலாலக்
கண்டளவின் நீர்பொழியும் கண்.

தமிழ்த் தண்டியலங்காரத்தில் இவை விளக்கமாக உள்ளன. இதனை 105 என்றும் 315 என்றும் வகைப்படுத்துகின்றனர்.

சித்திரகவி போல, சொற்களைத் தேடிக் கட்டும் இது, மிகக் கடினமானது. சித்திரகவி போலும் இதைப் படித்துப் பொருளுணர்வது எளிதில் இயலாது. பிற்காலப் புலவர்கள் பொழுது போகாத நிலையில், இப்படிச் சொல் விளையாட்டுக் காட்டி, மக்களை மருள வைத்துள்ளனர். பரதர், நாட்டிய சாத்திரத்தில் இந்த யமகம் பற்றி விளக்கியிருப்பதை நாகசாமி ஒரியலில் எடுத்துரைக்கிறார்.

பரத நாட்டியத்திற்கு நான்கடி மடக்கணிப் பாடல் எவ்வகையில் உதவும்? இதில் இசைத்தன்மை உளதா? நாட்டியத்திற்குச் சற்றும் தொடர்பின்றி, மடக்கு என்பதை மட்டும் எடுத்துக் கொண்டு பல்வேறு யாப்பு வகைகளை இதிலடக்கி, வலிந்து இதைப் பெரிதுபடுத்திக் காட்ட முயல்கிறார் நாகசாமி. எது அணி, எது யாப்பு என்பது அவருக்குப் புரியவில்லை.

பரதர் தம் நாட்டிய நூலில் காவிய இலட்சணம் பற்றி இரண்டு இயல்கள் வகுத்துள்ளார். ஒன்று யாப்புப் பற்றியது; மற்றது அலங்காரம் பற்றியது.

பரதமுனிவரின் நாட்டிய சாத்திரத்தைத் தமிழாக்கம் செய்த, எஸ்.என். ஸ்ரீராம தேசிகன் மொழிபற்றி வரும் பதினான்காம் இயலையும் யாப்புப்பற்றி வரும் பதினைந்தாம் இயலையும் அலங்காரம் - அணிபற்றி வரும் பதினாறாம் இயலையும் மொழி பெயர்க்காது விட்டுவிட்டார். அணி இலக்கணத்தைப் பொறுத்தவரை தமிழிலுள்ள தண்டியலங்காரத்தைப் பார்த்துக் கொள்க என்று கூறுகிறார். நாட்டிய இலக்கணத்தில் அவை தேவையற்றவை என்று உணர்ந்ததால்தான் அவர் இவ்வாறு 'யமகம்' போன்றவற்றை மொழிபெயர்க்காது தவிர்த்துள்ளார்.

நாகசாமி ஒரு தனி இயலில் அதை விளக்குகிறார். 'Bharata's Natya Sastra and Yamaka in early Tamil Literature' என்ற இயல் அது.

தமிழில் பொருளணியே அணி எனப்படும். சப்தாலங்காரம் சொல்லணியியல் எனப்பட்டுத் தண்டியலங்கார நூலின் இறுதியில் வைக்கப்பட்டுள்ளது. இச்சொல்லணி வேறு பெயர்களுடன் பொருளுணர்ச்சியுடையனவாய்க் கூறப்படும் இடங்கள் தமிழில் உள. அவை அணி எனப்படா. அவை யாப்பில், தொடை இலக்கணத்தில் அடங்கும். வடமொழிச் சப்த அலங்காரத்தில் முதல் அணி யமகம் என்பது.

தமிழ் இலக்கணத்தார் இதை ஓர் அணியாகக் கொள்வதில்லை. இது செய்யுளின் பொருளுடன் தொடர்பற்றது; குழந்தைகளின் விளையாட்டுப் போன்றது. சிறப்பில்லாத, தகுதியில்லாத, காலப்போக்கில் அழிந்தும் போய்விட்ட இந்த

உத்தியை முதன்மைப்படுத்துவதன் மூலம் தமக்கு யமகம் பற்றிப் பெரிதும் தெரியாது என நிறுவியுள்ளார் நாகசாமி. இது பிற்காலத்தில் சொற்பின் வருநிலையணி எனப்பட்டது.

ஆனந்த வர்த்தனருடைய 'த்வன்யாலோகத்'தை நாகசாமி படித்திருக்க வேண்டும்.

> "பொருளணிகள் மிகவும் இனியவை. சிறந்த புலவர்களின் ஆற்றலால் அவை பாடல் உள்ளடக்கத்தோடு இயைந்து வரும். ஆனால் யமகத்தைப் பயன்படுத்துவதில் எவ்வளவு திறமையும் முயற்சியும் காட்டினாலும் அது செய்யுளில் சுவையான குறிப்புப் பொருளுடன் இயையாது. காதற் குறிப்புப் பொருள் தருவதில் யமகத்திற்கு இடமே இல்லை"

ஆனந்த வர்த்தனரின் இந்தக் கூற்று, செவ்வியல் படைப்புக்குச் சிறப்பற்றது என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது. தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் அனைத்திலிருந்தும், இனிய யாப்பிசைகளையெல்லாம் எடுத்துக்காட்டி அவற்றை யமகம் எனக் கூறும் அறியாமையை நாகசாமி நூலின் பல பக்கங்களில் காணலாம்.

தமிழில் 'பஞ்சி ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க' என்பது போலவும் 'எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்' என்பது போலவும் 'நெறியறி செறிகுறி அறிவனை' என்பது போலவும் வருவன சந்தங்கள். இவை தமிழில் வண்ண வகைகள் எனப்படும். பெரிதும் யாப்பு வடிவம் சார்ந்தவை.

தாலாட்டில்,

உறங்காத கண்ணுக்கு ஊசிகொண்டு மை எழுதி
தூங்காத கண்ணுக்குத் துரும்பு கொண்டு மை எழுதி

என்றாற் போல, அசை சீர் அடி முதலியனவும் கருத்தும் திரும்ப வருவது, நாட்டுப்புற யாப்பு வடிவம். திரும்ப வரும் கூறு இது. சொற்பொருட் பின்வரு நிலையணி என்னும் பொருளணியும் சொல்லும் பொருளும் திரும்ப வருவது.

வடமொழி மடக்கணி இவற்றின் வேறுபட்டது. அது செயற்கையானது, சித்திரகவி போல, அமைந்து சொற்சேர்க்கை செய்யும் ஒருவகைச் செய்யுள் எனலாம்.

வடமொழியில் உள்ளதை, தண்டியாசிரியர் தமிழில் முழுவதும் மொழியாக்கம் செய்துள்ளார். மடக்கு அமைப்புப் பற்றி முன்னர்க் கண்டோம்.

'துறைவா துறைவார் பொழிற்றுணைவர் நீங்க'

- இது முதலடி முதன்மடக்கு. வந்த சொல்லே வரினும் பொருள் வேறுபட வேண்டும். துறைவார் பொழில் - வேறு பொருள், வந்த சொல்லே வந்து வேறு பொருள் தருகிறது.

முதல் அயலடி ஒழித்து, ஏனை மூன்றடியும் முதன் மடக்கு.

கொடியார் கொடியார் மதில்மூன்றும் கொன்ற
படியார் பனைத்தடக்கை நால்வாய்க் - கடியார்
உரியா ருரியா ரெமையாள ஓதற்
கரியார் கரியார் களம்.

கொடியார் கொடியார் - கொடியவரது கொடிகள். உரியா ருரியார்- யானைத் தோலை உடையார், எமக்குரியார். ஓதற்கரியார் கரியார் - புகழ்தற்கு அரியார், கருத்த கழுத்தையுடையார். இதில் வருவது போல் பாடுவது கடினம்; படித்துப் பொருளுணர்வது மிகக் கடினம். புலவர்களின் சொல்விளையாட்டிற்கு இது உதவியிருக்கிறது. இது ஏதோ அகராதி திறந்து கிடப்பதைப் போன்றது. 'கவிதையின் கண்ணுக்குப் புலப்படாத சிறகுகள்' எனக் கீட்ஸ் விளக்கிய அழகு இதில் முற்றிலுமாகக் காணாமல் போய்விட்டது. அதனால்தான் ஸ்ரீராம தேசிகன் இதை மொழி பெயர்க்காது விட்டார். ஆனால் நாகசாமி முழுவதும் மொழிபெயர்த்துள்ளார்.

யமகம் எனும் இதைப் பத்துவகையாகப் பிரித்துள்ளார் பரதர். அந்தப் பத்தையும் கூறி, வடமொழி மேற்கோளுடன் விளக்குகின்றார், நாகசாமி.

இதில் பொருள் என்ன என்று முதலில் தேடக் கூடாதாம். பொருளை மறந்துவிடுதலே நல்லதாம். சொற்களின் ஓசையே

முக்கியமாம். சொற்களைத் திரும்பத் திரும்ப உச்சரிக்கும் ஓசைகளே யமகமாம். இந்த யமகத்தில் ஓசை இல்லை; இசை இல்லை. இது நாட்டியத்திற்கு எவ்வகையிலும் பயன்படாது. தேசிகனார் மொழி பெயர்க்காதது இது நாட்டியத்திற்குரியதன்று என்பதாலேயாம் எனக் கண்டோம்.

ஆனால், நாகசாமி யமகம் மிகச் சிறந்ததாய்ப் பாடலின் அழகைச் சிறப்பிப்பது என்றும் பிற்காலத்தவர் அதைக் கடினமாக்கிவிட்டனரென்றும் ஒரு பாடலில் திரும்பத் திரும்ப வரும் ஓசை நயம் யமகமே என்றும் இசையில் குறிப்பாக நாட்டியத்தில் இது வரும் என்றும் கூறுகிறார். அதாவது யமக இலக்கணத்தையே மாற்றுகிறார். யமகத்திற்குத் தாமே ஓர் இலக்கணம் கூறுகிறார்.

ஒரு சொல், தொடர் திரும்பத் திரும்ப வந்து, நாட்டிய பாவத்தை வெளிப்படுத்தும். ஒரு பாடலில் அசைகள், சொற்கள், தொடர்கள், அடிகள் திரும்ப வந்து, பாடலின் ஓசையைச் சிறப்பிப்பது யாப்பிலக்கணம். மடக்கணியோ நான்கடிப் பாடல்களில் மட்டுமே அமைய வேண்டும்.

ஒரு நான்கடி வடமொழிப் பாடலின் இறுதி, மண்டலம் மண்டலம் என முடிவதைக் காட்டி, இது பாதாந்த யமகம் என்று பரதர் காட்டியுள்ளார். இப்பாடல்களில் ஓசை நயமே இல்லை. அர்த்தமும் தேடக்கூடாது என்பது நாகசாமியின் இலக்கணம். பிறகு எதற்காக இது இயற்றப்பட வேண்டும்?

யமகம் தவிர இலக்கியத்தில் இலட்சணங்களும் - அதாவது குணம், தோசம், அணிகள் வந்து அழகைக் கூட்டுமாம்.

யமகம் ஓசை இனிமை தரும் என்பது போல நாகசாமி விளக்குகிறார். ஆனால் பரதர் பாடியதை உள்ளவாறே மொழிபெயர்த்துத் தண்டியில் வரும் அதன் இலக்கணத்தைக் கண்டால், நாகசாமி தாமே கூறுவதாக வரும் அவர் கருத்து வேறுபடுகிறது.

அதுதான்,

ஓரடி முதலா நான்கடி காறும்
சேரும் என்ப தெளிந்திசி னோரே. (*தண்டி. 93*)

அம் மடக்கு நான்கடிச் செய்யுளுள்ளே மடக்குங்கால் ஓரடிக்கண்ணும் ஈரடிக் கண்ணும் மூன்றடிக் கண்ணும் நான்கடிக்கண்ணும் நடக்குமென்று சொல்லுவர் தெளிந்தோர்.

வெண்பா, நான்கடி ஆசிரியவிருத்தம் போன்ற பாடல்களில் இது வருகிறது. இதனை முன்னரே விளக்கினோம்.

வடமொழியறிந்த சம்பந்தர், அருணகிரி நாதர் போல்வார் அம்மொழியைப் பின்பற்றி மிக அரிதாக யமகம் பாடியுள்ளனர். யமகம் - முழுவதும் சொல்லணி, பொருளணி அன்று. யமகம் - புலமை விளையாட்டு. நாட்டியத்திற்கு அது எவ்வகையிலும் பயன்படாது.

தமிழில் இயைபு, வண்ணம், எதுகை, ஒரு பொருள் மேல் மூன்றடுக்கும் தாழிசை என வருவனவும் இசை தழுவிய பரிபாடலில் வருவனவும் முதன்மையாகப் பொருளுணர்ச்சியை மேம்படுத்தத் திரும்ப வரும் ஓசைஒழுங்குகளாகும். இவை யாப்பு வடிவம் பற்றியவை.

'தொல்காப்பியத்தில் யமகம்' என்பது அடுத்த இயல். தொல்காப்பியம் செய்யுளியலில் தொடை என வருவது யமகம் போன்றதே எனவும் மோனை, எதுகை, முரண், இயைபு எல்லாம் சப்தாலங்காரங்களே எனவும் இவை யாவும் யமகமே எனவும் கூறுகிறார் நாகசாமி.

*மோனை, எதுகை எல்லாம் பாட்டுவடிவக் கட்டமைப்புச் சார்ந்தவை. ஒரூஉத் தொடை நூற்பாவை மட்டும் எடுத்துக் காட்டி, எதுகை மிக விரிவாக வருவதென்றும் அதை உரையாசிரியர்கள் **13708** என்று கணக்கிட்டுக் கூறுகின்றனர் என்றும் கூறும் நாகசாமி, இது (யமகம்) தொல்காப்பியர் காலத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்ததைக் காட்டுகிறது என்றும் முடிக்கின்றார். யமகம் அல்லாத தொடை நலன்களை இவர் யமகம் என்றே சாதிக்கிறார்.*

அசை அந்தாதி, சீர் அந்தாதி என உரையாசிரியர்கள் கூறுவதை வைத்து, அதையும் யமகம் பற்றியது என்றும் தொல்காப்பியம் யமகம் என்ற சொல்லை ஆளாவிட்டாலும் நாட்டிய சாத்திரத்தின் ஒரு கூறே யமகம் என்றும் முடிவு செய்கிறார். மொட்டைத் தலையை முழங்காலில் முடிக்க முயல்கிறார்.

பல்வேறு வகைகளைப் பார்க்கும் போது **யமகம் இயைபு** *இரண்டும் ஒரு சொல்லே - என்று அவருக்குத் தெளிவுபடுகிறதாம். சொற்களே ஒன்று என்றால், யமகம் என்பதையே தமிழர் இயைபு என்றனர் என்றாகிறது.*

அடுத்த இயல் 'சங்க இலக்கியத்தில் யமகம்' என்பது.

பரத முனிவரின் சொற்கள் திரும்ப வருதல் என்ற (யமகம்) கூறு புறநானூற்றிலேயே - இரண்டாம் பாடலில் சக்கரவாள யமகமாகக் காணப்படுகிறதாம். நான்கடிப் பாடலில் வருவனவற்றோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

மண்திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரும் வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும், என்றாங்கு

பொருள் கருதி, வேறுவேறு சொற்கள் அடுக்கிவரும் இதனை, யமகம் என்ற சொல்லணியுடன் இணைப்பதை, அறிவிலி கூட ஒப்பமாட்டான். முழுமையும் தமிழ்ப் பாங்கான உம்மைத் தொடரமைப்பு இது.

இதுபோலப் புறம் 48ஆம் பாடலில்,

கோதை மார்பின் கோதை யானும்
கோதையைப் புணர்ந்தோர் கோதை யானும்

என வருவது காஞ்சி யமகம் ஆகுமாம். பொருள் நயம் கருதிய இது சொற்பொருட்பின்வருநிலை அணியாகும். இதையும் யமகம் என்கிறார். யமக இலக்கணத்தைக் காற்றில் பறக்க விட்டு, தாம் நினைத்ததை எல்லாம் யமகம் என்று கூறுகிறார்.

ஔவையாரின் "நாடா கொன்றோ" எனத் தொடங்கும் பாடல் (புறம்.187) ஒன்றோ எனத் திரும்பத் திரும்ப முடிவதால் பாதாதி யமகம் ஆகுமாம். இச்சொல் பாட்டுப் பொருளுடன் சேர்ந்ததேயன்றி அணியோ, யமகமோ அன்று.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே (புறம். 187)

இப்பாடலில் 'ஒன்றோ' எனும் சொல் 'ஒன்றில்' என ஒரே பொருளில் திரும்பத் திரும்ப வந்து பின்னிரண்டு அடிகளின் பொருளை வலிமையாக நிறுவும் தருக்கத் தகவுடன் அமைகிறது.

இவ்வாறு வருபவை தமிழ்ப் பாடலின் தொடை யொழுங்குகளாகிய யாப்பு அமைப்புகள். ஆனால் யமகம் இத்தகையதன்று.

நிரையா நிரையா...
வரையா வரையா...
விரையா விரையா...
உரையா உரையா...

இது யமகம். ஒவ்வோரடியிலும் வேறுவேறு சொற்கள் வேறுவேறு பொருளில் அடுக்கி வந்து கவிதையைச் செயற்கை விளையாட்டாக்கியதைத் தவிர, பொருள் நோக்கு, அழகு எதையும் காட்டவில்லை.

மொழியின் அனைத்து இயற்கை அழகுக் கூறுகளையும் தமிழ்ப் புலவன் தன் உணர்வு நுட்பம் கொண்டு தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களின் வரையறைகளை உட்படுத்தி ஆழமும் கூர்மையும் உடையவாகப் படைத்த அருந்தமிழ்ப் பாக்கள் எங்கே? எழுத்துகளுக்கும் பாவகைகளுக்கும் கூடச் சாதிப் பாகுபாடு வகுத்து மனிதனையும் மொழியையும் கவிதைப் படைப்பையும் ஒருங்கே இழிவு செய்து எழுதும் சமஸ்கிருதக் கவிதை முறை எங்கே? நாட்டிய சாத்திர யமகத்துள் தமிழின் அரிய, இனிய

பாக்களையெல்லாம் அடக்கிக் காட்டிக் குழப்பும் செயலின் கீழ்மையை இரண்டு மொழி இலக்கண இலக்கியங்களையும் ஊன்றிப் படித்து ஒப்பிட்டுப் பார்ப்போர் உணர்ந்துகொள்வார்கள்.

"பல்சான்றீரே" என்ற பாடல்(246) பரதர் கூறும் விக்ரந்தா யமகமாம். மாமூலனாரின் "கலம்செய் கோவே" (228) என்பதும் இது போன்றதேயாம்.

ஔவையின் "வாயிலோயே, வாயிலோயே" என்பது (206) ஒரு யமகமாம். பொருள் கருதி இரட்டித்தலை யமகம் என்கிறார்.

"மாவாராதே மாவாராதே" எனத் தொடங்கி "மாவே" என முடிகிறது (273) ஒரு பாடல். இதுவும் ஒருசார் யமகமேயாம் என்று கூறுகிறார்.

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே (*புறம்.312*)

என்ற பாடல் ஐந்து முறை கடனே என முடிகிறது.

இவை எல்லாம் பாதாந்த யமகமாகுமாம். இந்த வகையில் முறையற்று இணைத்துப் பார்ப்பது இலக்கணமறியாத பாமரத் தன்மையையே காட்டுகிறது.

ஐங்குறுநூறு - அன்னை எனப் பலமுறை வருகிறது. மிகக் கூடுதலாக இவை இடம்பெறும் நூல் ஐங்குறுநூறு.

அன்னாய் வாழி வேண்டு அன்னை

எனத் தொடங்கும் 4 பாடல்களை எடுத்துக்காட்டுகிறார். ஐங்குறுநூற்றில் யாப்பு வடிவம் சார்ந்து இது, திரும்பவரும் முறையால் தனித்தன்மை பெறுகிறது. இவை வெவ்வேறு பொருள் தருவன அல்ல. யமகம் எனல் இயலாது.

அன்னாய் வாழிவேண்டு அன்னைஅஃது எவன்கொல்
வரைஅர மகளிரின் நிரையுடன் குழீஇ
பெயர்வுழிப் பெயர்வுழித் தவிராது நோக்கி
நல்லள் நல்லள் என்ப
தீயேன் தில்ல மலைகிழ வோற்கே (*204*)

இது பாதாதியமகமாம். இதில் வரும் இரட்டித்தல் யாப்பு சார்ந்தது; பொருள் பற்றியது. இதை மடக்கணி எனலாமா? அலங்காரமாக வரும் அணிக்கும் யாப்பு வடிவிற்கும் வேறுபாடு தெரிய வேண்டாமா?

பரிபாடலில் அருச்சித்தல் போல வந்து ஏத்தி ஏத்தித் தொழும் அனைத்தும் இவருக்கு யமகமாம்.

தீயின்உள் தெறல் நீ பூவின்உள் நாற்றம் நீ
கல்லின்உள் மணி உம் நீ சொல்லின்உள் வாய்மை நீ
அறத்தின்உள் அன்பு நீ மறத்தின்உள் மைந்து நீ

இதில் நீ எனத் திரும்ப வருவன யமகமாம். உள் என்பதைப் பிரித்துப் பதிப்பிக்கிறார். அவையும் யமக வகையாம். நாகசாமி எனும் பெயர் திரும்ப வரும் இடங்கள் எல்லாம் யமகம்தான் போலும்! இலக்கண விதிக்கு எப்படிப்பட்ட விளக்கம் இது!

இறைவன் புகழ் பாடும் இதில் வரும் அனைத்தையும் பொருத்தமேயின்றி யமகம் என ஆக்கிப் பல சான்று காட்டி எழுதுகிறார். சொல்லவந்த பொருளென்ன, அதற்குரிய யாப்பு வடிவம் என்ன என அவற்றின் சிறப்பில் மூழ்காது, இவர் யமகத்தில் மூழ்கி எழமாட்டாமல் உழல்கிறார்.

பதிற்றுப்பத்தில் நான்காம் பத்து அந்தாதித் தொடை அமைந்தது. இது யமகத்தில் அந்தாதி மாலை என்ற யமக வடிவில் அடங்குமாம்.

கலிப்பாவின் தாழிசை உறுப்பமைதி பற்றி அறியா இவர், தாழிசை ஒன்றைக் காட்டி (இரண்டாம் பாடல்.) யமகம் என்று கூறுகிறார். அடிகள் 13உம் 16உம் ஒன்றுபோல் இடைவிட்டு வருதலால் விக்ரந்த யமகமாம்.

கலித்தொகை நாட்டியங்களுக்கென எழுதப்பட்ட பாடல்களின் தொகையாம். கலியையும் பரிபாடலையுமே தொல்காப்பியர் நாடக வழக்கு, உலகியல் வழக்கு என்றாராம். (நாடக வழக்கு, உலகியல் வழக்கு - நாட்டிய தர்மி, லோக தர்மி).

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர் (தொல். *999*)

என்ற நூற்பாவை நினைத்து அவ்வாறு எழுதுகிறார். அது தொன்மை மிக்க காலநிலை. நாட்டுப்புற வழக்கில் முன்பு இவை ஆடல் பாடல்களாக இருந்தபோது, இவை பயன்பட்டன. அவற்றிலிருந்து வளர்ந்து செம்மைப்பட்டதே புலவர்களின் வழக்காறு. ஆகவே புலவர்களின் வழிகாட்டி அவை என்பதும் அவற்றின் வளர்ச்சியே புலனெறி வழக்காயிற்று என்பதும் கருத்து. இதற்கும் யமகத்திற்கும் தொடர்பில்லை.

நாகசாமி குறிப்பிடுவது போல அவை முழுவதும் நாட்டியத்திற்கென எழுதப்பட்டவை அல்ல. நூலை முழுவதும் கற்காததன் விளைவு இது.

பரதர் மிகக் குறைவாக எடுத்துக் காட்டுவதாகவும் பிற காவிய இலட்சணம் பற்றிப் பிற கவிஞர்கள் பாடியதை எடுத்துக் கொள்ளுமாறும் கூறுகிறார். வெண்பாவைப் போல் நான்கடிப் பாடல்களை மட்டுமே பரதர் காட்டுகிறார். இவரோ எல்லை மீறிச் செல்கிறார்.

பரதர் காட்டுவன நாகசாமி விளக்கத்திற்கு ஒத்து வருவன அல்ல. பரதர் இலக்கணம் வேறு; நாகசாமி தம் போக்கிற்கு எவ்வித ஆதாரமும் இன்றி எழுதிப் போகும் இலக்கணம் வேறு.

யமகம் முழுமையாகச் சிலப்பதிகாரத்தில் வருகிறதாம். பரதரின் சப்தாலங்காரத்திற்கு - யமகம் என்பதற்குத் தமிழ்ச் சிலம்பே முழுமையாய் விளக்கம் தருகிறதாம்.

சங்க காலத்தில் இந்த யமக அலங்காரம் மிக நன்கு பரவி, அறியப்பட்டுப் பாடல்களில் புனையப் பட்டதாம்.

தமிழின் இனிய பாக்கள், இசைப் பாக்கள் அனைத்தும் யமகம் வழிப்பட்டன என்னும் இவர், காலஆராய்ச்சி பற்றிக் குறித்திலர். பரதர் காலம் பற்றி இவர் குறிப்பிடவில்லை. தொல்காப்பியர் பரதருக்கு முற்பட்டவர் என்பது மிகத்தெளிவான

உண்மை. இவ்வாறிருக்கும்போது பரதர் கூறிய யமகம் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் பின்பற்றப்பட்டிருக்கிறது என்பது எவ்வாறு பொருந்தும்? சமஸ்கிருதப் பேரறிஞர் முனைவர் அ.சங்கரன், பரதர் ஏசு கிறித்து பிறந்த காலத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் எனக் கொள்கிறார்.

"இவ்வாறு ஒரு சரியான முடிவுக்கு நாம் வரலாம். நாட்டிய சாஸ்திரம் இப்போதுள்ள வடிவில் கி.பி.ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னர் இருந்தது; பெரும்பாலும் காளிதாசன் காலத்தில் (கி.பி.400) இருந்தது எனக் கூறலாம் (ஏ.பி.கீத், சமஸ்கிருத வரலாறு, ப.32). மேலும் பரதர் நாட்டிய சாஸ்திரத்தின் மூலப் பகுதிகளைக் கிறித்துப் பிறப்பை யொட்டிய காலத்தில் எழுதியிருக்கலாம்." (*அ.சங்கரன், Some Aspects of Literary Criticism in Sanskrit or the theorires of Rasa and Dhavani. ப.17*)

பரதர் சொல்லாததையும் சொன்னதையும் போட்டுக் குழப்புகிறார் நாகசாமி.

யமகம் - ஓர் அணி இலக்கணம். நாகசாமி தமிழிலிருந்து காட்டுவன எல்லாம் யாப்பிலக்கணம். தமிழில் வண்ணம், எதுகை, இயைபு, மூன்றடுக்குத் தாழிசை, சொற் பொருள் பின்வருதல், பாட்டின் பொருளுணர்ச்சிக்கு வரும் கூறுகள் எல்லாம் 'சப்தாலங்காரங்கள்' அல்ல. தமிழில் பொருளற்ற அல்லது கடினமான சப்தாலங்காரத்திற்கு இடமே இல்லை. அணிக்கும் யாப்புக்கும் உள்ள வேற்றுமையை அறியாமையினால் வந்த விளைவு இது. சொற்பின் வருநிலையணி, சொற்பொருள் பின்வரு நிலையணிகள் யமகம் ஆகா. அவை பாடற் கட்டுக்கோப்பை அழகுபடுத்துவன. இயைபுத் தொடை, எதுகைத்தொடை, வண்ணங்கள் எல்லாம் யாப்பு சார்ந்தவை. சந்தப் பாக்களை எல்லாம் யமகம் என்றால், வாவா, போபோ என்பனவும் யமகமாகி விடும். இவற்றை அறியாது, தமிழ்ப் பாவளர்ச்சியே யமகம் தான் - யமக வழிப்பட்டதுதான் என நிறுவ நினைத்து முயன்று தோல்வி அடைகிறார் நாகசாமி.

பரதர் பொருளணி (அர்த்தாலங்காரம்) எனக் காட்டுவன மூன்று மட்டுமே. அவை உபமா, தீபகா, ரூபகா என்பன. இம்மூன்றும் தமிழுக்குரியவை. இவற்றின் பெயர்களே இவ்வுண்மையை உணர்த்தும். உபமா - தொல்காப்பியர் கூறும் உவமை. தீபகா என்பதில் ‘தீ’- ஒளிவிளக்கு எனப் பொருள்படும். தீவகம் என்பது தமிழ் அணியே. ரூபகா என்பது உருவகம். இது தொல்காப்பிய உரையாசிரியர்களால் உவமை அணியின் ஒரு வகையாகக் குறிப்பிடப்படுகிறது.

மடக்கு எனும் சொல்லணியைப் பொறுத்தவரை வடமொழி யமகத்தைப் பிற்காலப் புலவர் சிலர் விளையாட்டுக்காகவும் இலக்கண எடுத்துக்காட்டுகளாகவும் பயன்படுத்தியுள்ளனர் என்பது தவிரத் தமிழ் இலக்கியத்தில் அவற்றுக்கு இடமே இல்லை. நாகசாமி தமிழ் இலக்கியங்களில் யமகம் எனச் சுட்டிக் காட்டுவன எல்லாம் யாப்போசை தொடர்பானவையே அன்றிச் சொல்லணிகள் ஆகா.

இயல் - 7

சிவன், முருகன், துர்க்கை வேதக் கடவுளர்கள் அல்லர்

வேதியர்க்கு வேதம் ஓதி வேள்வி செய்தலே வழிபாடு; அக்கினி வளர்த்து வேள்வி வழிபாடு செய்யாதவன் பாவி; அவன் நரகம் புகுவான். அவர்களுக்குத் திருக்கோயில் வழிபாடு, உருவ வழிபாடு கிடையாது. அவர்களுடைய கடவுளர்கள் எல்லாம் மேலுலகில் உள்ளனர். இங்கு யாரும் இலர். அக்கினி ஒருவனே இங்கும் அங்கும் தூதுவனான ஒரே கடவுள். மேலுலகத் தேவர்களுக்கு, வேள்வி மூலம் உயிரினம் முதல் அனைத்துப் பொருள்களையும் நெருப்பில் போட்டு ஆகுதி செய்து, அக்கினி பகவான் மூலம் மேலுலகிற்கு அனுப்புகிறார்கள். இதனால் மேலுலகத் தேவர்களும் தேவதைகளும் மழை பெய்வித்து, இவ்வுலக மக்களை வாழ்விக்கிறார்கள். கீதோபதேசம் இது.

நான்கு வேதங்கள் முதல், கீதைவரை எதிலும் கோயில் என்ற சொல்லோ, உருவ வழிபாடு பற்றியோ குறிக்கப்படவில்லை. இக்கடவுளரையும் தமிழரின் நிலத்தெய்வ வழிபாடுகளையும் ஆரிய மூலப்படுத்தினர் ஆரியர். இவற்றை அறியாதவர் போலத் தமிழரின் வழிபாட்டு நெறிகளையும் தமிழர் கடன் பெற்றதாக எழுதுகிறார் நாகசாமி. கொஞ்சமேனும் சுயவுணர்ச்சியிருந்தால், துணிச்சலாகத் தாம் எழுதிய இதை மறுக்க முன்வரவேண்டும்.

மொகஞ்சதாரோ ஆய்வுகள் பற்றிக் கூறும்போது சர் ஜான் மார்ஷல் தமிழ்ச் சமயமே இன்றைய இந்து சமயத்தின் முன்னோடி எனும் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். இதனடிப்படையில் வரலாற்றறிஞர் கே.எம். பணிக்கர் சிவன், காளி, லிங்கவழிபாடு மற்றும் இந்து சமயத்தின் பிற கூறுகள் எல்லாம் ஆரியர் வருவதற்குப் பல காலம் முன்பே இந்தியாவில் நிலைபெற்றிருந்தன என்கிறார். (*A Survey of Indian History*)

தமிழர்க்கு என்று நாகரிகமோ, பண்பாடோ இல்லை என்பவர், இறை வழிபாடும் இல்லை என்பவர், சமய வழிபாடும் இல்லை என மறுப்பது வேண்டாத வேலை.

நாகசாமி ஸ்மார்த்த பிராமணர். வீட்டில் அக்கினி வளர்த்து, வேதம் ஓதித் தம் கொள்கைப்படி வாழ வேண்டியவர். ஆனால் இந்த ஸ்மார்த்த பிராமணர்கள் ஒரு காலத்தில் சமணர்களின் அடி உதை தாங்காமல், தங்கள் வேத வேள்வியைக் கைவிட்டு, தமிழர்களின் திருக்கோயில் - உருவ வழிபாட்டு நெறிமுறைக்குத் தஞ்சம் புகுந்து தங்களைக் காப்பாற்றிக் கொண்டவர்கள். தமிழரது ஆகம வழிபாட்டுக்குத் திரும்பிக் கொண்டு, தமிழரின் முக்கடவுளரையும் ஏற்றுக் கொண்டு, அக்கடவுளர்களைப் பற்றி உபநிடதங்களிலும் புராணங்களிலும் நூற்றுக்கணக்கான புனைவுகளை எழுதி வைத்துக்கொண்டனர். அவற்றைக் காட்டியும் தமிழர் நெறியாகிய பக்திநெறியைக் கைப்பற்றியும் முதலீடாக்கிப் புண்ணிய வாணிகம் செய்துகொண்டு, தமது ஹோமங்களையும் வேள்விகளையும் சமஸ்கிருதச் சடங்குகளையும் நடத்திக்கொண்டு இரண்டு நெறிகளிலும் வருமானம் தேடி வாழ்ந்து வருகின்றனர். இன்று இவர்கள் சிவப்பழமாய்க் காட்சியளித்தாலும் தங்கள் பூர்வீகத்தை மறக்கமாட்டார்கள். தஞ்சம் புகுந்த தமிழர் சமய நெறிகளைத் தாம் மேற்கொண்டபின், அவற்றுக்கென நாமாவளி, மந்திரங்கள் உண்டாக்கி வாழும் இவர்களில் ஒருவர்தான் நாகசாமி. வரலாறு தெரியாத இவருக்கு மிக விரிவான விளக்கம் தருதலே நலம்.

முருகவழிபாடு கடல்கொண்ட குமரிக் கண்டத்ததாகும். இன்று அக்கடவுள் பெயரால் வழங்குவன, முன்னையவற்றின் நினைவாகத் தமிழர் கொண்டாடி வருபவையே. இம் முருக வழிபாடு தனியே தோன்றி வளர்ந்து, சிவ வழிபாட்டுடன் இரண்டறக் கலந்தது. இவை இரண்டின் ஒன்றிய தன்மையை, அறிஞர் பலர் முன்பே ஆராய்ந்து எழுதியுள்ளனர். இவை ஒருபுறம் இருக்க, தமிழரின் நிலவழித்தெய்வ வழிபாட்டைப் பற்றிக் காண்போம்.

தமிழர்கள் குறிஞ்சிச் சிவ வழிபாடு, முல்லைத் திருமால் வழிபாடு, பாலைக் கொற்றவை வழிபாடு மூன்றையும் வரலாற்றுக்

காலத்திற்கு முன்பிருந்தே போற்றி வந்துள்ளனர். (குறிஞ்சியில் வருவது சிவ வழிபாடேயன்றி, அது முருக வழிபாடன்று, மாயோன் - கருமை நிறத்தவனாகிய திருமால், சேயோன் - சிவந்த நிறத்தவனாகிய சிவன். சேய் - குழந்தை என்றும் பொருள் தருதலின் இடைக்காலத்தார் தவறுபட உரையெழுதிவிட்டனர்).

குறிஞ்சி நில வழிபாடு சிவ வழிபாடே எனவும் சிவன் மால் கொற்றவை மூன்றும் தமிழர் வழிபாடுகளே எனவும் ஐயத்திற்கு இடமின்றி நிறுவ, சிலப்பதிகார வேட்டுவ வரி உதவுகிறது.

அனைத்துவகைக் கருத்துக்களுக்கும், குழப்பங்களுக்கும், இடம் தரும் உபநிடதப் புராணங்களுக்கு முன்பு, வடவர்தம் வேள்விநெறி பற்றிய கூர்தலற வளர்ச்சியைக் (பரிணாமம்) காண வேண்டும். அதுபோலத் தமிழர்தம் திருவுருவத் திருக்கோயில் வழிபாட்டுக் கூர்தலற வளர்ச்சியைக் காண்பதும் உண்மையைத் தேட உதவும் ஒளிக்கதிராகும்.

தமிழர்தம் இயற்கைச்சூழல் வழிப்பட்ட நிலத் தெய்வ வழிபாடுகளில் சிவன், திருமால், கொற்றவை வழிபாடுகள் மேலோங்கின என்பதை முன்னரே விளக்கியுள்ளோம். இவை மூன்றும் முறையே குறிஞ்சி, முல்லை, பாலை நில வழிபாடுகளாகும்.

தமிழகம் அடர்ந்த காடுகள், மலைகள் சூழ்ந்து, ஒரே அடர்த்தியாய், எங்கும் பசுமையாய், ஆங்காங்குச் சிற்றூர்களையும் கடற்கரை ஓர மருதநிலங்களில் மட்டும் பெருநகரங்களையும் கொண்டிருந்த காலம் அது. தமிழகத்தில் நான்கு நிலங்களே நிலையாக இருந்தன. தொல்காப்பியர் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று இவற்றைக் குறிப்பிட்டார். தமிழில் உலகை நானிலம் என அழைக்கும் வழக்கமொன்றுண்டு.

பிறகு பாலை நிலம் எங்கிருந்து வந்தது?

குறிஞ்சிநில மலைகளுக்கு அப்பாலிருந்த, எல்லை ஓரப் பகுதிகளும் முல்லைநிலக் காடுகளுக்கு இறுதியில் இருந்த அதன் எல்லையோரப் பகுதிகளும் ஓரளவு சேர்ந்து, கலந்திருக்கும். அவை வெப்பம் மிக்க கோடைக் காலத்தில் (முதுவேனில்) பெரிதும்

வறண்டு, வெறும் குத்துச் செடிகள் மட்டுமே கரிந்தும் - மரங்கள் வாடியும் காணப்படும். அதுவே மக்கள் போக்குவரத்துக்கு உதவும் பெருவழிப் பாதையாயிற்று. இந்தப் பகுதிகள் மழைக்காலத்தில், மீண்டும் தளிர்த்துத் தழைத்துக் காணப்படும். பிற எல்லாம் கருங்கும் எனத் திரண்டுருண்ட அடர்ந்த காடுகளாகவே இருந்தன. அதனால் மக்கள் போக்குவரத்திற்குப் பயன்பட்ட இதைப் பாலை என்றனர்.

பெரும் போர்க்களங்களும் - வெண்ணிப்பறந்தலை, வாகைப் பறந்தலை போல்வனவும் இப்பாலைநில வெளிகளிலேதான் இருந்தன.

தொல்காப்பியர் பாலையை நடுவுநிலைத் திணை என்றார். இளங்கோவடிகள் அதனை,

வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்,
தானலந் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்.

(*சிலம்பு. காடுகாண். 62-66*)

என்கிறார். இதிலிருந்து ஓர் உண்மை புலனாகிறது. முல்லை, குறிஞ்சி, பாலை - மூன்றும் ஒன்றினொன்று இயைபுடைய நிலங்களாகும். அதனால் இம்மூன்றில் நிலத் தெய்வ வழிபாடுகளிலும் ஒரு கலப்பு ஏற்பட்டது.

இயல்பான இந் நிலவழிபாட்டுப் படிநிலை வளர்ச்சியை, உண்மை வாழ்வுப் பண்பாட்டை, நாடகத்தில், பின்னணியாக வரும் திரை என எழுதுகிறார் நாகசாமி.

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் சோழநாட்டு வழிகளில் மதுரை நோக்கி நடந்ததை நாடுகாண் காதை என்றும் அதைக் கடந்து பாண்டிய நாட்டிற் புகுந்து நடந்ததைக் காடுகாண் காதை என்றும் இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். அது பாலை நில வழியாதலின் கண்ணகிக்கு வேனிலின் வெப்பம் தாங்க வொண்ணாதாயிற்று. அதனால் வழியிடையேயிருந்த, கொற்றவைத்

தெய்வத்திற்குரிய ஐயைக் கோட்டத்தை அடைந்தனர். அங்கு ஒய்வு பெறுமாறு தங்குகின்றனர். அது ஆறலை கள்வராம் எயினர்கள் வாழும் இடமாகும். அப்போது அங்கு அவ்வேட்டுவக் குடியினராம் எயினரும் எயிற்றியரும் தங்கள் பாலை நிலத் தெய்வமாகிய கொற்றவையை வழிபடும் நிகழ்வு ஒன்று நடப்பதை, இம்மூவரும் வேடிக்கை பார்ப்பதாக, வேட்டுவ வரியை அமைக்கின்றார் இளங்கோவடிகள்.

சாலினி என்ற பெண் மீது, தெய்வமுற்று, அவள் சாமி வந்து - அருள் வந்து ஆடுகிறாள்.

கலையமர் செல்வி - கலைமான் மீது அமரும் கொற்றவைத் தெய்வம். அவளுக்கு நேர்த்திக் கடன் கொடுக்காததால், அங்கிருந்த எயினர் குடிக்கு நிரை கவராமல் வளம் சுருங்கிப் போனதாம், வழிப்பறி வாய்க்காததாலும் செல்வ வளம் குன்றிப் போனதாம். மறக்குடி மக்களாகிய அவர்கள் அறக்குடி மக்கள் போல் அடங்கிப் போயினராம். இதற்கு, அச்செல்விக்குக் காணிக்கையை - கடனைச் செலுத்தி, ஆடிப்பாடி வணங்கித் தொழுதாலன்றி, எயினர் குடிக்கு வாழ்வில்லை என்று, அருள் வந்தாடிய சாலினி கூறினாள்.

ஊர்நடுமன்றத்தில், அப்பழங்குடி மக்களில் ஓர் இளம் பெண்ணாகிய குமரியைக் கொற்றவை போலப் புனைந்தனர்.

அவளது நெறித்த கூந்தலைச் சடையாகக் கட்டி, அதில் ஒரு பாம்புக் குட்டியைக் கொண்டு, இறுகக் கட்டினர்.

தடித்ததொரு காட்டுப்பன்றியின் வெண்ணிறச் சிறு கொம்பைக் கொணர்ந்து, அக்குமரியின் நெற்றிக்கு மேலே, பிறை என அணிவித்தனர்.

புலிவாயைக் கிழித்து உதிர்த்த அதன் பல் வரிசையை, அக்குமரியின் நிரைத் தாலியாக அணிவித்தனர்.

புலித்தோலை, மேகலையாக இடையில் உடுத்தினர்.

அவளைக் கலைமான்மேல் ஏற்றி வைத்து. அவள் கையில் கூரிய அம்பைக் கொடுத்தனர்.

பாவை, கிளி, காட்டுக்கோழி. மயில், பந்து, கழங்கு எல்லாம் படைத்து வணங்கினர்.

அவரை, துவரை, எள், நிணச்சோறு மற்றும் வண்ணம், சுண்ணம், சாந்தம், பூ, நறும்புகை எல்லாம் ஏந்தியபடி எயிற்றியர் பின்வர, பறை, சூறைச்சின்னம் முதலான வாத்தியங்கள் முழங்க, பெண்கள் பின்னே வந்தனர்.

இவ்வாறு வந்த அனைவரும் அக்கொற்றவை வேடக் குமரியைப் பாடல்கள் பாடி ஆடி வணங்கினர்.

அப்போது, தெய்வமுற்றவளாகிய சாலினி, வேடிக்கை பார்த்து நின்ற கண்ணகியைப் பலவாறு பாராட்டினாள்.

இவ்வாறு வழிபாடு நடந்ததால், தமர் தொழவந்த குமரிக் கோலத்து அமரிளங்குமரியும் அவர்களுக்கு அருள் செய்தாள். முன்னர் அக்குமரிக்கு அணி செய்தன எல்லாம் சிவனுக்கு உரியன எனக் கூற வேண்டியதில்லை. அப்பாலை நிலம் குறிஞ்சி திரிந்த பாலை ஆதலின், குறிஞ்சிக்குரிய சிவத்தோற்றம் புனைந்தனர் என்பதால், குறிஞ்சி வழிபாடு 'சேயோன்' எனச் சிவ வழிபாடே என உறுதிப்படுகிறது.

இனி, அக்குமரியை - கொற்றவையை அவர்கள் எவ்வாறு தொடக்கத்தில் அருச்சித்துப் பாடினர் என்பதைக் காண்போம்.

மதியின் வெண்தோடு சூடும் சென்னி
நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி தவளவாள் நகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து
அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளைஎயிற்று உரகக் கச்சுடை முலைச்சி
வளையுடைக் கையில் சூலம் ஏந்தி
கரியின் உரிவை போர்த்து அணங்காகிய
வரியின் உரிவை மேகலை யாட்டி
சிலம்பும் கழலும் புலம்புஞ் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை.

(சிலம்பு. வேட்டுவ. : 54 - 64)

இதில் கொற்றவையைப் பெரும்பகுதி சிவனாகவும் மற்றொரு பகுதியைத் திருமாலுக்குரியதாகவும் புனைவது

புலனாகிறது. கொற்றவையைத் திருமாலின் தங்கையாக மட்டுமன்றி, திருமாலாகவே புனைவதும் காணப்படுகிறது. மூன்று நிலம் கலந்த இடத்தில் (குறிஞ்சி, முல்லை, பாலை) மூன்று தமிழ்க் கடவுளர் வழிபாடும் ஒன்று கலந்து வெளிப்படும் தொடக்கநிலையை, இவ்வேட்டுவ வரி மூலம் இளங்கோவடிகள் உணர்த்தியுள்ளார். இதனை நன்கு மனங்கொண்டு சிந்திக்க வேண்டும். ஐந்து நிலமென்பது, நாடகப் பின்னணித் திரைச் சீலையே என்பவர்க்காக இவை விரிவாக எழுதப்படுகின்றன.

மதிசூடல், நெற்றிக்கண், நஞ்சுண்டு கறுத்த கழுத்து, மலையை வளைத்துப் பாம்பை நாணாகப் பூட்டிய தொன்மம். பாம்பினை மார்பில் கச்சாக அணிந்தமை, சூலம் ஏந்தியமை, யானைத்தோல் போர்த்தமை, புலித்தோல் உடுத்தமை எல்லாம் கூறி, ஒரு காலில் சிலம்பும் (பெண்வடிவம்) மறுகாலில் கழலும் (ஆண் வடிவம்) அணிந்தமையும் இறுதியில் சொல்லி முடிக்கப்படுவதில் மங்கைபங்கன், உமையொருபாகன் எனும் தொன்ம வடிவமும் தொடர்ந்து விளக்கப்படுகின்றன. வடவர் அர்த்த நாரீசுவர வடிவம் என மொழிபெயர்த்துக் கொண்டமையால் இதனையும் ஏதோ அவர்களிடமிருந்து பெற்றது போல் நினைப்பவர் உண்டு. இவற்றைத் தமிழர் நிலத்தெய்வ வழிபாட்டின் கூர்தலற வளர்ச்சி - பரிணாமம் என்பதற்கு இவ்வரிப்பாடல் நிலைபெற்ற சான்றாகிறது.

மேலும், இதே பாடலில் அவர்கள் இசையுடன் பாடி ஆடுவனவற்றுள், இவை மேலும் அழுத்தமாய்க் கூறப்படுகின்றன. திங்கள் வாழ் சடையாள், திருவ மாற்கு இளையாள் என்பன காண்க. தொடர்ந்து வருவன, ஆடலுடன் கூடிய இசைப்பாடல்கள் - வரி என்பது ஒருவகைக்கூத்து, ஆடல் வகை. அவ்விசைப் பாடல்களில் இடையிடையே இத் தெய்வ வணக்கங்கள் ஒன்றாக இருந்து பிரிந்து வளர்ந்தன என்று எண்ணும்படியான கருத்துக்கள் உள்ளடங்கியுள்ளன.

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்றாயால்

வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றியே நிற்பாய்.

வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரிய திரிகோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்
அரிஅரன் பூமேலோன் அகமலர்மேல் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகியே நிற்பாய்.

சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறைஏத்தவே நிற்பாய்.

ஆங்குக்
கொன்றையும் துளவமும் குழுமத் தொடுத்த
துன்றுமலர்ப் பிணையல் தோள்மேல் இட்டாங்கு
அசுரர் வாட அமரர்க்கு ஆடிய
குமரிக் கோலத்துக் கூத்துள் படுமே.

(சிலம்பு. வேட்டுவ. 8-11)

இதில் முதலில் சிவத்தொன்மமும் அடுத்து கொற்றவைத் தொன்மமும் மூன்றாவதில் திருமால் தொன்மமும் கலந்து வருகின்றன.

முடிவில் கொன்றையும் துளவமும் கலந்து தொடுத்த மாலையைக் கொற்றவை தோள்மேலிட்டுக் கூத்து ஆடினள் என வருகிறது. இவ்வளவும் அக்குமரிக் கோலத்தவளைக் கொண்டு ஆடியவை.

தொல்காப்பியர் நிறைமொழி மாந்தர் கூறிய பல மறைமொழிகள் வழங்கின என்றும் எழுவகை (யாப்பில்) இலக்கிய வகைகளில், மந்திரம், வாய்மொழி என்ற பெயர்களுடனும் மறைகள் வழங்கின என்றும் கூறுகிறார். நம் அருளாளர்களும் மறைகள் பல எனக் கூறுமிடங்கள் உள. வடமொழி மறைகள், அம்மொழிக்குரிய ஒருவகை மட்டுமே. அவற்றில் இங்குக் கூறப்பட்ட, எத்தொன்மமும் துருவித் தடவிப் பார்த்தாலும் காணப்படவில்லை.

தொன்மைமிக்க காலத்தில் தமிழரிடையே காணப்பட்ட இத்தகைய தொன்மங்கள், ஏதோ வரலாற்று வழிப் பழங்கதைகளில் இருந்து கிளைத்தனவோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. தொல்காப்பியர் இசைத்தமிழ் நூல்கள், நரம்பின் மறை என்பதால், இத்தகைய இறைமைத் தொன்ம மறைகளும் இருந்தன என நம்பக்கூடும்.

வடமொழிப் புராணங்கள் பலவும் அவர்கள் வேள்விகள் செல்வாக்கிழந்த பின், தமிழருடன் கூடி, தமிழர் வழிபாடுகளை ஏற்று, தமிழர்களின் மறைகள், தொன்மங்களை, ஆகமங்களைத் தம் மொழியில் ஆக்கிக் கொண்டு, தமிழரிடையே செல்வாக்குடன் வருமானம் தேடி வாழ முற்பட்டதையே காட்டுவனவாகும்.

எனவே, இளங்கோவடிகள் இவ்வேட்டுவ வரிமூலம் அக்காலப் பாலை நில மக்களின் உண்மையான வாழ்வு நெறிகளை நேரிற்கண்டு பாடி, தமிழர்கள் உண்மை உணர வேண்டி இவ்வளவும் பாடியுள்ளார் என எண்ண வேண்டியுளது.

தொன்மங்களை ஒருபுறம் வைத்துவிட்டு, அடிப்படைகளை வைத்துப் பார்த்தால், தமிழர்தம் சிவ வழிபாடு, திருமால் வழிபாடு, கொற்றவை வழிபாடு மூன்றும் நிலப் பின்னணி வழிபாட்டில் வளர்ந்தவை என்பதை யாரும் மறுத்தல் இயலாது.

ஊர் நடு மன்றமும் மர வழிபாடும்

வேட்டுவ வரியில் நடுவூர் மன்றத்தில் சாலினி தெய்வமுற்று ஆடிய குறிப்பு வருகிறது (அடி 11). பழங்காலத்தில் மக்கள் மரங்களில் தெய்வமிருப்பதாக நம்பி வழிபட்டனர். ‘மன்ற மராஅத்த பேஎம் முதிர் கடவுள், கொடியோர்த் தெறூஉம் என்ப’ என்பது குறுந்தொகை. மராமரத்திலுள்ள கடவுள் கொடியவர்களைக் கொன்றுவிடும் என்ற அச்சம் பற்றிய குறிப்பு இது. இதிலும் ‘மன்ற மராஅத்த’ என்று ஊர் நடுமன்றம் குறிக்கப்படுவதைக் காண்கின்றோம்.

மரங்களை வழிபடுவது இக்காலத்தும் நிலவுகிறது. அரச மரத்தைப் புலர்காலையில் சுற்றிவந்து வழிபடும் வழக்கம்

இருந்தது. அரச மரத்தையும் வேப்ப மரத்தையும் குளக்கரை போலும் இடங்களில், அடுத்தடுத்து வைத்து வளர்த்து, அவற்றுக்கு மேள தாளத்துடன் திருமணம் செய்து வைத்தனர். அதனால் குழந்தை பிறக்கும் என நம்பினர்.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே இத்தகைய வழிபாடுகள் பல இருந்ததைத் தனி ஆய்வாக மேற்கொள்ளலாம். இங்குச் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுகிறோம்.

தன்னை எதிர்த்து வந்த புலியை, யானையைக் கொன்று, அதன் தோலைக் காயப்போட்டு உடையாக உடுத்திக் கொண்டது ஒரு காலம். அவ்விலங்குகளை அசுரர்களாகவும் அவற்றைக் கொன்றவனைத் தெய்வமாகவும் உருவகித்தமை புலனாகிறது. தழைகளைப் பறித்துத் தைத்து, இடையே பூக்களை வைத்து, அதனைத் தழையுடையாக உடுத்ததுண்டு. ஆவி அன்ன அவிர் நூற்கலிங்கம் வந்த பிறகும் முந்தைய இவ்வழக்கங்களைச் சடங்குகளின்போது பயன்படுத்தியுள்ளனர்.

அன்று ஊர் நடுவே நாற்சதுர வடிவில் மேடை அமைத்து அவற்றை மன்றம், பொதியில், அம்பலம் என அழைத்தனர். அதுவே ஊர்ப் பொதுவிடம். அதில் ஆல், அரசு போலும் மரங்களை வளர்த்து வழிபட்டுள்ளனர். அக்காலத்தில் அதுவே ஊராட்சி மன்றம், முறைகேட்டுக் குறைநீக்கும் நீதிமன்றமாம் அம்பலம். மேலும் அங்குள்ள மரமே மக்கள் வழிபடுமிடமுமாம்.

இன்றும் நம் திருக்கோயில்கள் பொன்னம்பலம், வெள்ளியம்பலம் எனப்படுவதும் பொதுவில் நடமிடும் அரசே எனப் பாடப்படுவதும், மன்றில் ஆடும் மாணிக்கமே எனப்படுவதும் எல்லாம் அதன் தொடர்ச்சியேயாகும்.

காலப்போக்கில் ஊர் நடு மன்றத்தில் மரங்கள் மழை இடி மின்னல் போன்றவற்றால் அல்லது பழைமையால் முறிந்தும் ஒடிந்தும் போவதுண்டு. சில ஊர்ப் பொதுவில் மரமே இல்லாதும் போவதுண்டு. அப்பொழுதெல்லாம், அம்மன்றத்தின் நடுவே ஒரு மரத்தறியை வைத்து வழிபட்டுள்ளனர். அந்தத் தறி அடி பெருத்தும், நுனி சிறுத்துமிருக்கும். அது அசையாமலிருக்க,

அதனடியில் சுற்றிலும் மண் நன்கு அணைத்து மேடையாக்கினர். இவ்வாறு மரத்தறியை வழிபட்டதைச் சங்கப் பாடல்கள் தொடங்கி, தேவாரக் காலம்வரை நிகழ்ந்ததாக அறிகிறோம்.

கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்கம் ஏறிப் பலர்தொழ
வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்

(பட்டினப். 246-49)

பகைவரை வென்று பிடித்துவந்த அடிமை மகளிரைக் கொண்டி மகளிர் என்பர். நீருண்ணும் துறை ஊருணிக்கரை. அங்கு நீரினுள் முழுகி, அந்திப் போதில், அணையா விளக்கை ஏற்றினர். அவர்கள் அவ்விடத்தை மெழுகினர். அப்பொதியிலில் இருந்த கந்துவின் (கடவுள்தறி) மீது பூக்களை அணிவித்தனர். அவ்வழிப் போந்த புதியவர்கள் அதாவது வழிப்போவார் பலரும், அப்பொதியிலில் சற்றே இளைப்பாறத் தங்கினர். இவ்வாறு பலரும் அப்பொதியிலில் ஏறி, கடவுளாகிய கந்தினைத் தொழுதனர்.

இதில் பொதியில் (பொது இல்), கந்து, நந்தாவிளக்கு, பலர் தொழுதல் என்பன நினைவில் வைக்கத்தக்கன. இங்கு நச்சினார்க்கினியர் கந்து - தெய்வம் உறையும் தறி என்று எழுதுகிறார். பொதியில் - அம்பலம் என்று அவரே திருமுருகாற்றுப்படை உரையில் எழுதியுள்ளார் (226).

இதற்கு உ.வே.சாமிநாதையர் எழுதிய அடிக்குறிப்பில் கந்து என்ற கடவுளுறையும் தறி பற்றி வருமிடங்கள் பலவற்றைச் சுட்டிக் காட்டுகிறார்.

கந்துடை நிலையினும் (முருகு.226); அருந்திறற் கடவுள் திருந்துபலிக் கந்தமும் (மணி. 6-60); இலகொளிக் கந்தமும் (மணி. 24-162); மரம் சேர் மாடத்து எழுது அணி கடவுள் போகலில் புல்லென்று, ஒழுகு பலி மறந்த மெழுகாப் புன்திணை (அகம் .167). (எழுது என்றால் சித்திரமாக எழுதியது என்பதைவிட, சிற்பமாக வடித்த மரத்தறி என்பது பொருந்தும். சிலம்பில்

'கடவுள் எழுத ஓர் கல் தாரான் எனின்' என்று வருமிடத்து எழுதுதல் என்பது சிற்பமாக - உருவமாக வடித்தல் என்றே பொருள்படும்); மாத்தாட்கந்தின் சுரை இவர் பொதியில் அங்குடிச்சீறூர் நாட்பலி மறந்த (அகம். 287) புதல்இவர் பொதியில் கடவுள் போகிய கருந்தாட்கந்தத்து (307); கலிகெழு கடவுள் கந்தம் கைவிட (புறம். 52).

இவற்றின் விளக்கத்தையும் சிறிது காண்போம். திருமுருகாற்றுப் படையில் முருகன் உறையும் இடங்களாகக் குறிப்பன, அன்று கடவுள் எனப்பட்ட சிவனுறையும் இடங்களையும் குறித்தன.

சதுக்கமும் சந்தியும் புதுப் பூங்கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
(முருகு. 225-226)

சதுக்கம் என்பது சதுரமான ஊர் நடுமன்றம். சிறிது உயரமாக, நான்கு பக்கமும் எழுப்பப் பட்டிருக்கும். நான்கு பக்கத்தும் தூண்கள் இருந்ததாகப் பட்டினப்பாலையில் ஒரு குறிப்புளது. கடம்பு மரம் - இருந்ததால் இது முருகனுறையும் இடமாயிற்று. இச்சதுக்கத்தில் ஆலமரம் இருந்தால், இதுவே கடவுள் - சிவன் உறையும் இடமாகும். (சங்கப்பாடல்களில் கடவுள் என்ற சொல். பொதுப்பொருளைவிட, சிவனையே குறிப்பது கருதற்பாலது).

புற்றுடைச் சுவர புதல்இவர் பொதியில்
கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து
உடனுறை பழைமையின் துறத்தல் செல்லாது
இரும்புறாப் பெடையொடு பயிரும்
பெருங்கல் வைப்பின் மலைமுதல் ஆறே. (அகம். 307)

அன்று மக்கள் வசிக்கும் இடந்தேடி, அடிக்கடி வலசை போயுள்ளனர். இவ்வாறு இடம் விட்டு இடம் மாறும்போது, இவர்கள் வணங்கியதும் ஊர் நடுவே இருந்ததுமாகிய கருந்தாட்கந்தத்தில் இருந்த கடவுளும் போய்விட்டதாம். அதாவது தொழுபவர் இருக்குமிடத்தே தான் கடவுள் இருப்பார் என்ற கருத்து மிகவும் சிந்திக்கற்பாலது.

மக்கள் போனதால் மண்டபம் போலிருந்த சுற்றுச்சுவர்களில் மண் புற்றுக்கள் தோன்றிவிட்டன. புதர்கள் மண்டிவிட்டன. அப்பெருவழியிலிருந்த பொதியிலில் மக்கள் போய்விட்டதால் கடவுளும் போய்விட்டாராம். இப்போது கருந்தாள் கந்து மட்டுமே நிற்கிறது. கருந்தாள் - அசையாதபடி அடியிலிட்ட அணைப்புடன் கூடிய கந்து (கடவுளுக்கு அடையாளம் இது) கருந்தாள் - வலிய அடிப்பாகம். அங்குப் புறாக்கள் வந்து தங்குவது வழக்கமாம். மக்கள் போய்விட்டதும், வந்து வந்து தங்கி உடனிருந்த பழக்கத்தால் புறாக்கள் வந்து தங்கள் பெட்டைகளையும் அங்கு அழைக்கின்றனவாம்.

மற்றொரு அகநானூற்றுப் பாடல் இன்னும் விரிவாக உளது.

தூங்குநிலை

மரைஏறு சொறிந்த மாத்தாட் கந்தின்
சுரைஇவர் பொதியில் அங்குடிச் சீறூர்
நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகை
புரிசை மூழ்கிய பொரிஅரை ஆலத்து
ஒருதனி நெடுவீழ் உதைத்த கோடை
துணைப்புறா இரிக்கும்... **(அகம். *287*)**

ஆண்மரைமான் உராய்ந்ததால், பருத்த வலிய அடியினையுடைய கடவுள் கந்து உள்ள, சுரைக்கொடி படர்ந்த பொதியிலாகிய அம்பலத்தின் கண்ணே, நாள்தோறும் காலையில் கொடுக்கப்படும் பலி கொடுக்கப்படவில்லை. (பலி - உணவு, கடவுளுக்குப் பூசைக்காக வைப்பது. இது தமிழர் வழக்காறு. இன்றும் கோயில்களில் ஆறுகால பூசை, மூன்று கால பூசை என உணவை எடுத்துச் சென்று இறைத் திருமுன் காட்டுவதும், பலிபீடம் என முன்பு பலியுணவு வைத்த பீடம் இன்றும் இருப்பதும் அறியத்தக்கன. இங்கு, பலி என்பது உயிர்ப்பலி அன்று). அதற்குக் காரணம் அந்த அம்குடிச் சீறூரினர் இடம் பெயர்ந்து போய்விட்டனர். இதனால் இட்டிகை எனப்படும் செங்கல்லால் ஆன பலிபீடம் வெளிறிக் கிடந்தது. அப்பொதியிலின்

பக்கத்தே மதில் போற் சூழ்ந்த அடைப்பினையுடையதும் பொரிகள் பொருந்திய அடியினையுடையதும் ஆகிய ஆலமரத்தின் தனித்த ஒரே ஒரு நீண்ட விழுதை மோதிய கோடைக்காற்று, துணையுடன் கூடியிருந்த புறாக்களை விரட்டியதாம்.

ஆலமரம் விழுதுகளுடன் உயர்ந்தோங்கி நிற்பதைச் சடைமுடியுடன் தோன்றும் சிவன் எனக் கருதினர். ஆலமர நிழலில் சிவன் உறைவதாகத் தமிழரிடம் ஒரு நம்பிக்கை இருந்தது.

இது போன்றதொரு கருத்து புறநானூற்றிலும் வருகிறது.

இனியே
கலிகெழு கடவுள் கந்தம் கைவிடப்
பலிகண் மாறிய பாழ்படு பொதியில் (*புறம். 52*)

கந்து என்னும் தறியில், மக்கள் தொழும்போது கடவுள் அதில் அமர்ந்திருப்பதாகவும், அவ்வாறு தொழுபவர் போய்விட்டால், கடவுளும் அக்கந்தினை வெறும் தறியாக விட்டுவிட்டுப் போய்விடும் என்றும் எண்ணும் கருத்து மிகவும் சிந்திக்கத் தக்கது.

மலர்தூவி, மழைவேண்டி கடவுள் பேணிய குறவர் மாக்கள் (புறம். 142), அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமைப் பெருங்கல் நாடன் (புறம். 158), குறவன் மகள், மன்ற வேங்கை மலர் சில கொண்டு, மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தி, தேம்பலிச் செய்த ஈர்நறுங்கையள் (ஐங். 259) என வருவன பலவும் கடவுள் என்று சிவ வழிபாட்டையே குறிக்கின்றன.

நல்லவும் தீயவும் அல்ல குவியிணர்ப்
புல்லிலை எருக்கம் ஆயினும், உடையவை
கடவுள் பேணேம் என்னா ....

என்று கபிலர் பாடுகிறார் (புறம் 106). புல்லிலை எருக்கம் பூவும் போதும் என்னும் கடவுள் சிவனே என்பது தெளிவு. ஏனெனில் அவன்தானே வெள்ளெருக்கம் சடைமுடியான். பிறகு வேறென்ன சான்று வேண்டும்?

இவ்வழிபாட்டின் தொடர்ச்சியைத் திருநாவுக்கரசராகிய அப்பர், கி.பி.ஏழாம் நூற்றாண்டில், மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

காதன்மையால் தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே

(திருக்கன்றாப்பூர்த் திருத்தாண்டகம்)

மரவழிபாடு தொடர்ந்து கந்து, தறி வழிபாடாக மலர்ந்தது. சிவபெருமான் தில்லை என்னும் சிதம்பரத்தில் தில்லை மரத்தின் கீழ் உறைந்தவர், திருவாலவாயாம் மதுரையில் கடம்ப மரத்தின கீழ் இருந்தவர், திருவானைக்காவில் நாவல் மரத்தின் கீழிருந்து அருளியவர், திருப்பாதிரிப்புலியூரில் பாதிரி மரத்தின் கீழ் அமர்ந்தவர், திருமயிலாப்பூரில் புன்னை மரத்தின் கீழ் உறைந்தவர், திருவொற்றியூரில் மகிழ மரத்தின் கீழ் அமர்ந்திருந்தவர் (மறைமலையடிகள் - தமிழர் மதம்). மருத மரத்தின்கீழ் இருந்தமையால் மருதீசர் என்றோ பரியா மருதர் என்றோ அழைக்கப்பட்டார். ஆலங்காட்டில் ஆலின்கீழ் இருந்தவர். காரைக்காலம்மை பாடிய ஆலங்காடு தொன்மை மிக்கதாய்த் தோன்றுகிறது.

ஆரியர் தம் மூல நூல்களாம் வேதம் முதலியவற்றில் காணாத பல அடிப்படைச் செய்திகள் ஒரு திறத்தன.

அவர்கள் தஸ்யூக்கள் - திராவிடர்கள் - தமிழர்கள் எனப் பலவாறு அழைக்கப்பட்ட இந்தியப் பழங்குடியினருடன் கலந்த பின் தோன்றிய அவர்களது நூல்கள் பிறிதொரு திறத்தன.

வரலாற்று வழி இவ்வேறுபாட்டை வைத்து ஆழமாக ஆராய்ந்தாலன்றித் தெளிவு பெறுதல் அரிது.

ஆரியர்களின் அக்கினி வழிபாடு, வேள்விச் சடங்குகள், அருவ வழிபாடு, அத்துவைதமாம் ஏகான்ம வாதம் போல்வன ஒரு சார்பின.

தமிழர்தம் மரவழிபாடு, கந்து தறி வழிபாடு, நடுகல் வழிபாடு, கோயில் வழிபாடு, உருவ வழிபாடு, முப்பொருளுண்மை மெய்யியல் ஆகியன பிறிதொரு சார்பின.

ஆலமர்செல்வன் பற்றிய கருத்து, சங்க காலம் தொடங்கி, தேவாரக் காலம்வரை காணப்படுகிறது.

தமிழர்தம் வழிபாடுகளாகிய இவை வடமொழியில், தமிழர் தொடர்பு ஏற்படுமுன் எழுந்த எந்த நூலிலும் காணப்படாதவை.

உபநிடதங்களாக 285, 108, 31, 10 எனப் பலவாறு கூறப்படுகின்றன. இவற்றுள் பத்து உபநிடதங்களே உண்மையானவை என அறிஞர் பலர் கூறியிருப்பதன் காரணம் என்ன? ஆரியர்களில் தம் வேத வேள்வி அருவ வழிபாடுகளிலே ஊறி நின்றவர்கள் உருவாக்கியவையே, அவர்களைப் பொறுத்தவரை உண்மையானவை; பிற யாவும் சமண, புத்த சமய எதிர்ப்பினை மடை மாற்றவும் தமிழருடையவற்றை உருமாற்றவும் காலந்தோறும், அவ்வப்போது எழுதிச்சேர்த்துக் கொண்டவை. முன்னைய உறுதிப்பாடுடைய, தீவிர வைதிகர்கள், பின்னர்த் தோன்றிய இவற்றைப் போலிகள் என ஏற்க மறுத்தனர். (வடுவூர் நாராயணனது நூல் காண்க).

ஆகமங்களின் கதையும் இதுதான். ஒரு செருமானியப் பேராசிரியர், ஆகமங்கள் தமிழருடையவையாக இருந்தன; அவை பல கடல்கோள்களால் அழிவுற்றன; பிற சில கறையான்களால் அழிக்கப்பட்டன. எஞ்சியிருந்தவற்றையும் ஆரியர்கள் அழித்து விட்டுச் சமஸ்கிருதத்தில் அரைகுறையாக எழுதி வைத்துக் கொண்டனர் என்று குறிப்பிடுதல் காணலாம்.

முதலில் தோன்றிய 108 வைணவ ஆகமங்கள், சைவ ஆகமங்கள் 28, பிற்பட்ட காலத்தே சக்தி பற்றி 27 ஆகமங்கள் இருந்தன என்று கூறிக்கொள்வர். சைவ ஆகமங்கள் 28-க்கு, 207 உப ஆகமங்கள் இருந்தன என்று மு. அருணாசலம் கூறுகிறார்.

வேதங்கள் கூறும் வேள்விகளின் தொடர்ச்சியான உபநிடதங்களில் இருவேறு சாரார் இருந்தனர் எனக் குறிப்பிட்டோம். தங்கள் வேள்வி தொடர்பான அருவ வழிபாடுகளில் உறுதியாக இருந்தவர்கள், வேள்விகள் குறையக் குறைய வாழ்வுதேடி ஆகம நெறிக்கு மாறிக் கொண்டவர்கள்

எனப் பிரிந்தவர்கள். எனினும் பொதுநலம் கருதும்போது சேர்ந்து கொள்வர், தந்நலம் தேடும்போது பிரிந்து செயல்படுவர். பிரிந்து வந்தவர்கள்தான், தமிழர் சமய நெறிகளைச் சமஸ்கிருத மயமாக்கித் தொலைத்தனர்.

ஆகமம் என்ற சொல்லின் முதற்பொருள் பழைமையிலிருந்து வந்தது என்பதே. ஆயினும் தமிழருடையன இயற்கையால் அழிக்கப்பட்டனவும் அயலவரால் அழிக்கப்பட்டனவுமாக, எல்லாம் மறைந்தொழிந்தன.

ஆகம நெறிகளை ஏற்பதிலும் அவர்களுள் இருசாரார் இருந்துள்ளனர். ஒருசாரார் முற்றிலும் இவற்றை வெறுத்த வேத வைதிகர்கள்; பிறிதொரு சாரார், தாம் வாழ வேண்டி ஆகமநெறிகளுக்கு மாறிக்கொண்டவர்கள். இந்தக் கட்சிமாறிகளாலேதான், தமிழ் ஆகமநெறிகள் பல அழிக்கப்பட்டுச் சமஸ்கிருத மயமாக்கப்பட்டன. இவ்வாறு தமிழ் ஆகமங்களை அழித்த முதல்நிலை ஒன்று. அடுத்தது சமஸ்கிருத மயமாக்கப்பட்டவற்றிலும் சிலவற்றை அத்தீவிர வைதிகப் பிராமணர்கள் அழித்தனராம். விருப்பு வெறுப்புக்கு ஆளாகும் நிலையினரல்லாத, ஓர் அயல் நாட்டவர், செருமானிய அறிஞர் கூறுவன இவை.

(*Unlike most works, the Agamas do not emphasis the supremacy of the Brahmins, so the Brahmins may well have opposed them ....*

- *H.W. Schomerus, Saiva siddhanta, M. B. Publishers, Delhi, 2000*) (பார்க்க. ப.*21*)

இத்தகைய குழப்பங்களிலிருந்து தமிழ்நெறி மீட்கப்பட வேண்டும்; தமிழர் சமய நெறிகளும் மீட்டுருவாக்கம் பெற்றுத் திருக்கோயில் வழிபாடுகளில், சட்டப்படியான சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்பதே எம் விழைவு.

ஆலமர்செல்வன் வழிபாட்டுத் தொடர்ச்சி

வடமொழியில் காணாது தமிழ் நூல்களில் மட்டுமே மிக விரிவாகக் காணப்படும் ஆலமர்செல்வனாம் சிவன்பற்றி, மேலும்

நுட்பமாக ஆராய வேண்டும். இது முன்பு கூறிய தமிழர்தம் மரவழிபாடு, கந்து (தறி) வழிபாடு ஆகியவற்றின் தொடர்ச்சியாகும். சங்க காலந்தொட்டு, பத்திமை இயக்க இலக்கிய காலம்வரை இதன் தொடர்ச்சி காணப்படுகிறது.

ஆலமர் கடவுள் அன்னநின் செல்வம். (*புறம். 198*)

ஆலமர் செல்வர்க்கு, அமர்ந்தனன் கொடுத்த
நீலநாகம் நல்கிய கலிங்கம். (*சிறுபாண். 96-97*)

பெரிதும் சிவபெருமானின் மகன் முருகன் என்று திரும்பத் திரும்ப வருவதிலும் ஒரு குறிப்புளது. இரண்டும் ஒற்றுமைப்பட்டு ஒரே வழிபாடானதுண்டு.

ஆல்கெழு கடவுட் புதல்வ. (*முருகு. 256*)

ஆலமர் செல்வன் அணிசார் பெருவிறல்
போல வரும்என் உயிர். (*கலி. 81: 9-10*)

தலைவி தன் மகனைப் பற்றிக் கூறுவது. பெருவிறல் - மிக்க சிறப்புடைய முருகன்.

ஆலமர் செல்வன் அணிசால் மகன் விழாக் கால்கோள்
(*கலி. 83: 14-15*)

இதுவும் தலைவி கூறியது.

ஆலமர் செல்வன் புதல்வன் (*சிலம்பு. குன்ற. 13*)

ஆலமர் செல்வன் மகன் (*மணி. 3 - 144*)

நான்மறை முதுநூல் முக்கண் செல்வன்
ஆல முற்றம் கவின்பெறத் தைஇய
பொய்கை சூழ்ந்த பொழில்மனை மகளிர் (*அகம். 181*)

ஆலமர் கடவுளின் வழிபாட்டிடத்து முற்றத்தை, மகளிர் மெழுகித் தூய்மை செய்து அழகுபடுத்தினராம். இது ஒரு பொய்கை சூழ்ந்த இடத்தின் பக்கத்தது என்பதும் கருதற்பாலது. இதில் வரும் நான்மறை முதுநூல், அவ் வாலமர்செல்வன் அருளிய தமிழ் மறையாதல் வேண்டும். பிரம்மாவின் மகன்கள் சனகாதி முனிவர் நால்வர்க்கு ஆலமர்செல்வனாம் சிவன் அருளினான் எனப் புராணங்கள் எழுதிவிட்டால் அவை தமிழ் மறைகள்

ஆகாது போய்விடா. மேலும் இக்கடவுளைத் தென்னாட்டுத் தமிழர்க்குரியவர் என்ற பொருளில் தட்சிணாமூர்த்தி எனப் புராணம் கட்டினர். அதை நம் தமிழர் தென்திசைக்கடவுள் - தென்முகக் கடவுள் என மீண்டும் தமிழாக்கி மகிழ்ந்தனர். பிறகு தேவகுரு எனப்படும் வியாழ பகவானுடன் தொடர்பு படுத்தினர். சங்கநூல்கள் சிவன் என்றதை, இவ்வாறு மாற்றி அதன் பெருமையைக் குறைத்தனர். இவை எல்லாவற்றையும் எண்ணிப் பார்ப்பதற்கு நம் தலைவர்களுக்குப் போதிய அறிவில்லை என்று கூறமுடியாது. என்ன? ஓதிவிட்டுப் போய்விட்டானா? என்று ஏமாற்றிவிட்டு ஓடியவனைக் கூறுவது ஒரு பழமொழி. நம் தலைவர்களுக்கு அருகிலிருப்பவர்கள்தான், சிறிதளவுகூடச் சிந்திக்க விடாமல் மூடி மறைத்து விடுகின்றனர்.

ஆரூரர், மறை நான்கும் கல்லால நிழற்கீழ்ப் பன்னிய எங்கள் பிரான் என்று திருப்பழமண்ணிப் படிக்கரைப் பதிகத்தில் பாடுகிறார். வடமொழி வேதங்களின் தோற்றம் பற்றிய வரலாறு முற்றிலும் வேறுபட்டது. இங்கு ஆலமர்செல்வன் - சிவன் அருளியவை வேறு. தமிழர்களுக்கும் நான்கு மறைகள் இருந்தன; ஆகமங்களை அழித்தது போல் அவற்றை ஆரியர் அழித்துவிட்டனர்.

அன்று ஆலின் நிழற்கீழ் அறம் நால்வர்க்கு
அருள் புரிந்து - *ஆரூரர். (திருக்கடவூர்)*

கோதில் மாதவர் குழுவுடன் கேட்பக்
கோல ஆல் நிழற்கீழ் அறம்பகர
வேதம் செய்தவர் எய்திய இன்பம்
யானும் கேட்டுநின் இணையடி அடைந்தேன்.
நீதி வேதியர் நிறைபுகழ் உலகில்
நிலவு தென்திரு நின்றி யூரனே - *ஆரூரர். (திருநின்றியூர்)*

இப்பாடலில் வரும் சொற்கள் ஆராயத்தக்கன. நால்வர் மட்டுமன்றி, மாதவ முனிவர்களின் குழுவினர் கேட்டனராம். நீதி வேதியர் இன்றும் உளர். புரோகித வேதியர்களைத் தவிர்த்து, இது சிவவேதியரைப் பிரிப்பதுபோல் உளது.

அருந்தவ மாமுனிவர்க்கு அருளாகியொர் ஆலதன்கீழ்
இருந்து அறமே புரிதற்கு இயல்பாகியது
என்னைகொலாம்? - *ஆரூரர். (திருநாகேச்சுரம்)*

ஆலினிற் கீழிருந்து ஆரணம் ஓதி

- *திருநாவுக்கரசர். (திருக்கடவூர்)*

திருநாவுக்கரசர் தரும் செய்தி ஒன்று இன்னும் விரிவாக இதை ஆராயத் தூண்டுகிறது.

விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்

புரித்தானைப் பதம்சந்திப் பொருளுருவாம்
புண்ணியனை (*திருக்கச்சியேகம்பம்*)

என்றும் பாடும்போது, மறைகள் பல என்பதை நிறுவுகிறார்.
மாலடைந்த நால்வர் கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல் மேவி அருமறை சொன்னதென்னே
- சம்பந்தர். (திருச்சேய்ஞலூர்)

அறங்கிளரும் நால்வேதம் ஆலின் கீழ்
இருந்தருளி - *சம்பந்தர். (திருமுதுகுன்றம்)*

ஆலின்கீழ் அருளியவை அறம் எனும் மறைகள் என்று குறிப்பிடப்படுவதும் எண்ணத்தக்கது. இது மறுக்கமுடியாச் சான்றாகி உளது.

மாணிக்கவாசகரும் இதைப் பாடுகின்றார்.

நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்துஅங்கு அறம்உரைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்துஅங்கு அறம்உரைத்தான் ஆயிடினும்
கொன்றான்காண் புரமூன்றும் கூட்டோடே சாழலோ.

(*திருவா. திருச்சாழல். 16*)

இதன் தொடர்பான அனைத்தையும் தொகுத்தல் இங்குக் கருத்தன்று. ஆலமர் செல்வன் தமிழ் வேதம் - அறம் உரைத்ததை மறைக்கவே, வியாழனுடன் இணைத்துக் கதை கட்டினர். இதனையும் வடமொழியினர் ஓர் உபநிடதம் என்றும் புராணம் என்றும் தங்கள் மொழியில் எழுதி வைத்திருப்பர். உலகிலேயே கருத்துத் திருட்டுக்குத் தயங்காத கயமைக்குணம்தான், நம்மைக் கடும் சீற்றம் கொள்ளத் தூண்டுகிறது.

பல்வேறு கருத்துக்களுக்கான வேரும் விழுதுகளும் தமிழில் உள என்று காட்டுவதற்குத்தான், நாம் சான்றுகளை அடுக்கித் தந்துள்ளோம்.

சிவனை அவமதிக்கும் இருக்குவேதம்

ஆரியர் இந்நாட்டில் புகுமுன்னரே, சிந்து நதி நாகரிகத்தில் சிவ வழிபாடு இருந்ததற்கான சான்றுகள் பலவுள என அறிஞர் பலர் நிறுவியுள்ளனர். தமிழர்கள் உருவ வழிபாட்டினர். அதனால் வேத வேள்விகளே வாழ்வாகக் கொண்ட ஆரியர்க்கு, இவ் வுருவ வழிபாட்டில் அளவற்ற வெறுப்பு இருந்தது.

பொதியில், மன்றம், அம்பலம் என்பன ஊர்நடுவே, தமிழரின் வழிபடுமிடங்களாக இருந்ததை அறிவோம். அவையே இன்றும் கோயில் பெயர்களாக வழங்குவதிலிருந்து, தமிழர் கோயிற்கலையின் வளர்ச்சி அது என்பது போதரும். அங்குக் 'கன்றாப்பூர் நடுதறி' என அப்பர் பெருமான் பாடியது போல, அதுவே கந்து, தறி என நடப்பட்டு வணங்கப்பட்டது.

இது சிந்துவெளி நாகரிக முதல் தமிழர் கண்ட உருவ வழிபாடு. அதனை மாத்தாள் கந்து, கருந்தாள் கந்து என்றது கடவுளுக்கு அடையாளமான அந்தத் தறி அல்லது கந்து அசையாமல் நிற்க, அடி அணையிட்டு, நன்கு வலிதாகக் கட்டப்பட்டு பருத்து இருந்ததைக் குறிக்கும். மாத்தாள், கருந்தாள் - வலிய பெரிய அடிப்பாகம்.

இதனை வெறுப்புடன் பார்த்த ஆரியர், அதன் தோற்றத்தை வைத்து ஆண்குறி என்று கூறி மிகுந்த வெறுப்புடன் பாடியுள்ளனர். 'தஸ்யூக்கள்' என்று அவர்கள் குறிப்பிட்ட திராவிடத் தமிழர்களைச் 'சிசுன தேவனை வழிபடுகின்றவர்கள்' என்று பாடியுள்ளனர்.

வசிட்டன் இந்திரனை நோக்கிக் கூறுகிறான்:

"இந்திரனே! அரக்கர்கள் எங்களைத் துன்புறுத்தாமல் இருப்பார்களாக. சிசுன தேவர்கள் எங்கள் வேள்வியைக் கலைக்காமலிருக்க, தலைவனான இந்திரன், விஷ ஜந்துக்களைத் தடுக்க ஊக்கமுள்ளவன் ஆவானாக" (இருக்கு. 7-21-5) சிசுனம் - ஆண்குறி. சிசுன தேவர்கள் - ஆண்குறியை வழிபடுபவர்கள், காம வெறி பிடித்தவர்கள். கிரிஃபித் இதை Lewd என்று மொழிபெயர்க்கின்றார். அதற்குக் கீழ்த்தரமான காமுகர்கள் என்றே பொருள்.

ரிடு வர்மன் இந்திரனை நோக்கிக் கூறுகிறான்: "போருக்குச் செல்லும் அவன் துன்பமற்ற வழியில் கடந்து எல்லாச் செல்வத்தையும் கைப்பற்றும் பணியிலமைகிறான். வெல்லப்படாத அவன் சிசுன தேவர்களைச் சாய்த்து, நூறு வாயில்கள் உள்ள கோட்டையை உடைத்து, அக்கோட்டையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அளவில்லாத செல்வங்களைத் திருடினான். (இருக்கு 10-99-3)

இதன் அடிக்குறிப்பு : சிசுன தேவர்கள் - வடமொழிச்சொல் அப்படியே மொழிபெயர்ப்பில் வந்துள்ளது. இதற்குக் காமவெறி பிடித்தவர்கள் என்று பொருள். ஆனால் சரியான பொருள் தெரியவில்லை. இதன் ஆங்கில ஆக்கம்: He seized the hundred gated castle's treasure by craft unchecked, and slew the lustful demons.

இதைப்போல மேலும் சில இடங்கள் உள்ளன. பிற்காலத்தார், இதை லிங்கம் என்றனர். அதற்கும் முதற்பொருள் ஆண்குறி என்பதே. பிற்பாடு அடையாளம் என்ற நிழற்பொருள் கொள்ளப்பட்டது. இலிங்கம் (Glans penis) - ஆண்குறி (திவாகர நிகண்டு); அடையாளம் (பிங்கல நிகண்டு); சிவலிங்கம் (Symbol of Siva) (தமிழ்ப் பேரகராதி)

இலிங்கபுராணம் முதல் வடமொழியாளரால், இது பலவாறு திரித்து எழுதப்பட்டு, தமிழரும் தவறுபட உணர்ந்து பல ஆயிரம் பெயர்களும் கதைகளும் புராணங்களுமாக இது வளர்ந்துவிட்டது.

கீழேயுள்ள ஆவுடையார் பெண்குறியாம், சிவ அடையாளம் ஆண்குறியாம். இவை ஒன்று சேர்வதை, இறைமையாகக் கண்டது, உலகம் வியக்கும்படியான தத்துவமாம். மிகப்பெரும் சிவநெறிச் சான்றோரும், இவ்வாறு வடவர் அருவருப்பாகக் கூறியதை, உவப்பாக ஏற்றுத் தத்துவங்கள் கண்டது, மனத்திற்குள் நீங்காத நெருடலாக உளது. எனினும் இன்று இலிங்கம் - அடையாளம் என்ற பொருளில் நிலைபெற்று விட்டது.

நாம் காண்பது கந்து, தறி, கன்றாப்பூர்க் கோயிற்கண் உள்ள நடுதறி என்ற நினைவை அகற்றாது, நம் முன்னோர் வழிபட்ட உருவ வழிபாட்டு முறையைப் போற்றுவோமாக!

இயல் - 8

வேதநெறி வீழ்ந்த வரலாறு

பிராமணர்களே தமிழர் நெறிக்கு மாறினர்

தமிழர்கள் தங்களுக்கு எனத் தனிநெறி வாழ்வை மேற்கொண்டிலர் என்றும், இன்று தமிழகம் எங்கும் வேதநெறி வாழ்வுமுறையையே பின்பற்றி வாழ்கின்றனர் என்றும் நாகசாமி கூறுகிறார்.

வேதநெறி வேறு, ஆகமநெறி வேறு. வேதநெறி வேள்வி வழிபாடு, அருவ வழிபாடு. அக்கினிக் குண்டங்களில், மக்களுக்குப் பயன்படும் அத்தனைப் பொருள்களையும் மேலுலகில் உள்ள அவர்களின் கடவுளர்க்கும் தேவர்களுக்கும் அக்கினி மூலம் அனுப்புகின்றனர். அக்கினியே அவர்களுக்குக் கண்கண்ட தெய்வம். இவ்வுலகினர்க்கும் தேவர்களுக்கும் தொடர்புபடுத்தும் தெய்வம். இங்கு வேள்வி செய்து, ஆகுதியில் பெய்யும் அவி உணவை மேலுலகத் தேவர்களுக்குக் கொண்டு செல்வது அதுவே.

ஆகம நெறி இதற்கு முரண்பட்டது. இது உருவ வழிபாடு. இவ்வுலகில் உள்ள கடவுளரை வழிபடுவது. இது பத்திமை மார்க்கம். இதனை வேதநெறியினர் ஒரு காலத்தில் வெறுத்தனர். அவர்களுக்குக் கோயில் கிடையாது. ஆகம நெறிக் கோயில்களில் நுழைய விடுவது தீது. கோயிலில் பொங்கல் செய்யும் மடைப்பள்ளியுடன் நின்று விட வேண்டும்.

ஸ்மார்த்த பிராமணர்களாம் ஆரியர்கள்தான் தங்கள் வேள்வி வழிபாட்டு வாழ்வு முறையைக் கைவிட்டனர். அது செல்வாக்கு இழந்ததால் ஆகம நெறிக்கு, வயிறு வளர்ப்பான் வேண்டியும் வருமானம் வேண்டியும் மாறிக்கொண்டனர்.

இன்று தமிழர்கள் தங்களுக்குரிய வழிபாட்டுநெறி முதலான எதையும் கைவிடாமல், தமிழ்நெறிப்படி வாழ்கின்றனர்.

பிராமணர்கள்தான் வயிறு வளர்ப்பான் வேண்டித் தங்கள் கொள்கையைக் கைவிட்டுத் தமிழர்களின் சடங்குகள் அனைத்தையும் தாங்கள் செய்து தருவதாக ஆசை காட்டி, வடமொழி மந்திரங்களை ஓதி நுழைந்து கொண்டுள்ளனர்.

இதனை மறைத்துவிட்டு, சடங்குகள் செய்து. மந்திரம் ஓதி, அரிசி, பருப்பு, காய்கறிகளையும் அள்ளிச் செல்கின்றனர், தானம் வாங்கிப் பிழைக்கின்றனர். தானம் என்னும் சொல், பிராமணனுக்குக் கொடுப்பதையே குறிக்கிறது. தானம் செய்வதே புண்ணியம் என்று நம்ப வைத்து, ஏனைய ஏழை எளிய மக்களுக்கு எதுவும் சேராது தடுத்துவிட்டனர்.

தாங்கள் புகுத்திய இச்சடங்கு முறைகளும் ஆகம நெறிக்கு என்று செய்வனவே. இவ்வாறிருக்கும் இங்கு வேத மரபு நெறி வழியே உளது என்று ஓர் அப்பட்டமான பொய்யைத் திரும்பத் திரும்ப எழுதுகிறார்.

தமிழரின் சிவநெறி, திருமால் நெறிகளில் வேத வேள்விக்கு இடமில்லை. வேதங்களை உபசாரத்திற்கு உதட்டளவில் பாராட்டுவதோடு இவ்வுறவு நின்றுவிட்டது.

தம் முன்னோர் நெறிப்படி வாழ, வேத மரபைக் காக்க விரும்பினால், நாகசாமி உடனே வேத வேள்வி நெறிக்கு மாறிக் கொள்ள வேண்டும். அதை விட்டுச் சிவப் பழமாய்த் திருநீறுபூசி ஆகம நெறியில் நுழையக் கூடாது.

வருமானம் கருதியே, கோயில்களில் நுழைந்தும், தமிழர்களின் பிறப்பு முதல் இறப்புவரையிலான சடங்குகளில் நுழைந்தும் வாழ்வு தேடும் இவர்களின் இத்தீச்செயல் ஒன்றைத்தவிர மற்றபடி தமிழர்கள் தம் மரபுப்படியே வாழ்கின்றனர். தீச்செயல் - தீ வளர்த்து ஓதும் செயல்.

வேத ஆகம வேறுபாடுகளைப் பி.டி.சீனிவாச ஐயங்கார் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார்.

நன்றி கொன்ற நாகசாமிகளுக்கு முதற்கண் வரலாறு தெரிய வேண்டும். கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் 600வரை களப்பிரரும் கி.பி. 350 முதல் 900 வரை பல்லவரும் கி.பி.15ஆம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற்றாண்டு வரை நாயக்கர்களும் ஆண்ட காலங்களில் ஏற்பட்ட பிறமொழியாளர்களின் வல்லாண்மைகளும் தாக்குரவுகளும் தெளிவுபெற முழுமையாக அறியப்பட வேண்டும்.

நாடு முழுவதும் புத்தமதம் பரவிய போதும், அதற்கும் முன்னதாகச் சமணம் பரவியபோதும் வேத வேள்வி வைதிகப் பிராமணியம் அவற்றை அடியொண்ட விரட்டியடிக்கச் செய்த தந்திரத் திறன்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

சமணப் பண்பாட்டுச் சமயப் படையெடுப்பால் அத்துவைதப் பிராமணியம் நிலை குலைந்து அழிய இருந்தபொழுது, தமிழரின் பத்தி இயக்கத்துடன் தஞ்சம் புகுந்து 'கொள்கையில்லாக் கூட்டணி' வைத்துக் கொண்ட வரலாறு முழுமையாய் அறியப்படவேண்டும்.

சமணம், பௌத்தமாகிய அச்சமயங்களைத் தமிழருடன் இணைந்து, வேரறுத்தபின் அதே வைதிகச் சமயம் தமிழரின் பத்தி உணர்வுகளையே கருவியாக்கிக் கொண்டு, சிவனியமும் மாலியமும் கொற்றவையியமும் தங்களிடமிருந்தே தோன்றியனபோல் காட்டி, அத்தமிழர் சமயங்களை, வடமொழிப் புறச்சாயம் பூசி மயங்க வைத்த வரலாறும் ஆராயப்பட வேண்டும்.

வடமொழி உபநிடதங்களும் விரிவுரை விளக்கங்களும் முற்றிலும் அத்துவைதக் கோட்பாட்டு வேரும் விழுதும் உடையன. அத்துவைதத்தினுள்ளிருந்து முப்பொருளுண்மை எங்ஙனம் வெளிப்படும்? இடைக்கால நுழைவுகளால், எல்லாம் எங்களிடமிருந்து வந்தன எனக் காட்ட முயன்ற வரலாற்றை, கூர்த்த மதியால் ஆராய்ந்து உண்மை காண வேண்டாமா?

இந்துமதம் என்ற ஒரு பெயரை உருவாக்கி, அதனுள் உலகிற்குத் தமிழர்கள் வழங்கிய கொடையாகிய சிவனிய மெய்ம்மைகளையும் திருமாலியத்தையும் உள்வாங்கிக் கொண்டு,

வடமொழிப் பெயர், கலைச்சொல், விளக்கம் என மேற்பூச்சுப் பூசி அச்சமயங்களின் பெயர்கள் தாமும் உலகிடை விளங்காமற் செய்தமையைக் கூர்த்தமதியுடையார் கண்டுகொள்ள வேண்டாமா? நீங்கள் எந்தச் சமயம் என வினவினால், ஒரு சிவநெறிச் செல்வர் இந்துமதம் என்றே கூறுகிறார். இவ்வாறு சிவனியமும் மாலியமும் (சைவமும் வைணவமும்) பெயர்கள் கூட விளங்காமற் போயினவே எனப் பேரறிஞர் கா.சு.பிள்ளை வருந்திப் பேசியது நூலாக வந்துள்ளதே!

சிவனியத்தின் அடிப்படை மெய்ம்மைகள் மூன்று: முப்பொருளுண்மை, வினைக்கோட்பாடு, பத்திநெறி. வேத வேள்வி வைதிகம் சார்ந்த அத்துவைதப் பிராமணியத்திற்கும் இவற்றுக்கும் எங்ஙனம் தொடர்புண்டாயிற்று? அக்கினி வழிபாடு வேறு அருச்சனை வழிபாடு வேறு என்ற தெளிவு வேண்டாமா? தமிழ் மறைகள் வேதங்களையும் வேள்விகளையும் உதட்டளவில் போற்றிப் பாடவேண்டிய கட்டாயம் ஏன், எப்பொழுது, யாரால் எதற்காக உருவானது? வேதம் வேதம் எனப் பாடிய அருளாளர்கள் ஓரிடத்திலேனும் வேதங்களின் உட்பொருளை விரிவாக, விளக்கமாகப் பாடியுள்ளார்களா? தமிழர்களின் தனிப்பெரும் வழிபாடுகளாகிய சிவனியம், திருமாலியம், கொற்றவையியம் (சக்தி, காளி) மூன்றும் பல நிலைகளில் ஒன்றிணைந்தவை. முருகனியம் மற்றும் நிலத் தெய்வ வழிபாடுகள் ஆகியன பற்றியும் தமிழர்க்கேயுரிய சமயநெறி யாதென்பது பற்றியும் இவை அனைத்தின் வேர்கள் எங்குத் தொடங்கின, எவ்வாறு தம் விழுதுகளைப் பரப்பின என்பதுபற்றியும் ஆராயவேண்டும். இனிவருங் காலத்திலேனும் வடமொழியாளர் செய்து வைத்த மேற்பூச்சைக் களைந்து, புதுவண்ணந்தீட்டி, மறுமலர்ச்சி கண்டு அவற்றைத் தமிழராவார் அனைவரும் உணர்ந்து போற்றுமாறு செய்வது எவ்வாறு என்பது பற்றியும் அறிவுடையோர் சிந்திக்க வேண்டும்.

பி.டி.சீனிவாச ஐயங்கார், தமிழர் வரலாறு பற்றிய தமது ஆங்கில நூலில் பல உண்மைகளைத் தருகிறார்.

வேதமும் ஆகமமும் பற்றி இவர் என்ன கூறுகிறார் என்பது சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப்படுகிறது. இவரது தமிழர்

வரலாற்று நூலில் எட்டாம் இயல், ஆகமங்களின் தோற்றம் (*The Rise of Agamas*) என்பது. அதன் உள்தலைப்பு ஆகமங்களும் அவற்றுக்கு எதிரான வேதங்களும் என்பது (*The Agamas Vs the Vedas*). இயல் தலைப்பே உண்மையை உணர்த்தவில்லையா?

ஆகமமும் அதற்கு நேர் எதிரான வேதமும்

சீனிவாச ஐயங்கார் கருத்துக்கோவை (இவை அனைத்தும் அவருடைய கருத்துக்கள். அடைப்புக்குள் உள்ளவை மட்டும் எம் கருத்து):

இன்று இந்து சமயத்தவர் பின்பற்றுவதனைத்தும் ஆகமங்களின் அடிப்படையினவே, அவை வேதத்துடன் சிறிதளவு தொடர்பும் உடையனவல்ல. (நாகசாமியின் கருத்துக்கு மாறாக). இன்று வேத மரபு நெறி வலுவிழந்து தமிழர் நெறியே ஓங்கி நிற்கிறது.

மகாபாரதப் போருக்குப் பிறகு வைதீகக் கோட்பாடு சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது (*began to decay*). இன்று முற்றிலும் மறைந்துவிட்டது. வாஜபேயம், கருடசாயனம், சோமயாகம் போலச் சில சிறுசிறு வேள்விகள் அங்கும் இங்குமாய் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களால் நடத்தப்படுகின்றன. குடும்பச் சடங்குகளில் ஓதும் நிலைமைகூட மிக விரைந்து மறைந்து வருகிறது. பிராமணக் குடும்பத்தவர் மூன்று தலைமுறைக்கு, புனித அக்கினி வழிபாட்டைப் புறக்கணித்திருப்பரேல், அவர்கள் பிராமணர் என்ற தகுதியை இழந்து விடுவர் என்பது விதிமுறை. மிகமிகச் சில குடும்பங்கள், உண்மையான பிராமணக்குடிகள் எனப்படுதல் கூடும். இந்தியா சமயத்தில் ஆழ்ந்தது. எனினும் இச்சமயநெறிகளின் ஆழமான அடிப்படைகள் ஆகம வழிப்பட்டனவே தவிர வேத வழிப்பட்டனவல்ல.

ஆகமம் - பெரியோர் அருள்வாக்கு. பிறிதொரு பொருள்: உருவாக்கப் பட்டது (*Evolved*). நேர்ச் சொற்பொருள் என்றால் கடந்த காலத்திலிருந்து வந்தது. இதனால் வேதத்தையும் சிலபோது ஆகமம் எனக் குறித்ததுண்டு. ஆயினும் நடைமுறைப்படி

கொண்டால் ஆகமம் என்பது தந்திர நூல்கள் (தந்திரம் - வழிகாட்டும் நூல்களைக் குறிக்கும்.) அதாவது சிவன், விஷ்ணு, சக்தி என்ற மூன்று கடவுளரின் வழிபாட்டு நெறிமுறைகளைக் கூறும் நூல்கள் என்பதே பொருள். (சிவனியம், மாலியம், கொற்றவையியம் மூன்றும் தமிழர்களின் தொன்றுதொட்ட வழிபாடுகள் என்பதும் அவற்றின் வேர்களும் வளர்ச்சியும் இங்குள்ளனவே தவிர வடமொழி வேத, உபநிடதங்களில் இல்லை. இவ்வகையில் ஆகமக் கோட்பாடுகள் வேதங்களுக்கு நேர் எதிரானவை. *In this sense, the Agama cults are opposed to the Vedas* (பக்கம் **103** முதல் **115** வரை. இவ்விளக்கம் அவரது தமிழர் வரலாற்று ஆங்கில நூலில் தொடர்கிறது.)

பௌத்தர்கள், சமணர்களின் புனித நூல்களும் கூட ஆகமங்கள் என அழைக்கப்படுகின்றன. ஏனெனில் அவையும் கூட கடந்த காலத்திலிருந்து உருவாகி வந்தவை என்ற பொருளுடையன. இவ் ஆகமங்கள் அனைத்தும் கர்ம காண்டம் எனப்படும் வேதங்களைத் தம் தொடக்கம் முதற்கொண்டே மறுப்பன. (அதாவது, வேள்விகளையும், அவற்றில் ஓதப்படும் மந்திரங்களையும், நூற்றுக்கணக்கான பரிகாரங்களால் ஒருவர் செய்த அனைத்துப் பாவச் செயல்களிலிருந்தும் தப்பிப்பதற்கான நெறிமுறைகளையும் வேதங்கள் கூறுகின்றன. வீட்டுச் சடங்குகளிலும் வேத வேள்விகளிலும் பிறர்மீது பில்லிசூனியம் முதலியவற்றை ஏவிவிட்டு, தம்மைக் காத்துக்கொள்ளும்படியான வழிகளையும் கூறுவதால், இவற்றை அவ் வாகமங்கள் அடியொண்ட மறுத்தன.)

வேத சம்ஹிதைகளான உள்பொருள் அனைத்தும் மந்திரங்களே. அவை வைதிகச் சடங்குகளில் ஓதப்படுவன. (வேள்விகளும், சடங்குகளும்). ஆனால் ஆகமங்கள் என்பன இறை வழிபாட்டு நெறிமுறைகளைக் கூறும் வழிகாட்டி நூல்களாகும். (*Agamas are text-books.*) சிவன் அல்லது திருமால் திருவுருவ வழிபாட்டு நெறிமுறைகளின் விளக்கம் அடங்கியவை அவை; (இவை இரண்டும் தமிழர் வழிபாட்டு வேருடைய கடவுளர்கள் என்பதை மனங்கொளல் வேண்டும்.) யோகப்பயிற்சிகளும் தத்துவ விசாரணைகளும் அடங்கியவை.

இனி, சடங்குகள்(*Rites*) என்பது பற்றிச் சிந்தித்தால், வைதிகத்தவை, அக்கினி வழிச்சடங்குகள்(*Fire rites*) ஆகும். ஒவ்வொரு சடங்கிற்கும் ஓர் அக்கினியானது பற்றவைக்கப்படும். அது கூவி எரியும் சுடராக மேலெழும்போது அதில் ஆகுதிகள் (*Oblations*) போடப்படும். ஆகமச் சடங்குகள், அக்கினியற்றவை. வழிபடும் இறை உருவின்முன், படையல் பொருள்கள் பரப்பி வைக்கப்படும். (*Oblation*) பிறகு அவை எடுத்துக் கொள்ளப்படும்.

முன்னைய அக்கினிச்சடங்கில் அவியுணவு நெருப்பில் வீசப்படுவதால் தெய்வங்களால் பருகப்படுகிறது. பின்னதில் வழிபடுபவர் தாம் படைக்கும் பொருள்கள் எதையும் இழப்பதில்லை. ஏனென்றால் கடவுள் அவற்றிலுள்ள கட்புலனாகாத நுண்ணிய பகுதிகளை மட்டும் எடுத்துக்கொள்வதாக நம்புவதால், இழப்பதெதுவும் இல்லை. ஆதலால் வழிபடுபவர் அவ் விறைவனது கொடையாக எண்ணி, அப்படையற் பொருள்களைத் தாமும் உண்டு, மற்ற உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தந்து மகிழ்கின்றார்.

வைதிகச் சடங்குகளில் பல்வேறு தொழிலியற்றும் பல தெய்வங்கள் அழைக்கப்படுகின்றனர். ஆகமச் சடங்குகளில் அனைத்துத் தொழிலையும் இயற்றும் ஒரே ஒரு பரம்பொருள் மட்டும் வணங்கப்படுகின்றார்.

வேதச்சடங்குகளில் ஒவ்வொரு ஆகுதி பெய்யும்போதும் ஒரு மந்திரம் ஒலிக்கப்படும், (இவை பல மந்திரங்கள். இவை பற்றி ஆங்கில மூலநூலில் பார்க்கலாம்.) ஆகமச் சடங்குகளில் வேத மந்திரங்கள் எவ்விதத்திலும் இடம் பெறுவதில்லை. சில மந்திரங்களை இங்குமங்கும் பொருத்தமின்றிப் பயன்படுத்து கின்றனர். தூ (*dhu*) எனும் அசையுடன் தொடங்கும் மந்திரத்தை, தூபம் காட்டும்போது பயன்படுத்துவது தவறு, அது வேறு பொருளுடையது.

ஆகம வழிபாட்டில் இறைவனின் எண்ணற்ற பெயர்களைக் கூறி நமஹ என முடிப்பார் (போற்றி, வணக்கம் என்பது அது.) (வேறு ஓர் இடத்தில் வைதிகச் சடங்கில் ஒவ்வொரு மந்திர

முடிவிலும் பெரும்பாலும் சுவாஹா என்றே முடிப்பார். ஆகம வழிபாட்டிற் கலக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட பிறகே 'நமஹ' என ஓதும் பழக்கம் அவர்களுக்கு வந்ததென்பர்.)

வைதிக வழிபாட்டில் அக்கினியில், அவியுணவுகளைப் போடுவதே அடிப்படையாகும். ஆகமத்தில் ஒரு விருந்தினர்க்கோ அல்லது அரசனுக்கோ, உபசாரம் செய்யும் முறையில் இறைவர்க்கு அனைத்தையும் செய்வதே வழிபாடு. நீராட்டித் தூய்மைப்படுத்தல், அலங்கரித்தல், உணவு படைத்தல் என்றாற் போல்வன அவை.

வைதிகத்தில் தெய்வ உரு என்று எதுவும் முன்னே இல்லை. கட்புலனாகும் நெருப்பே, எல்லாக் கடவுளர்க்கும் உரிய அடையாளமாகும். ஆகமத்தில் கட்புலனாகும் ஏதாவது ஓர் உருவம், அடையாளம் கடவுளர்க்குப் பதிலியாக வைத்து வணங்கப் பெறும். அதாவது தாம் தாம் வணங்கும் கடவுளர்க்கு அடையாளமாக ஒரு கருவி (வாள் அல்லது வேல்) உயிருள்ள மரம் அல்லது மரத்தறி, ஒரு கல், ஓடும் ஆறு, ஒரு இலிங்கம், ஒரு சாலிகிராமக்கல் இவற்றுக்கும் அப்பால் கல்லாலோ, உலோகத்தாலோ அமைக்கப்பட்ட அவரவர் விரும்பும் இறை ஓவியம் அல்லது கற்சிலை என ஏதாவது ஓர் அடையாளத்தை - உருவை - முன் வைத்தே வணங்குவர். (அதாவது வேத வேள்வி - அக்கினி வழிபாடு, அருவ வழிபாடு; தமிழரது ஆகம வழிபாடு உருவ வழிபாடு. இரண்டும் எவ்வாறு ஒன்றாகும்?)

விட்டுணுவையும் சிவனையும் எவர் வேண்டுமானாலும், ஒரு சண்டாளன் கூட ஓர் உருவத்தை அல்லது படிமத்தை வைத்துப் பூசை செய்யலாம். சிவனடியார்கள் பற்றிய பழங்கதைகள் (*Legends*), தாழ்ந்த சாதிப் பக்தர்கள் கோயில்களில் சிவனை வழிபட்டமை பற்றிக் கூறுகின்றன. திருக்காளத்திக் கோயிலில் கண்ணப்ப நாயனார் சிவனுக்கு இறைச்சியுணவு படைத்துள்ளார். கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில், வைணவப் பாசுரங்கள் பாடிய ஆழ்வார்களில் ஒருவர் பாணன் ஆவார். அவர் கீழ்ச் சாதியினர். திருவரங்கம் கோயிலைச் சுற்றியுள்ள புனித மண்ணில் அவர்தம் பாதங்கள் படுதற்குத் தகுதியுடையன அல்ல. ஆனால் ஆகமங்கள்

நால்வகைச் சாதியை ஏற்கவில்லை. வேதத்தின் ஒரு பகுதி எனப்படும் வேதாந்தம், சூத்திரர்களுக்கு முற்றிலும் மறைக்கப்படுகிறது. பாதராயணர் இக்கருத்தை விளக்கும் தனிப்பகுதி ஒன்றுளது. சூத்திரர்களை எவ்வகையிலும் புனிதப்படுத்தி, மேலே வரக்கூடிய சடங்குகளுக்கு உரியவர்கள் ஆக்க முடியாது. (சூத்திரரை - பரமாசாரியர்கள் உட்பட - ஞானஸ்னானம் செய்து உயர் வகுப்பார் ஆக்க முடியாது.) அதனால் அவர்கள் வேதங்களைப் படிக்கவும் கேட்கவும் கூடாதென்று தடைசெய்யப்பட்டுள்ளனர்.

அதற்கு மாறாக ஆகமங்கள் அனைத்து மாந்தர்களுக்கும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. எந்த அளவு என்றால், இன்றும் ஒரு பறையன், சிவதீக்கை பெற்றிருந்தால், ஒரு பிராமணனுக்கு அவன் சிவதீக்கை செய்து வைக்க முடியும். இதன் மூலம் ஒரு பறையன் பிராமணனுக்குக் குருவாக முடியும்.

பி.டி.சீனிவாசர், வைதீகர்களுக்கும் ஆகமவாதிகளுக்கும் முற்காலத்தில் கடும்போட்டி நிலவியதை விளக்குகின்றார். கடவுளர்களின் பெயரால் யக்ஞங்களில் இரத்தம் சிந்தும் உயிர்ப்பலி கொடுப்பதையும் மாட்டிறைச்சி தின்பதையும் ஆகமர்கள் வெறுத்தனர். இதனால் வைதிகர்கள் உயிருள்ள ஆடுமாடுகளுக்குப் பதிலாக, மாவால் அவைபோலச் செய்த பிடபசுக்களையும் அக்கினியில் போட்டு யாகம் செய்தனராம். இவ்வாறு வைதிகர்கள், ஆகமங்களின் நல்வழியையும் ஏற்று, வேள்வி செய்து ஓரளவு இணையலாயினர்.

வைதிகர்கள் ஆகாமியர்களை மிகக் கடுமையாக வெறுத்தனர். இது வேத மந்திரங்களில் ஆரியர்கள் தஸ்யூக்களைப் பகைத்த காலத்தின் தொடர்ச்சியாகும். யமுனாச்சாரியர் காலத்திலிருந்து, வைதிக, ஆகம நெறிகள் இணைக்கப்பட்டன வெனினும், இன்றளவும் இவ்வெறுப்புணர்வு காணப்படுகிறது.

சைவ, வைணவத்தைச் சார்ந்த கோயில் குருக்கள்மாரை, கடுமை மிக்க வைதிகர்கள், கீழ்ச்சாதி பிராமணர்கள் என்றே கருதினர். உண்மையில் எனக்குத் தெரிந்த அளவில்,

ஐம்பதாண்டுகளுக்கு முன்புவரை அத்துவைதக் கோட்பாட்டைப் பின்பற்றிய பிராமணர்கள், கோயில்களுக்குள் நுழைவதே இல்லை. வேதத்தின் உச்சியான வேதாந்தம் ஆகம நெறியை மிகக் கடுமையாக மறுத்து வெறுக்கவே செய்தது. பாதராயணர் பாசுபதத்தையும் பாஞ்சராத்திரத்தையும் மறுதலித்தார். இதற்கு எதிராகச் சிவநெறியினர் அத்துவைதப் பிராமணர்களைக் கோயில் கொடிமரத்திற்கு அப்பால் நுழையக் கூடாதென்றனர். அவர்களில் வருமானம் கருதி வந்தவர்களையும், கோயில் மடைப்பள்ளிகளில் மட்டுமே பயன்படுத்திக் கொண்டனர். சேக்கிழார் காலத்தில் முப்போதும் திருமேனி தீண்டுவார் எனப்பட்ட சிவாச்சாரியார்கள், பட்டாச்சாரியார்களைச் சிவனியரும் மாலியரும் பெருமைப் படுத்தினர். குருக்களாகிய இவர்கள் தமிழர்களே. பல்லவர் தம் வல்லாண்மைக் காலத்தில், இவர்கள் வடமொழி கற்று, தாமே இறைவழிபாட்டு உரிமையைத் தக்க வைத்துக்கொண்டனர். இவர்களுக்கும் ஏனைய பிராமணர்களுக்கும் கொள்வினை கொடுப்பினை திருமண உறவு கிடையாது. அண்மையில் திருநெல்வேலியிலும் பழனியிலும் அத்துவைதியாகிய காஞ்சி சங்கராச்சாரியாரைக் கோயில்களில் நுழையக்கூடாது என்று பேரெதிர்ப்பும் ஆர்ப்பாட்டமும் நடந்தன. அவரோ காவலர் உதவியுடன் கோயில்களுக்குள் நுழைந்தார். இவை வாழ்வும் செல்வாக்கும் வருமானமும் கருதித் தங்கள் கொள்கையை விட்டுவிட்டுக் குழறுபடி செய்வதாகும் என்பது வெள்ளிடைமலை.

அக்கினிச் சடங்குகள் குறையத் தொடங்கவே, பிராமணக் குருமார்கள் (*Brahmana Priests*) தங்கள் தொழில் கைவிட்டுப் போனதால், முன்பே நாட்டிலிருந்த அக்கினியற்ற சடங்குகளைத் தாமும் பின்பற்றத் தொடங்கினர். பெரும்பான்மையான மக்கள் மிகுந்த உணர்ச்சி வயப்படும் பத்தி வசப்படுபவர்களாக இருந்தார்கள்; மிகுந்த அறிவார்ந்த தன்மையுள்ளவர்களுக்குக் கட்புலனாகாத வழிபாடுகளில் மனம் தோயவில்லை. இவற்றால் பிராமணர்கள் பத்தி நெறிக்கு மாறிக் கொண்டார்கள்.*

---

* *P.T.Srinivasa Iyengar, History of the Tamils, Asian Educational Services, New Delhi - 110 016.* தமிழர் வரலாறு (கி.பி.600வரை), தமிழாக்கம் பி.இராமநாதன், தமிழ்மண் பதிப்பகம், சென்னை - 600 017.

சிவன், திருமால், பிரமன் என்ற முப்பெரும் கடவுளர்கள், கடவுள் அவதாரங்கள், அவ்வப்போது மனித வடிவில் வருபவர்கள் என்பன போன்ற பல கற்பனைகளை உருவாக்கி மக்களை ஈர்க்க முயன்றனர். அதாவது தம் வாழ்வு தேடி, பிராமணர்கள் அக்கினி வழிபாட்டைக் கைவிட்டு, பத்தி நெறிக்கு மாறினர் என்பதே சீனிவாசர் கருத்து. ஆனால் இன்று நாள்தோறும் பல ஆயிரம் கணபதி ஹோமம், ஆயுசுஹோமம், சுதர்சன ஹோமம் என நாடெங்கும் பரப்பி, அக்கினிச் சடங்குகளைப் பல மடங்கு உயிர்ப்பித்து, செல்வர்களை ஈடுபடுத்தி, பத்தி மார்க்கத்துடன் குழப்பி, தமக்கே உரியமுறையில் பெருவாழ்வு தேடிக் கொண்டுள்ளனர். இது சீனிவாசர் காலத்தில் குறைந்திருந்து, இன்று தீ பரவுவது போல், பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துவிட்டது. தமிழர்கள் இவற்றால் தம் தோஷங்கள் அனைத்தையும், பணத்தைக் கொட்டிக்கொடுத்துத் தீர்த்துக்கொள்ள ஒருவரை ஒருவர் முந்துகின்றனர். ஒரு குழந்தையைக் கொன்றுவிட்டுக் குடமுழுக்குச் செய்தால், குழந்தையைக் கொன்ற பாவம் தீராது. இரண்டு செயல்களுக்குமான பாவ புண்ணியங்கள் அவனால் நுகரப் பட்டே தீரும் என்று ஒரு சிவனியச் செல்வர் எழுதியுள்ளார். அவனோ ஆயிரம் கொலை, கொள்ளை, கருப்புப்பணம், ஊழல் என்று நாளொரு பாவமும் பொழுதொரு தீங்கும் செய்துவிட்டு, பிராமணர்களைக் கொண்டு ஹோமம், வேள்வி, சடங்குகள் செய்து தப்பிக்கலாம் என்று எண்ணத் தொடங்கி விட்டான். கடவுளர்க்குப் பத்தியினால் செய்வது வேறு. பாவம் நீங்கச் செய்வது வேறு. பின்னதே இன்று பெருகிவிட்டதால், அதைக் குறிப்பிட வேண்டியுள்ளது. இவற்றை எல்லாம் யாரிடம் சொல்வது? சிவனிய வினைக்கோட்பாடு எங்கே போனது?

இவ்வாறு பிராமணர்கள் தங்களுக்கு வேள்விகளாலான வருமானம் கைவிட்டுப் போன காலத்தில், பத்தி மார்க்கத்துக்கு மாறிக்கொண்டு, பத்தியில் மூழ்கியுள்ள மக்களை, தம் வசப்படுத்தித் தாம் வாழ்வதற்கு வருமானம் தேட வழி வகுத்துக் கொண்டமை புலனாகிறது.

எனினும் எல்லாச் சடங்குகளையும் தாமே செய்வதற்கு இயலும் என்று கூறிக்கொண்டு, தங்கள் வேத வைதிக வேள்விச் சடங்குகளையும் ஹோமம் என உருமாற்றி வைத்துக் கொண்டு. மக்களின் பத்திக்குரிய கோயில்களுக்குள்ளும் நுழைந்து கொண்டு, இருபிறப்பாளர்கள் என்பதற்கு ஒப்ப, பாம்புக்குத் தலையையும், மீனுக்கு வாலையும் காட்டிக்கொண்டு வாழ்வு தேடிக் கொள்கின்றனர் என்பதும் தெளிவாகிறது.

இவர்கள், ஆகமப்படி இறைவழிபாட்டிற்கு வடமொழியே ஏற்றது, தமிழில் செய்தால் தோஷம் எனக் கதைப்பதால் இவ்வளவும் எடுத்துக்காட்ட வேண்டியதானது. நமக்கு யாரோடும் பகைமை இல்லை. நடுநிலை சார்ந்த பார்ப்பன அந்தணர்களை நாம் போற்றுகிறோம். தமிழ்வளர்ச்சியில் அறிந்தோ, அறியாமலோ அவர்கள் பங்கு மகத்தானது. அந்த வழியில் ஒற்றுமைப்படவும், தமிழை அவர்கள் இழிவுபடுத்தும்போது தடுத்து நீக்கவும் மானமுள்ள தமிழராவார் அனைவரும் எண்ணுகின்றனர்.

இயல் - 9

வேதியர் சிலரின் வெளிவேடம்

சேக்கிழார் திருவுள்ளம்
சண்டீசர் வரலாறு
(சண்டேசுர நாயனார் புராணம்)

சேக்கிழார் அழுத்தமான தமிழ்ப் பற்றாளர். அவர் கால நிலை வரலாற்றில் வேத நெறி பற்றியும் எழுத நேர்ந்தது. ஆயினும் குறிப்பாகவும் அழுத்தமாகவும் தம் தமிழ்ப் பற்றை வெளிப்படுத்துகிறார். நூண்மாண் நுழைபுலமுடையார் இதைக் கண்டு கொள்ளுதல் வேண்டும்.

புராணங்கள் மூவகைப்படும். உண்மை ஒன்று மக்களிடையே வழங்கி வழங்கிக் காலந்தோறும் கால் கை முளைத்துப் பழங்கதைகளாகித் தொன்மங்களாகும். (தொன்மம் - புராணம்.) இறையனார் அகப்பொருளில் காணப்படும் முச்சங்க வரலாறு இது போன்றதே. உண்மை ஒன்றின் வளர்ச்சி அது.

இரண்டு, பொய்யாக, புனைவாக, சில உட்கருத்துக்களுடன் ஒருசில அடிப்படைகளிலிருந்து புராணிகர்களால் கட்டப்படுபவை. வடமொழிப் புராண வகைகள் இதில் சேரும்.

மூன்று, இலக்கிய வடிவம் பெறும் தொன்மங்கள். இவை படைப்பவனின் திறமையை வெளிப்படுத்தும். அவன் தான் சொல்ல வந்ததைக் குறிப்பால் உணர்த்துவான். இத்தொன்மங்கள் இலக்கிய ஆய்வில் முக்கிய இடம்பெறும்.

மேனாட்டார் இலக்கியமாவதற்குரிய அடிப்படை இலக்கியக் கொள்கைகள் மூன்று என்பர். இவை உலகளாவிய இலக்கியம் அனைத்திற்கும் பொருந்துபவை. அவை உருக்காட்சி, படிமம், தொன்மம். (*Imagery, Symbolism, Mythology*) என்பன.

தொன்மம் நேர் உண்மையன்று; மறைமுக உண்மை (Indirect truth) என்பார் ரெனே வெல்லக்கு. வடமொழி மரபைத் தமிழர் தவிர்த்தனர்.

சண்டேசுர நாயனார் வரலாறு, உண்மை அடிப்படையில், காலச் சூழலுக்கேற்பத் தொன்ம வடிவாக்கப்பட்டுள்ளது.

கருதுகோளும் கண்கண்ட உண்மையும்

சமண புத்த தாக்குதல்களுக்கு அஞ்சியும் பிற (சூத்திர) அயல் சாதிகளனைத்திடமிருந்து பிரிந்தும் தனித்தீவுகள் போலத் தமது மேன்மையைக் காத்துக் கொள்ளலாம் என்ற கருத்தாலும் வைதிகப் பிராமணர்கள் தனித்தனிக் கூட்டமாக, வெவ்வேறு ஊர்களில், கூடி வாழ்ந்துள்ளனர். மேலும் இது வெளியே சிவவேதியர்போல் தமிழரிடையே காட்டிக் கொள்ளவும், உள்ளே வேதம் ஓதுதல் முதல் வேள்வி செய்வதுவரை கைவிடாதிருக்கவும் உதவியானது.

அவ்வாறு அவர்கள் வாழ்ந்த ஊர்களில் ஒன்று சோழ நாட்டில், மண்ணியாற்றுத் தென்கரையிலிருந்த சேய்ஞலூர். அவ்வூர், சோழமன்னர்கள் திருமுடி சூட்டிக்கொள்ளும் ஊர்களில் ஒன்று என்பது, அவர்கள் மன்னர்களின் ஆதரவு பெற்று வாழ்ந்ததைக் காட்டுகிறது.

சேய்ஞலூரில் காசிப கோத்திரக் குடியில், மணியையும் தந்து நஞ்சினையும் அளிக்கும் நாகப்பாம்பு போல, நல்லதும் தீயதுமான இரண்டுக்கும் ஒருவராக எச்சதத்தன் என்பவர் இருந்தார்.

விசார சருமனை ஈன்றது அவரது நற்செயல்; சிவ வழிபாட்டைக் குலைத்தது தீச்செயல். அவருக்கு மறையின் துறை விளங்கவும் மன்றில் நடம் செய்பவர்தம் சைவ வாய்மை வளரவும் விசார சருமன் என்ற மகன் பிறந்தார். அம்மகனார் மறை பயின்றாராயினும் சிவனார் அருளிய ஆகமங்கள், முந்தை அறிவின் தொடர்ச்சியினால் வாய்க்கப் பெற்றார். அச்சிறிய பெருந்தகையார், அலகில் கலையின் பொருட்கு எல்லை சிவனாரின் ஆடுங்கழலே எனச் சிந்தனையில் தெளிந்தார்.

சேய்ஞலூர் வேதியரிடையே, விசார சருமனார்க்குச் சிவபெருமானிடம், பிறவித் தொடர்பால் வந்த பேரன்பு உளதானது.

நடமே புரியும் சேவடியார் நம்மையுடையார் எனும் மெய்ம்மை
உடனே தோன்றும் உணர்வின்கண் ஒழியாது ஊறும் வழியன்பின்
கடனே இயல்பாய் முயற்றிவரும் காதல் மேன்மேல் எழுங்கருத்தின்
திடம்நேர் நிற்கும் செம்மலார் திகழும் நாளில் ஆங்கொருநாள்

இவை அனைத்தும், அவ்வேதியரினின்றும் பிரிந்து, சிவன்பால் இவர் உள்ளும் புறமும் கொண்ட பேரன்பை விளக்குகின்றன.

அடுத்து, பசுவின் பெருமையைச் சேக்கிழார் விரித்துரைக்கிறார். சிவனுக்குத் திருமுழுக்காட்ட ஆன் ஐந்தும் தருதல், திருநீற்றைத் தரும் பெருமை ஆகியவற்றைக் கூறுகிறார். காளை ஊர்தியாதல் முதலிய சிறப்புக்களும் கூறப்படுகின்றன.

ஒருநாள் வேதம் ஓதும் இளைஞர் கூட்டத்துடன் போவார், வழியிடையே, ஒரு புனிற்றாவை, நிரை மேய்க்கும் இடையன் கோல்கொண்டு அடிப்பதைப் பார்த்து, மனம் வருந்தி, அவனை விலக்கிவிட்டுத் தாமே அவ் வானிரையை மேய்க்கத் திருவுளங் கொண்டு, மறையவரின் இசைவையும் பெற்று அன்று முதல் ஆனிரை காத்து, மேய்த்துவரும் பணியை மேற்கொள்கின்றார்.

இவ்வாறு கடமை தவறாது, நன்கு ஆனிரைகளை மேய்த்து, மாலையில் வேள்விக்கு வேண்டிய சமிதைக் குச்சிகளுடன் நெருப்புண்டாக்குதற்குரிய தீக்கடைகோலாம் அரணிக் கட்டைகளையும் சேகரித்துக் கொண்டு வந்து, பசுக்களை அவரவர் வீட்டில் சேர்ப்பித்தார்.

ஓம தேனுக்கள் வேள்விக்குரியன. அப்பசுக்கள் முன்னிலும் கூடுதலாகப் பயன்தரவே, பிரமசாரியாம் சருமனார் மீது வேதியர்கள் மிகுந்த மகிழ்ச்சி கொண்டனர்.

இடையே ஒரு நாள் இளையோர் மணலால் வீடு கட்டி மகிழ்வது போல், சருமனார் ஆத்திமர நிழலில், ஒரு மணல் மேட்டில், சிவ ஆலயம் போலவே ஒன்றை மண்ணினாற் கட்டி, பசுக்கள் தாமே பொழியும் பாலைக் கொண்டு, திருமுழுக்காட்டி

மகிழ்ந்தார். ஆத்திமலர் முதலான பல மலர்களைத் திரட்டிச் சூட்டிப் பார்த்து இறையன்பில் மூழ்கினார்.

இவ்வாறு பல நாட்கள் வரன்முறைப்படி சிவபூசையாம் அருச்சனை செய்து மகிழ்ந்தார்.

இதன் பெருமை அறியாத ஒருவன் மண்ணியாற்றங்கரையில், விசார சருமர் செய்யும் சிவபூசைபற்றி, அவ்வூர் அந்தணரிடம் கூறினான்.

இதனைக் கேட்ட அந்தணர்கள் அவையைக் கூட்டி, பொச்சம் (வஞ்சனை) ஒழுகும் மாணவகன் பொல்லாங்கை விசாரிக்க என்று, அவர் தந்தை எச்ச தத்தனை அழைத்து வரச் செய்தனர். ‘‘உன் மகன் செய் தீங்கு தன்னைக் கேள்’’ என்று கூறி வெகுண்டனர். அந்தணாளர் ஆகுதிக்குப் பயன்படும் பசுக்களை, மேய்ப்பவன் போல் காட்டி, ஓட்டிச் சென்று கந்தமலி பூம்புனல் மண்ணி மணலில் கறந்து, பால் உகுத்துத் தன் மனத்துக்கு வந்தபடியே செய்கின்றான் என்று கண்டித்துப் பேசினர். இதைக் கேட்ட தத்தனும் முன்பு இதை யான் அறியேன்; எனவே இத் தீங்கை அந்தணர்கள் பொறுக்க வேண்டும். இனி இது நடந்தால் அது என் குற்றமாகும் என மன்னிப்புக் கேட்டுச் செல்கின்றார்.

இங்கேயுள்ள மறைபொருள்களை உய்த்துணர, நுண்மாண் நுழைபுலம் வேண்டாம், சிறிதளவு அறிவே போதும். செம்மை வெண்ணீற்று ஒருமையினார் அன்றோ அவ்வேதியர்கள்? இத்திருப்பணி கேட்டு மனம் மகிழ்ந்திருக்க வேண்டுமே? இதனை மகன் செய் தீங்கு எனலாமா? பொல்லாங்கு என்று கூறலாமா? தன் மனம்போனபடி செய்கின்றானாம் என்ற வேதியர்கள், தம் வாயாற்கூடச் சிவபூசை செய்கின்றானாம் எனக்கூற மனம் இல்லையே! மணலில் பாலை உகுத்தான் - கொட்டினான் என்பது இழிசொல் அல்லவா?

உண்மையில் விசாரசருமர், இவ்வேதியர்கள் பசுவேட்டு எரி ஓம்பியதையே வெறுத்தார் என எண்ண இடமுளது. அவர்கள் வெண்ணீறு பூசியதும், தங்களைக் காத்துக்கொள்ளப் போட்ட வெளிவேடமே என்பது புலனாகிறது.

உண்மையில் கண்டு மகிழ்ந்து கொண்டாட வேண்டிய ஒன்றை, மா பாதகம் என்பது போல் பேசுவதேன்?

எச்ச தத்தனும் மறுநாள் மறைந்து சென்று, தம் மகனார் செயலை உளவறிய முற்பட்டார். அங்கு ஒரு குரா மரத்தின் மேலேறி மறைந்திருந்து, தன் மகனார் செய்யும் சிவபூசையைக் கண்டார்; அளவிலாச் சீற்றம் கொண்டார்.

உடனே மரத்தைவிட்டு இறங்கி வாய்க்கு வந்தபடி வசை மொழி கூறி, மகனார் முதுகில் அடிமேல்அடி அடித்து, நையப் புடைத்தார். விசாரசருமரோ, சிவ பூசனையில் ஆழ்ந்து, திருமஞ்சனம் செய்து கொண்டிருந்ததால் வலி எதுவுமே தோன்றவில்லை. இதைக் கண்ட எச்சதத்தன், பாற்குடத்தைக் காலால் இடறிச் சிதறடித்தார்.

சிந்தும் பொழுதில் அதுநோக்கும் சிறுவர் இறையில் தீயோனைத்
தந்தை எனவே அறிந்தவன்தன் தாள்கள் சிந்தும் தகுதியனால்
முந்தை மருங்கு கிடந்தகோல் எடுத்தார்க்கு அதுவே
- முறைமையினால்
வந்து மழுவாயிட எறிந்தார், மண்மேல் வீழ்ந்தான் மறையோனும்

தந்தை என அறிந்தும் தண்டித்தவரைச் சிவபெருமான் தோன்றி, இனி உனக்கு நாம் அடுத்த தந்தை எனக் கூறிச் சிவநெறித் தொண்டர்களுக்கு அதிபர் ஆக்கிச் சண்டேசப் பதமும் தந்து அருள்கின்றார்.

திருவின் நாயகன் தமது இந்து சமய விளக்கத்தில் சண்டேசுவர நாயனார் பற்றிக் குறிப்பிடுகிறார். அண்மையில் கன்று ஈன்ற பசு ஒன்று தன்னை முட்ட வந்தது என்பதற்காக அதனைக் கோலினால் இடைச்சிறுவன் அடித்தபோது, அவன் மீது கோபமுற்று, அவனை விலக்கிப் பசுமேய்க்கும் தொழிலை விசார சருமனார் தாமே மேற்கொண்டார் என்று சேக்கிழார் பாடுகிறார். உண்மையில் அவ்வூர் அந்தணர்கள் வெண்ணீறு பூசி பசுவேட்டு, எரி ஓம்பியதால்தான், விசார சருமர் வெறுப்புற்று, ஊர்ப்புறத்தே சென்று, மண்ணியாற்றங்கரையில், யாருக்கும் தெரியாமல், மண்ணாலேயே சிவன் கோயில் அமைத்துப் பால் முழுக்காட்டி வழிபட்டார். சேக்கிழார் சொல்வது இது.

சேய்ஞலூர் வேதியர்களை, செம்மை வெண்ணீற்று ஒருமையினார் என்று அறிமுகப்படுத்துகிறார் சேக்கிழார்.

வெண்ணீறு பூசுவதில் மட்டும் மிக உறுதியானவர்கள். 'செம்மை வெண்ணீற்று ஒருமையினார்', 'இரண்டு பிறப்பினார்', 'மும்மைத் தழல் ஓம்பிய நெறியார்', 'நான்கு வேத முறை பயின்றார்' அங்கு வாழ்ந்தனராம். ஓதுகிடைசூழ் சிறுவர்கள் - வேதம் பயிலும் சிறுவர் கூட்டம் - அவர்களும் ஆசான்மாரும் முழங்கிய வேத ஒலி, வானில் முகிற் கூட்டத்தையே ஒதுங்கச் செய்ததாம். இவர்கள் செய்த வேள்விகளின் அவி யுணவை உண்ணத் தேவர்களும் அங்கு வந்தனராம். அங்கு ஓம தேனுக்களும் - (ஹோமத்தில் பலியிடுவதற்காக வளர்க்கப்படும் பசுக்கள்) அவற்றுக்கான சமிதைகளைக் கொண்டுவரும் ஆடவரும் இருந்தனர்.

ஓம தேனு ; தேனு - பசுக்கூட்டம்; வேள்வியிலிடப்படும் பசுக்கள் என்று பொருள்படும். இரண்டு பிறப்பினர், மூன்று எரி ஓம்புநர், நான்கு வேதம் பயில்பவர் என்பது ஏன்?

எல்லாம் வெளிவேடமே என்பது போல் இக்கருத்து உளது. சான்றோர்கள் தாம் சொல்ல வந்த கருத்தை - தம் உள்ளக்கிடக்கையை அந்நூலுள் - பாடலுள் எங்கேனும் புதை பொருள் போல் வைத்திருப்பர். பிற எல்லாம் நேர் எதிரானவை போலவும் இருக்கும். நுண்மாண் நுழைபுலமுடையாரே இதனைக் கண்டு கொள்வர். வேள்வி மல்கும் சேய்ஞலூரில் எவ்வகை வேள்விகள் நடந்தன?

யாக சாலைகள் தோறும், மறையவர்கள் ஈந்த அவியுணவை உண்ணத் திருமாலும் அயனும் தம் ஊர்திகளாகிய கருடனுடனும் அன்னத்துடனும் வானத்திலிருந்து வந்து இறங்கினர். இந்திரன் வந்த யானை அங்கு வந்தது. யாகத்திற்கு நாட்டப்படும் யாகத் தம்பங்கள் பல இருந்தன. அவை பறவைகளுக்குத் தங்குமிடம் போலவும் யானைக்குத் தறிபோலவும் இருந்தன.

இங்குத் திருமாலையும் பிரமனையும் இந்திரனையும் அழைத்தவர்கள் சிவனை அழைக்கவில்லை என்று வெளிப்படையாகத் தெரிகிறது.

எமக்கு எதனையும் மழுப்புவதில் விருப்பமில்லை. சிவன் இவர்களுக்கு எல்லாம் தலைவனாதலின், அழைக்க வேண்டாதாயிற்றாம். சி.கே.சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தரும் விளக்கம் இது. ஒரு வங்கியில் எல்லா ஊழியரையும், ஒரு

திருமண விருந்திற்கு அழைத்துவிட்டு, அவர்களுக்கு எல்லாம் தலைவராகிய மேலாளரை அழைக்காமல் விட்டுவிட்டு, பிறகு கீழ் உள்ளவரை அழைத்தது தலைவரையும் அழைத்தது போன்றதே என்பது, அத்தலைவரை அவமானப் படுத்தியதாகாதா?

சேய்ஞலூர் வேதியர்கள் சிவ வேள்வி செய்திலர்; செய்ய விரும்பிலர் என்பதே பொருள்.

மக்கட் சமுதாயமே இறைச்சி தின்று, மது பருகி வாழ்ந்த காலம் அது. இதில் மட்டும் அப்பழங்கால நிலை ஒன்றுதான். அதனால் வேதியர்கள் தாங்கள் சிவ வேள்வி செய்து, சிவ வேதியராக மாறுவதாகக் கூறியே தமிழருடன் இணைந்தனர். ஆனால் தங்கள் சுய குணத்தால், சிவ வேள்வியைச் செய்யாமலே ஏமாற்றியும் வாழ்ந்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் தக்கனும் இங்கு வரும் எச்ச தத்தனும் ஆவர். அதனால் அவர்கள் தண்டிக்கப்பட்டனர் என்பதைத் "தக்கனையும் எச்சனையும் தலையறுத்து" என்று மாணிக்கவாசகரும், "தக்கனது பெரு வேள்வி சந்திரன் இந்திரன் எச்சன் அருக்கன் அங்கி, மிக்கதாதாவினொடும் விதி வழியே தண்டித்த விமலர்" என்று ஞானசம்பந்தரும் (முதுகுன்றம் 2) பாடுவர். இவற்றிலிருந்து வாழ்வு கருதி, சிவவேடம் பூண்ட, வேத வேள்வியரிடையே, விசாரசருமனார் உண்மையான சிவவேதியராகத் திகழ்ந்து, அப்போலிகளை எதிர்த்து நின்றார் என்பதே உண்மை. இன்றைய அந்தணாளரிடமும் இவ்விரு வகையினரை நாம் இனம் காணமுடியும். இதுவே வேதனை தரும் செய்தி.

சேய்ஞலூர் வேதியர்கள், பசுக்களை, அவை பற்றிய பஞ்ச கவ்வியம் சிவ வழிபாட்டிற்கு உதவுகின்றன என்பதால் வளர்த்தனர் என்பது, மறைமுகமாக அவர்கள், பசுவையும் வேள்வியிலிட்டுத் தீ ஓம்பினர் என்பதையே காட்டுகிறது. இல்லையென்றால் பசுவின் பால் கொண்டு சிவனை வழிபட்டவரைத் தண்டித்திருப்பார்களா? மேலும் பசுக்களைச் சிவவழிபாட்டிற்கு உதவும் என வளர்த்தவர்களாக இருந்தால், மண்ணியாற்றங் கரையில் விசார சருமனார் இயற்றிய, அதி அற்புதமான, மணலாற் செய்த சிவக்கோயில் திருமுழுக்காட்டு நிகழ்வைக் கேள்விப்பட்டதும், எல்லாரும் அங்குச் சென்று ஆடியும் பாடியும் சிவனை வழிபட்டிருப்பார்களே? விசார சருமனாரின் தந்தையார் எச்சதத்தன்

இப்படிப்பட்ட பிள்ளையைப் பெற்றதற்காகத் தலைமேல் தூக்கிவைத்துக் கொண்டாடி இருப்பரே!

கதை நேர் எதிராகவல்லவா போகிறது! உடனே, அவ்வந்தணர்கள் வேள்வியில் பசுக்களைக் கொல்லவே அவற்றை வளர்த்தனர் என்று சேக்கிழார் கூறியிருப்பாரே என்று கேள்வி எழுப்புவீர்கள். காலச்சூழலால், அவர் இதை மறைமுகமாக நன்கு உணர்த்தியுள்ளார் என்பதே, நாம் இங்கு விளக்குவது. நாம் விளக்குவன எல்லாம் சேக்கிழார் திருவுள்ளக் கிடக்கை என்பதை மறவாதீர். இதோ, 'இந்து சமயம்' நூலிலிருந்து மேலும் சிலவற்றைக் காண்போம்.

பண்டைத் தமிழரிடையே கடவுளர்க்கு நேர்த்திக்கடனாக உயிர்களைப் பலியிடும் பழக்கம் நிலவி வந்திருக்கிறது என்பதைச் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. வேதங்களிலும் உயிர்ப்பலி செய்து, வேள்விகள் நடந்துள என்பது நன்கு விளக்கப்படுகிறது.

வேள்விகளில் பறவை, விலங்குகள் அவிசாகவே - தேவருணவாகவே இருந்ததால், வேள்விகளில் உயிர்வதை செய்யலாம் என்கிறது மனுஸ்மிருதி. (5.23)

தமிழ்ச் சமயநெறி மரபு உயிர்க்கொலையை அறவே தவிர்க்கச் சொல்வது என்பதைத் திருக்குறள், திருமந்திரம் வழி அறியலாம்.

திருஞானசம்பந்தர், தமது தில்லைத் திருப்பதிகத்தில் இதை வெளிப்படையாகப் பாடியுள்ளார்.

கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய. . . .

பறம்பைப் படுத்தெங்கும் பசுவேட்டு எரியோம்பும்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய (1-80- 1,2)

பசுவேட்டு எரியோம்பும் என்பதற்கு, வேறுபொருள் கூறுவதனாற் பயனில்லை.

வேத வேள்விகளில் உயிர்ப்பலி - குறிப்பாகப் பசுக்கள் பலியிடப் பெற்றதைக் காஞ்சி சங்கராச்சாரியாரே கூறியும், அதற்கு ஆதரவு தெரிவித்தும் இருக்கிறார். சாத்விகமான வாழ்க்கை

முறைக்கென்று ஏற்பட்ட பிரிவினரிடமே உயிர்களை வதை செய்யும் அம்சம் இருப்பதாகத் தோன்றும். யாகங்களை வேதங்கள் விதித்திருக்கின்றன என்றால், அதில் நியாயம் இல்லாமல் இருக்குமா? என்று கூறி, யாகங்களில் உயிர்கள் பலியிடப் பெறுவதற்கு நியாயம் கற்பிக்க முயல்கிறார் சங்கராச்சாரியார். யக்ஞப் பலியால் (யாகத்திற்காக மேற்கொள்ளப்பெறும் உயிர்ப்பலியால்) சில தேவ சக்திகள், திருப்தி அடைந்து, உலகத்திற்கு நல்லது செய்கின்றன. பலியாகும் பிராணியும் நல்ல கதியை அடைகிறது - இது அவர் கற்பிக்கும் நியாயம். (தெய்வத்தின் குரல், 5-335)

வேள்விக்குப் பயன்படுத்துகின்ற கொடி, மரம், பசு, விலங்கு, பட்சிகள் போன்றவை பின்னர் மேலான கதியை அடைகின்றன என்கிறது மனுதர்ம சாஸ்திரம். (5-40)

கீதை என்ன சொல்கிறது?

யாகத்தைக் கொண்டு நீங்கள் தேவர்களைத் திருப்தி செய்யுங்கள். அந்தத் தேவர்கள் மழை முதலியவற்றால் உங்களுக்கு நலத்தைச் செய்வார்கள். இப்படியே நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு மேலான நன்மை பல அடையுங்கள். இவ்வாறு அவர்களால் (தேவர்களால்) கொடுக்கப்பெற்று (அதற்காக) அவர்களுக்குக் கைம்மாறு செய்யாது நுகர்பவன் திருடனாவான். (3-11, 12)

திருவிளையாடற் புராணம், மாணிக்கம் விற்ற படலத்தில், பசுவை வதைத்து, வேள்வியில் போட்டு, வெந்தபின், அதன் வெண்மை நிற வபையை - நிணத்தைத் தின்பது பற்றி மிக விளக்கமாக வருகிறது.

தர்மத்துக்காகச் செய்ய வேண்டியது எப்படியிருந்தாலும் பண்ண வேண்டும். ஹிம்சை என்று பார்க்கக்கூடாது. (தெய்வத்தின் குரல் 2-283)

வேள்விக்கென்றே பசுக்கள் பிரமனால் படைக்கப்பட்டன. உலக நன்மையை முன்னிட்டே நடைபெறுவனவாகிய வேள்விகள் செய்யப்படும்போது அது பசுவதை ஆகாது. (மனுதர்மம் 5-39)

பிராமணர்கள் செய்வதில் மிக உயர்ந்த யாகமாகக் கூறப்பெறுவது வாஜபேயம். (யாகம் 21இல் அந்தணர் மற்றும்

அரசர்களால் செய்யப்பெறும் யாக வகை). அந்த யாகத்தில் 23 பசுக்களைப் பலிகொடுக்கச் சொல்லியிருக்கிறது. மேலும் ஹோமம் செய்யும் பிராமணர் (ரித்விக்குகள்) இடாவதாரணம் என்பதற்காகப் பசுவின் இன்ன இன்ன அங்கங்களிலிருந்து, இந்த அளவு மாமிசம் சாப்பிட வேண்டும் என்றும் சொல்லப் பெற்றிருக்கிறது. யாகத்தில் மிஞ்சியதை உண்ணும் நல்லோர் எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகின்றனர். (கீதை 3-13). பசு வேட்டபின் அதில் இன்றைய நிலையில் குன்றிமணி அளவும் விழுங்கத்தான் வேண்டும் என்கிறார், மகா சுவாமிகள். சிரார்த்தத்தில் வரிக்கப்பெற்ற - நியமிக்கப்பெற்ற அந்தணன், புலால் உண்ணலாகாது என்று எண்ணி உண்ண மறுத்தால் அவன் 21 பிறவிகள் பசுவாய்ப் பிறப்பான் (மனுதர்ம சாஸ்திரம் 5-35).

வேதம் வேறு; வேதாந்தம் வேறு. எவ்வாறு? வேதங்கள் தோன்றிய மிகப் பழமையான காலம் வேறு. பிற்பாடு உபநிடதம், உபவேதம், சாகைகள், பிராம்மணம், பாடியங்கள், உரைகள் எல்லாம் வேதத்திலுள்ள சிலவற்றைப் பின்பற்றியவை. கிறித்துவ ஊழிக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இவை, பிற சமயங்கள் பரவாமல் தடுக்கவும் அச்சமயவுண்மைகளைத் தாமும் ஏற்றுக் கொண்டு தம்முடையன எனக் காட்டி மக்களைத் தம்பால் ஈர்க்கவும் இவ்வாறு பல திறத்தனவாய்க் காணப்படுகின்றன. தமிழர்க்கும் வைதிகம் அயற்சமயமே. ஆனால் நம் சாத்திர தோத்திரங்களை எல்லாம் தமதாக்கி வைத்துக்கொண்டு, நம் மூலநூல்களை அழித்துவிட்டனர். இதனால் வேதநெறி என்னும் போது, நம் நற்சமய நெறிகளையும் அவை கொண்டிருப்பதாகக் கூறியே, நம் அருளாளர்களும் மயக்கத்தை ஊட்டிவிட்டனர். வைதிக சைவம் என்ற குழப்பம் உருவானது. அதிலிருந்து தெளிவு பெறுங்காலம் வந்துளது.

வேதங்களில் பாடங்கள் பாட பேதங்கள் உண்டு. இப் பாடாந்தரங்கள் பிற்சேர்க்கை. இவற்றை, சாகை என்றும் கூறுவர். “சாகை ஆயிரம் உடையார்” என்பது சம்பந்தர் வாக்கு. (2.94)

ஒவ்வொரு சாகையிலும் ஸம்கிதை, பிராம்மணம், ஆரண்யகம் என்று மூன்று பிரிவுண்டு, இத்தகைய சாகைகளின் முடிவாகவே, அந்தமாகவே உபநிசத் அமைந்திருக்கிறது. எனவே அது வேதாந்தம் ஆகிறது.

யக்ஞங்களைச் செய்வதே (யாகம், வேள்வி, ஹோமம் செய்வதே) வேதத்தின் தலையாய நோக்கம்; பரஞானம் பெறுவது வேதத்தின் மற்றொரு நோக்கம் என்றும் கூறுவர். வேதம் செய்யப்பெற்ற காலத்தில் முதல் நோக்கமே மேலோங்கி இருந்தது. பிறகு வேதக்காரரர்கள், தமிழ் மக்களோடு தொடர்பு கொண்ட காலத்தில், ஞானம் என்ற பொருள் அவர்களுக்குத் தெரிய வந்தது (திருவின் நாயகன், இதோ இந்து சமயம், மலேசிய இந்து சங்கம், 2003, பக்.26)

இவற்றைத் தெளிவுடனும் நடுவுநிலையுடனும் எண்ணிப் பாருங்கள். வேத மூலநூல்களே அவர்களின் சொந்தச் சரக்கு; அவர்களின் சமயக் கோட்பாடு. இன்றும் அம் மனப்பான்மையையும் பயிற்சியையும் கைவிட்டிலர்.

வேதாந்தம் எனப்படும் உபநிடதங்கள் தொடங்கிப் புராணங்கள் வரையிலுள்ள அனைத்தும் பிறரது ‘உடைமைகளை’ அவ்வப்போது தம்மவற்றுடன் இணைத்துக்கொண்டவை. இதனால் வேதாந்தம் எவ்வாறு வேண்டுமானாலும், அவரவர் விருப்பப்படி விளக்கியுரைக்க இடம் தருகிறது. எந்த மத உண்மையையும் அது விழுங்கி, நன்கு செரித்துக்கொண்டு, அதனை எதிர்க்கவும் இடம் தருகிறது; மறுக்கவும் இடம் தருகிறது; ஏற்கவும் செய்வதுபோல் காட்டிக்கொள்கிறது.

உலகமே வியக்கும்படியான உண்மை விளக்கங்களையும் அதில் காணமுடிகிறது; அந்த உலகமே வெறுக்கும்படியான, அருவருப்பானவற்றையும் கொண்டுள்ளது.

தமிழர் சமயங்கள் தனித்துவமுடையவை. ஆனால் இன்று அவை முற்றிலும் வடமொழிக் கலைச்சொற்களுட்பட, அனைத்தையும் கொண்டு, விளங்காமற் போய்விட்டது. எனினும் நம் அருளாளர்கள், ஏறத்தாழ ஆறு நூற்றாண்டுகளில் (களப்பிர, பல்லவ, நாயக்கர் காலம்) நடந்த, வடமொழி வல்லாண்மை வழிகளிலிருந்து, தமிழை மறைமுகமாகவும் நேர்முகமாகவும் காப்பாற்றியே வந்துள்ளனர்.

1. எது தமிழருடையது; **2.** எது தமிழருடையதை எடுத்துக் கொண்டதால், அதை வெளிப்போக்கில் மட்டும் ஆதரித்துப் பாடியது; **3.** எது அவற்றை அடியொண்ட மறுத்தது? எனப் பிரித்தறிய நிறைய வாய்ப்புத் தந்துள்ளனர்.

வெண்ணீறு பூசி, வேத வேள்விகளும் செய்வது இரட்டை வேடமன்றி வேறென்ன? வேள்வியை - அக்கினி வழிபாட்டை - அது சிவ வேள்வியேயாயினும் அதனைச் சிவநெறி ஏற்றதும் தவறே. அந்தணாளரும் சிவநெறிச் சார்புடையார் போலக் காட்டிக் கொண்டு, தம் தனித்தன்மையை விடாது, கூடி வாழ்ந்து, வேள்விகள் செய்ததும் தவறு.

சமணம் புத்தம் முதலான புறச் சமய நெறிகளைப் பரவ விடாமல் தடுக்க, இவ் வைதிகத் தமிழியக் கொள்கையில்லாக் கூட்டணி அமைந்ததே, தமிழுக்கும் தமிழர்க்கும் பேரிழப்பாய்ப் போயிற்று.

எச்ச தத்தனைப் பற்றிச் சேக்கிழார் கூறிய, அருமை மணியும் அளித்து, அதுவே நஞ்சும் அளிக்கும் அரவுபோல் வாழ்வது, அவ் வினத்தினர் சிலரிடம் இன்றும் காணப்பெறுகிறது.

உண்மையில் சமண சமயம் பரவாமல் தடுக்க உதவியன தமிழிசையும் சிவநெறியும் தமிழரின் பத்திமையாழுமேயாம். அவற்றின்பால் தம்மைக் காத்தளித்ததற்காக, ஏழேழ் பிறப்புக்கும் நன்றி காட்ட வேண்டிய, இப் பிராமணியம் நன்றியின்றி நடப்பது கொடிய பாவம் அல்லவா?

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (*குறள் 110*)

இன்றும் தமிழர்கள் விழித்துக் கொண்டு, உண்மைகளை உணர்ந்து, நம் திருமுறைகளும் திருக்குறளும் காட்டும் நெறியில் வாழ முற்பட்டால், மீண்டும் தமிழ் அந்தணாளர் குலம் வளரும், பல்கும், சிறக்கும். அதன் வழியே ஒற்றுமைப்பட்டு அனைவரும் ஒருமுகப்பட்டுத் தமிழராய் வாழ்வோம். நடந்த உண்மைகளை எல்லாம் நாம் இங்கு எடுத்துக் காட்டுவது, இவற்றைப் படிப்பவர்கள் இருபால் மக்களும் ஒற்றுமைப்படவே யல்லாமல், வேற்றுமைப்பட அன்று. இன்றைய அந்தணர் அனைவரும் முழுவதும் அருமைத் தமிழர்களே. எனவே நாம் அனைவரும் ஒருமையுடன் வாழ்வதே, இனி அனைவரும் மேன்மேலும் சிறக்க வழிவகுக்கும்.

ஆனால் சேய்ஞலூர் வேதியர்களில் ஒருவர் போலவே, நாகசாமி இன்று காணப்படுவதுதான் வேதனை தருகிறது.

இயல் - 10

சமயத்துறையிலும் முரண்பட்டவை

சேக்கிழார் திருவுள்ளம்
மனுநீதிச் சோழன் வரலாறு

வடமொழி தமிழை அழுத்தி, தமிழர் சமயத்தையே உருமாற்ற நடந்த காலத்தவர் சேக்கிழார். அவர் தம் நூலில் தமிழ்க் கோட்பாடுகளைக் கூறுமிடங்கள் பலவுள. அவற்றில் இது முதன்மையானது. மெய்ம்மையியல் தனித்தன்மை உடையது.

முப்பொருளுண்மை
வினைக் கோட்பாடு
உருவ வழிபாட்டுப் பத்திமை நெறி

இம்மூன்றும் அறிவியல் வழிப்பட்டவை; தமிழர் கண்டவை; தமிழர்க்கே உரியவை.

இடைக்காலத்தில், எல்லாவற்றையும் சமஸ்கிருதமயமாக்கிய காலக் கட்டத்தில், தமிழர்தம் சமயமும் சமஸ்கிருதமாக உருமாற்றப்பட்டு, அனைத்துக் கலைச் சொற்களும் சமஸ்கிருதமாக்கப்பட்டன. இதனால் அவை விளங்காமற் போயின. பொதுமக்களுக்குச் சிவநெறி உண்மைகள் சென்று சேரவில்லை.

வைதிக சைவம் என்றே முரண்பட்டவற்றை ஒன்றாக்கினர்.

வினைக் கோட்பாட்டு விளக்கம்

செய்த வினைக்குப் பயன் உண்டு; எதிர்விளைவும் உண்டு.

சினத்தைப் பொருள்என்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. (*குறள் 307*)

என்று எளிய எடுத்துக்காட்டுக் காட்டி இதை நிலை நிறுத்துவார் திருவள்ளுவர். உங்கள் கையால் தரைமீது ஓங்கி அடியுங்கள்; உடனே வலிக்கிறதல்லவா? கடுங்கோபம் தனக்கு ஆக்கம் தரும் எனக் கருதுபவன் கெடுவதுறுதி என்பதற்குச் சொன்ன உவமை இது. எச்செயலுக்கும் பயன் - விளைவு உண்டென்பதை ஐயமற நிறுவுகிறது.

உலகில் நாம் செய்யும் செயல்களும் அவற்றின் பயன்களும் ஒரு தொடர்ச்சியுடையன என்பதை மறுக்க முடியாது.

பிரார்த்த கன்மம் - அனுபவ கன்மம். பிரார்த்த கன்ம வாதனை - ஊழ்வினைப் பயன்.

ஆகாமிய கன்மம் - மூவகைக் கன்மங்களுள் ஒன்று. அது ஒரு சனனத்தில் செய்யப்பட்டு, மறு சனனத்திற்கேதுவான கன்மம்.

சஞ்சித கன்மம் - சென்ற சனனங்களிற் செய்யப்பட்டுப் பலன் அனுபவிக்காமல் நின்ற கன்மம்.

இவை நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதியிற் கண்டவை.

பொ. சங்கரப்பிள்ளை எழுதிய சைவ சித்தாந்தம் எனும் நூலில், அவர் விளக்குவனவற்றைக் காண்போம்.

> *"வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் மூப்பு, சாக்காடு, பிணி முதலியவை முற்பிறவிகளிற் செய்த வினைகளின் விளைவுகளாகும். இவற்றை அனுபவிக்கும் போது மேலும் வினைகள் செய்கிறோம். இவ்வினைகள் மேலும் வினைப் பயன்களை விளைவிக்கின்றன. ஒரு பிறவியிற் செய்த வினைகள் சூக்கும உடம்பில் வித்தாகக் கிடந்து மறுபிறப்பிற் பயிராகின்றன. இப்பிறப்பிற் செய்யும் வினைகள் மறுபிறப்புகளிற் பயனை அளிக்கலாம்".*
>
> *"ஓர் ஆன்மா செய்த வினைப்பயன் அந்த ஆன்மாவைத் தவறாது சென்று பிடிக்கும். அதாவது பிறவிகள் தோறும்*

தொடரும். அறச்செயல்கள் இன்பத்துக்கும் பாவச் செயல்கள் துன்பத்துக்கும் காலாகும்''.

''அனுபவித்துக் கழிக்கும் வரைக்கும் வினைப்பயன் ஆன்மாவை விடாது தொடரும்'' (பக்.76-78)

மேலும் அறிஞர் பொ. சங்கரப்பிள்ளை தரும் கருத்துக் கோவையின், ஒரு சிறு பகுதியையும் எண்ணிப் பார்க்கலாம்.

நாம் ஒரு செயலைச் செய்து, முன்செயலின் பயனை நுகரும்போது, புதிய வினைக்குக் கால்கோள் செய்கிறோம். இதை ஆகாமியம் - எதிர்காலத்தில் விளைவினை எனலாம். மக்களின் ஒவ்வொரு செயலும் வாக்கும் சிந்தனையும் இவ் வாகாமியத்துக்கு அடிப்படையாகும். இது செய்த பிறவியிலேயே பயனை விளைவிக்கலாம்; மறுபிறவியில் பயன் தரலாம்; உடனடியாக அப்பிறவியிலேயே ஒரு பங்கைத் தந்து, எஞ்சியதை மறுபிறவியிலும் தரலாம்.

வினைப்பயன் காலவரிசைப்படி நிகழ்வதில்லை. அதன் வலிமை, எளிமைக்கு ஏற்ப முன்பின்னாக விளைவுகளைத் தரக்கூடும்.

ஒரு பிறப்பில் செய்த வினை பல பிறப்புக்களுக்குப் பின்பு பயனை அளிக்கலாம். (ஒருவன் செய்த வினைப்பயனை அவன் மட்டுமேயன்றி, அவன் குடியும் அதன் ஏழு பரம்பரையும்கூட அனுபவிக்க நேரும் என்பது வள்ளுவம்.)

முன்பு செய்து இப்போது அனுபவிப்பது பிராப்தம் - ஊழ்வினை எனப்படும்; நுகரப்படாது - அனுபவித்துக் கழிக்கப்படாது, ஒருவனிடம் வெளிப்படக் காலம் பார்த்துக் கிடப்பது சஞ்சிதம் - வினைக் களஞ்சியம் - பழவினை எனப்படும்.

ஆக, வினைத் தொடர்ச்சி ஒரு முடிவற்ற சங்கிலித் தொடர் போன்றது. ''பழவினையை மாற்ற முடியாவிடினும் ஆகாமியம் எமது கையிலிருக்கிறது. ஆதலால் தனது வருங்காலத்தை ஆன்மாவே நிச்சயிக்கிறது'' என்பது அவர் வாக்கு.

சிவ மெய்யியலாம் இவ்வினைக்கோட்பாடு, காரண காரியத்துடனும் உலக நிகழ்வுகளுடனும் தனி மனித வாழ்வு நிலைகளுடனும் ஒப்பிட்டு ஆராயற்பாலதாகும்.

வினையின் பயனை நுகராமல் தப்பிக்கவே முடியாது. இதற்குப் பரிகாரமே இல்லையா என்றால், நல்வினை செய்து, முன்னதின் அடி வலுவாக விழாமல் காத்துக்கொள்ளலாம். வருந்தியும் திருந்தியும் அழுதும் பிற்பாடு நல்லது செய்து அதன் பயனை நுகர வேண்டுமே தவிர, முன்னதின் விளைவைவிட்டுத் தப்பிக்கவே இயலாது.

இது சிவனியம். திருவள்ளுவரும்

எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும். *(குறள். 207)*

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று. *(குறள். 208)*

'வீயாது' என்பதை இரு குறள்களில் ஆள்வது காண்க.

செருமானிய அறிஞர் எச். டபிள்யூ. சோமெருஸ் (H.W. Schomerus) என்பவர் சைவ சித்தாந்தம் பற்றிச் செருமன் மொழியில் எழுதிய நூல், மிக விரிவாகச் சிவனியக் கோட்பாட்டை விளக்குகிறது. அதன் ஆங்கில ஆக்கம், பெரிய அளவில் 400க்கும் மேற்பட்ட பக்கங்கள் கொண்டது. அதில் சிவனிய வினைக் கோட்பாடு பற்றி மிக விளக்கமாக உள்ளவற்றில் சில வரிகளை மட்டும் அவ்வாறே ஆங்கிலத்தில் காண்போம்.

செய்த வினைப் பயன்களை, இந்த உயிர் நுகரும் முறைகள் பற்றி நன்கு விளக்கிவிட்டு, அது எவ்வகையிலும் மாற்றமுடியாது என்று கூறுகிறார்.

> "*No deed dies without generating fruit. Consuming the fruit is unavoidable; they don't decay and you can't pass them on to someone else. Each soul must consume what it has sown. As one deed does not cancel another, a good deed does not make up for a bad one.*

"*These two kinds of deeds are built up by the thoughts, words and actions. One deed is not destroyed by another. If you think carefully you can see that consumption is unavoidable.* (*Part. II-13*)

"*Admittedly this same verse notes, with apparent approval, that in the Vaidiga - Saiva system one deed can replace another, i.e., by giving money for holding Sacrifices. But no other text supports this suggestion, so perhaps it was not the Siddhanties in general, but just Umapati, the Brahmin of Chidambaram temple, who mentioned the value of spending money for ritual purposes.*" (*p.110*)

ஓர் உயிர் தான் செய்த வினைப்பயனை நுகர்ந்தே தீர வேண்டும். அதை மற்றவர்க்கு மாற்றிக் கொடுக்க முடியாது. ஒரு வினையை, பிறிதொன்றால் நீக்க முடியாது. அதாவது தீயதொன்றை, நல்லதொன்றால் மாற்றிக் கொள்ள இயலாது. (இதையே தமிழறிஞர் ஒருவர், ஒரு குழந்தையைக் கொன்று விட்டு, கும்பாபிசேகம் செய்தால் முன்னது நீங்கிவிடாது; இரண்டையும் தனித்தனியே அனுபவித்தே தீர வேண்டும் என்று விளக்கியுள்ளார்.)

ஆனால் வைதிக - சைவ அமைப்பில் ஒன்றை மற்றொன்றால் நீக்கலாம் என்றும் பணம் செலவழித்து ஹோமங்கள் செய்து, செய்த பாவத்தைப் போக்கிவிடலாம் என்றும் குறிக்கப்படுகிறது. ஆனால் வேறு எந்தச் சிவநெறிச் சாத்திரமும் இதை ஏற்கவில்லை. சிதம்பரத்தைச் சேர்ந்த பிராமணராகிய உமாபதிசிவம் மட்டுமே, பணம் செலவழித்து, பிராயச்சித்தச் சடங்குகள் செய்து பாவத்தைப் போக்கலாம் என்று கூறியுள்ளார். (சிவப்பிரகாசம்)

ஒரு செருமன் நாட்டு அறிஞர் எவ்வளவு நுட்பமாய் உண்மை கண்டு விண்டுரைக்கிறார் என்பதை எண்ணிப் பாருங்கள்.

இந்நூலில் இத்தகைய அரிய கருத்துக்கள் நிரம்பவுள.

வினைக்கோட்பாடு பற்றிய இவை அனைத்தும் வடமொழியிலுள்ள அனைத்து நூல்களுக்கும் எதிரானவை.

அவர்கள் கருத்துப்படி, ஒருவன் செய்யும் எத்தகைய பாவத்திற்கும் பரிகாரம் உண்டு. அவர்களின் அதர்வ வேதம், பாவங்கள் செய்து தப்பிக்க, ஒருவன் செய்ததை மற்றவன்மீது ஏவிவிட, பணம் செலவழிப்பதற்கு ஏற்ப, மிகப் பெரிய ஹோமம், பிராயச்சித்தச் சடங்குகள் செய்து விடுபட வழி காட்டுகிறது. வேதங்கள், உபநிடதங்கள், மனுதர்ம சாத்திரம், சாணக்கியரின் கௌடில்யம், புராணங்கள், சோதிட நூல்கள் அனைத்தும் பரிகாரக் களஞ்சியங்கள். எவ்வகைப் பாவம் செய்தாலும் விடுபடப் பணம் செலவழித்தாற் போதும்.

இன்றைய இராசி பலன்கள் அனைத்தும் பரிகாரம் செய்ய வழிகாட்டும் விளம்பரங்கள் ஆகிவிட்டன.

தொன்றுதொட்டு வரும் இத்தீமையை விளக்கி, நம் சிவநெறி மேன்மையை நிலைநாட்டவே, சேக்கிழார் பெருமான் மனுநீதிச் சோழன் கதையை இணைத்துள்ளார்.

பாயிரம், திருமலைச் சிறப்பு, திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு, திருக்கூட்டச் சிறப்பு எனத் தாம் பாடும் முன்பகுதிகளில், பிற நூல்கள், காப்பியங்கள் போல வருணனைகள் புனைகின்றார். அதுவே இயல்பும் இயற்கையுமாகும். ஆனால் திருநகரச் சிறப்பில், வேண்டுமென்றே, சிவ நெறியினர்க்கு அதன் தனித்தன்மையை உணர்த்த வேண்டுமென்றே மனுநீதிச் சோழன் வரலாற்றைக் கொண்டு வருகிறார்.

சிலப்பதிகாரத்தால், இவ்வரலாறு தொன்றுதொட்டு வருவதென அறிகின்றோம் (வழக்குரை. 53-56).

வடமொழி மனுவின் நூல் மனுதரும சாத்திரம். அது சாதிக்கு ஏற்பவும், தீமைக்குத் தகவும் பற்பல பரிகாரச் சடங்குகளை விவரிப்பது.

சேக்கிழார் கூறும் மனு, மானுடர்க்கு அரசனாகிய செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப் பெற்ற நீதியும் தன் பெயராக்கினான் ஆவன்; வடமொழி சார்ந்த மனுவல்லன் என்பதற்கே, இவ்வரசனை செம்மையின் மெய்ம்மனு என்று கூறுகிறார். பரிகாரங்கள் கூறும் மனுவின் பெயரை வைத்தே,

அவை தவறென்று உலகிற்கு அறம் உரைக்கும் ஒரு மனுச்சக்கரவர்த்தியை, நமக்கு அறிமுகப்படுத்துகிறார், சேக்கிழார்.

இவை யாவும் அவர் திட்டமிட்டு நமக்கு, நம் சிவநெறிச் செல்வத்தை உணர்த்துவனவாகும்.

வேதநெறியை, நூலுள்ளே பலவாறு பாராட்டும் அவர், தமிழர்தம் தனித்தன்மையை விதந்து ஓதி, பிறவாறு காலத்திற்கேற்ப உதட்டளவில் கூறுவன வேறு; உண்மைகளை உளந்திறந்து கூறுவன வேறு என உணர்த்துகிறார்.

அம்மன்னனுக்குப் பிறந்த தவமகன், அரசர்க்குரிய அனைத்தும் கற்று, இளவரசன் என்னும் தன்மை எய்துதற்கு அணியன் ஆனான். ஒரு நாள் அவன் வாத்தியங்கள் முழங்க, இளையர் பலர் புடைசூழ, மாடவீதியில் தேரேறி வலம் வந்தான். மனிதர் எவரது கண்ணிலும் படாது, துள்ளி ஓடிவந்த பசுங்கன்று ஒன்று, தேரின் ஊடே பாய்ந்தது. சக்கரத்தில் அடிபட்டு இறந்தது. இது இளவரசன் குற்றமன்று. அதுவும் திடீரென ஊடே பாய்ந்ததால், இறக்க நேர்ந்தது.

இளவரசன் கொடியதொன்று தன்னால் நடந்துவிட்டதே என்று திகைத்து, தேரிலிருந்து இறங்கிக் கீழே வீழ்ந்தான். தன் தந்தைக்குப் பழி தேடிவிட்டதாக வருந்தினான்.

> **வந்தஇப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை**
> **அந்தணர் விதித்த வாற்றால் ஆற்றுவது அறமே யாகில்**
> **எந்தையீது அறியா முன்னம் இயற்றுவன் என்று மைந்தன்**
> **சிந்தைவெந் துயரம் தீர்ப்பான் திருமறை யவர்முன் சென்றான்.**
>
> (பெரிய. திருமலைச். சரு. *111*)

மறையவர் முன் ஏன் சென்றான்? இத்தகைய பழி பாவங்களுக் கெல்லாம், கழுவாய் செய்ய வழிகாட்ட வல்லவர்கள் அவர்களே என்ற நம்பிக்கை பரவலாக மக்களிடம் இருந்துளது.

அந்தணர் என்றால் தண்ணளி உடையவர்கள். அறமல்லாத நெறியில், கழுவாய் - பிராயச்சித்தம் கூறுபவர் அந்தணர் ஆகார்.

அவர்கள் அந்தணர்கள் ஆகாது மறையவர்களே ஆகி நின்றார்கள் - என்று முடித்துக் காட்டும் குறிப்புப் பெறும் பொருட்டுப் பின்னர் மறையவர்முன் என்றார், என சி.கே.சு. அவர்கள் விளக்கம் எழுதுகின்றார். இதிலிருந்து வடமொழி மறைகள் பரிகார வழி காட்டுவன என்ற உண்மையை அவர் தயங்கித் தயங்கிக் கூறுவது தெரிகிறது.

நம்மவர்கள் இவ்வாறு தயங்கித் தயங்கி, உண்மைகளை வெளிப்படையாகக் கூறாமல் மழுப்ப முயன்றதாலேதான் பல உண்மைகள் மக்களுக்கு உணர்த்தப்படாமலே போயின. அந்தணர் விதித்தவாற்றால் ஆற்றுவது அறமேயாகில் - என்று மன்னன் மகன் மனம் மட்டுமா ஊசலாடுகிறது? நம் மனமும் பாவத்தைக் கழிக்கப் பணம் செலவழித்தால் போதும் என்பதை ஆசையால் ஏற்கவும், அறநெறியாகுமா என்பதால் தயங்கவும் என இவ்வாறு ஊசலாடத்தானே செய்கிறது.

அறிஞர் பொ. சங்கரப்பிள்ளை கூறுவன காண்மின்: நாம் அனுபவிக்கும் துன்பமும் இன்பமும் நம் மனநோயைக் குணப்படுத்தும் மருந்துகளாகும்.

இன்பங்களுக்காகப் புண்ணியம் செய்வது வியாபாரமாகும். செய்த வினையின் பயனை நாம் அனுபவிக்க வேண்டும்.

இறைவனை வணங்கினால் அவன் பாவங்களை மன்னித்து விடுவான் எனச் சிலர் எண்ணுகின்றனர். மன்னிப்புக் கேட்டுவிட்டு அதே பாவங்களைத் திரும்பத் திரும்பச் செய்கிறார்கள். கொள்ளையடித்த, களவெடுத்த காசில் ஒரு பங்கைக் கொடுத்தால் பாவம் மன்னிக்கப்படும் என்று சிலர் எண்ணுகிறார்கள். இக் காசிற் கோயில் கட்டுகிறார்கள்; குளங்கள் வெட்டுகிறார்கள்; பூசைகள் செய்விக்கிறார்கள்; புண்ணிய தலங்களுக்கு யாத்திரை போகிறார்கள். பூசாரிகளுக்கும் கோவில்களுக்கும் காசு கொடுத்துப் புண்ணியத்தை வாங்கலாம் எனச் சிலர் எண்ணுகிறார்கள். போரில் தமக்கு வெற்றியளிக்குமாறு இறைவனை வேண்டுகிறார்கள். களவெடுக்கப் போகுமுன் காளிக்குப் பூசை செய்கிறார்கள். சமயத்தின் பேரில் துவேஷங்களைப் பரப்புகிறார்கள்; கொலை

செய்கிறார்கள். சிலர் பாவமன்னிப்புக் கொடுப்பதற்கு, இவ்வுலகில் தம்மைத் தாமே இறைவனின் பிரதிநிதிகளாக நியமித்துக் கொண்டனர். இவை யாவும் மோகங்களினால் உண்டான பேதை உணர்ச்சிகளாகும்.

தாபன மதங்கள் இவற்றைப் பயன்படுத்தி வியாபாரம் செய்கின்றன. (சைவ சித்தாந்தம், பக்.80-82)

பெரும்பாலான மக்களின் ஆசையும் நடப்பும் இதுதான். இதை ஏற்பது பிற நூல்களே தவிர, சிவனியம் அன்று. இக்கருத்தையே, சேக்கிழார் பெருமான் தம் மாக் கதையைத் தொடங்கும்போதே, நிலைநிறுத்துகிறார்.

வடமொழி மறைகளை நம் அருளாளர்கள் ஏற்பதுபோல் காட்டி வடமொழியாளர்களை வானளாவப் புகழ்கின்றனர். ஆனால் இங்கு அதன் அடிப்படைக் கருத்தை அருளாளர்கள் ஏற்கவில்லை அல்லவா?

கன்றை இழந்த பசு ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அசைத்து அடித்துவிட்டது. மணி ஓசை கேட்ட மன்னன் அதிர்ந்து போனான். ஒரு பசு இவ்வாறு மணியை அடித்ததைக் கேள்விப்பட்டதும், மன்னன் அமைச்சரை நோக்க, அவர்களுள் தலைமை அமைச்சன் நிகழ்ந்ததைச் சொன்னான். அதைக் கேட்ட அரசன் ஆ உறும் துயரைத் தான் எய்தினான். அவன் வருந்தித் துடிப்பதைக் கண்ட அமைச்சர்கள் இதற்காக வருந்த வேண்டாம்; கோ (பசு) வதை செய்தார்க்கு, மறை ஓதும் அந்தணர்கள் விதித்த பிராயச்சித்த வழிகள் உள்ளன. அவற்றின்படி செய்வது அறமாகும் என்றார்கள்.

அவர்கள் மீது அரசன் சினம் கொண்டு, மறுக்கின்றான். பரிகாரம் தேடலே வழக்கென்றால், இப்பசு உறும் துன்பத்திற்கு அது மருந்தாகுமா? என் மகனை இழந்துவிடுவேனோ என எண்ணி எல்லோரும் ஏதேதோ சொல்கின்றீர்! நீங்கள் கூறிய இச்சழக்கிற்கு நான் இசைந்தால் தருமந்தான் சலியாதோ? ஒரு நாட்டை ஆள்பவன் தன் மக்களையும் உயிர்களையும் காக்க வேண்டும். அவற்றுக்குத் தன்னாலும், தன் அதிகாரிகளாலும் பகைவராலும்

கள்வராலும் பிற உயிர்களாலும் வரும் ஐந்து அச்சங்களையும் தீர்த்து அறத்தைக் காக்க வேண்டுமல்லவா? ஒருவன் ஓர் உயிரைக் கொன்றால், அவனுக்குக் கொலைத் தண்டனை விதிக்க நேரும். இதுவே மற்றவர்க்குத் தீர்வென்றால், மன்னவனாகிய எனக்கும் அது பொருந்துமன்றோ? இல்லையெனில் தொன்மைமிக்க தமிழ்மனுநூல் முறைமை, என்னால் அழிக்கப்பட்டது என்று பழி வந்து நேருமே என்றான் அரசன்.

என்றரசன் இகழ்ந்துரைப்ப எதிர்நின்ற மதிஅமைச்சர்
நின்றநெறி உலகின்கண் இதுபோல்முன் நிகழ்ந்ததால்,
பொன்றுவித்தல் மரபன்று, மறைமொழிந்த அறம்புரிதல்
தொன்றுதொடு நெறியன்றோ தொன்னிலங் காவல!

(*பெரிய. திருமலைச் சருக். 123*)

அமைச்சர்கள் "கொன்றுவிடல் மரபன்று; வேதங்கள் மொழிந்தபடி - அறம் செய்தல் அதாவது கழுவாய் செய்தல் தொன்று தொட்டு வரும் மரபாகும்" என்றார்கள். அது கேட்ட அரசன் கடுஞ்சினமுற்றான். "மறை மொழிந்த அறம்" என்பதை மறுத்து, "இவ்வண்ணம் பழுதுரைத்தீர்" என்றான். மேலும்,

அவ்வுரையில் வரும்நெறிகள் அவைநிற்க; அறநெறியின்
செவ்விய உண்மைத்திறம் நீர்சிந்தைசெயா துரைக்கின்றீர்

(*பெரிய. திருமலைச் சருக். 125*)

என்று மன்னன் கூறுவதில், சேக்கிழார் திருவுள்ளம் புலனாகிறது. அறநெறி, அவர்கள் கூறிய மறைநெறி அன்று என்பதுதானே கருத்து.

தன் மகன் உயிர் கொன்றானாதலினால், அவனைக் கொல்லுதலே துணி பொருளாம் என அரசன் கூறவே அவர்கள் அஞ்சி அகன்றனர். பிறகு ஓர் அமைச்சரை அனுப்ப, அவரும் மறுத்தொழிந்தார்.

ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளான் என்பதும் உணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடன்என்று தன்மைந்தன்
மருமம்தன் தேர்ஆழி உறஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ? மற்று எளிதோதான்!

(*பெரிய. திருமலைச் சருக். 129*)

இத்தகையவை, தொன்மைமிக்க வீரநிலைக் காலத்தே நடந்திருக்கக் கூடும். இது கடிய தண்டனைதான்! தொன்மங்கள் நேர்முக உண்மைகளல்ல; மறைமுக உண்மைகள் (*Indirect truth*) என்பதை உளங்கொண்டு இதை நோக்கவேண்டும். செய்த வினைக்கு அதனளவு பயனை நுகர்ந்தே தீர வேண்டும் என்ற சிவநெறி மெய்யியலை வலியுறுத்துவதற்கு வந்தது இது. பிராயச் சித்தம் - கழுவாய் - பரிகாரம் என்று பணம் செலவழித்தோ, பிறவாறு ஹோமங்கள், சடங்குகள் செய்தோ தப்பிக்க முடியாது என்பதே தமிழ் அறநெறியாகும்.

வேத வைதிகம் வேறு; ஆகமச் சிவநெறி வேறு. வேதங்களைப் பொதுவாகப் புகழ்வது வேறு; அவற்றினிடையே உள்ள அடிப்படை வேறுபாடுகளை உணர்வது வேறு. சேக்கிழார் பெருமான் தமிழரின் சிவநெறி மெய்ம்மை இயலை, இதன்மூலம் வற்புறுத்தியுள்ளார் என்பது தெளிவு.

மனம் திறந்து சொன்னால், உண்மையை ஒளிவு மறைவின்றிச் சொன்னால், இந்திய நாடு இன்று ஊழலில் சிக்கி, அதனையே அறவழி எனக் கொண்டு சீரழிவதற்கு இம்மனப்பான்மையை வளர்த்துவிட்டதே காரணமாகும்.

யாரும் எம்மீது சினங்கொள்ளாது கேட்பீரேல், இன்று திருக்கோயில்கள் என்பன புண்ணிய வாணிகத் தொழில் நிலையங்கள் ஆகிவிட்டன; பக்தி என்பது நற்பண்பு, தூய அறநெறி போன்றவற்றை வளர்க்காமல், பணம் செலவழித்துப் புண்ணியம் தேடவும், செய்த - செய்யப்போகிற அனைத்துப் பாவங்களையும் போக்கியருளும் தெய்வீகத் திருநிலையங்களாகவும் செயற்படுகின்றன.

இந்தியநாடு சீர்பட வேண்டுமேல், திருக்கோயில் வழிபாட்டுச் சீர்திருத்தங்கள் பல உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

பொது இடங்களிலும் திருக்கோயில்களிலும் அக்கினிச் சடங்குகள் - ஹோமங்கள் சட்டப்படி தடை செய்யப்பட வேண்டும்.

இறைவனுக்குப் பூவும் நீரும் கொண்டு பூசை செய்வோம். தனியே இருந்து தியானிப்போம். தனியே இன்னிசை பாடித்

துதிப்போம். கூட்டு வழிபாடு ஆற்றுவோம். பலவகைக் கலைகள் வழி - இசை, நாட்டியம், ஆடல்பாடல் வழி - கொண்டாடுவோம்.

தேங்காய் - பழ அருச்சனை தவிர்ப்போம். ஏத்தி ஏத்தித் தொழும் அருச்சனையை ஏற்போம்! வரிசையில் சென்று, தொன்னையளவு நீரை ஊற்றி, பூக்களைத் தூவி வணங்கி மேற்செல்வோம். இறைத் தீண்டாமையை ஒழிப்போம், இறைக் கருவறையை ஒளி ஊட்டுவோம்; நறுமணப் பொருள்கள் கொண்டே திருமுழுக்காட்டுவோம்; அலங்காரம் செய்வோம்; கடவுள் பெயரால், மக்களுக்குப் பயன்படும் எப்பொருளையும் நெருப்பில் போட வேண்டாம்; வீணாக்க வேண்டாம். அவை மக்களுக்குப் பயன்படட்டும். பணக்கார வருவாய் மிகுந்த கோயில்கள் என வளர்ப்பதைத் தவிர்த்து, உடனுக்குடன் அச்செல்வம் மக்களுக்குப் பயன்படுமாறு திட்டமிடுவோம். இறைவன் நம்மை மனம் மகிழ்ந்து வாழ்விப்பான்.

இரா.நாகசாமி வடமொழியைத் துணைகொண்டு தமிழ் வளர்ந்தது என ஒரு நூல் எழுதி வீணாக்கிவிட்டார்; தமிழ் நாகரிகத்தையும் பண்பாட்டையும் இழிவு செய்திருக்கிறார்.

ஒவ்வொரு கட்டத்திலும் இரண்டும் வேறுபட்டவை; முரண்பட்டவை.

உண்மையைக் கொண்டு நோக்கினால் சமஸ்கிருதம்தான் தமிழின் துணைகொண்டு, செம்மைப்பட்டது என்பது நன்கு விளங்கும்.

*****

தமிழ்ப்பேராய வெளியீடுகள்

1. **தொல்காப்பியர் காட்டும் குடும்பம்**
   - முதுமுனைவர் இரா. இளங்குமரனார்

2. **தொல்காப்பியர் விளக்கும் திருமணப் பொருத்தம்**
   - மூதறிஞர் தமிழண்ணல்

3. **தொல்காப்பியத்தில் வீரநிலைக்கால எச்சங்கள்**
   - முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்

4. **ஒன்றே உலகம்**
   - தமிழ்ப்பேரறிஞர் தனிநாயக அடிகள்

5. **Studies in Classical Tamil Literature**
   - Dr. S.N. Kandaswamy

6. **Pathuppaattu in English**
   - Dr. A. Dakshinamurthy

7. **Ainkurunuru Vol. I**
   - Dr. S.N. Kandaswamy

8. **தமிழ் அருட்சுனைஞர் - முதற்பருவம்**
   - மு.பெ. சத்தியவேல் முருகனார்

9. **தமிழ் அருட்சுனைஞர் - இரண்டாம் பருவம்**
   - மு.பெ. சத்தியவேல் முருகனார்
   - இரா. இளங்குமரனார்

தமிழ்ப்பேராயம்
Thamizh Academy

ISBN 978-81-924445-7-4
9 788192 444574 >
₹ 120/-